உ
சிவமயம்

# யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள்

ஈழத்து நல்லூர், மாவிட்டபுரத்துத் தலங்கள் மீது
பாடப்பட்டவை குறித்த முதுகலைமாணிப் பட்ட இலக்கிய ஆய்வு




**கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A.,**

**KANAGASABAPATHY NAGESWARAN, B.A (HONS); M.A**



வெளியீடு :

கொழும்பு விவேகானந்த சபை, கொழும்பு - 13,

இலங்கை.

**2005**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள்

ஈழத்து நல்லூர், மாவிட்டபுரத்துத் தலங்கள் மீது பாடப்பட்டவை குறித்த இலக்கிய ஆய்வு.

**கனகசபாபதி நாகேஸ்வரன், B.A(Hons);M.A,**
**முதுநிலைத் தமிழ் விரிவுரையாளர், தரம் 1,**
**மொழித்துறை,**
**சமூக விஞ்ஞான மொழிகள் பீடம்,**
**சபரகமுவ பல்கலைக்கழகம்**

இவ்வாய்வேடு தமிழில் முதுகலைமாணிப் பட்டப்பின் (எம்.ஏ) பட்டத் தகைமைக்காக 1988 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

-2005-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# YALPANATHUTH THAMIZH PIRAPANTHA ILAKKIYANKAL

**(M.A RESEARCH)**

***KANAGASABAPATHY NAGESWARAN,B.A (HONS); M.A.***
***(WHOLE - ISLAND JUSTICE OF THE PEACE).***
***SENIOR LECTURER, Gr.1,***
***DEPARTMENT OF LANGUAGES,***
***SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA.***

This Thesis was Submitted for the Post graduate (M.A) degree
to the Department of Tamil, university of Jaffna.
1988.

-2005-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

நூலின் பெயர் : யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள்
(எம். ஏ. பட்டத்திற்கான ஆய்வு. )

துறை : தமிழ் இலக்கியம்

நூலாசிரியர் : கனகசபாபதி நாகேஸ்வரன்,B.A (Hons); M.A.
முதுநிலைவிரிவுரையாளர் தரம் - 1,
மொழித்துறை, சபரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிகுல்லோயா,
இலங்கை,

முதற்பதிப்பு : தாரண 2005

விலை : ரூபா **500/=**

பதிப்புரிமை : ஆசிரியருக்கே

அச்சுப்பதிப்பு : லக்ஷ்மி அச்சகம்,
195, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு-13.
தொலைபேசி: 2448545, 2473533
தொலைநகல்: 2330588
மின்னஞ்சல்: luxmiprint@sltnet.lk

**ISBN 955- 98962-2-9**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

Name of the Book : YALPANATHTHUTH THAMIZH PIRAPANTHA ILAKKIYANKAL
(M.A RESEARCH)

Author : KANAGASABAPATHY NAGESWARAN, M.A.
Senior Lecturer, Gr.1,
Department of Languages,
Faculty of Social Sciences & Languages,
Sabaragamuwa University of Sri lanka.
Belihuloya.

Price : Rs . 500

Printed by : Luxmi Printer,
195, Wolfendhal Street,
Colombo - 13.
Tel : 2448545, 2473533
Fax: 2330588
E-mail: luxmiprint@sltnet.lk

ISBN 955- 98962-2-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'அருள்மாமணி' ப.க. கனகசபாபதி 'வித்துவாட்டி', 'கவிஞர்' சுந்தரம்பிள்ளை கோகிலாம்பாள் தம்பதி. (வாகீச கலாநிதி நாகேஸ்வரனின் பெற்றார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அருள்மாமணியும் - வித்துவாட்டியும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# சமர்ப்பணம்

எந்தையும், கனடாவாழ் தமிழ்பேசும் மக்களால் **"அருள்மாமணி"** என்னும் கௌரவப்பட்டம் வழங்கப்பட்டுப் பாராட்டப்பெற்றவரும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழிப் பரம்பரை அறங்காவலர் வழியில் உதித்தவருமான **நயினையம்பதி ஸ்ரீமான் பரமலிங்கம் கந்தசாமி கனகசபாபதி** அவர்களுக்கும், எனையீன்றுபுறந்தந்த என் தாயாரும், கனடாவாழ் தமிழ்கூறுநல்லுலகால் **"வித்துவாட்டி"** **"கவிஞர்"** எனும் கௌரவப்பட்டங்கள் வழங்கப்பட்டுப் பாராட்டப் பெற்றவருமான **நயினை ஸ்ரீமதி சுந்தரம்பிள்ளை கோகிலாம்பாள் கனகசபாபதி** ஆகிய என் கண்கண்ட தெய்வங்களின் பொன்னார் திருவடிகளுக்கு மிக்க பணிவன்புடன் இந்நூலினைச் சமர்ப்பணம் செய்து தொழுகிறேன்.

வாகீசகலாநிதி,
**கனகசபாபதி நாகேஸ்வரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள்

1. ஆசியுரை

**சிவத்தமிழ்ச்செல்வி, கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P**
(தலைவர், அறங்காவலர் சபை,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

2. வாழ்த்துரை

**பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ்**
(தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

3. அணிந்துரை

**பேராசிரியர், இலக்கிய கலாநிதி வி. சிவசாமி**
((முன்னாள் பேராசிரியர், சமஸ்கிருதத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

4. வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பு

**பேராசிரியர், கலாநிதி க. அருணாசலம்**
(பேராசிரியர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

5. வெளியீட்டுரை

**சிவஞானச் செல்வர்,**
**சிவஞானக் கலாநிதி க. இராஜபுவனீஸ்வரன், J.P**
(கௌரவ பொதுச் செயலாளர், கொழும்பு விவேகானந்த சபை)

6. முகவுரை

**வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், M.A**
(சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்-1, மொழித்துறை,
சபரகமுவ பல்கலைக்கழகம், பெலிகுல்லோயா.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

# Sri Durgadevi Devasthanam

**Tellippalai, Sri Lanka.**

**தலைவர்:**

துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,
**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P**



**President :**
Durgaduranthari, Sivathamilselvi,
**Dr. Miss. Thangamma Appacuddy, J.P**

## ஆசியுரை

அன்னை நாகபூஷணி அம்பாளின் திருவருளை முன்வைத்துத் தமது வாழ்க்கையைப் புனிதமாக நடத்துபவர் உயர்திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்கள். சப்ரகமுவ பல்கலைக்கழகத்தில் முதுநிலை விரிவுரையாளராகக் கடந்தபல ஆண்டுகளாகக் கல்விப்பணி ஆற்றி வருகின்ற இப்பெரியார் **யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள்** என்ற நூலை எழுதி வெளியிடுவது குறித்து நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் குறிப்பிடத் தக்க பல பிரபந்தங்கள் ஈழ நாட்டுப் புலவர்களால் பாடப்பெற்றவை. இவற்றுள் அந்தக் காலத்துப் பண்டிதர் பரீட்சைக்கு என்போன்றோர் படித்துப் பயன்பெற்றவை ஒரு சிலவாகும். கல்வளை அந்தாதி, பறாளை விநாயகர் பள்ளு, கதிரமலைப் பள்ளு, கரவைவேலன் கோவை என்பவற்றை நான் இன்று மீட்டுப் பார்க்கிறேன். இந்த வகையில் முதுநிலை விரிவுரையாளர் கனகசபாபதி நாகேஸ்வரன் அவர்களின் நன் முயற்சி இந்த மண்ணுக்குப் பெருமை பெற்றுத் தருவதாகும். எனவே நூலாசிரியர் அவர்களை வாழ்த்தி எமது மண்ணின் இலக்கியப் பண்பாட்டுப் பெருமையைப் போற்றி அமைகின்றேன்.

20.10.2004

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதவான்
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# කලා පීඨය, යාපනය විශ්ව විද්‍යාලය
# FACULTY OF ARTS, UNIVERSITY OF JAFFNA

## வாழ்த்துரை

வாகீச கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தமது முதுகலை மாணிப்(எம்.ஏ) பட்டத்தகைமைக்காக எழுதிய ஆய்வேட்டினை நூலாக வெளியிடுகிறார். நூலகமும் ஆய்வேட்டின் ஆசிரியர் வீடுமாக இருந்த ஆய்வேடு இவ்வெளியீட்டினூடாக மக்கள் கைக்குச் சென்றடைய வுள்ளது. **யாழ்ப்பாணத்துத் தமிழ் பிரபந்த இலக்கியங்கள்** என்னும் இந்நூலுக்கு இந்த அணிந்துரையை எழுதுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் 1974இல் வளாகமாகத் தொடங்கிய பின்னர், தமிழ்த்துறையிலே தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயில வந்த முதல் தொகுதி மாணவருள் சிறப்பான இடத்தைப் பெற்றிருப்பவர் நாகேஸ்வரன். நான்கு ஆண்டுகள் என்னிடமும் பயின்றார். பல்கலைக்கழகத் தமிழ்க் கல்வியோடு உலகியற் கல்விக் கூறுகளையும் பெற்றுக் கொண்டார். 1979ஆம் ஆண்டில் இந்திய அலகபாத் நகரிலே திரிவேணி சங்கத்தில் நடைபெற்ற கும்பமேளாவில் (மாமாங்கம்) பங்குபற்ற என்னுடன் நாகேஸ்வரனும் புவியியல் துறைசார்ந்த பாக்கியநாதன் என்னும் மாணவனும் வந்தனர். அப்பொழுது அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து மன்ற ஆளுநர் சபை உறுப்பினர்களாயிருந்தனர். கலைமாணிப் பட்டம் பெற்ற நாகேஸ்வரன் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையிலே விரிவுரையாளராகப் பணிசெய்தார். 1988இல் தன்னுடைய முதுமாணிப் பட்டத்தினைப் பெற்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழத்திலே யாழ்ப்பாணம், நல்லூர், மாவிட்டபுரம் ஆகிய இடங்களிலே முருகப் பெருமான் கோவில்கொண்டருளியிருக்கிறார். இத்தலங்கள்மீது பாடப்பட்ட பிரபந்த இலக்கியங்கள் இவருடைய ஆய்வுக்குட்பட்டன. தமிழ்த் துறையின் தொடக்ககாலக் கொள்கையின்படி ஈழத்து இலக்கியங்கள், அறிஞர்கள் பற்றியே ஆய்வு மாணவர்கள் ஆய்வு செய்ய வேண்டும் என்பதற்கிணங்க நாகேஸ்வரன் இவ்விடயத்தைத் தேர்ந்தெடுத்து மிகச்சிறப்பானதொரு ஆய்வேட்டினை எழுதியுள்ளார். இவருடைய விடாமுயற்சியினை எடுத்துக்காட்டும் இந்நூல் பலருக்கும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. என் அன்புக் குரிய மாணவனாகிய நாகேஸ்வரனுக்கு என் வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**பேராசிரியர் கலாநிதி அ.சண்முகதாஸ்,**
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A (Jaffna)

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்**
**சமஸ்கிருதத் துறையின் ஓய்வு பெற்ற பேராசிரியரும்,**
**யாழ்ப்பாணக் கல்லூரியின் உயர்பட்டப் படிப்புகள்**
**வரலாற்றுத்துறையின் முன்னாள் விரிவுரையாளரும்,**
**இந்நூலாசிரியருக்கு வரலாறு கற்பித்த பேராசானுமாகிய**
**பேராசிரியர், இலக்கிய கலாநிதி வி.சிவசாமி அவர்கள்**
***யாழ்ப்பாணத்துத் தமிழ் பிரபந்த இலக்கியங்கள்* என்னும்**
**இவ்வாய்வு நூலுக்கு மனமுவந்து வழங்கிய**

# அணிந்துரை



ஈழத்திரு நாட்டிலே தமிழும், தமிழிலக்கியமும் நீண்ட கால வரலாறுகள் கொண்டவை. தமிழகத்திற் போன்று இங்கு மிகப் பெருந்தொகையான இலக்கிய நூல்கள் எழவில்லையெனினும், கணிசமான தொகை நூல்கள் காலம் தோறும் எழுந்துள்ளன. எனினும், குறிப்பாகச் சென்ற நூற்றாண்டின் பிற் பகுதியிலேதான் இலங்கைத் தமிழிலக்கியம் பற்றிய விழிப்புணர்வு நன்கு ஏற்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களிலே ஈழத்தமி ழிலக்கியத்தினைத் தனி அலகாக விரிவாகக் கற்பதும், அதுபற்றிய ஆய்வுகள் மேற்கொண்டு வருவதும் நன்கு குறிப்பிடத்தக்க செயற்பா டுகளே. மேலும் இலங்கைத் தமிழ்க் கவிதைத் தொகுப்புகளும் சில வெளிவந்துள்ளன. மேற்குறிப்பிட்ட செயற்பாடுகளிலே தனிப்பட்ட வகை யிலும் சில அறிஞர்கள் பங்களிப்புச் செய்துள்ளனர். ஈழத்தமிழ் இலக்கி யத்திற்கு இலங்கையின் பலபாகங்களிலும் வாழ்ந்து வருகின்ற பல புலவர்கள் பெருமக்களின் பங்களிப்புகள் குறிப்பிடத்தக்கவை. இவ்வகையில் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிராந்தியங்களைச் சேர்ந்த புலவர் கள் நன்கு குறிப்பிடற்பாலர். வடபிராந்தியத்திலே யாழ்ப்பாணத்துப் புலவர் களின் பங்களிப்புகள் பலதிறப்பட்டவை.

யாழ்ப்பாணத் தமிழர்கள் தமிழிற்கும், சைவத்திற்கும் ஆற்றிய குறிப்பி டத்தக்க பங்களிப்புகள் பற்றி ஆணித்தரமாகவும், இரத்தினச் சுருக்கமா கவும், காரசாரமாகவும் முதன் முதலாகத் தமிழகத்தவருக்கு எடுத்துரைத்த பெருமை ஆறுமுக நாவலருக்கே உரியதாகும். சிறந்த தமிழறிஞரான சி.வை. தாமோதரம்பிள்ளைக்கு எதிராகத் தமிழகத்தைச் சேர்ந்த நரசிங்கபுர வீரசாமி முதலியார் வெளியிட்ட கருத்துக்களை முற்றிலும் மறுத்து நல்லறிவுச் சுடர் கொளுத்தல் எனும் தலைப்பிலே நாவலர் பெருமான் எழுதியிருப்பது ஈண்டு குறிப்பிடற்பாலது. இதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத் தமிழ் இலக்கிய நூல்கள் பற்றிப் பலர் எழுதி வந்துள்ளனர்; வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகையோர் பல்கலைக்கழகங்களைச் சேர்ந்தோராகவும், சேராத வருமாகப் பலர் உள்ளனர். பல்கலைக்கழகத் தமிழறிஞர்களில் ஒருவராகிய திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் குறிப்பிடற் பாலர். சபரகமுவ பல் கலைக்கழக மொழித்துறை இணைப்பாளராகவும், முதுநிலைத் தமிழ் விரிவுரையாளராகவும் பணிபுரியும் இவர் யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள் எனும் தலைப்பிலான நூலினை எழுதியுள்ளார்.

இவர் சென்ற நூற்றாண்டு எழுபதுகளின் முற்பகுதியிலே மகாஜனக் கல்லூரி மாணவனாக இருந்த காலந் தொட்டுத் தமிழ், இந்து சமயம், வரலாறு முதலிய பாடங்களிலே மிக்க ஈடுபாடுள்ளவராகவும், சிறந்த பேச்சாளராகவும், எழுத்தாளராகவும் விளங்கி வந்துள்ளார். 1974இலே தொடங்கிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே (தொடக்கத்திலே இது இலங்கைப் பல்கலைக்கழக யாழ்ப்பாண வளாகமென அழைக்கப்பட்டது.) முதன்முதலாகத் தமிழைச் சிறப்புப் பாடமாக நன்கு கற்றுத் தேறிய இரு பட்டதாரிகளில் இவர் நன்கு குறிப்பிடத்தக்கவர். சிறப்புக் கலைக் கற்கை நெறியினைக் குறிப்பாக அமரர் பேராசிரியர் க. கைலாசபதியின் வழிகாட் டலிலும், முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வினைப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையின் வழிகாட்டலிலும் திறம்படச் செய்து முடித்துள்ளார். யாழ்ப்பாணத்திலுள்ள மாவிட்டபுரம், நல்லூர் ஆகிய இடங்களிலுள்ள பிரபல கந்தசுவாமி கோவில்கள் பற்றிய பிரபந்தங்கள் பற்றியதாகவே அவரின் முதுகலைமாணிப் பட்டத்திற்கான ஆய்வு அமைந்துள்ளது. இவர் இது குறித்துத் தொடர்ந்து ஆய்வினை மேற்கொண்டு, இதனை விரி வாக்கியும், புதுக்கியும், திருத்தியும், மேலும் பலவற்றையும் சேர்த்து யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்தங்கள் எனும் தலைப்பிலான நூலாக வெளியிட்டுள்ளார். ஈழத்தமிழிலக்கியத்திற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வரும் இன்றைய காலகட்டத்தில் இத்தகைய சிறந்த நூல் ஒன்று வெளி வருவது நன்கு வரவேற்கத்தக்கதே. எம் முன்னாள் மாணவரும் (யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகத்திலே முதலாம் ஆண்டில் எம்மிடமும் வரலாறு கற்றவர்.) இளம் நண்பருமாகிய ஆசிரியரின் தமிழ்ப் பணிக்கு மனமுவந்த நல்வாழ்த்துக்கள்.

இவர் தமிழிலும், அதனுடன் தொடர்புள்ள அறிவியல்களிலே- பண்பாடு, வரலாறு, கல்வி, ஊடகவியல் முதலியனவற்றிலே நல்ல தேர்ச்சியும், ஈடு பாடும், அநுபவமும் வாய்ந்தவர். இவ்விடயங்கள் தொடர்பாகப் பல கட் டுரைகளை சஞ்சிகைகளிலும், நாளிதழ்களிலும் ஏறக்குறைய மூன்று தசாப்தங்களாக எழுதி வருகின்றார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தா பனத்தின் தமிழ்ச் சேவை நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும், பகுதி நேர அறிவிப்பாளராகவும் சில ஆண்டுகளாக நற்றமிழ்ப்பணி புரிந்துள்ளார்.

இலங்கையிலும், இந்தியா, மலேசியா முதலிய நாடுகளிலும் நடை பெற்ற சமய, இலக்கிய மகாநாடுகளிலே சிறப்பாகப் பங்குபற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A (Jaffna)

இவர் ஒரு சிறந்த தமிழ்ப் பேச்சாளரும், எழுத்தாளருமாவார். இலங்கை யிலுள்ள பிரபல சைவ, தமிழ் நிறுவனங்கள் பலவற்றிலே இடம் பெற்றுள்ள பல நிகழ்ச்சிகளிலே ஆக்கபூர்வமாகப் பங்களிப்புகள் செய்துள்ளார். குறிப்பாகச் சிறப்புச் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள், விவாதங்கள் போன்றவை பலரின் கவனத்தை ஈர்த்துள்ளன. இவர் ஒரு சிறந்த மேடைப் பேச்சாளர்.

இவர் சிறந்த ஆய்வாளரும், சமயத் தொண்டருமாவார். இவருடைய கட்டுரைகள் பலவும் முதுகலைமாணிக்கான ஆய்வுக்கட்டுரையும் இவ ரின் நுண்மாண் நுழைபுலமிக்க, கூர்த்த ஆய்விற்கான சான்றுகளாகும். தற்பொழுது இவர் பேராதனைப்பல்கலைக்கழகத்திலே கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொண்டு வருகிறார்.

சமயத் தொண்டராக ஏற்கனவே குறிப்பிட்டவாறு சமயச் சொற்பொழி வுகள் முதலியனவற்றை நடத்தி வருவதுடன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய பரம்பரைத் தர்மகர்த்தாக்களில் ஒருவராகவும் இவர் திருத் தொண்டு புரிகின்றார். அம்பாள்மீது மிகுந்த பற்றுள்ளவர். ஊடகங்கள் மூலமாகக் குறிப்பாக வானொலி, தொலைக்காட்சி சமய சிந்தனைகள், திருவிழாக்களின் நேரடி வர்ணனைகள், சமயப் பேச்சுக்கள், இலக்கியப் பேச்சுக்கள் மூலமாகவும் உலகளாவிய ரீதியிலே தேமதுரத் தமிழோசை பரவுதற்கும் வியத்தகு பங்களிப்புகள் செய்து வருகின்றார்.

இவருடைய தமிழ், சைவப்பணிகளுக்காகப் பல நிறுவனங்கள் இவ ருக்கு **அருள்மொழிச் செல்வர், வாகீசகலாநிதி, செஞ்சொல்வாரிதி,** முதலிய பட்டங்களை வழங்கி இவரைக் கௌரவித்துள்ளன. இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும், தமிழ் இணையப் பல்கலைக்கழகத்திலும், சபர கமுவ பல்கலைக்கழகத்திலும் பட்டதாரிகள் பலர் உருவாகப் பணி புரிந்துள்ளார்.

இவ்வாறு பலதிறப்பட்ட அறிவும், அநுபவமும் உள்ள இவரின் இந்நூல் நன்கு அமைந்து சிறப்படையவும், இவர் மேன்மேலும் தரமிக்க பல நூல்களை எழுதிப் பதவி உயர்வு பெறவும், தொடர்ந்து தமிழுக்கும் சைவத்திற்கும் பல்லாண்டுகள் நற்பணிகள் புரியவும் மனமார வாழ்த்துகிறேன். எல்லாம் வல்ல நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் திருவருள் பாலிப்பாராக!

அன்புடன்

**இலக்கியகலாநிதி, பேராசிரியர் வி. சிவசாமி**

23.10.2004

ஓய்வு பெற்ற சமஸ்கிருதப் பேராசிரியர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

**அருட்கலைமாமணி, சித்தாந்த பண்டிதர், வாகீசகலாநிதி,**

# கனகசபாபதி -நாகேஸ்வரன், M.A.

**(அகில இலங்கை சமாதான நீதிவான்)**

**முதுநிலை விரிவுரையாளர் தரம்-1, மொழித்துறை,**

**சமூக விஞ்ஞான மொழிகள் பீடம்**

**சபரகமுவ பல்கலைக்கழகம்.**

ஈழத்தில் சக்தி பீடங்களுள் **ஸ்ரீபுவனேஸ்வரிபீடம்** என மிளிரும் நயினை ஸ்ரீ நாகபூஷணிஅம்மன் தேவஸ்தானத்தின் மரபுவழி அறங்காவலர் வம்சத்தில் தவசிரேஷ்டர் ஸ்ரீமான் **பரமலிங்கம்கந்தசாமி கனக சபாபதி** எனும் 'அருள்மாமணி'க்கும் **ஸ்ரீமதி சுந்தரம்பிள்ளை கோகிலாம் பாள் கனகசபாபதி** எனும் 'வித்துவாட்டி'க் 'கவிஞருக்கு'ம் மூத்த புதல்வன் **வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், எம்.ஏ.** இலக்கிய ஆய்வாளர், கவிஞர், கலைஞர், கல்விமான், இன்னிசைச் சொற்பொழிவாளர், மொழிபெயர்ப்பாளர், நேர்முக வர்ணனையாளர், பண்ணிசைக் கலைச் செல்வர், கதாப்பிரசங்கி எனும் பன்முகப்பட்ட உன்னத ஆளுமைகளின் திருவுரு.

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி வித்தியாசாலை, நயினாதீவு மகா வித்தியாலயம், நாவலப்பிட்டிச் சின்னக் கதிரேசன், தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறையில் **பேராசிரியர், கலாநிதி கனகசபாபதி கைலாசபதியின்** மேற்பார்வையின் கீழ்த் தமிழ் இலக்கியத்தில் கலைமாணிச் சிறப்புப் பட்டத்தினையும், **பேராசிரியர், கலாநிதி ஆ. வேலுப்பிள்ளையின்** மேற்பார்வையின்கீழ் முதுகலைமாணிப் பட்டத் தினையும் முறையே 1979, 1988ஆம் ஆண்டுகளிற் பெற்றார். தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்திலே தமது கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வினை நிகழ்த்துகிறார்.

சபரகமுவ பல்கலைக்கழகத்து மொழித் துறையிலே முது நிலைத் தமிழ் விரிவுரையாளராகவும், (தரம்-1) இணைப்பாளராகவும் பணி யேற்றுள்ளார். யாழ். பல்கலைக்கழகத்திலும், சபரகமுவ பல்கலைக் கழகத்திலும், தமிழ் இணையப் பல்கலைக் கழகத்திலும் பட்டதாரிகள் பலரை உருவாக்கியுள்ளார்; உருவாக்கிவருகிறார். தமிழின் பல்வேறு துறைகளிலேயும் ஈடுபாடு கொண்டுள்ள இவர் இலக்கியம், சமூகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலை, சமயம், வரலாறு, தொல்பொருளியல், அரசறிவியல், இதழியல், கல்வி, பண்பாடு, மொழி, வாழ்க்கைவரலாறு, பத்திரிகையியல், வெகு ஜன ஊடகவியல் எனும் துறைகளிலே பல்வேறு ஆய்வுக் கட்டு ரைகளை எழுதியுள்ளார்.

1972 ஆம் ஆண்டு முதல் இவரது ஆய்வுக் கட்டுரைகள் *கோமுகி, சங்கமம், கலாசுரபி, மல்லிகை, செவ்வந்தி, இந்துநெறி, இனமுழக்கம், தமிழ்ஒலி, பராசக்தி, தேன்பொழுது, ஊற்று, ஆலயமணி, ஜீவசக்தி, தமிழோசை, உள்ளம்* ஆகிய இலக்கியச் சஞ்சிகைகளிலேயும், ஈழ நாடு, உதயன், தினகரன், வீரகேசரி, தினக்குரல் பத்திரிகைகளி லேயும் வெளிவந்துள்ளன.

1980களில் ஈழநாடு பத்திரிகையின் உதவி ஆசிரியராயும், 1985 வரை ஐந்தாண்டுகள் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத் தாபனத்தின் தமிழ்ச்சேவையில் நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராயும், பகுதிநேர அறி விப்பாளராயும் பணியாற்றினார். இந்திய அலஹபாத்திலும், மலேசி யாவிலும் திருச்சியிலும், நடந்த சமய இலக்கிய மாநாடுகளிலே 1979 இலும், 1983இலும் 2001 இலும் பங்கேற்றார். மலேஷியா இலண் டன், கனடா ஆகிய நாடுகளில் வெளியிடப்பட்டுள்ள சமய இலக்கிய மலர்களிலே இவரது ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரமாகியுள்ளன.

நல்லையாதீனம், பருத்தித்துறை சாரதாஆச்சிரமம், கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கை இந்துமாமன்றம், கொழும்புத் தமிழ்ச் சங்கம், அகில இலங்கைக் கம்பன் கழகம், யாழ்ப்பாணம் திருநெறிய தமிழிசைச் சங்கம், ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கலாசார அமைச்சின் கலைக் கழகத்தின் இலக்கியக் கருத்தரங்குகள், தமிழ் இணையப் பல்கலைக்கழகம், பேராதனைப் பல்கலைக்கழக இந்துமாமன்றம், Colombo Sri Lanka Foundation Instit ute (S.L.F.I), யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கம், இந்து சமய கலாசார அமைச்சு, திணைக்களம் ஆகிய நிறுவனங்களிலே இலக்கிய, சமய விரிவுரை களை நிகழ்த்தியுள்ளார்.

திரு. நாகேஸ்வரன் தேமதுரத்தமிழோசையினை உலகமெல்லாம் பரப்பும் கடப்பாட்டில் கால்நூற்றாண்டுக் காலம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் தமிழ் சேவையில் சைவநற்சிந்தனை, அருள முதம் (இந்துசமய சஞ்சிகை நிகழ்ச்சி), இலக்கியப் பேச்சுகள், இந்து சமயப்பேச்சு, கலந்துரையாடல்கள், சொல்வளம் பெருக்குவோம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திருவிழா நேர்முகவருணனைகள், கதாப்பிரசங்கம் என்பவற்றிலே பங்கேற்றுச் சேவையாற்றி வருவதும் தமிழ்கூறும் நல்லுலகம் நன்கு அறிந்ததே.

**அருள்மொழிச்செல்வர், செஞ்சொல்வாரிதி, இன்னிசைச்சொல் வேந்தன், செஞ்சொல்வாணர், மணிமொழிவாரி, நவரஸக்கலைஞானி, சொற்பேராழி, சித்தாந்தபண்டிதர், அருட்கலைமாமணி, வாகீசகலாநிதி** என்னும் கௌரவப் பட்டங்களைப் பெற்றுள்ள இவர் **அகில இலங்கைச் சமாதான நீதிபதியும்** ஆவார்.

***கலாசுரபி*** (1979), ***தடுத்தாட்கொண்ட புராணம்*** (பல்கலைக்கழக உள்வாரி வெளிவாரிப் பட்டதாரி மாணவருக்கான பாடநூல்)(1989). ***சிவதத்துவமலர்***(1996), ***சத்திதத்துவமலர்***(1996), ***நவநாதம்***(1998), ***பக்தி மலர்***(2004) ***அறுபத்துநான்கு கலைகளும் கலையாக்கத்திறன்களும் (ஆய்வு)***(2004), ***வடஇலங்கையின் சக்தி பீடம் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் (வரலாறும் தலப்பெருமையும்)*** (2004) என்னும் நூல்களின் பதிப்பாசிரியரும், ஆசிரியருமாவார். நாடறிந்த ஆன்மிக இலக்கியப் பேச்சாளர். இவருக்குத் தம்பிமார் இருவர்; தங்கையர் அறுவர்; கனடாவிலும் நாவலப்பிட்டியிலும் வாழ்கின்றார்கள். இவர் நாரந்தனை வண்ணார்பண்ணை ஸ்ரீமான் பாலசிங்கம் பூமணி தம்பதியின் மருமகனும் ஆவார். மனைவி இரதிமலர்தேவி; மகன்மார் பிரகாஷ், குருபரன்; மகள் தாரணி என்போர் பிள்ளைகள்.

**பேராசிரியர், கலாநிதி க. அருணாசலம், M.A;Ph.D.**

**தமிழ்ப் பேராசிரியர்,**
**தமிழ்த்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை,**
**இலங்கை.**
**23.12.2004.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

Arudkalimaamani, Siddhandha pundit,
Vaakeesakalanithi.

# KanagasabapathyNageswaran,M.A.

(Justice of Peace for the whole island)
Senior Lecturer Gr-1. Department of Languages
Faculiy of Social Scienes and Languages
Sabaragamuwa University of Sri Lanka,
Belihuloya, Sri Lanka.

**'Vaakeesa kalanithi' Kanagasabapathy Nageswaran, M.A** (born on August 05,1952) hails from the hereditary chain of Chieftains and from noble and illustrious family of Nainativu wh ere the mother godders Shree Nagapooshani Amman temple is situated. This temple is reckoned as **"PUVANESWARY PEEDAM."** It is most revered among sixtyfour Hindu divine- powered chap ters of SriLanka.

Mr. K.Nageswaran is the eldest son of 'Thavasireshdar' **Sriman Paramalingam Kanthasamy Kanagasabapathy** also known 'Arulmamani' and 'Viththuvaaddi', "Kavignar" shrimathi **Suntharampillai Kohilambal Kanagasabapathy.**

He is a researcher in the field of literature,a Kalaignar, an academic and a lecturer divotioinal songs (Thevaram Pannisai), at translator, a commentator, an honorary doctor (Vaakeesa Kalanithi) in the field of singing and reciting devotional songs. He is deservedly called a living idol of multifaceted and multi - skilled potentialities.

He is old boy of Sri Nagapooshani Vidyasalai, Nainativu Maha Vidyalayam, Nawalapitiya junior Kathiresan College and Tellippalai Mahajana College. He received his special degree in Thamil Literature under the guidance of **Professor, and Dr. Kanag asabapathy Kailasapathy.** He received his Post - graduate degree under the guidance and supervision of **Professor, and Dr. A. Velu ppillai** of Deprt of Tamil University of Jaffna in **1979** and **1988** respectively.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

He is presently senior lecturer in Tamil and co- ordinator at the department of Languages Faculty of social seiences and Languages in Sabaragamuwa University, Sri Lanka. He has produced several graduates from the universities of Jaffna, Sabragamuwa university and Tamil virtual University. He is involved in research and analysis of many areas and sectors of the Tamil Language. He has presented several research papers in areas like literature, society, art, religion, history, archaeology, politics, magazine relate journalism, education, culture, indigenous medicine, biography and mass midia journalism.

His articles and research papers were published in literature-magazines like *Komuki, Sevwanthi, Inthuneri, Inamulakkam, Thamil- Oli, Parashakthi, Thaen- Pozhuthu, Ootru, Alaiyamani, Jeevasakthi, Thamizhosai, and Ullam.* His articles were published in *Eelanadu, Uthayan, Thinakaran, Veerakesari and Thinakkural.*

He served for five years as assistant editor of *'Eelanadu'* during 1980- 1985. He has served as relief announcer and producer for the Tamil Service of SriLanka Broadcasting Corporation(SLBC). He participated in conferences held in Allahabad, Malaysia and Trichi in India in 1979, 1983 and 2001.

His research papers have been published in religious and literary magazines published in London, Singapoore, Canada. He has delivered lectures on religion and literature at the Colombo vivekanantha sabai, All ceylon hindu congress, Colombo Tamil sangam, All ceylon kampan kazhaham, Jaffna thiruuneriya Tamilisai sangam, Ariya- dravidian language development society, He has spoken at Literary seminars, he has serves in the literary committees of state Art's council of the ministry of cultural, Tamil virtual university, Hindu mantram Peradeniya university, Ministry of hindu religious affairs and department of hindu religious affairs.

For 25 years he had been broadcasting over the tamil service of the SLBC on the virtues of tamil language and thus spreading the tamil language all over the world. His broadcasts also include

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the tamil language all over the world. His broadcasts also include talks on hindu philosoprhy, Saivaism, meditation, hindu religious subjects, Arulamutham, word- power improvement ect. He is also a commentator of hindu temple festival programmes.

He has been given honorary and appellations such as **Arlmo zhichchelvar, Sencholvaarithi, Manimozhivaari, Navarasakkalaig nani, Sotperazhi, Saiva Siddhandha pundit, Arudkalaimaamani and Vaakeesakalaanithi. He is a JP for whole island.**

He is also well known orator and publisher of ***Kalaasurabhi*** **(1979)**, He also published ***Thaduththaadkonda-puranam*** (curriculam book for under graduates of universities Internal and external examinations) **(1989),*Sivathaththuvamalar*(1996), *Sakthi thaththuvamalar*(1996),*Navanatham*(1998), *Bakthi malar(2004), Arupaththunankukalaikalum kalaiyaakkath thirankalum(2004), Vada Ilankalyin shakthi peedam Nainai shree Nagapooshani amman varalarum thalap perumaiuum(2004).***

He is son - in-law of **Balasingham** and **Poomani** of Vannar ponnai. His wife **Rathymalarthevi.** His children are **Pragash, Guruparan** and **Tharani.**

**Professor, Dr. K. Arunasalam, M.A.;Ph.D**

Professor of Tamil
Department of Tamil,
University of Peradeniya,
Peradeniya,
Sri Lanka.
23.12.2004.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பிரம்ம வித்தை அறிந்தவன் உயர்ந்த நிலையை அடைகிறான்

FOUNDED IN 1902

**VIVEKANANDA SOCIETY**

"AN APPROVED CHARITY"

"அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனம்"

34, Vivekananda Hill, Colombo- 13, Telephone: 2422646





**கொழும்பு**
**விவேகானந்த சபையின்**
**கௌரவ பொதுச் செயலாளரும்,**
**அகில இலங்கை இந்து மாமன்றத்தின்**
**சமய விவகார குழுவின் உபதலைவருமான**
**சிவஞானச்செல்வர், சிவஞானக் கலாநிதி,**
**உயர்திரு. க. இராஜபுவனீஸ்வரன், J.P. அவர்கள்**
**மனமுவந்து வழங்கிய**

# வெளியீட்டுரை

யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பிரபந்த இலக்கியங்கள் என்ற ஆராய்ச்சி நூலை எமது நண்பர் வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன்,M.A அவர்கள் எழுதி வெளியிடவுள்ளார் என்பதனைக் கேட்டு மிகமகிழ்ச்சி யடைந்தேன். இதுவரை காலமும் இப்படியான ஓர் ஆராய்ச்சி நூலை எவரும் எழுத முன்வராதமை கவலைதான். திருவாளர் நாகேஸ்வரன் அவர்கள் எழுதியமுதுகலைமாணி (M.A)ப் பட்டத்திற்கான ஆய்வேடாக இந்நூல் ஆய்வு அமைந்துள்ளது. இவ்வாய்வை அன்னார் மேற்கொள் வதற்கு உந்து சக்தியாக விளங்கியவர் பேராசிரியர், கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை அவர்கள். இவர்கள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பற்றிய ஆராய்ச்சியைக் கைக் கொண்டு சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை களையும், சொற்பொழிவுகளையும் ஆற்றியுள்ளார். கொழும்பு விவே கானந்த சபையில் ஒருமுறை ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்திலே "ஆறுமுகநாவலர் பெருமான் நடத்திய வழக்கு" என்ற தலைப்பிலே அவர்கள் பேசிய பொழுது அன்னாரது ஆழமான நுண் ணாய்வுத் திறனை நாம் காணக் கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A (Jaffna)

திருவாளர் நாகேஸ்வரன் அவர்கள் சபரகமுவபல்கலைக் கழகத் திலே முதுநிலைத் தமிழ் விரிவுரையாளராக இருப்பினும், இவரது சமய அறிவை, சங்கீத இசைஞானத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. தமிழில் வித்துவத் தன்மையைப் பெற்ற நண்பர் முருக வழிபாட்டிலும் அதீத ஈடுபாடு உடையவர் என்பதை இந்நூல் துல்லி யமாக எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாய்வு நூலிலே ஈழத்து நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் என்பவற்றைப் பற்றி நன்றாகவும், மிகவிரிவாகவும் ஆராய்ச்சி செய்து சரித்திர உண்மைகளை எமக்குத் தந்துள்ளார். யாழ்ப்பாண வரலாற்றை நாம் உற்றுநோக்கும் போது இவரெழுதியுள்ள இந்நூல் கட்டாயமாகப் பலருக்கும் பயன்படும். குறிப்பாக சர்வகலாசாலை மாணவர்களுக்கு இந்நூல் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலைக் கொழும்பு விவேகானந்தசபை வெளியிடுவதற்கு முன் வந்தமை மிகப் பொருத்தமானது. 2004-11-14ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை விவேகானந்த சபையில் குழுக்களின் தலைவர் சட்டத்தரணி A.R. சுரேந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிறைவேற்றுக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தால் இந்நூலை வெளியி டுவதற்கான அனுமதி பெறப்பட்டது. நாகேஸ்வரன் அவர்களின் தமிழ்த் தொண்டிற்கும், சமயத் தொண்டிற்கும் நாம் செய்யும் ஒத்தாசையாக இந்நல்ல கைங்கர்யம் அமையட்டும்.

- சுபம் -

14.11.2004

**க. இராஜபுவனீஸ்வரன்**
(கௌரவ பொதுச் செயலாளர்,
விவேகானந்தசபை, கொழும்பு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ශ්‍රී ලංකා සබරගමුව විශ්වවිද්‍යාලය
சபரகமுவ பல்கலைக்கழகம் இலங்கை
**SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA**
තැ.පෙ. 02, බෙලිහුල්ඔය. **P.O.Box- 02-Belihuloya, Sri Lanka.**
දුරකථනය : **Tele: 045-2280017.**

# முகவுரை

தமிழில் எம்.ஏ (முதுகலைமாணி)ப் பட்டம் பெற்றுக் கொள்வதற்காக வென எழுதப்பட்ட பல்கலைக்கழக ஆய்வே இந்நூல். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையிலே தமிழிலே சிறப்புப்பட்டத் தகைமையைப் பெறும் பொருட்டு நான்கு ஆண்டுகள் பட்டப்படிப்பின் பின்னர் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சையின் ஒரு பகுதியாக யான் எழுதிய பி.ஏ (சிறப்பு) கலைமாணிப்பட்ட முதல் ஆய்வேடு *ஈழத்து நவீன தமிழ்க் காவியங்கள்* என்பது. அவ்வாய் வேட்டினை ஆய்வுபூர்வமாக எழுதுவதற்கு என்னை உற்சாகத்துடன் வழிப்படுத்தியவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் தலைவரும், தமிழ்த்துறைத் தலைவரும், என் பேராசானாகவும், பேராசிரியராகவும் விளங்கியவரும், உலகப் புகழ்பூத்த தமிழிலக்கிய விமர்சகரும் சிந்தனையாளரும் பேரறிஞருமான **பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி கைலாசபதி, M.A,Ph.d. அவர்கள்.**

யாழ்.பல்கலைக்கழகத்திலே தமிழ்த்துறையிலே தற்காலிக உதவி விரிவுரையாளராக நான் நியமனம் பெறுவதற்குப் பெரிதும் பரோபகாரியாய் உதவியவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரும், தமிழர் சால்புகள் பலவற்றையும் தாங்கி வாழ்ந்தவருமான **தமிழ்ச் சான்றோன் பேரறிஞர் பேராசிரியர் கலாநிதி சுப்பிரமணியம் வித்தியானந்தன், M.A,Ph.d.** அவர்கள். கைதடியிலுள்ள சித்தமருத்துவத் துறையிலே தமிழைக் கற்பிக்கவெனத் தமிழ்த்துறையிலே என்னையும் ஓர் உதவிவிரிவுரையாளர் பதவியில் அமர்த்தினார் துணை வேந்தர் பேராசிரியர் வித்தி. யாழ். பல்கலைக்கழகத்திலே தமிழ்த்துறையிலே தற்காலிக உதவி விரிவுரையாளராகக் கடமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிந்த காலத்திலே, 1988இல் எனது எம்.ஏ(முதுகலைமாணி)ப் பட்டத் திற்கான ஆய்வேடாக இவ்வாய்வு சமர்ப்பிக்கப்பட்டது. இக்காலப் பகுதியிலே **தமிழ்த் துறையின் தலைவராகப் பணிபுரிந்தவர் பேராசிரியர் கலாநிதி ஆ. வேலுப்பிள்ளை அவர்கள்.** இவரே *"நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பற்றியும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் பற்றியும் எழுந்த பிரபந்தங்கள்"* என்னும் ஆய்வுத் தலைப்பினுக்கு அனுமதி தந்ததுடன் இதற்கு அங்கீகாரமளித்து இதன் பொறுப்புமிக்க மேற்பார்வையாளராகவும் (Supervisor) இருந்தார். சமயம், தமிழி யல், சாசனவியல், வரலாறு, இலக்கணம், கல்வெட்டாராய்ச்சி என்னும் பல்துறைகளிலேயும் ஆழமான **வித்துவப்புலமை மிக்க பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை** அவர்கள் இவ்வாய்வுத் தொடர்பில் எனக்கு நல்கிய ஆய்வியல் அணுகுமுறைகள், (Research Methodologies) நுட்பங்கள் இன்றும் பல்கலைக்கழக நோக்கிலே பயனுள்ள வகை யிலே திட்பநுட்பமாகப் பயன்படுகின்றன. இன்று சுவீடன் உப்சலா பல்கலைக்கழகத்திலே உலகப்புகழ் பெற்ற கல்விமான், ஆய்வ றிவாளர் என்னும் பேர்பெற்றுப் புகழுடன் திகழும் **பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளையவர்கள்** புரிந்த கைம்மாறு கருதாத பேருதவிகட்கு என்றும் என் பணிவான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்; திருவடிகளைத் தொட்டுப் பணிந்து வணங்குகிறேன்.

1980 முதல் 1985 வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் திலே தமிழ்த் தேசிய சேவையிலே பகுதிநேர அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராகவும் நேர்முக வருணனையாளராகவும் பணிகள்புரிந்த வேளை தமிழ் கூறு நல்லுலகால் **'பிள்ளைக் கவி' எனப் புகழப்படுபவரும் பேரறிஞரும் வித்துவப் புலமையாளருமாகிய திரு. வ.சிவராசசிங்கம், B.A(Hons)** அவர்களது அறிவுத் தொடர்பும் இலக்கிய நட்புங் கிடைத்தமையையும் இவ்விடத்தில் எண்ணிப்பார்த்து நீள நினைந்து மகிழ்கின்றேன். இவர் பிரபந்த இலக்கியங்களினூடே சமத்காரமிக்க கவிஞர் பெருமக்களது கவித்துவப்புலமை வீச்சின் உயிர்நிலைகளை இனங் கண்டு பல்வேறு தமிழ்ப்பிரபந்த இலக்கிய வடிவங்களைக் குறித்தும் உரைப்படுத்தி வானொலித் தொடர் நிகழ்ச் சிகளாக அறிமுகஞ் செய்து தமது குரலிலேயே ஒலிபரப்பி வந்தார். அக்காலத்தில் வானொலிக் கட்டுப்பாட்டாளராக விளங்கிய **சிவஸ்ரீ சி. ஹரிஹரசர்மா** அவர்களும் நானும் 'பிள்ளைக்கவி' கலாவிமர்சகர் வ.சிவராசசிங்கம் அவர்களது ஒலிப்பதிவுகளைச் செய்தோம். மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் இரசனையுடனும் தொழிற்பட்டமையினால் தமிழ்ப் பிரபந்த இலக்கிய வடிவங்கள் பற்றி மேலும் ஆழமாகவும் அகலமாகவும் ஆய்வுகளைச் செய்யலாம் என்ற எண்ணம் என்னுள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகிழ்த்தது. அதன் விளைவே எம். ஏப் பட்டத்திற்கான இவ்வாய்வு. இக்கருப்பொருளிலே விரிவாகச் சிந்திப்பதற்கு வழிகாட்டி உதவிய பேரறிஞர் **'பிள்ளைக்கவி' வ. சிவராசசிங்கம்** அவர்களுக்கு என் நன்றி கலந்த பணிவான வணக்கங்கள்.

ஈழத்துத் தமிழ்க் கவிதை வளர்ச்சி வரலாற்றிலே ஈழத்து முருகப் பிரபந்த இலக்கிய வடிவங்கள் தனித்ததொரு முதன்மையிடத்தினை வகிக்கின்றன. தமிழ் வழங்கும் இலங்கைப் பல்கலைக் கழகங்களிலே தமிழிலே எம்.ஏ;எம்.பில் (முதுகலைமாணி)ப் பட்டத்துக்கான பாடத் திட்டங்களிலே பிரபந்த இலக்கிய வடிவங்கள் பற்றிய நுண்ணறிவு பட்டதாரி மாணாக்கர்களுக்குப் பரீட்சிக்கப்படுவதுண்டு. அந்த வகை யிலே எனது இவ்வாய்வும் பல்கலைக்கழகப் பட்டதாரி மாணவர்களின் பிரதானதொரு பரீட்சைத் தேவையை வலியுறுத்தி நின்றது. இனி வருங்காலங்களிலும் தமிழ்த்துறையிலே இவ்விடயம் பற்றி நுனித்து ஆய்வு செய்யவேண்டிய நிலைமைகள் உண்டு.

பட்டப்பின் படிப்பு என்பது அறிவும் புலமையும் ஆய்வு மனப்பாங் கும் தேடலும் மொழிப்பற்றும் வித்துவமும் கொண்டமையும் ஒரு கல்விச் செயற்பாடாகும். தமிழிலே பட்டப்பின்படிப்பு ஆளுமையும், படைப்பாற்றலுந் தரவல்லது. என்னைப்பொறுத்தளவிலே **பல்கலைக் கழகத்திலே எனக்குப் பேராசிரியர்களாக அமைந்த என் பேராசான்கள் கலாநிதிகள் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, கா.இந்திரபாலா, அ.சண் முகதாஸ், நா.சுப்பிரமணியன், வி.சிவசாமி, கா.கைலாசநாதக் குருக்கள், எம்.ஏ. நுஃமான், சித்திரலேகா மௌனகுரு, துரை, மனோகரன், சி.க.சிற் றம்பலம், ஆ.வேலுப்பிள்ளை ஆகியோரின்** வழிகாட்டுதல்களையும் ஆலோ சனைகளையும் என் ஆயுள் உள்ள வரை மறக்கமுடியாது. இப்பெரு மக்களது வித்துவப் புலமையின் தாக்கமும் நோக்கும் போக்கும் இயல்புகளுங் கூட இன்றும் உள் நின்று செயலாற்ற உறுதுணை புரிந்து எனக்கு நல்லபடி உதவுகின்றன. **ஆரம்பக் கல்வியிலே என்னை வழிப்படுத்திய பேராசான்கள் சங்கச்சான்றோன் பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா** (தலைவர், கல்விப் பீடம், யாழ். பல்கலைக்கழகம்), கொழும்பு **இதழியற் கல்லூரி விரிவுரையாளர், ஆ.சிவநேசச்செல்வன், M.A; M.Sc**, பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொருளியற்றுறைச் **சிரேஷ்ட விரிவுரையாளர் நிபுணர் பூ. சோதிநாதன்**, இந்துசமய பண்பாட்டலுவல்கள் அமைச்சின் முன்னாட் செயலாளர் **க.பரஞ்சோதி, B.A**, **திரு. க.குணரத்தினம், B.A**,, **திரு. ச.விநாயக மூர்த்தி, B.A**, ஆகியோருக்கு என் மன மார்ந்த நன்றிகள் என்றும் உரித்தாகுக. பெருகும்புகழ் படைத்த தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியிலே எனக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியறிவூட்டியவர்கள் பேராசான்கள் **உபஅதிபர் த.சண்முகசுந்தரம், திரு. க.ஆறுமுகராசா, அதிபர் தெ.து.ஜய ரத்தினம், வித்துவான் நா.சிவபாதசுந்தரம், செ.கதிரேசர்பிள்ளை, உப அதிபர் பி.எஸ்.குமாரசாமி, உபஅதிபர், எம்.மகாதேவன், திரு. ச.விநாய கரத்தினம், பண்டிதர் நா.ஆறுமுகம், ஆசிரியைகள் திருமதிகள் சண்மு கரத்தினம், கனகேஸ்வரன், சின்னத்தம்பி, துரைச்சாமி, பாலசிங்கம்** ஆகியோர். இவர்கள் என்றென்றும் என்னால் மறத்தற்கரியவர்கள். மகாஜனவின் முதற் பெண் ஆசிரியை **'அம்மா ரீச்சர்' திருமதி பாக்கியம் இராசா** அவர்கள் என்னுள் உயிர்ப்பாய் நிலவும் பரோபகாரி. இவர் களை நீளநினைந்து வணங்குகிறேன்.

1995 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திலிருந்து யுத்தப்பீதியினால் சகடைக் குண்டுவீச்சின் பின் வீட்டைவிட்டு வெளியேறிக் குடும்பத் துடன் இடம்பெயர்ந்த போது நான் சேகரித்துவைத்திருந்த எனது பெறுமதி மிக்க உடைமையான **வீட்டுநூல்நிலையத்தையும்,** விரிவுரைக் குறிப் புக்கள், கவியரங்குக் கவிதைகள், பட்டிமண்டபக் குறிப்புக்கள், சான்றி தழ்கள், ஆவணங்கள் அனைத்தையும் **கைவிட்டு** வெளியேறியமை எனக்குப் பெரும் உள, உடல் தாக்கங்களையும், விரக்தியையும் ஏற்படுத்தியது; நோயாளனாக்கியது; தனிப்பட்டமுறையிலே முயன்று பிரையாசையுடன் தேடிச்சேகரித்து வைத்திருந்த அரும்பெரும் நூல்கள் ஷெல்வீச்சினால் வீடுடைந்து மழைநீர் உட்புகுந்து நனைந்து சிதைந்து அழிந்துள்ள போதும், திடீரென எதிர்பாராத வகையில் குடும்பத்துடன் இடம்பெயர்ந்த போது நான் வைத்திருந்த எம்.ஏ. (முதுகலைமாணி) ஆய்வேட்டுப் பிரதியைச் சுமந்து வந்தமையினாலேயே இன்று - இந் நூல் இவ்வாறு வெளிவரப் பெருவாய்ப்பாயிற்று. எனது அன்பு மனைவி ரதிமலர்தேவி, என் அன்பு மக்கள் பிரகாஷ், குருபரன், தாரணி ஆகியோருக்கு **'என் எழுத்துக்களைச் சுமந்தவர்கள்'** என்ற வகையில் என் நன்றிகளையும் நல்லாசிகளையும், இனிய நல்வாழ்த்துக்களை யும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இத்தகையதொரு ஆய்வுநூலை வெளியிடும் பெரும்பேறு என்றும் செந்தமிழையும், செந்தமிழரினத்தையும் காத்தருளும் செந்தமிழ்த் தெய்வம் முருகக்கடவுளது பெருவிருப்புப் போலும்! தண்டையுஞ் சிலம்புங் கொண்ட முருகப்பெருமானின் பேரருளை எண்ணியெண்ணி வியப்பதுடன் அவன் பொன்னார் திருவடிகளையே எப்போதும் சிந்தித்து வந்தித்து வணங்கி நிற்கிறேன். அனைத்துக்கும் கருத்தா மூலகார ணன் முருகக்கடவுளே. யான் கருவி. செந்தமிழால் வாழ்கின்றேன். அவனே வாழ்விக்கின்றான்! அவன் புகழைப் பாடும் பணியே பணியுமாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டு மரபிலே வாய்மொழியாயுள்ளவையும் பாராயணத்துக் குரியவையுமான பல அருமைமிகு தாளத்துடனான பாடல்களும், சுத்தாங்கமாக இசைக்கத்தக்க பாடல்களும் இந்நூலிலே இடம்பெற் றுள்ளன. நம்பிக்கையும், தெம்பும், வைராக்கியமும், பக்தியும், தமிழ் வளமுந்தரும் வகையிலே தமிழில் வித்துவப்புலமையும், மேதாவிலா சநலனும்மிக்க கவிசிரேஷ்டர்களால் எழுதப்பட்ட பிரபந்த இலக்கியப் பாடல்கள் இந்நூலினை அணிசெய்கின்றன. நீங்களும் நூலின் உள் நுழைந்து செந்தமிழ் இலக்கிய இன்பத்தை நுகருங்கள். செந்தமிழின்ப அமுதம் பருகுங்கள்.

இந்நூலுருவாக்கத்தின் போது எனக்குப் பெரிதும் உறுதுணை புரிந்து கணினியிலே பதித்தும், எழுத்துப்பிழைகளைத் திருத்துவதற் குப் பேருதவி புரிந்தும், செவ்வனே அழகுறப் பதிப்பிக்கவும் உதவிய எனதன்புக்குரிய மாணவர்கள் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் **த.வரதன், த.ரூபசீலன்** நண்பர்களுக்கும் என் இனிய நல்லாசிகளும் நன்றிகளும் என்றென்றும் உரித்தாகுக. இந்நூலை மிகுந்த நேரத்தியாக அச்சிட்ட லஷ்மி அச்சக உரிமையாளர் புரவலர் திரு.வே.திருநீலகண்டனுக்கும், மனேச்சருக்கும், பொறுப்புமிக்க ஊழி யருக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

தமிழ்கூறு நல்லுலகம் இந்நூலை மனமுவந்து வரவேற்று வாழ்த்தும் என்று திடமாக நம்புகின்றேன்.

வாழ்க செந்தமிழ்.
சுபம்.


அன்பன்,
**கனகசபாபதி நாகேஸ்வரன்.**

சிரேஷ்டவிரிவுரையாளர்,
மொழித்துறை,
சபரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுல்லோயா,
இலங்கை.
23.11.2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A (Jaffna)

SABARAGAMUWA UNIVERSITY OF SRI LANKA



**கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A.**

***KANAGASABAPATHY NAGESWARAN, B.A (HONS); M.A.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

1. நல்லூர், மாவிட்டபுரம் கோவில் வரலாறும் ஐதிகங்களும்

2. பிரபந்த இலக்கியம் - அறிமுகம்

3. பிரபந்தங்களிலே பக்திப்பாடல்களுக்குரிய இடம்

4. பிரபந்தங்களிலே கவித்துவ வளம்

5. பின்னிணைப்பு

6. நூல்விபரப்பட்டியல்

7. படங்கள் (நூலாசிரியரின் தொண்டுகள்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படங்களின் விபரம்

படம் - 1. நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் முன்புறத் தோற்றம்

படம் - 2. யாழ்ப்பாண இராசாக்களின் (சேதுபதிகளின் சேது நாணயங்கள்)

படம் - 3. நல்லூர்த் தேர் - வீதியுலாவும் அடியார் கூட்டமும்

படம் - 4. *இரட்டைமணிமாலை* என்னும் பிரபந்தத்தை இயற்றிய சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர்.

படம் - 5. இந்தியத்திருநல்லூர்க்காளி

படம் - 6. அலங்காரப் பதக்கம்

படம் - 7. அலங்காரநகை - அட்டியல்

படம் - 8. மாவை முருகன் இராஜகோபுரம்

படம் - 9. ஏடு, எழுத்தாணி, நகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் ஒன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்மாவிட்டபுரம் கோவில் வரலாறும் ஐதிகங்களும்

**நல்லூர், மாவிட்டபுரம்** கோவில்கள்பற்றியெழுந்துள்ள பிரபந் தங்கள் குறித்த இவ்வாய்விலே பிரபந்தங்களிற் காணப்படும் சரித்திரச் செய்திகள், அவற்றின் முரண்பாடுகள் பற்றி அறிந்து கொள்ளவும் மறைந்துகிடக்கும் வரலாற்றுண்மைகளை வெளிக் கொணரவும் இவ்வியலிற் சுட்டப்படும் கருத்துக்கள் உதவியா யமையும். இலக்கிய நூலாதரங்களை வரலாற்றாய்வினுக்குரிய ஆவணங்களாகக் கொள்ளும் மரபு ஆய்வாளரிடையே உண்டு. இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கும் பிரபந்தங்கள் நல்லூர், மாவிட்டபுரம் கோவில்கள் பற்றிய வரலாறுகளை மேலும் விளக்கமுறச் செய்வனவாகும். முதலிலே இவ்விரு தலங்கள் பற்றியுமுள்ள வரலாறுகளையும் ஐதிகங்களையும் நோக்கலாம்.

**'யாழ்ப்பாண வரலாறு'** முழுமையாக எழுதப்படுவதற்குரிய ஆய் வின் ஒரு சிறுபங்களிப்பினை இவ்வாய்வுக்கட்டுரை நிறைவு செய் யும் அடிப்படையிலேயும் இங்கு கருத்துக்கள் இடம் பெறவுள்ளன.

யாழ்ப்பாண அரசின் இராசதானியாகத் திகழ்ந்த சிறப்பு நல்லூ ருக்குண்டு. முறையான நிருவாக நடவடிக்கைகளுக்குரிய மத்திய இடமாகவும் நல்லூர் அமைந்திருந்த செய்திகளை வரலாற்று நூல்கள் தந்து நிற்கின்றன. நகர அமைப்புக் கொண்டதாயும் மந்திரி, பிரதானிகளது இருக்கைகளைக் கொண்டதாயும், சமுதா யக் கடமைகளுக்கென இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட குலங்களினதும் குடிகளினதும் வதிவிடங்களைச் சூழ அமையப் பெற்றதாயும் நல்லூர் விளங்கியுள்ளமையும் அவ்வூரின் முதன் மைக்குக் காரணங்களாயின. இன்றும் பல்வகையிலுஞ் சிறப்புப் பெற்று விளங்கும் இந்நல்லூரின் தனிப்பெருஞ் சிறப்புக்கு அங்கு அமைந்துள்ள கந்தசுவாமி கோவில் பிரதானமான தொன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


இக்கோவிலின் காலம், அதன் சூழமைவு, சிறப்புகள் என்பன வற்றுடன் மூர்த்தி விசேடணங்குறித்து நோக்குவதும் இங்கு பொருத்தமானதாகும்.

யாழ்ப்பாண வரலாற்றையெடுத்துரைக்கும் *கைலாயமாலை, வையாபாடல், யாழ்ப்பாண வைபவமாலை* போன்ற நூல்களும் **ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை, முதலியார் செ.இராசநாயகம், சுவாமிஞானப் பிரகாசர், டானியல் ஜோன், மெஸ்.க.வேலுப்பிள்ளை, பேராசிரியர்கள் க.கணபதிப்பிள்ளை, ஆ.வேலுப்பிள்ளை, கா. இந்திரபாலா, எஸ்.பத்ம நாதன், கலாநிதிகள் சி.க.சிற்றம்பலம், பொ.இரகுபதி, திருவாளர்கள் குல.சபாநாதன், வி.சிவசாமி, செ.கிருஷ்ணராசா, பொ.ஜெகநாதன்** ஆகியோரது வரலாற்றாய்வுகளும், குவை றோஸ் சுவாமிகளின் *The Temporal and Spiritual Conquest of Ceylon* என்ற நூலும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவற்றைவிட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதியுள்ளனவும், இலக்கிய எழுத்தாளர் **'செங்கை யாழியான்'** எழுதியுள்ள கட்டுரை களும் நாவல்களும் நல்லூர் பற்றிய ஆய்விலே பிரதானவிடம் பெறுகின்றன. The Ceylon Antiquary and Literary Register இல் **சேர். ஆலெக்சாண்டர் ஜோன்ஸ்ரனின்** ஆவணத்திலிருந்தும் இக்கோவி லைப்பற்றி அறிய முடிகின்றது. *A Memory of mrs. H.W.Winslow Combining a sktch of ceylon mission* என்ற நூலிலிருந்தும் நல் லூர்க் கந்தசுவாமி கோவிலின் திருவிழாக்களினதும் பூசைகளிலும் நிகழ்ந்த தேவதாசிகளின் நடனம், தேரிழுப்பின்போது ஆடு பலி யிடல், பறைவாத்தியம் முழங்கல் போன்ற விபரங்களை அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் முன்புறத் தோற்றம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் முன்னொருகாலத்திற் சிங்கைநகர் என்னும் பெயருடன் இருந்திருக்கலாம் என்ற சர்ச்சையுமொன்றுள்ளது. சிங்கைநகர் வேறு; நல்லூர் வேறு என்ற கருத்தினையும் ஆய்வாளர் நிறுவமுயன்றுள்ளனர். மன்னர்களது வம்சப்பெயர்களோடு சிங்கை நகர் என்னும் பெயரும் இணைந்து பயன் படுத்தப்பட்டுள்ளமை யையும் நோக்கலாம்.

யாழ்ப்பாணத்தை ஆண்ட சக்கரவர்த்திகள் பொதுவாக சிங்க நகரத்தின் ஆட்சியாளர் என்றே வர்ணிக்கப்பட்டனர். சிங்கையா ரியன், சிங்கைதங்கும் ஆரியர்கோமான் என்று பலவகைப்பட்ட விருதுகள் இம்மன்னர்களுக்கு இலக்கியத்திலும் சாசனத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன. சிங்கை என்ற பெயர் வட இலங்கை இராச்சியத்திற்கும் அதன் தலைநகருக்கும் வழங்கியிருக்க முடியு மோவென்ற கேள்விக்கு ஆரியச்சக்கரவர்த்திகளின் விருதுகள் இடமளிக்கின்றன. *செகராசசேகரம்* என்ற மருத்துவ நூலே 'செயம் பெறு சிங்கைநாடன் செகராசசேகரன்' என மன்னன் வருணிக்கப் பட்டான். ஆகவே சிங்கை அல்லது சிங்கைநாடு என்ற பெயர் வடஇலங்கை இராச்சியத்தின் ஒரு பெயராக வழங்கியிருக்க வேண்டுமென்பது இச்சான்றின் மூலம் தெரிய வருகின்றது.

வட இலங்கை இராச்சியத்தின் தலைநகரின் பெயர் சிங்கை அல்லது சிங்கைநகர் எனச் *செகராசசேகரமாலை, செகராச சேகரம், தக்ஷிணகைலாயபுராணம்* ஆகிய நூல்களிலே குறிப் பிடப்பட்டுள்ளது. *யாழ்ப்பாண வைபவமாலையிலும், கைலாய மாலையிலும்* ஆரியச் சக்கரவர்த்திகளின் முற்பட்ட தலைநகர் நல்லூர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே யாழ்ப்பாண மன்னர் களுடைய முதலாவது தலைநகர் சிங்கைநகர் என்றும் பதினைந் தாம் நூற்றாண்டிற் செண்பகப்பெருமாள் நடத்திய படையெடுப்பிற் குப்பின்பு இரண்டாவது தலைநகராக அமைக்கப்பட்டிருந்தது என்றும் விளக்கங் கொடுக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்திற் சிங்கைநகர் எனப் பெயர்பெற்றிருந்த தலைநகர் பிற்பட்ட காலத்தில் நல்லூர் எனப் பெயர்பெற்றது.

**பேராசிரியர் கா. இந்திரபாலா,** சிங்கைநகர், சிங்கை நல்லூர் என்னும் தலைநகர்ப் பெயர்கள் நிலவிய காலத்தினையும் அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெற்றுள்ள சான்றுகளையும் அட்டவனையொன்றின் மூலம் நிரற்படுத்தியுள்ளார். அவ்வட்டவணை பின்வருமாறுள்ளது.

"இவ்வாறு கால முறைப்படி நோக்குமிடத்துப்பதினான்காம் பதினைந்தாம் நூற்றாண்டுகளிலே சிங்கைநகரும், பதினைந்தாம் நூற்றாண்டில் யாழ்ப்பாணப் பட்டினமும் பதினாறாம் நூற்றாண்டில் நல்லூரும் வட இலங்கை மன்னர்களுடைய தலைநகர்களாக இருந்தனவென்று தோன்றலாம். பதினாறாம் நூற்றாண்டில் போர்த் துகீசர் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது அங்கு ஒரேயொரு நகரத் தையே அதாவது நல்லூரையே கண்டனரென்று அறிகின்றோம். இது சம்பந்தமாகக் **குவைறோஸ் பாதிரியார்** கூறியுள்ள கருத்துக் கவனிக்கத்தக்கது. 'நல்லூரை விட (Nallur) வேறு நகரம் ஒருபோ தும் அவர்களுக்கு இருக்கவில்லை. இது போர்த்துக்கீசருடைய பட்டினமும் அங்காடியும் அமைந்துள்ள இடத்திலிருந்து அரை லீக் (ஏறக்குறைய ஒன்றரைமைல்) தூரத்தில் இருக்கிறது. குவை றோஸ் குறிப்பிடுகின்ற போர்த்துக்கீசருடைய யாழ்ப்பாண நகர மாக மாறியவை இவ்விடத்திலிருந்து ஏறக்குறைய முன்றுமைல் தூரத்திலே நல்லூர் இருக்கின்றது."[1]

சிங்கைநகர் (சமஸ்கிருதம் - ஸிங்ஹ நகர) என்ற பெயர் கலிங்கநாட்டு நகரங்களுள் ஒன்றாகிய ஸிங்கபுரத்துடன் தொடர் புடைய பெயர் என்று கொள்ளவிடமுண்டு. கலிங்கநாட்டு வம்சங் களுள் ஒன்று கி.பி. ஐந்தாம் நூற்றாண்டு தொடக்கம் பன்னி ரண்டாம் நூற்றாண்டுவரையாவது ஸிங்உறபுர என்ற தலைநக ரிலிருந்து ஆட்சிநடத்தியது என அறிகின்றோம். (*The classical age, ed.R.C.Majumdar, pp.212-213)* இலங்கைக்கு வந்த நிஸங்க மல்ல(ன்) போன்ற கலிங்கமன்னர் இங்கிருந்தே வந்தனர். மாகனும் அவனுடைய சகாக்களும் ஸிங்கபுரத்திலிருந்தே வந்திருக்க வேண்டும். அவ்வாறு வந்த கலிங்க வம்சத்தவர் வடக்கே ஒருபுதிய தலைநகரைத் தாபித்து ஆட்சியை நடத்தியபோது, அந்நகருக்குத் தங்கள் தாய்நகரின் பெயரையொத்த ஒரு பெயரை இட்டிருந்தனர் என்று தோன்றுகின்றது. ஸிங்கபுர என்ற இடப்பெயர் இந்தியாவிலும் தென்கிழக்காசியாவிலும் பல இடங்களிலே இடைக்காலத்தில் வழக்கிலிருந்தது. எக்காரணத்தினால் இப்பெயர் இப்படிப்பயன் படுத்தப்பட்டது என்று கண்டுகொள்வது கஷ்டம். ஆகவே சிங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர் என்ற பெயர் கலிங்கத் தொடர்பைக் காட்டுவதாகக் கொள்வது ஓர் ஊகம் மட்டுமே[2] என்று மேலும் கூறுகின்றார், **பேராசிரியர் கா.இந்திரபாலா.**

நல்லூர் பதினைந்தாம் நூற்றாண்டிலேதான் அமைக்கப்பட்டது என்பது பலரிடையே தற்காலத்தில் நிலவுகின்ற ஒரு கருத்தாகும். பதினைந்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்பபாணத்தைத் தாக்கிய கோட்டை இராச்சியத்து இளவரசனாகிய செண்பகப் பெருமாள் (அல்லது ஸபுமால் குமாரயா) என்பவன் இப்புது நகரை அமைத்தான் என இக்கருத்தைத் தெரிவித்தவர்கள் கூறியுள்ளனர்.[3] கந்தசுவாமி கோவிலின் கட்டியம் அக் கோவிலை யமைத்தவனாக ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு என்பவனைக் குறிப்பிடுகின்றது. (சி.இராசநாயகம், ப.332) இவன் யாழ்ப்பா ணத்தைக் கைப்பற்றி ஆண்ட பின்னர் கோட்டையின் மன்னனாகப் புவனேகபாகு என்ற பெயருடன் ஆட்சி நடத்திய (1470-1478) செண்பகப்பெருமாளே என அடையாளங் கண்டு கொள்ளப் பட்டுள்ளான் என்பார், **சி.இராசநாயகம்.**

நல்லூர்க் கந்சுவாமி கோவிலைக் கட்டியவனாக *யாழ்ப்பாண வைபவமாலையி*லே குறிப்பிடப்படுபவன் புவனேகபாகு என்ற பெயருடையவனே. இவன் நல்லூரின் வெளிமதில்களை அமைத் தான் என்றும் *யாழ்ப்பாண வைபவமாலையிற்* (ப.31-32)

| காலம் | தலைநகரப்பெயர் | சான்று |
|---|---|---|
| 14 ஆம் நூற்றாண்டு | சிங்கைநகர் | கொட்டகம கல்வெட்டு |
| | சிங்கை | செகராசசேகரமாலை |
| | சிங்கை | செகராசசேகரம் |
| | சிங்கை | |
| | சிங்கை | அரிகேசரி பராக்கிரம |
| | யாழ்ப்பாணாயன் | பாண்டியனின் |
| | பட்டினம் (திருத்தப்பட்டுள்ள | கல்வெட்டுக்கள் |
| 15 ஆம் நூற்றாண்டு | பெயர்)யாழ்ப்பாணாயன் | தக்ஷிணகைலாயபுராணம் |
| | பட்டினம்யாபா- | திருமாணிக்குழிக்கல்வெட்டு |
| | பட்டுண(யாழ்ப்பாண | திருப்புகழ் |
| | பட்டினம்) | சந்தேஸ நூல்கள் |
| 16 ஆம் நூற்றாண்டு | நல்லூர் | போர்த்துக்கீச நூல்கள் |
| 17 ஆம் நூற்றாண்டு | நல்லூர் | கைலாயமாலை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவன் ஓர் அமைச்சனாக விளங்கிய பிராமணன் என வருணிக்கப்பட்டுள்ளான்.

*கைலாயமாலை*யுடன் வெளியிடப்பட்டுள்ள ஒரு பழைய தனிச் செய்யுளிலே நல்லூர்க்கந்தசுவாமி கோவிலும் யாழ்ப்பாண நகரியும் புவனேகபாகு என்பவனால் அமைக்கப்பட்டன என்ற செய்தி காணப்படுகின்றது. இத்தகவலை வைத்தே நல்லூர் பதினைந்தாம் நூற்றாண்டிலே செண்பகப்பெருமாளாலே கட்டப்பட்டது என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் கட்டியத்திலே புவனேகபாகுவுக்குக் கொடுக்கப் பட்டுள்ள ஸ்ரீ சங்கபோதி என்னும் விருதை நோக்குமிடத்து அவன் சிங்கள இராச்சியத்தைச் சேர்ந்த ஒரு மன்னனாக இருந்திருக்கவேண்டுமென்பது வெளிப்படுகின்றது. ஏனெனில் ஸ்ரீ சங்கபோதி என்ற விருது சிங்கள அரச வம்சத்தவர்களாலேயே ஒரு சிம்மாசனப் பெயராகப் பயன்படுத்தப்பட்டது.[4]

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் கட்டியம் பற்றிய குறிப்புகளைப் **பேராசிரியர், கலாநிதி சி.பத்மநாதன்** பின்வருமாறு கூறியுள்ளார்.

> "சோடசமகா தான சூர்யவம் சோத்பவ
> ஸ்ரீமத் சங்கபோதி புவனேகபாகு
> சிவகோத்திரோத்பவ இரகுநாத மாப்பாண."[5]

எனக் கூறுகிறது கட்டியம்.

"நல்லூரிலே நண்ணிய புவனேகபாகு, யாழ்ப்பாணத்தை வென்று அடக்கிய 'சம்புமால் குமாரய' என்று செண்பகப் பெருமாள் என்ற ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகு ஆகிய இருவரையும் ஒருவரெனக் கொண்டதும் நல்லூர்க் கந்சுவாமி கோவிற் கட்டியத்துக்கு முதன்மைதந்ததும் ஈழத்தமிழர் வரலாற்றிற் சங்கிலித் தொடர்பான குழப்பங்களை ஏற்படுத்தின"[6] என்ற கருத்து மனங் கொள்ளவேண்டியதொன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் தலவரலாறு குறித்த ஆய்வுகளை மதிப்பிடும்போது சில முடிவுகள் கிடைக்கின்றன. ஆயினும், கோவில் எப்போது, யாரால் கட்டப்பட்டது என்பது குறித்துக் கருத்துமுரண்பாடுகள் காணப்படுகின்றன. கி.பி. 1248 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தின் முதலாவது ஆசியச் சக்கரவர்த்தியான சிங்கையாரியனின் முதன்மந்திரி புவனேக பாகுவால் குருக்கள் வளவு என்ற இன்றைய கோவிலுள்ள இடத்தில் அமைக்கப்பட்தென்ற கருத்தொன்றுண்டு. இந்நிகழ் வுக்கான வரலாற்றாதாரமாகக் *கைலாயமாலை*யிலுள்ள தனிப் பாடலொன்றைக் கொள்ளலாம். கோவில் கி.பி. 870 ஆம் ஆண்டிலா, 948 ஆம் ஆண்டிலா, 1248ஆம் ஆண்டிலா முதன் முதற் கட்டப்பட்டது என்பது குறித்து ஐயப்பாடுகள் உள்ளன. *யாழ்ப்பாண வைபவமாலையி*ற் கி.பி 10 ஆம் நூற்றாண்டிற் புவனேகபாகு என்பவனால்...... என வருகின்றது. இன்னோர் சாரார் 15 ஆம் நூற்றாண்டின் மத்தியில் கி.பி.1450 இல் கோட் டையில் இருந்து வந்த செண்பகப் பெருமாள் என்பவனாற் கட்டப்பட்டது என்று கூறுவார். எனினும் யாழ்ப்பாண இராச்சியம் நிலைபெற்ற 13ஆம் நூற்றாண்டில் இக்கோவிலமைக்கப்பட்ட தெனக்கொள்வதே சிறப்பானது என்பது ஆய்வாளர் கருத்து. *யாழ்ப்பாண வைபவவிமர்சனம்* என்ற சரித்திர நூலின் ஆசிரி யரான நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரும் இவ்வாறே கருதுகின் றார். கலிங்கமாகனே முதலாவது சிங்கை ஆரியனென *யாழ்ப் பாணச் சரித்திரத்தின்* ஆசிரியரான **முதலியார் செ.இராசநாயகம்** குறிப்பிடுகின்றார். இக்காலம் கி.பி.1210 என இவர் காண்கின்றார். **பேராசிரியர்கள் சி. பத்மநாதனும் கா.இந்திரபாலாவும்** யாழ்ப்பாண இராச்சியம் 13ஆம் நூற்றாண்டிலேதான் நிலைத்த தெனக் கொள்கின்றார்.

கலிங்கத்துமாகனை முதலாவது சிங்கையாரியனாகச் சுவாமி ஞானப்பிரகாசர் இனங்கான்கின்றார். எனவே முதலாவது ஆலயம் 1248 இல் அமைக்கப்பட்டதென்று முடிவுசெய்ய ஆதாரங்களுள.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண இராசாக்களின்(சேதுபதிகளின்) சேதுநாணயங்கள்



நல்லூர் இராசதானியானது கி.பி.1450 ஆம்ஆண்டின் பின்னரே என்பதும், ஆரியச் சக்கரவர்த்திகள் யாழ்ப்பாணத்தில் அரசு தொடங்கியது கி.பி.13 ஆம் நூற்றாண்டிலென்பது வரலாற்றாசிரியர்கள் முடிவு"[7] என்று கூறுகிறார், **கலாநிதி கே.எஸ். நடராசா.** கி.பி.1450 ஆம் ஆண்டு முதலாவது கந்தசுவாமிகோவில் சப்புமால் குமாரயா என்ற செண்பகப்பெருமாள் எனும் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகுவால் அழிக்கப்பட்டது. யாழ்ப்பாண இராச்சியத்திலுள்ள கிராமங்கள் தென்னிலங்கைப் படைகளால் அழிக்கப்பட்டமையைக் *கோகில சந்தேஸ* என்ற சிங்களநூல் விபரிக்கின்றது. The Ceylon Antiquary and Literary Register. (Vol.1916-1917) என்ற ஆவணத்திற் *கோகில சந்தேஸவின்* ஆங்கில மொழிபெயர்ப்புள்ளது.

கி.பி.1450க்கும் கி.பி 1467 க்கும் இடையில் முத்திரைச்சந்தியில் இன்று கிறிஸ்தவ தேவாலயம் இருக்குமிடத்தில் ஸ்ரீ சங்கபோதி புவனேகபாகுவால் மீண்டும் கந்தசுவாமி கோவில் அமைக்கப்பட்டது. தனது படையெடுப்பால் அழிந்துபோன கந்தசுவாமிகோவிலை, தான் புரிந்த பாவத்திற்குப் பரிகாரமாக மீண்டும் கட்டுவித்தான். இதற்கு ஆதாரங்களாக நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் கட்டியத்தினையும் (வாசகங்கள் முன்னர் எடுத்துக்காட்டப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன) *விசுவநாத சாஸ்திரியார் சம்பவக்குறிப்பு* என்னும் பிரசுரிக்கப்படாத ஏட்டிற் காணப்படும் ஒரு பாடலையும் கொள்ளலாம்.

இரண்டாவது ஆலயம் முத்திரைச்சந்தியில் இன்று கிறிஸ்தவ தேவாலயம் இருக்குமிடத்தில் அமைக்கப்பட்டதென்பதற்கு **குவைறோஸ் பாதிரியாரின்** *The Temporal and Spiritual Conquest of Ceylon* என்ற நூலும், பால்தேயஸ் பாதிரியாரின் *A True and Exact Description of Great Island Ceylon* என்ற நூலும் ஆதாரங்களாக உள்ளன.

கி.பி. 1621 ஆம் ஆண்டு நல்லூர்க் கந்தசுவாமி கோவில் போர்த்துக்கீசத் தளபதியான **பிலிப் த ஒலிவேறா** என்பவனால் அத்திவாரத்தோடு கிளறியழிக்கப்பட்டது.கி.பி 1620 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தின்மீது போர்த்துக்கீசரின் இறுதிப்படையெடுப்பு நிகழ்ந்தது. பிலிப் த ஒலிவேறா என்பவன் படையை நடத்தி வந்தான். அவன் நல்லூர்க் கந்தசுவாமிகோவிலை முற்றாக அழித்துச் சிதைத்தான். இதற்கு யாழ்ப்பாணச் சரித்திரத்தை விபரிக்கும் நூல்களும் இலங்கை வரலாற்று நூல்களும் ஆதாரங்கள். **குவைறோஸ் பாதிரியாரும் பால்தேயஸ் பாதிரியாரும்** எழுதிய நூல்களுஞ் சான்றுகளாகவுள்ளன.

தற்போது நல்லூர்க் கந்தசுவாமி கோவில் இருக்குமிடத்திற் கோவிலை அமைத்தவர் யார் என்பது திட்டவட்டமாகத் தெரியவில்லை. புராதன கோவிலை, பிராமணரின் பரம்பரையினைச் சேர்ந்த கிருஷ்ணையர் சுப்பையர் என்பவர் கி.பி 1793 இல் ஒல்லாந்த அரசின் அனுமதி பெற்று ஒரு சிறுகொட்டிலாக அமைத்து அதில் வேல் வைத்துப் பூசை செய்து வந்தார் என ஒரு சாரார் கூறுகின்றனர்.

கிருஷ்ணையர் என்பவர்தான் முதன்முதலில் நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை ஆதியிற்கட்டினார் என்றும், அவரின் மகன் சுப்பையர்தான் முதன்முதலிற் கட்டினார் என்றும் இருசாரார் இக்கோவிலின் தோற்றங்குறித்த செய்திகளை முன்வைப்பர். இன்றுஞ் சிலர் தொன்ஜுவான் இரகுநாதமாப்பாணமுதலியார் கி.பி 1734 இல் தற்போதுள்ள இடத்தில் ஆலயத்தை அமைத்தார் என்பார். ஆதிக்கந்தசுவாமி கோவிலில் நிறுவப்பட்டதென்ற கருத்துமொன்றுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நல்லூர்க் கந்தசுவாமி கோவில் கட்டப்பட்ட ஆண்டு தொடர்பாகப் பார்க்கும் போது ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதி யிலேயே மதசுதந்திரம் கொடுக்கப்பட்டதென்ற காரணத்தாலே கி.பி 1793 ஆம் ஆண்டிலேயே கோவில் கட்டப்பட்டிருக்க வேண்டும்.

இன்றைய கோவில் அமைத்த பெருமை **கிருஷ்ணையர் சுப்பையர்** என்ற பிராமணருக்கும் தொன்ஜுவான் மாப்பாண முதலியாருக்கும் அவர் மகன் இரகுநாதமாப்பாணருக்கும் உரியது. மடாலயமாக யமுனாரிக்கு அருகில் இருந்ததைக் குருக்கள்வளவில் நிறுவக் கிருஷ்ணையர் சுப்பையரும் வேறு சைவசமயிகள் சிலரும் விரும்பி னர். ஆட்சியாளருக்கு விண்ணப் பித்து நிலமும் அனுமதியும் பெற்றனர். அதற்கு அக்காலத்திற் சிறாப்பராகக் கச்சேரியிலிருந்த தொன்ஜுவான் மாப்பாண முதலியார் உதவினார். கோவிலை நிறுவியபோது கிருஷ்ணையர் சுப்பையரும் இரகுநாதமாப்பா ணரும் கூடிய ஆர்வஞ் செலுத்தினர். கோவிலின் பிரதமகுருவாக கிருஷ்ணயர் சுப்பையரும் ஆலய கர்த்தாவாக இரகுநாதமாப் பாணரும் இடம் பெற்றனர். கோவிலின் உரிமை இவ்விருவருக் குமே இருந்தது. இதற்கு ஆதாரமாக 1810 ஆம் ஆண்டளவில் கிருஷ்ணையர் சுப்பையரின் பேரருக்கும் **இரகுநாதமாப் பாணரின் வழிவந்த ஆறுமுகமாப்பாணருக்கும்** நடந்த வழக்கொன்றுள்ளது.

இப்பொழுதுள்ள கந்தசுவாமி கோவிலின் தாபகர்களி லொருவரான **கிருஷ்ணையர் சுப்பையர்** ஆலயத்தின் பிரதம குருவா கத் தெரிவானதால் ஆலயக்கட்டியத்தில் அவர் பெயர் இடம் பெறமுடியாதுபோயிற்று என்றும் அதனால் அந்தக் கௌரவம் இரகுநாதமாப்பாண முதலியாருக்குக் கிடைத்தது என்ற கருத்து முண்டு. **தொன்ஜு வான் மாப்பாணமுதலியாரும்** இரகுநாதமாப்பாண முதலியாரும் ஒருவரெனக் கூறுவதும் இரகுநாதமாப்பாண முதலி யார் மட்டுமே நல்லூர்க் கந்தசுவாமி கோவிலை நிறுவினார் எனக்கொள்வதும் பெருத்தமற்றவையென்ற வாதமும் இவ்வாலய வரலாற்றிலே உண்டு.

இனி, நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் சூழலையும் அதன் பிற சிறப்புகளையும் நோக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லையாதீனம்

இந்தியாவிற் காணப்படும் ஆதீனங்களைப் போன்றே ஈழத்திலும் நல்லூர்த் திருஞானசம்பந்தர் ஆதீனம் விளங்குகின்றது. ஆதீன சம்பிரதாயங்கள் எனக் கொள்ளப்படும் பெயர் முதலிய மரபுகளும் பட்டாபிஷேகம் என்பனவும் நல்லையாதீனத்திலேயும் நடைபெறு வனவாம். 'ஆசார்ய அபிஷேகம்' பிராமணர்களிடத்தே நிலவுவது போலவே ஆதீன சுவாமிகளுக்கும் படிமுறையான அபிஷேக, பட்டமளிப்பு வைபவங்களும் உயர்வுங் கிடைக்கின்றன. ஆதீன மரபுகளின்படி தம்பிரான், சந்நிதானம், மகாசந்நிதானம், ஸ்வாமி கள், பரமாசார்ய ஸ்வாமிகள் என்ற ஆதீனப் பெயர்கள் அமையும். நல்லையாதீனம் இன்று பொதுமக்களதும் கலைஞர்களதும் காவி வாணர்களினதும் பேராசிரியர்களினதும் ஞானிகளதும் கலாபீட மாக விளங்குகின்றது. சைவாசாரமரபுகள் இவ்வாதீனத்திற் பேணப் படுகின்றன. சிந்தனைக்குப் பெருவிருந்தளிக்கும் கவியரங்கு, கருத்தரங்கு, நூல் வெளியீட்டரங்கு, விமர்சனவரங்கு, புராண படனம், திருமுறைப் பண்ணிசை, கதாப்பிரசங்கம் என்பன நிகழுமி டமாகவும் உள்ளது. இப்பொழுது இரண்டாவது குரு மகாசந் நிதானமாக **இளவரசு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாாசர்ய ஸ்வாமிகள்** தலைமையேற்று விளங்குகின்றார்.

## இந்திய ஆதீனத் தொடர்பு

தமிழ்நாட்டில் முதலாவது ஆதீனம் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர் மதுரையிலே தொடங்கப்பெற்ற திருஞானசம்பந்த ஆதீன மாகும். இது மங்கையர்க்கரசியார் வேண்டுதலினாலே திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் மதுரைக்கு எழுந்தருளிவந்து தங்கியிருந் ததும், சமணராலே தீ கொளுவப்பட்டதுமான மடத்திலே தொடங் கப்பெற்றது. ஆதீன பரம்பரையிலே தற்போது பீடாதிபதியாக அருளாட்சிசெய்பவர் 292 ஆவது குருமகாசந்நிதானம் ஆவார்.

திருவாவடுதுறை ஆதீனம், தருமபுரம் ஆதீனம், திருவண் ணாமலைகுன்றக்குடி ஆதீனம், காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீ னம், திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் என்பன சைவத்துறை வளர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்குப் பெரும் பங்களிப்பனவாயுள்ளன. இத்தகு சிறப்புகள் நல்லையாதீனத்திற்குமுண்டு.

யாழ்ப்பாணத்து நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தை 1966 ஆம் ஆண்டு **ஸ்ரீமத் ஸ்வாமிநாதத்தம்பிரான் ஸ்வாமிகள்** நிறுவினார். 1977 ஆம் வருடம் ஆவணிமாதக் கார்த்திகை நட்சத்திரத்தில் நல்லை ஆதீனக் குருமுதல்வராக அபிஷேகஞ்செய்து **ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாததேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்** எனத் திருநாமங்கொண்டார்கள்[8] என நல்லையிற் காணப்படும் சைவாதீனமரபினை அறியமுடிகின்றது. நல்லூரின் சிறப்பினுக்கு அங்கு அமைந்துள்ள ஆதீனத்தின் பணிகளும் குறிப்பிடத்தக்கன. ஆதீனத்தின் சிறப்புக்கூறுமிடத்து,

> **'இந்தியாவிலுள்ள ஆலயங்களின் சிறப்புக்கு ஆதாரமாக இருப்பவை ஆதீனங்களாகும். திருப்பனந்தாள் ஆதீனம், மதுரையாதீனம், தருமபுர ஆதீனம் முதலியன இருப்பது போன்றே சைவப்பண்பாட்டையும் தமிழையும் வளர்க்கும் வகையில் சமீபத்திற் சமாதியடைந்த சுவாமிநாத தம்பிரானால் ஆரம்பிக்கப்பட்ட திருஞானசம்பந்தர் ஆதீனம் நல்லூர் ஆலயத்தின் தென் மேற்கில் அமைந்துள்ளது. இதன் தொண்டு நல்லூர்ச் சிறப்புக்குப் பெரிதும் உபகாரமாகக் காணப்படுகிறது.'[9]**

என்று சிறப்பித்துள்ளார் **புலவர் சி.விசாலாட்சி.**


இனி, முருகசேவையிலீடுபடுவோரும் சிறப்பாகச் சமயக் குருமாரும் சிவாச்சாரியர்களும் தத்தம் பெயர்களுக்கு முன்னாலிட்டு வழங்கும் ஸ்ரீலஸ்ரீ, பிரம்மஸ்ரீ, சிவஸ்ரீ, மகாராஜ என்பன ஸ்ரீ குறித்து நோக்கலாம். சிவஸ்ரீ, பிரம்மஸ்ரீயும் ஒத்தன[10] என்று கருத்துக்கொள்கின்றார், **பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை.** குகஸ்ரீ என்று வழங்கும் பெயர்மரபினுக்கு நல்லூர்க் கந்தசுவாமிகோவில் மனேச்சரும் மகாராஜஸ்ரீ என்று வழங்கும் பெயருக்கு மாவிட்டபுரத்து ஆதீனகர்த்தரும் உதாரணர்களாவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A (Jaffna)

# நல்லூர்த் தேர் வீதியுலாவும் அடியார் கூட்டமும்.



சிவஸ்ரீ, பிரம்மஸ்ரீ, மகாராஸ்ரீ என்னும் பெயர் முன்னெழுத்துக்கள் வீரசைவ, பிராமண, தில்லைவாழந்தணர் மரபினர்களைக் குறித்து வழங்குவனவாயுள்ளன. சிவனையறிந்தவர்கள், பிரம்மாவையறிந்த வர்கள் என்னும் பொருளிலே முன்னைய இரு சொற்களுமமைய, பின்னைய மகாராஜஸ்ரீ என்பது குறிப்பாக மாவிட்டபுரத் திருத்தலச் சிவாசாரிய மரபிக்குரியதாகவே ஈழத்தில் வழங்கப்பட்டு வருகின் றது. மாவிட்டபுரம் பிரதான சிவாசாரியார் தமது பெயர் முன்னெ ழுத்தாக இப்பொழுதும் மகாராஜஸ்ரீ என்பதனைப் பயன்படுத்து கின்றார். மகாராஜஸ்ரீ என்பது அரச பாரம்பரியத்தில்வரும் சொற் றொடராகக் கொள்ளப்படுகின்றது.[11] என்பார் **கலாநிதி ப.கோபால கிருஷ்ணன்,** தில்லைப்பிராமண குலத்துப் பெயர்மரபாகவும் இதுவுள்ளது. சிவஸ்ரீ என்பதற்குப் 'சிவத்திரு' என்ற தமிழ்ப்பதத் தினை முதன்முதலிற் பயன் படுத்தியவர் நவாலியூர் சோ.இளமு ருகனார் என்பார்.[12] **சிவஸ்ரீ க.வைத்தீசுவரக்குருக்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் - இடப்பெயரும் வளங்களும்

> **'கனகசூரியன் நல்லூர் நகரைச் சிறந்த இராச தானியாக்கப் பெருமுயற்சி செய்தான். இராசவீதிகளும் அரண்மனைகளும் அவற்றைச் சூழ்ந்த குதிரைப்படை, யானைப்படைக் கொட் டாரங்களும் சிங்காரவனமும் பட்டாலும் பருத்தியாலும் நுண் ணிய தொழில்புரியும் மக்கள் இருக்கைகளும் தச்சர், ஓவியக் காரர், பொன்செய்வினைஞர், இரத்தினவணிகர், புலவர், பாணர் இவர்களுக்கு வெவ்வேறிருக்கைகளும் வேதமோதும் அந்தணர் மந்திரங்கள் மருத்துவர், சோதிடர் வைகும் வளமனை வீதிகளும் அமைத்து நல்லூரை நல்ல ஊராகப் பிரபல்யமுறைச் செய்தான்'**[13]

என்று **குல.சபாநாதன்** நல்லூரின் வளத்தினைக் குறிக்கின்றார். மேலும், தமிழ்நாட்டு ஊர்களுட் சில நல்லூர் என்றும் காங்கேயன் நல்லூர் என்றும் புத்தூர் என்றும் பெயர்பெறுகின்றன. பெண்ணை யாற்றங்கரையில் அமைந்தது திருவெண்ணெய் நல்லூர். அது சுந்தரமூர்த்தி நாயனாரைத் தடுத்தாட்கொண்ட ஈசன் கோவில் கொண்டுள்ள இடம். சைவசமய ஞானநூலாகிய சிவஞானபோதத் தை அருளிச்செய்த மெய்கண்டதேவர் பிறந்தருளும் பேறுபெற்ற நல்லூரும் இத்திருவெண்ணெய் நல்லூரே. கும்பகோணத்துக் கருகே நல்லூர் என்னும் பெயருடைய ஊர் ஒன்று உளது. அமர்நீதி என்னும் அடியார் அவ்வூரிலே தொண்டு செய்து சிவப் பேறுபெற்றாரென்று சேக்கிழார் கூறுகின்றார். மண்ணியாற்றங் கரையில் முருகவேளின் பெயரால் அமைந்த சேய்நல்லூர் இந்நா ளில் சேங்கனூர் என்று வழங்கும். 'சேயடைந்த சேய்ஞலூர்' என்பது தேவாரம். சூரனோடு போர் செய்யக்கருதி எழுந்த முருகவேள் சிவபெருமானை வழிபட்டுச் சர்வசங்காரப்படைக்கலம் பெற்றதலம் செய்நல்லூர் என்று *கந்த புராணம்* கூறும். வட ஆர்க்காட்டிலுள்ள மற்றொரு சேய்நல்லூர் சேனூர் எனப்படும்.

தமிழ்நாட்டை ஆண்ட அரசர் பலர் தம்பெயர் விளங்குமாறு பல நல்லூர்களை உண்டாக்கினார்கள். பாண்டிநாட்டில் வீரபாண் டிய நல்லூர், அரிகேசரிநல்லூர், மானாபரணநல்லூர், செய்துங்க நல்லூர் முதலிய ஊர்கள் பாண்டியகுலத்தைச் சேர்ந்த மன்னர் பெயரை விளக்கி நிற்கின்றன. சோழநாட்டிற் பெருஞ்சோழ மன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் உண்டாக்கிய நல்லூர்களைச் சாசனங்களிற் காணலாம். முடி கொண்ட நல்லூர், அநபாயநல்லூர், திருநீற்றுச் சோழ நல்லூர், திருத்தொண்டத்தொகைநல்லூர், சிவபாத சேகரநல்லூர், கலிகடித்த சோழநல்லூர் முதலிய நல்லூர்கள் சோழமன்னருடைய விருதுப் பெயர்பெற்ற பதிகளாகும்.

"ஈழத்திலேயும் நல்லூர் எனப் பெயரிய கிராமங்களும் ஐந்துள. யாழ்ப்பாணத்து நல்லூரைத்தவிர மற்றைய நான்கும் பூநகரியிலும் குருநாகற்பகுதியிலும் களுத்துறையிலும் உள்ளன. பூநகரியிலுள்ள கிராமம் நல்லூர் என்றே வழங்கப்பட, குருநாகற்பகுதியிலும் களுத்துறையிலுமுள்ள நல்லூர்க் கிராமங்களின் பெயர் மருவி வழங்கப்படுகின்றமையினையும் காணலாம். குருநாகற்பகுதியில் பூர்வத்திற் குடியேறிய திராவிடரால் இடப்பட்டுப் பின்னர் சிங்களவராலே வழங்கப் படுகின்றமையால் நல்லூர, நல்லூரெ, நல்லூருவ எனச் சற்றே விகாரப்பட்டிருக்கின்றன" என்று குறிப்பிடுகின்றார். **எஸ்.டபிள்யூ. குமாரசுவாமி.**

"திருஅறையணிநல்லூர்(அறகண்ட நல்லூர்)என்னுந் தலம் பாறையின்மீது அழகாகக் கட்டப்பெற்ற கோவிலையுடைய ஊரென்று பொருள்படும். பாண்டவர் வனவாசகாலத்திலே தாம் கண்ட ஐந்து அறைகள் அந்த நல்லூருக்கே அலங்காரஞ்செய்யும் காரணத்தால் இப்பெயரெய்தியது என்றுங் கூறுவர். காவிரிக்குத் தென்கரையிலுள்ள தலம் திருநல்லூர். கும்பகோணம். தஞ்சை ரயில் பாதையில் இரண்டு மைல் தூரத்தில் இத்திருத்தலம் இருக்கின்றது. அப்பர் சுவாமிகள் திருவடி தீட்சைபெற்ற இடம். இப்பதிக்குத் திருஞானசம்பந்தரது மூன்று பதிகங்கள் உள. அப்பர் சுவாமிகளது இரண்டு பதிகங்களுள. முதலாம் இராசராசன் காலத்தில் நாராயணன் ஏகவீரன் ஒரு மண்டபம் கட்டினான். நல்லூருக்கு அப்போது பஞ்சவன் மாதேவி சதுர்வேதி மங்கலம் என்ற பேர் இருந்தது."[14]

இந்தியாவிலே நல்லூர் என்ற பெயர் 'தேவதானக்கிராமம்' எனவும் வழங்கப்பட்டுள்ளது.[15] இக்கிராமங்கள் கோவிற்கிராமம் என்னும் பெயராலும் வழங்கப்பட்டுள்ளமையும் அறிகின்றோம். தமிழ் நாட்டிலுள்ள நல்லூர் என்ற பெயர் மரபுகளோடு பொருத திப் பார்க்கும்பொழுது ஈழத்து யாழ்ப்பாணத்து நல்லூரும் கோவிற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமமாகவே இருந்திருக்கலாம் என்று கருத இடமுண்டு. யாழ்ப் பாண இராசதானி காலந்தொடக்கம் அரசியல் முதன்மையுடன் விளங்கும் இவ்வூர் சமய முதன்மை பெற்றிருந்தமையும் கருதத் தக்கதே. இன்று இலக்கிய முதன்மையும் பெறுகின்றது.

தமிழகத்துத் திருச்செந்தூர்க் கல்வெட்டு முருகன் கோவிலுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பெரிய தானத்தைப்பற்றியும் அந்தத் தானத் தா'ல் முருகன் கோவில் நித்திய நைமித்தியக் காரியங்கள் தொடர்ந்து நடந்துவர ஒழுங்குசெய்யப்பட்டமையையும் விரிவாகக் கூறுகின்றது.

திருச்செந்தூர்க் கல்வெட்டில் ஒவ்வொரு சாராரும் கோவிலுக்கு என்ன என்ன தேவைக்காக என்ன என்ன பொருள் என்ன என்ன அளவிற் செலுத்த வேண்டும் என்று வரையறுத்துக் கூறப்பட்டு ள்ளது. உதாரணமாக கொற்கை ஊரார் செலுத்த வேண்டியதைப் பார்க்கலாம். திருவமுதுக்கு வேண்டிய அரிசி அவர்கள் கொடுக்க வேண்டும். ஒரு நேரத்திருவமுதுக்கு நான்கு நாளி அரிசி வேண்டும். ஒரு நாளைக்கு நான்கு நேரம் திருவமுது வைக்கவேண்டும். எனவே, ஊரார் ஒரு சாதாரண நாளுக்குப் பதினாறுநாழி அரிசி யும் விசேட தினத்துக்கு அவ்வரிசியின் இரண்டும் பங்கும் செலுத்த வேண்டும். கொற்கை ஊரார் ஆண்டு தோறும் செலுத்த வேண்டிய வட்டி நெல்லியிலிருந்து மூன்று நாழி நெல் ஒரு நாழி அரிசிக்குச் சமம் என்ற முறையில் இக்கணிப்பு நடை பெற்றுள்ளது. நன்கு தீட்டப்பெற்ற அரிசியே கோவிலுக்குக் கொடுக்கப்படவேண்டு மென்பதைக் குறிக்கச் 'செந்நெற்றீட்டல்' என்ற தொடர் பயன் படுத்தப்பட்டுள்ளது.

> **'நல்லூர் ஊரார் செலுத்தவேண்டியிருந்ததையும் பார்க் கலாம். ஒருநேரத் திருவமுது நிவேதிக்கப் பசுவின் நறுநெய் உழக்காகவும் ஒருநேரம் கறி தூமிக்காகவும் பொரிக்கவும் நெல் ஆழாக்கவும் நான்கு நேரத்துக்கு நெய்யமுது நாழி உரிவேண்டும். ஒரு நாழி நெய்யின் பெறுமதி இருபதுநாழி நெல்லாகும். ஒரு நேரத் திருவமுது நிவேதிக்கத் தயிர் நாழியாகவும் கூட்டுக்குத் தயிர் உரியாகவும் நான்கு நேரத்துக்கும் ஆறுநாழி தயிர் வேண்டும். பத்துக்கல நெல் லுக்குப் பெறுமதி ஒரு காசாகும். ஒரு காசுக்கு ஆயிரம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழைப்பழம் அல்லது ஏழுதுலாம் அறுபத்தைந்து பலச்சர்க் கரை அல்லது இருபது துலாம் கறி அல்லது அறுபது நாழி காயம் வாங்கலாம். திருவமுது நிவேதிப்பதற்குத் தேவை யான இப்பொருட்கள் எவ்வளவு எவ்வளவு தேவையெனக் கூறப்படுகின்றன. ஒருநேரத்துக்கு வாழைப்பழவமுது நான் காக நான்கு நேரத்துக்கு வாழைப்பழம் பதினாறு வேண்டும். ஒரு நேரத்துக்கு ஒருபலம் சர்க்கரையாக நான்கு நேரத் துக்கு நாற்பலம் சர்க்கரை வேண்டும். மிளகமுது, மஞ்சள முது, சீரகவமுது, சிறுகடுகமுது, கொத்தபரி அமுது என ஐந்து காய வகைகள் கூறப்படுகின்றன. ஒருநேரத்துக்கு மூன்று செவிடாக, நான்குநேரத்துக்கு உழக்கே இருசெவிட் டுக் காயம் வேண்டும். விசேட தினங்களில் நல்லூர் ஊரார் இவற்றின் இரண்டு பங்கு செலுத்த வேண்டும்.'**[16]

இது இந்திய நல்லூர் ஊரார் செலுத்தவேண்டிய தானங்களா கும். இம்மரபு ஈழத்துச் சைவாலயங்களிலும் நடை முறையி லுண்டு. குறிப்பாக 'உபயம்' எனவும் அதனைத் தானமாக வழங்கு வோர் 'உபயகாரர்' எனவும் அழைக்கப்படும் மரபு ஈழத்திலுண்டு. 'திருவிழா உபயம்' என்ற சிறப்பும் கோவிலில் விசேட உற்சவதி னங்களிலே பணமாகவும் தானங்களாகவும் கொடுப்போரு முண்டு. ஈழத்து யாழ்ப்பாணத்து நல்லூரிலும் இவ்வழக்கம் இன்று முண்டு.

## பல்லக்கு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்** நல்லூர்க் கந்தசுவாமி கோவில்பற்றி *ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு* என்னும் நூலில் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். 'நல்லூரக் கந்தசுவாமி கோவில்', 'மித்தியாவாத நிரசனம்' என்பன நல்லூர்க் கந்தசுவாமி கோவிலைப்பற்றிய கண்டனங்களாகவும் வேற்பெருமானது தத்துவ விளக்கங்களாகவும் அமைந்துள்ளன.

> **'நல்லூர் கந்தசுவாமி கோவிலின் மூலமூர்த்தி வேற்பெருமான். வேற்பெருமானை ஆலய மூலஸ்தான மூர்த்தியாகக் கொள்ளலாமா என்பது குறித்து நாவலரவர்கள் பல்லேறு ஐயங்களை எழுப்பியுள்ளார். சுப்பிரமணியசுவாமி கைவேலாயுதம் ஆறுதலை கொண்டது என்று *குமாரதந்திரம்* பேசவும் அதற்கு மாறாக ஒருதலை கொண்ட பிற கைவேலாயுதத்தைத் தாபிக்கலாமா.'**[17]

என்பது ஆறுமுகநாவலரது வாக்கியம்.

இக்கூற்றிலிருந்து வேலாயுதத்தின் வடிவங் குறித்து நாவலருக்கும் பிறருக்கும் மிகுந்த கருத்து வேறுபாடிருந்திருக்கின்றது என்பது புலனாகின்றது. தத்துவார்த்த விளக்கங்கள் ஒருபுறமாகவும் வார்ப்புக்கலை நிபுணர் இன்னொருவிதமாகவும் வேலினது வடிவங் குறித்து விளக்குவார்.

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் உள்வீதியில் விநாயகர் கோவில், தேவிமார் கோவில், சந்தானகோபாலர் கோவில் பைரவர் கோவில் (வைரவர் கோவில்) சூரியமூர்த்தி கோவில் முதலிய சுற்றுக்கோவில்களுண்டு. நல்லூர்கந்தசுவாமி கோவிலின் மூலஸ்தானத்தின்மீது விமானமோ தூபியோ எதுவுமில்லை. மூலஸ்தானம் அர்த்தமண்டபம், நீராவிமண்டபம், ஆறுமுகசுவாமி கோவில் மண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், முத்துகுமாரசுவாமி மண்டபம், ஸ்தம்பமண்டபம், மடப்பள்ளி, களஞ்சியம், தெற்குவீதி மண்டபம், வெள்ளிவாகனசாலை மண்டபம், நெல்அறை, கணபதி மண்டபம், அம்மன்மண்டபம், பள்ளியறை, சந்தானகோபாலர் மண்டபம், பூக்குறடுமண்டபம், பூத்தோட்டம், பைரவர் மண்டபம், (வைரவர்) வசந்தமண்டபம், வாகனசாலை, கோபுரவாசல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தமண்டபம், தெண்டாயுதபாணி மண்டபம் என்பன உண்டு. தற்பொழுது தீர்த்தமண்டபமும், தெண்டாயுதபாணி மண்டபமும், கோவில் மதிலை அகற்றிக் கட்டியதனால் உள்வீதியுடன் இணைக் கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண நகரிலமைந்துள்ள பிரசித்திபெற்ற முருகனாலயம் நல்லூராதலால் அவ்வாலயத்தின் வனப்பு நாளுக்குநாள் மெருகு பெற்றுவருகின்றது. இன்றைய நல்லூரின் உள்ளமைப்பு அரண் செய்யப்பட்டதாகவும் விசாலம் பொருந்தியதாகவும் அமைந்துள்ளது.

நல்லூரைச் சுற்றியுள்ள புறச்சூழலிலே அமைக்கப்பட்டுள்ள ஆன்மிகத்தலங்களையும் யமுனாரித் தீர்த்தத்தின் சிறப்பினையும் *யாழ்ப்பாணச்சரித்திரம்* என்னும் நூலிலே ஆசிரியர் டானியல் **ஜோன்** என்பார் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> **'..........பாண்டிமழவன் என்னும் பிரபு கலை வல்லசிகாமணி யாகிய புவனேகபாகுவென்னும் மந்திரியையும் காசிநாதர் குலோத்துங்கனாகிய கெங்காதரஐயரெனுங் குரு வையம் அழைத்துக் கொண்டு பாண்டியன் வழிவிட்டனுப்பத் தனது பரிவாரங்களுடனே யாழ்ப்பாணம் வந்திறங்கினான். அவன் இந்நாட்டு நகர்வளமறிந்து நல்லூர்ப் பகுதியிலே யரசிருக்கை யை ஸ்தாபிக்கக் கருதிச் சுபமுகூர்த்தத்தில் அங்கே அத்தி வாரமிட்டு அரண்மனை, அந்தப்புரம், சபாமண்டபம், கொலு மண்டபம், யானைப் பந்தி, குதிரைப்பந்தி, சேனா வீரர்மனை, கெங்காதர ஐயரும் அவர் பத்தினியாகிய அன்னபூரண அம்மாளும் வாசம் பண்ணுவதற்கேற்ற அக்கிரகாரம் முதலிய மாடமாளிகைகள்கூட கோபுரங்கள் கட்டுவித்து, ஓர் உத்தி யானத்தை உண்டாக்கி அதன் மத்தியில் முப்புடைக் கூபமும் வெட்டுவித்து, யமுனா தீர்த்தத்தையும் அழைப்பித்துக் கலந் துவிட்டு யமுனா ஏரியெனப் பெயரிட்டு மஞ்சன மண்டபமுங் கட்டுவித்துக் தன்னகர்க்குப் பாதுகாப்பாகக் கீழ்த்திசைக்கு வெயிலுகந்த பிள்ளையார் கோவிலையும் மேற்றிசைக்கு வீரமாகாளியம்மை கோவிலையும் தென்றிசைக்குக் கயிலை விநாயகர் கோவிலையும் வடதிசைக்கு சட்டநாதசுவாமி கோவில் தையல் நாயகியம்மை கோவில், சாலை விநாயகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கோவில்களையும் எழுப்பி மத்தியிற் கந்தசுவாமி கோவிற்றிருப் பணியும் முடித்து.'**[18]

நல்லூர்க் கந்தசுவாமி கோவிலிலுள்ள மூர்த்திகளின் சிலைகள் பாவாணர்களை ஈர்த்துப் பரவசமுறச்செய்யும் கலைமேம்பாடு கொண்டு இலங்குவன. பிரபந்தக் கவிஞர்களது திலுவுருவ ஈடுபாட்டினுக்குக் காலாகவும் தூண்டுதலாகவும் அச்சிலைகள் விளங்குகின்றன. பக்தியிலக்கிய மரபிலே உருவவழிபாட்டின் தொடக்கம் திருஞானசம்பந்தராலே தொடக்கிவைக்கப்பட்டது. கேசாதிபாத வருணணையாகவமைந்த 'தோடுடைய செவியன்' என்ற முதற்றிருப்பதிகமும் அப்பர் சுவாமிகளது 'குனித்த புருவமும்' எனவருந் திருவிருத்தமும் பிற்காலப் பிரபந்தக் கவிஞர்களது ஆக்கங்களுக்கு உறுதுணைபுரிந்துள்ளன.

நல்லூர்க்கணித்தாக வாழ்ந்து நாடோறும் வழிபடுதல் வேண்டுமெனக் கருதிச் **சின்னத்தம்பிப்புலவர், சேனாதிராச முதலியார், சரவணமுத்துப்புலவர், சிவசம்புப்புலவர், சபாதிப்புலவர், குமார சுவாமி முதலியார், ஐயாத்துரைஐயர், பரமானந்தப்புலவர், தில்லைநாதப்புலவர், சோமசுந்தரப்புலவர் முதலாக ஐம்பதுக்கு** மதிகமானோர் பல்வேறு வகைப்பட்ட பக்திப்பிரபந்தங்கள் பாடியுள்ளார்கள்.

**'நல்லூரில் நல்ல முறையில் சைவம் வளரவேண்டும் சைவச்சூழல் உண்டாதல்வேண்டும். சைவச்சிறார்கள் சைவப்பெரியவர்களாய் உருவாதல்வேண்டும் எனக்கருதிய பெரியவர்கள் சைவப் பெண்களை நினைவிற் கொண்டு மங்கையர்க்கரசி வித்தியாசாலை, பார்வதி வித்தியாசாலை, மகேஸ்வரி வித்தியாசாலை முதலிய சைவப் பாடசாலைகளை நிறுவினார்கள்.'**[19]

மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவிற் சூழலும் நல்லூர்க் கந்தசுவாமி கோவிற் சூழலும் கல்விமரபிலே ஒத்திருப்பதனை ஒப்பிட்டுக்காணமுடிவதும் இவ்விரு தலங்களினதும் பெருஞ்சிறப்பெனக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மாவை இரட்டைமணிமாலை' என்னும் பிரபந்தத்தையியற்றிய சுன்னாகம் அ.குமாரசுவாமிப்புலவர்



## திருவிழாவும் தெய்வத் திருமேனிகளும்

சமயத்திற்கு அதிக முதன்மைகொடுத்த பண்டைத்தமிழ் மக்கள் தெய்வத் திருக்கோவில்களில் விழாக்கள் பல எடுத்து மகிழ்ந்துள்ளனர். இத்திருவிழாக்கள் மக்கள் ஒன்றாகக்கூடி மகிழ்வதற்கு ஓர் அரிய வாய்ப்பினைக் கொடுக்கக்கூடியனவாக இன்றளவும் திகழ்வதைக் காண்கின்றோம். சமயச்சடங்குகளும் விழாக்களும் அதிகரித்தால் தெய்வத்திருமேனிகளை ஊர்வலமாக எடுத்துச் செல்லும் வழக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். **கோவிலின் கருவறையில் நிறுவப்பட்டுள்ள சிற்பங்களை, விக்கிரகங்களை ஊர்வலத்தில் எடுத்துச்செல்லுதல் மரபன்று. எனவே அக்கால மக்கள் இறைவனின் திருவுருவங்களை உலோகங்களிற் செய்து அவற்றை ஊர்வலமாக எடுத்துச் சென்றிருக்கின்றனர்.** இதன் அடிப்படையி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேதான் தமிழகத்தில் எண்ணிறைந்த உலோகத் திருமேனிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. சோழர்காலக் கல்வெட்டுக்கள் சில செப்புத் திருமேனிகள் செய்து நிறுவப்பட்டதையும் அவற்றைக் கோயிலின் திருச்சுற்றினைச் சுற்றிச் சுமந்துசெல்வதற்கெனத் தனியாகப் பணியாட்கள் நியமிக்கப்பட்டதையும் குறிப்பிடுகின்றன. **மேலும் ஊர்வலமாக இறைத்திருமேனிகளை எடுத்துச்செல்லும்போது அவற்றின் முன்னர் இசையுடன் பாடல்கள் பாடியதாகவும் நாட்டிய மாடிக்காட்டப்பட்டதாகவும் செய்திகள் உள்ளன. இவ்வாறு தெய்வப் படிமங்களைத் திருவிழாக்காலங்கலிலே திருவீதிக ளைச்சுற்றி எடுத்துச் சென்றுள்ளதால் உடல் ஊனமுற்றோருக்கும் உடல் நலிவுற்றோருக்கும் கோவிலினுட்புக அனுமதியளிக்கப் படாதோருக்கும் இறைவனின் திருவுருவத்தை உற்சவமூர்த்தியாகக் கண்டு வணங்கும் வாய்ப்புக் கிடைக்கப்பெற்றிருக்கவேண்டும்.**[20]

இந்தியாவிலுள்ள திருநல்லூர்ச் சிவனுக்கும் திருநல்லூரக் காளிக்குமிடையிற்காணப்படும் ஒற்றுமைப்பண்புகள் யாழ்ப்பா ணத்து நல்லூரிலேயுங் கண்டுகொள்ளத்தக்கனவாயுள்ளன. இந்தி யாவில் திருநல்லூர்ச் சிவன்கோவிற்சுவடி 'திருநல்லூர்க்காளி' பற்றிக் குறிப்பிடுகின்றது. **'அஷ்ட புஜங்களுடன் அமர்ந்த திருக் கோலத்தால் வலதுகாலை மடித்து இடதுகாலை பூமகள்மீது ஊன்றி, அசுரனை அழித்திடும் கோலத்துடன் இருக்கும் அக்காளியை' எனச்சுவடி கூறுகின்றது.** அத்துடன் **'அறங்காவலன் இந்த நல்லூர் நாயகியின் திருவடியில் மன்னனின் முடியை வைத்துப் பின் நல்லூரின் கிழக்கேயுள்ள முடிகொண்ட சோழாபுரம் அரன்மனைக்கு எடுத்துச் சென்று மன்னனின் தலையில் அம்முடியைச்சூட்டி வீராபிஷேகஞ் செய்வித் தான்'**[21] என்றும் சுவடி கூறுகின்றது. (ஆயிரத்தளி என்னும் சோழர் அரண்மனை அங்குதான் இருந்ததென்பது சரித்திர உண்மை.)

**'திருநல்லூரின் தென்கிழக்கே மேட்டுப்பகுதியில் அக்காலத்திய போர்க்கருவிகள் புதைந்துள்ளன. அவை வெளி வரும்'**[22] என்ற குறிப்புமுண்டு.

இத்தொடர்பிலே ஈழத்து நல்லூரிலும் அமைந்துள்ள வீரமா காளி அம்மன் கோவிலுக்கும் சட்டநாதேஸ்வரர் கோவிலுக்கு முள்ள தொடர்புகள் விரிவாக ஆராயப்படவேண்டியன.[23] என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து தெரிவிக்கின்றார் **பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை.** தெய்வப் படிமங்கள் சோழப்பெருமன்னர் காலத்திற் சிறப்புடன் வளர்க்கப் பெற்றன. முருகப்படிமங்களுட் கங்கைகொண்ட சோழபுரக் கோவிலிலுள்ள முதலாம் இராஜேந்திரன் காலத் திருமேனிகளுள் மிகவும் சிறந்தது போர்க்கோலம்பூண்டு நிற்கும் முருகனது படிம மாகும். நான்கு கைகளையுடைய முருகப்பெருமானின் திருக்கரங் களிற் சக்தியாயுதம் என்னும் வேல், வில், சேவற்கொடி ஆகியவை காணப்படுகின்றன. அழகுமிக்க கரண்டமகுடம், வரிசை வரிசையா கக் கழுத்தணிகள், வேலைப்பாடுமிக்க உதரபந்தம், கேயூரம், கைவளைகள் ஆகியவை இப்படிமத்திற்கு அழகூட்டுகின்றன.[24]


## இந்தியத் திருநல்லூர்க் காளி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலங்காரப் பதக்கம்



அலங்கார நகை- அட்டியல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சமயப்பற்றும் கலையுணர்வுங்கொண்ட ஆன்றோரால் உருவாக்கப்பட்ட கடவுளர்களின் திருவுருவங்களும் ஓவியங்களும் அக்கால மக்களின் பண்பாடு, வாழ்க்கைமுறை முதலியவற்றைப் படம்பிடித்துக் காட்டுவனவாகத் திகழ்கின்றன[25] என்பதிற் சிறிதும் ஐயமில்லை. இத்தொடர்பிலே நல்லூரிற் பெறப்பட்டுள்ள சிலைகள், விக்கிரகங்கள் என்பனவற்றின் சிறப்புகளுங் கண்டுகொள்ளத்தக்கன.

யாழ்ப்பாண அரசின் தலைநகரான நல்லூரிலே திகழ்ந்த புகழ்மிக்க பழைய கந்தசுவாமி கோவிலைச் சேர்ந்தவையெனக் கருதப்படும் வள்ளியம்மன், தெய்வயானையம்மன் விக்கிரகங்கள் சிலகாலத்திற்குமுன் நல்லூரிலுள்ள பூதராயர்வளவிலே மண் வெட்டியபோது வந்தனவாகவும் அவை இப்போதைய கந்தன் ஆலயத்தின் மூலஸ்தானத்திலேயுள்ள கேவிலின் இருமருங்கும் இருக்கின்றன எனவுங் கூறப்படுகின்றது.[26]

நல்லூர்க் கோவில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் காலத்திற்குச் சமமாகச் செல்கின்றது என்ற கருத்துமுண்டு. *யாழ்ப்பாண வைபவமாலை*யாலறியப்படும் முஸ்லிம்களின் குடியிருப்பிருந்தமை குறித்தும், பின்னர் சைவர்களால் அவர்கள் கலைக்கப்பட்டு நவாந்துறைக்கு அண்மையிற் குடியேறிய செய்தியும் அறியப்படுகின்றது.

"புவனேகபாகு என்ற பெயருடன் இலங்கையை ஆண்ட அரசர்களுள் ஆறாம்புவனேகபாகு என்ற செண்பகப்பெருமாளே (15ஆம் நூற்றாண்டு) யாழ்ப்பாணத்தில் ஆதிக்கம் செலுத்தியவன். ஆனால் **ஆறாம் புவனேகபாகுவிற்கு** முன்பே கந்தசுவாமி கோவில் இருந்திருக்கலாம் என்பதற்குச் சில சான்றுகள் உள்ளன. யாழ்ப்பாணக் கோட்டைக்குட் கண்டெடுக்கப்பட்ட இராஜேந்திர சோழன் காலத்துக் கல்வெட்டு நல்லூர்க் கோவிலொன்றைக் குறிப்பிடுகின்றது.

இக்கோவில் எதுவென்பது தெளிவாகவில்லை. மேலும் 'யாழ்ப்பாணாயன் பட்டின மருவியபெருமாளே' என்ற அருணகிரிநாதரது திருப்புகழும் இக்கோவிலைப் புவனேகபாகுவிற்கு முன் கொண்டு செல்கின்றது. நல்லூரக் கந்தன் ஆலயம் இருக்குமிடத்திற் பிற்காலத்தில் முஸ்லிம்களின் குடியிருப்பு இருந்ததாகவும் பின்னர் அவர்களைக் கலைப்பதற்காகச் சைவர்கள் பன்றியிறைச்சியைக் கிணறுகளிற் போட்டுவிட, முஸ்லிம்கள் நல்லூரைவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந் துறைக்கு அண்மையிற் (சோனகதெரு) குடியேறியதா கவும் *வைபவமாலை* கூறுகின்றது. நல்லூர் கோவிலினுள்ளே முஸ்லிம் சமாதியொன்றிருப்பதாகக் கூறப்படுவதும் இதனை உறுதிப்படுத்துகின்றது."[27]

அருணகிரிநாதப்பெருமான் அருளிய திருப்புகழிலே, நல்லூரைப்பற்றிய குறிப்புக்கள் பின்வருமாறு வருகின்றன.

"...........ஏற்போர்தாம் வந்திச்சையின் மகிழ்வொடு
வாய்ப்பாய்வாழும் பொற்ப்ரபை நெடுமதில்
யாழ்ப்பாணாயன் பட்டினமருவிய பெருமாளே."

'நெடுமதில்' எனக்குறிப்பிடப்பட்டுள்ள சொல் இப்பொழுது நல்லூர்க் கோவிலின் சுற்றுமதிலரணை நினைவில் நிறுத்தி நிற்கின்றதல்லவா?.!

## மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில்

**மாவட்டபுரம், மாவிட்டபுரம்** என இரு வழக்குண்டு. குதிரை முகம் நீக்கியதாற் கட்டப்பட்ட ஆலயம் என்ற பொருளில் மாவிட்டபுரம் என்றும் மாமரம் தலவிருட்சமாக நிற்பதால் மாவிட்டபுரம் என்றுங் கொள்ளப்படுகின்றது.[28] மகாதுவட்டா என்ற முனிவர் வாழ்ந்த தலமாகவும் இருக்கலாம்[29] என்றுங் கொள்ளப்படுகின்றது. இன்னும் மகாதுவட்டன் என்ற சொல் மருவி மாவிட்டபுரம் என்று வந்ததாகவும் கூறப்படுகின்றது. இக்கருத்தினை **ஆ.முத்துத்தம்பிப் பிள்ளை** எடுத்துரைக்கின்றார். இவற்றுள் மகாதுவட்டா என்ற முனிவர் வாழ்ந்த இடமாகையால் மாவிட்டபுரம் என்ற பெயர் வந்தமைந்திருத்தல்கூடும் என்பது போலவே 'மாதோட்டம்' என்ற பெயர்க் காரணமுங் கொள்ளப் படுகின்றது. அதாவது மாதோட்டம் என்பதற்கும் இதே விளக்கமே கொடுக்கப்படுகின்றது எனக் கூறுகின்றார் **பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை.** அந்நகர் அழிந்த பின்பு மாவிட்டபுரம் தோன்றியிருக்கக்கூடுமோவென்ற ஐயவினாவினை எழுப்பும் **பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை,** சோழப் பெருமன்னர் காலத்திலே மாவிட்டபுரம் மாதோட்டத்தின் இடத்தை எடுத்திருக்கக் கூடுமென்றுங் கருதுகின்றார். இவ்வாறு நுணுக்கமான வரலாற்றணுகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறைகளுக்குட்படும் மாவிட்டபுரமும் கந்தசுவாமி கோவிலும் பல் வேறு ஐதிகத்தையும் மரபுகளையுங் கொண்டு விளக்குந்தலமாகும்.

ஈழநாட்டிலேயுள்ள வரலாற்றுப்பெருமை வாய்ந்த ஆலயங்க ளுள் ஒன்றாகவும் ஆகமமுறைப்படி பூசை, வழிபாடுகள் நிகழுமிட மாகவும் விளங்குவது மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலாகும்.

## மாவை முருகன் இராஜகோபுரம்



மாவையாலயத்தின் பழைமையை யாழ்ப்பாண வைபவ மாலை யினாலும் கர்ணபரம்பரைக் கதைகள் மூலமாகவும் பௌராணிகக் கதைகளினாலும் அறியமுடிகின்றது. இவ்வால யத்தின் இன்றைய அமைப்பு பதினெட்டாம் நூற்றாண்டுக்குப் பிந்திய வளர்ச்சியைச் சர்ந்தது. சூழவுள்ள சமூதாயவியல் மரபையும் கோவிற்கலைகளின் உறைவிடமாக விளங்கியதற்கான தடயங்களையும் நோக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


போது இது கோவிலில் மாநகராக விளங்கியதென்பதை நிறுவ முடிகின்றது.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிற் சூழலும் பாரம்பரியமும் உணர்த்தும் பழைமை, கல்விநிலை, கலைகளைப்பேணிய தன்மை என்பன அதன் பழம்பெருமையினை நிலைநிறுத்த உதவுகின்றன. 'மாவையாதீனம்' என்றும் இக்கோவில் அழைக்கப்படுகின்றது. மாவிட்டபுரம் கோவிலிற் சுவடிச்சாலை ஒன்றுண்டு. இந்தச்சுவடிச் சாலையிற் சுமார் அறுபதுக்கு மேற்பட்ட ஏட்டுப் பிரதிகளுண்டு. அவைபற்றி ஆதீனகர்த்தர் கூறும் கதைமரபுகள் நீண்ட வரலாற்றுத் தடத்தின் தொடர்பையும் சமூகத்தில் இவ்வாலயம் ஏற்படுத்திய தாக்கத்தையும் நினைவூட்டுகின்றன.

> **'மாவையாதீனத்திலுள்ள ஏடுகளிற் பெரும்பாலானவை கிரந்தத்திலுள்ளவை. கோவிலுக்குரிய கிரியைவிதிகள் அடங்கியவை. உற்சவ விபரங்களைக்கூறும் பத்த திகளும் பல காணப்படுகின்றன. கோவிலமைப் புப்பற்றிய சிற்பநூல்களும் சிறந்த இலக்கண நூல்களும் காணப்படுகின்றன. பல சுவடிகள் தமிழ்மொழி பெயர்புகளுடனுள்ளன. கிரந்தத்திலமைந்த தத்துவ நூல்களும் காணப்படுகின்றன.'**[30]

இவைபற்றிய தனித்ததொரு ஆய்வு அவசியமானதாகும்.

## ஏடு, எழுத்தாணி, நகை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவிட்டபுரக் காங்கேயமூர்த்தி[31] என்ற பெயரிலிருந்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுடன் இலங்கையின் வடக்குத் துறைமுகமான காங்கேசன்துறையையும் இணைத்து நோக்கப்பட்டதென்பது புலனாகின்றது. காங்கேயமூர்த்தி என்ற பெயருக்கான விளக்கத்தினைச் *சுப்பிரமணியபராக்கிரமம்* என்னும் நூல் பின்வருமாறுரைக்கின்றது.

கலிங்கதேசத்து மன்னனின் புத்திரி கனகசுந்தரி பொதிய மலைச்சாரலில் அயக்கீரீவ முனிவரைப் பார்த்தும் அவரது அக்கினிக்காரியங்களையும் தவத்தினையும் பார்த்தும் நகைத்தாள். அது கண்ட முனிவர் 'மங்கையே! நம்மை அவமதித்து நகைத்தனை; அதனால் நீ வருஞ்சலனத்திற் பலரும் இகழவருங்குதிரை முகத்தைக் கொள்ளுதி; இதுவே நின்னகைக்குப் பிரதிபலனாகும் என்று சாபமிட்டார். கனகசுந்தரி தனது பேதைமையைப் பொறுத்துச் சாபநீங்கும் வழியையருள வேண்டுமெனப் பிரார்த்தித்தார். முனிவரும் மனமிரங்கி 'மடநல்லாய், கடற்கரைத் தீர்த்தம் ஆடுங்காற் கந்தப் பெருமான்றிருவருளால் அகலும்' என்றார். பின்னர் கனகசுந்தரி இறந்து, மறுபிறப்பிலே உலகமெல்லாவற்றையும் பொதுவறப்புரந்த மதுரை மன்னன் உக்கிரப்பெருவழுதிக்குப் புத்திரியாகப் பிறந்தார். அக்காலத்து மிக்க அழகுடன் விளங்கினாளாகலின் அவட்கு அங்கசுந்தரி (மாருதப் பிரவல்லி என்னும் பெயருடையாளென்றும் உக்கிரசோழ மகாராசாவின் குமரியென்றுங் குட்ட நோயால் பீடிக்கப்பட்டாளென்றுஞ் சிலர் கூறுவர்) எனப் பெயரிட்டுத் தாய்தந்தையார் அருமையாக வளர்த்தனர். சிறிது காலஞ்செல்ல முனிவரிட்ட சாபம் தொடுதற்கு ஆரம்பித்தது. **அங்கசுந்தரி குதிரைமுகங் கொண்டாள். அங்க சுந்தரி நகுலகிரியினருகே கடற்கரையிலூன்றிப் பெருகுந் தீர்த்தத்திற் கந்தக் கடவுளையெண்ணி முழுகினாள். உடனே குதிரைமுகம் நீங்கிற்று. தந்தை உக்கிரப் பெருவழுதிக்கு இச்செய்தியை அறிவித்துக் கந்தக் கடவுளின் திருவருளினாலே குதிரைமுகம் நீங்கியமையால் சுப்பிரமணியப் பிரதிட்டை செய்யவிரும்பிக் கந்தனாலயமொன்று செய்வித்து, மதில் முதலியன வகுப்பித்து அவ்வூர்க்குக் குதிரை முகம்விட்டபுரம் என்னும் காரணம் விளங்குமாறு மாவிட்டபுரம் எனப் பெயருஞ்சூட்டி, சுப்பிரமணியத் திருவுருவம் ஒன்று சிற்ப இலக்கணம் வல்லராற் செய்வித்து அங்கு கடல்வழியாக வருவித்து இறக்கப்பட்டமையால் அக்கடற்றுரைக்குக்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காங்கேயன்றுறையெனப் பெயருமிட்டான்.** ஆனால், *யாழ்ப்பா ணச்சரித்திரம்* என்னும் நூல், "காங்கேயன் என்னுஞ் சேனாபதி இருந்தவிடம் காங்கேயன்றுறையென வழங்குகின்றது."[32] எனக் கூறும். எனினும் மாருதப்புரவீகவல்லி குறித்த செய்திகளையும் *யாழ்ப்பாணச் சரித்திரம்* என்னும் நூல் எடுத்துக்கூறுவதோடு, மாவிட்டபுரம் என்ற பெயர்க்காரணத்தையும் விபரிக்கின்றது.

## குதிரைமலை - கீரிமலை

சோழராசன் புத்திரியாகிய மாருதப்பிரவாகவல்லி தனக்குற்ற குதிரைமுகமென்னும் நோயினாலே வருந்துங்காலத்திற் **கீரிம லையிலேயுள்ள சிற்றாற்றில் ஸ்நானஞ்செய்யின் அந்நோய் நீங்குமென்று ஒரு முனிவர் சொல்ல, அவ்வாறே தன் பரிவாரங்களோடு சென்று அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அந்நோய் நீக்கப்பெற்றாள்.** அவ் விடம் அது காரணமாகக் குதிரைமலை என வழங்கிற்று என்றும் *யாழ்ப்பாணச்சரித்திரம்* கூறும். அம்மலை பின்னால் வீழ்ந்தது போலும். அவளும் அவள் பரிவாரங்களும் அவ்விடத்திலே சிறிது காலம் வசித்தார்கள். அப்பொழுது கதிர்காமம் என வழங்குங் கார்த்திகேயக் கிராமத்தில் அரசு செய்திருந்த உக்கிரசிங்ராஜனும் அச்சிற்றாற்றிலே ஸ்நானஞ்செய்தற்கு அவ்விடம் வந்தான். அவன் அவளைக்கண்டு அவள்மீது தனியாப் பெருங்காதலுண்டாகி அவளைப் பெரும் பிரயாசத்தோடிசைவித்து மணம்முடித்துக் கொண்டு சிறிது காலம் அவ்விடந்தங்கியபின் இவளோடு தன் இராசதானிக்குச் சென்றான். அவன் அமைப்பித்த சுப்பிரமணியாலய பூசைக்கும் அருச்சகர்களுக்கும் கந்தரோடையென வழங்கும் இடத்தைச் சமர்ப்பித்துத்திருத்தி நெல்விளை நிலமாக்கி அவர்க ளுக்குப் பிரமதேயமாகக் கொடுத்தான். அவளோடுவந்த தளபதி யாகிய மகாவிட்டன் என்பவனை அக்கோவிலை நடாத்தும் சர்வா திகாரியாக்கி மாவிட்டபுரம் என இப்போது வழங்கும் இடத்தி லிருத்தினான். சோழியர் வசித்த இடம் சோழியபுரம் எனப்பட்டது. அது சுழிபுரமெனப் பின்னர் மருவி வழங்குவதாயிற்று. மாளிகை கட்டப்பட்டவிடம் பின்னர் பழைய நகரமெனப் பொருள்படும் தொல்புரம் எனப்பட்டது. மகாவிட்டன் வசித்தவிடம் மாவிட்டபுரம் எனப்பட்டது. கந்தசுவாமியின் பொருட்டு விடப்பட்ட இடம் கந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரோடை எனப்பட்டது. (ஒடை - குளவெளி) மாளிகையிருந்தவிடம் இன்றும் மாளிகைத்திடலெனப்படுகின்றது.

*கைலாயமாலை* என்னும் நூலிலே 'மாருதப்புரவீகவல்லியின் வரலாறு' என்னும் மகுடத்தில் மாருதப்புரவீகவல்லியின் கதையும் நல்லூரினது வளம் போன்றனவும் விரித்துரைக்கப்படுகின்றன. மாருதப்புரவீகவல்லியின் தந்தையான சோழனது பிரபாவம், வால சிங்கன் மாருதப்புரவீகவல்லியைக் கைப்பற்றிப் போர்புரிதல், யாழ்ப் பாண இராசதானியாகிய நல்லூரின்வளம், நல்லூர் நகர் நிர்மா ணம், கொலுமண்டப வர்ணனை, பட்டாபிஷேகத்துக்கு நகர் அலங்கரித்தல், புவனேகபாகு என்னும் பிராமண மந்திரியை நல்லூரிற் குடியிருத்தல் போன்ற செய்திகள் இக்*கைலாயமாலை யில்* விரித்துரைக்கப்படுகின்றன.[33]

*கைலாயமாலை*யிற் கூறப்படும் கருத்துக்களை மறுத்துரைக்கும் **பேராசிரியர் சி.பத்மநாதன்** பின்வருமாறு கூறுகின்றார்.

> **'மாருதப்புரவீகவல்லி, யாழ்ப்பாணன் என்போரைப் பற்றிக் கைலாயமாலை மிகச் சுருக்கமாகச் சொல்கிறது. சோழ வரசனின் மகளான மாருதப்புரவீகவல்லி தான் பிறப்பிலே பெற்றிருந்த குதிரைமுகத்தை நீக்கிக் கொள்வதற்காக புனித யாத்திரைவந்து கீரிமலையில் நீராடி எழில்மிக்க உருவினைப் பெற்றுப் பின்னர் தன் பரிவாரத்துடன் அங்கு பாளைய மிட்டிருந்தாளென இந் நூல்கூறும். சிங்க உருவத்தைக் கொண்ட ஈழவேந்தனான வாலசிங்கன் மாருதப்புரவீகவல்லி யைக் கவர்ந்து சென்று கதிரை மலையில் வாழுங்காலத்தில் அவ்விருவரும் நரசிங்கராசன் என்ற புதல்வனையும் ஒரு புதல்வியையும் பெற்றெடுத்தனர். காலப்போக்கில் இவ் விருபிள்ளைகளையும் மணம் முடித்து வைத்தபின் வால சிங்கனும் மாருதப்புரவீகவல்லியும் நரசிங்கராசனுக்கு அரசுரிமை அளித்தனர். மாருதப்புர வீகவல்லி வாலசிங்கன் ஆகியோரைப்பற்றி *கைலாயமாலையில்* வருங்கதைகள் முற்றிலும் வரலாற்றுச்சார்பற்ற புனைகதைகளென்றே கொள்ளவேண்டும். சிங்கள வரலாற்று நூல்களிலுள்ள சிங்கவாகு, சிங்க வல்லி என்போரைப்பற்றிய கதைகளே திரிபடைந்து இவ்வாறு கைலாய மாலையில் வருகின்றன.'**[34]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேராசிரியர் சி.பத்மநாதன்,** *கைலாயமாலையின்* வரலாற்று முரண்பாடுகள் குறித்து இக்கட்டுரையாளருடன் உரையாடியபோது மாவிட்டபுரம், காங்கேயன் என்ற பெயர்கள் குறித்தும் தெளிவுபடுத் தினார். 'மாவட்டனடி காங்கேயன்' என்னும் பெயர் பதின்மூன்றாம் நூற்றாண்டுப் பாண்டியர் சாசனத்திலே இடம் பெற்றுள்ளது. இக் குறிப்பின்படி 'மாவட்டனடி' என்பது இடப் பெயராக அமைந்திருப் பதனைக் காணலாம். மேலும்,

> **ஈழத்து இடப்பெயர்களை ஆய்வுசெய்யும்போது சிங்களமொழி மரபுகளையும் இணைத்தே நோக்கவேண்டும். அத்துடன் தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளின் செல்வாக்கும் ஈழநாட்டு இடப்பெயர்களிலே காணப்படுகின்றன என்பத னையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.'**[35] என்றார்.

*வையாபாடலின்*கண் மாவிட்டபுரமென்னும் பெயர், 'கீரிமா மலையிலாடினள் தீர்த்தம் அம்முகமகன்றது அன்னதால் மாவிட் டபுரம்' என்ற செய்யுளடியிலே தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அரசகுமாரியின் பெயர் 'மாருதப்பிரவை உவமையில் வல்லி' என வந்துள்ளது.

இதன்படி மாருதப்பிரவல்லியென்பதே அவள் பெயர் என்பது தெளிவாகின்றது. *வையாபாடல்* எல்லா ஈழத்து வரலாற்று நூல்க ளுள்ளும் முக்கிய நூலாதலினால் அதன்வழிவந்த மற்றைய நூல்களிலும் அப்பெயர் அவ்வாறே வழங்கிவந்துள்ளது. "மாரு தப்பிர வல்லியென்னும் இப்பெயர் மாருதப்பிரவீகவல்லி, மாருதப் பிரவல்லி யெனக்காலகதியிற் பேச்சுவழக்கில் மாறுதலுற்றிருத்தல் கூடும்."[36]

'சுரிகுழல் மங்கைக்கு மாமுகம் மாற்றிவைத்தாய்' என்ற *நகுலேச்சரத்திருவிரட்டை மணிமாலையின்* பன்னிரண்டாவது செய்யுள் மாருதப்புரவீகவல்லியின் கதையினைக் குறித்துள்ளது.

> **'சேர்ந்த நகுலமுனிவர்க்குப் புன்முகம் தீர்த்தருளி**
> **வார்ந்த சுரிகுழல் மங்கைக்கு மாமுகம் மாற்றவைத்தாய்**
> **ஓர்ந்துளங் கொண்டடியேன் துயர்போக்கல் உனக்கரிதோ**
> **ஆர்த்தடம்புனற் கண்டகி தீர்த்தம் அமைத்தவனே.'***[37]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடலிலே 'கண்டகிதீர்த்தம்' என்ற குறிப்பு வருவது கண்டுகொள்ளதக்கது.

சோழ இளவரசியான, குதிரைமுகம் வாய்க்கப்பெற்றவளது பெயர் பல்வேறு வடிவங்களிலே அய்வாளர்களால் வழங்கப் பட்டுவருகின்றது. *யாழ்ப்பாணச்சரித்திரம்* என்ற நூலின் ஆசிரியர் **ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை** 'மாருதப்பிரவாகவல்லி' என்றும் *நகுல கிரிப்புராண*மியற்றிய **கா.அப்பாசாமி ஐயர்** 'மாருதப்புர வீகவல்லி' என்றும் வழங்கியுள்ளனர். இன்றுஞ் சிலர் அப்பெயர் பயிலப்படும் அத்தனை வழக்குகளையும் கையாண்டுள்ளனர். **பேராசிரியர் சி.பத்மநாதன்** 'மாருதப்புரவீகவல்லி' என்று வழங்குகின்றார். **திரு.த.சண்முகசுந்தரம்** 'மாருதப்பிரவல்லி' என்று எழுதுகிறார். 'மாருதப்பிரவல்லி' என்னும் பெயரே மாருதப்பிர வீகவல்லி', 'மாருதப்புரவீகவல்லி' எனக் காலகதியிற் பேச்சுவழக்கில் மாறுத லுற்றிருத்தல் கூடும் என்று **ஏழாலைப் பண்டிதர் மு.கந்தையா** கருதுகின்றார்.

இவ்வாய்விலே இடம்பெறும் நல்லூர்க்கந்தசுவாமி கோவிலும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலும் அமைந்துள்ள இடங்களுக்கு அயலிலே சிவன் கோவில்கள் அமைந்துள்ளமையும் ஒப்புநோக்கி ஆராயத்தக்கதே. நல்லூர்கந்தசுவாமி கோவிலுக்கு வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள சிவாலயம் நல்லூர் சட்டநாதேஸ்வரர் ஆலயம். இவ்வாலயம் ஈழத்திலே காணப்படும் பஞ்சேஸ்வரங் களில் ஒன்று என்ற ஐயமும், சட்டைநாதர் ஈஸ்வரமா, ஜனநாதஈஸ் வரமா என்ற வினாவும் அண்மைக்கால ஆய்வு வினாக்களாகக் கிளம்பியுள்ளன.

இலங்கையிலே திருகோணமலை, கந்தளாய், பதவியா, மாதோட்டம், நல்லூர் என்பன ஈழமான மும்முடிச்சோழ மண்ட லத்தினது பிரதான நிர்வாக மையங்களாக - நகரங்களாக விளங்கியிருந்தன. இவற்றுள் நல்லூரைத்தவிர ஏனையவை மேற் குறிப்பிட்ட நகரங்களிலே இருந்திருக்கக்கூடிய சிவன் கோவில்க ளது பெயர்களோ சாசனச்சான்றுகளின் அடிப்படையில் வரலாற் றாய்வாளர்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூரைப் பொறுத்தமட்டில் நல்லூரிலுள்ள ஒரு கோவிலுக்கு விளக்கு எரிப்பதற்காக அவ்வூர் சாத்தான் என்பவனால் சாவா மூவாப் பேராடுகளைத் தானமாக வழங்கிய ஒரு நிகழ்வினை யாழ்ப்பாணக் கோட்டைப்பகுதியிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டுத் தற்போது யாழ்ப்பாண அரும்பொருளகத்திலே வைக்கப்பட்டுள்ள முதலாம் இராசேந்திரனது கல்வெட்டிலிருந்து அறியமுடிகின்றது.

**பேராசிரியர் கா.இந்திரபாலா,** இச்சாசனத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினைப்பற்றி (Epigraphica Familica, Part I) விளக்கும் போது இச்சாசனத்தின் 'பி' பாகம் மிகவும் தேய்ந்து சிதைந்த நிலையில் தெளிவற்றதாக இருப்பதனாலே தெளிவாக வாசிக்க முடியாதுள்ளதெனக் குறிப்பிட்டுவிட்டு, இப்பாகத்திலேயுள்ள 12ஆவது வரியிலே தானங்கொடுக்கப்பட்ட நிறுவனம் அமைந்திருந்த இடம் நல்லூர் என வாசிக்கமுடிகிறது[38] எனக் குறிப்பிட்டுள்ளார்.

பதினென் சித்தருள் ஒருவராகிய 'சட்டைமுனி' என்ற பெயர்த் தொடர்பும் 'நகுலமுனி' என்ற மாவிட்டபுரத்தோடு தொடர்புடைய கீரிமலைச் சிவன்கோவிற் கதைத்தொடர்பும் ஒத்தியைவதனையும் நோக்கலாம். அத்துடன் நல்லூர்ச் சட்டநாததேஸ்வரமும், கீரி மலை நகுலேஸ்வரமும் சோழரோடு தொடர்புடையனவாயும் அமைவதும் கவனிக்கத்தக்கது. மேலும், கீரிமலை நகுலேஸ்வரத் தில் மாருதப்புரவீகவல்லியின் குதிரை முகம் நீங்கிய கதையினைப் போலவே திருப்பராய்த்துறைத் திருத்தலத்திலும் சோழன் குமா ரத்திக்கு **நரிமுகம்** தீர்த்த கதை யொன்றுண்டு[39] என்ற, பெரும்பாலா னோர் கேள்விப்பட்டிராத செய்தியொன்றினையும் **பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை** குறிப்பிட்டுள்ளார். இச்செய்தியினை என்.சேதுரா மன் என்பார் தமது ஆங்கிலக் கட்டுரையொன்றிலே எடுத்துவிளக்கி யுள்ளார் என்ற தகவலையும் குறிப்பிட்டு விளக்கியுரைத்துள்ளார். அவ்வாங்கிலக் கட்டுரை தஞ்சாவூர்த் தமிழ் பல்கலைக்கழகத்திலே 1984.02.16 இல் வாசிக்கப்பட்டது.

> **'திருச்சி மாவட்டத்திலுள்ள திருப்பாலத்துறையில் தாருகாவா ணேஸ்வரச் சிவன்கோவிலில் சோழ, பாண்டிய, விஜயநகர மன்னர்களது சாசனங்கள் கிடைத்துள்ளன. சோழர் ஆட்சிக் காலத்தில் அவ்வூர் திருப்பராய்த்துறை எனவும் அத்தலத்து இறைவன் திருப்பராய்த்துறைப் பெருமானடிகள் அல்லது**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரமசுவாமி என்றும் அழைக்கப்பட்டார். இவ்வாலயக் கல்வெட்டொன்றிலே (1614. 1642 ஆம் ஆட்சியாண்டு) 'திருப்பராய்த்துறை நாயனார் அடிநாயனார் சோழன் குமாரத்திக்கு நரிமுகம் தீர்த்ததேவர்' என்ற குறிப்பு வருகிறது.'**[40]

**இச்சிவத்தலம் கீரிமலை நகுலேஸ்வரத்தோடு கொண்டிருக்கும் கதைத்தொடர்பு மேலும் நுண்ணாய்வு செய்யப்படவேண்டும்.** **(It means the lord who rectified the Fox Face of the daughter of a Chola King. This refers to some local legend or puranic story about which we have no knowledge.)**

மங்கையின் குதிரைமுகம் நீங்கப்பெற்ற தலமாகையால் இத்திருத்தலம் தமிழ் மொழியில் 'மா- விட்ட- புரம்' எனவும் வடமொழியிலே 'துரகானனவிமோசனபுரே' எனவும் வழங்கப் படலாயிற்று.

மாருதப்புரவல்லி காலந்தொட்டு இத்திருவோங்குதலத்தில் அனுட்டிக்கப்பட்டுவரும் பூசைவழிபாட்டுப் பத்ததியொன்றில்,

**"ஸ்ரீமத் காவேர்யாஹ தக்ஷிணதீரே ஸமுத்ரஸ்ய பச்சிம தடே
பாஸ்கர க்ஷேத்ரேதுர கானன விமோசனபுரே!
அஸ்ய தேவ தேவஸ்ய மஹாவல்லி கஜவல்லி சமேத
ஸ்ரீ சுப்ரம்மண்ய பரமேஸ்வரஸ்ய."**

என்ற சுலோகம் ஒன்றில் இத்திருத்தலம் தோன்றிய பின்னணி குறிக்கப்படுவதை அறியக்கூடியதாகவுள்ளது.

மாருதப்புரவல்லியின் மகன் பாலசிங்கனும் அவன் சந்ததியாரும் சிங்கையாரியச் சக்கரவர்த்திகளும் தமிழரசர்களும் இத்திருத்தலத்திலே மிகுந்த வழிபாடுடையவர்களாக இருந்தனர் என்பது வரலாற்றுச்செய்தி[41] என்று எடுத்துரைக்கப்படுகின்றது.

முன்னொருகாலத்தில் மேருமலையின் இடப்பாகத்திலே தவம் செய்துகொண்டிருந்த சுதாமா என்னும் முனிவருடைய சாபத்தினாலே துர்த்தரன் என்னும் வேடன் கீரிமுகம் பெற்றான். உடனே வேடன் நடுநடுங்கி அச்சாபத்துக்கு விமோசனங் கொடுக்கும் படிவேண்டினான். முனிவர் கருணைகொண்டு, **'வேடனே நீ என் தரிசனத்தாற் சுத்தனானாய். வேதாரணியத்திற்குத் தெற்கிலுள்ள கடலிலே இலங்கையென்றொரு தீவு உளது. அதன்வடக்கே ஓர் உயர்ந்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மலையிருக்கிறது. அங்கு சென்று கருமயோகம் செய்தால், கீரிமுகம்மாறி மோட்சமும் பெறுவாய்' என்று கூறி யோகமார்க்கங்களை உபதேசித்து ஆற்றுப்படுத்தி அனுப்பினார்.** கீரிமுகம் பெற்ற அவ்வேடன் இங்கு வந்து தீர்த்தத்தில் நீராடி அழகியமுகம் பெற்றான். **இவ்வேடனே நகுலமுனிவர்** என்றும் அழைக்கப்பட்டார்.

திசையுக்கிரசோழன் மனைவியாகிய கனகாங்கியென்பவள் குதிரைமுகமுடைய கின்னரப் பெண்ணொருத்தியின் சாபத்தினாலே குதிரைமுகமுடைய மாருதப்புரவீகவல்லியென்னும் பெண்ணைப் பெற்றாள். அப்பெண் குன்மநோயும் உடையவளாயிருந்தாள். வெட்கத்தினால் வளைந்த கழுத்துடையவளாய்ப் பல தீர்த்தங் களாடி இறைவனைத் துதித்துவந்தாள். நகுலேஸ்வரப்பெருமான் அவளது கனவிலே சந்நியாசியாய்த் தோன்றி **'மாருதப்புரவீகவல் லியே, யாழ்ப்பாணத்தின் வடபாலுள்ள நகுலேசதீர்த்தம் கங்கையிலும் மேன்மையுடையது, அத்தீர்த்தத்திலே முழுகிச் சுகமடைவாய்' என்று திருவாய்மலர்ந்தருளினார். அவள் அவ்வாறே அத்தீர்த்தத்திலாடிக் குதிரைமுகமுங் குன்மநோயும் மாறப்பெற்றாள்.**[42]

மாவிட்டபுரம், திருச்செந்தூர்த் தலத்திற்கு இணையாக விளங்கும் சிறப்பினை,

> **'மாட்சிமைமிக்க இவ்வீழநாட்டின் வடபால் சைவத் தமிழர் களது சரித்திரமுக்கியத்துவத்தைத் தன்னகத்தே கொண்டு இந்நாட்டின் சிகரமாக விளங்குவது மாவிட்ட புரம். திருச்செந்தூர்த் திருத்தலத்திற்கு இணையாக விளங்கக்கூடிய சிறப்பு இத்தலத்திற்குண்டு. சோழ இளவரசி மாருதப்பிரவல்லியின் மாவிட்டபுரக்காங்கே யமூர்த்தியான கந்தசுவாமி கோவிலின் தில்லைமூவா யிரவர் முதல்வரான பெரிய மனத்துள்ளாரின் சீரிய தலை மையில் முருகப்பெருமானுடைய பூஜைகள், உற்சவங்கள் விரதாதிகள் யாவும் குமாரதந்திர விதிப் படியும் ரிஷிகளி னாற் கூறப்பட்ட பத்ததிகளின் பிரகாரமும் நடைபெறக் கூடியதான ஒழுங்குமுறைகள் வகுக்கப்பட்டன. இன்றும் அந்த ஒழுங்குமுறைகளே கைக்கொள்ளப்பட்டு வரு கின்றன.'**[43]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பார். மேலும், திருச்சீரலைவாயிலின் வீசிய ஏடு ஈழம் வந்த டைந்த வரலாறு குறித்தும் விஷநோய்- வினைதீர்க்கும் *திருச்செந் தூர்ப்புராணம்* குறிக்கும்.[44]

இனிக் காங்கேயன்துறைச் சிறப்புடன் உரைக்கப்படும் வரலாற்றுச் செய்திகளைப் பார்ப்போம்.

**காங்கேயன்விக்கிரகம் கொண்டுவந்திறக்கப்பட்டதால் அத்துறை காங்கேயன்துறை எனப்படுகிறது** என்ற கருத்தினையும் எடுத்துக்கூறி மாவிட்டபுரத் தலவரலாற்றினையும் மாருதப்புரவீகவல்லி கதை யினையும் *யாழ்ப்பாணச் சரித்திரம்* என்னும் நூல் பின்வருமாறு கூறுகின்றது.

> **"பல தலங்களுக்கும் யாத்திரைசெய்து மாறாத குன்ம நோயினைக் கீரிமலையிலே தீர்த்தமாடியதால் மாற்றியவள் மாருதப்புரவீகவல்லி என்னும் சோழத் தேசாதிபதி. திசையுக் கிரசிங்கசோழனின் புத்திரி, நகுல முனிவரது ஆசிகளையும் பெற்று மகிழ்ந்தி ருந்தாள். மாருதப்புரவீகவல்லி இருந்தவிடம் 'குமாரத்தி பள்ளம்' என அழைக்கப்பட்டது. குதிரைமுகம் மாறிய காரணத்தால் அவள் இருந்த இடம் 'மாவிட்டபுரம்' எனப்பெயர் பெற்றது என்றுங் கூறுவர். தனது கொடிய ரோகத்தை மாற்றிய காரணத்தால் கந்தசுவாமி கோவில் ஒன்றை எழுப்ப எண்ணினாள். கந்தசுவாமி, வள்ளியம்மை விக்கிரகங்களுடனும் தில்லைப்பிராமனனாகிய பெரிய மனத் துள்ளாருடனும் ஆலய நிர்மாணத்திற் காகக் காசாத்துறை யில் வந்திறங்கினர். காங்கேயன் விக்கிரகம் கொண்டு வந்திறக்கப்பட்டதால் அற்றுறை காங்கேயன்துறை எனப்படு கின்றது. பின்னர் மாருதப் புரவீகவல்லி கோவிலெழுப்புவித்து, அக்கிரகாரம், அன்ன சத்திரம் மடமாதிய கட்டிடங்கள் கட்டு வித்துச் சுற்று மதிலிட்டுக் கந்தசுவாமி கோவிலெனப் பெயர் சூட்டினர். இக்கோவிலிற் பூசகராக பெரிய மனத்துள்ளாரை ஏற்படுத்தி நித்திய பூசை நடக்க ஏது நியமித்து, ஆனியுத்தரத் தன்று கும்பாபிஷேகம் பண்ணிக் கொடித்தம்பம் நாட்டி விழாக்கொண்டாட்டம் நடைபெறும்படி செய்தனர். இப்பொழு தும் அத்தினமே விழாத் தொடக்கத் தினமாக அனுசரிக்கப் படுகிறது."**[45]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையே *யாழ்ப்பாண வைபவமாலையு*ம் எடுத்துக்கூறும்.

> "காங்கேயன் என்பது வல்லாண்மைமீறியவர்களாய்ச் செயற்கரிய வீரச்செயல்களைச் செய்த சேனாதிபதி களுக்கே கொடுக்கப்படும் ஒருபட்டப்பெயர் என்பதும் அறியப்படுகின்றது."[46]

மேலும்' மோரூர்க்காங்கேயன், காடையூர்க் காங்கேயன், புத வைக்காங்கேயன் என ஊராலும், ஆட்கொண்ட காங்கேயன்., *உரிச்சொல் நிகண்டு*பாடிய காங்கேயன் எனச் சிறப்புக்களாலும் இக்காங்கேயன் என்பது தொடர்ந்துவரும்' என்று அடியார்க்குநல் லார் வரலாற்று ஆராய்ச்சி என்னும் நூலிலே குறிக்கப்பட்டுள்ளது.

**"சடையனார் என்னும் முதுபெருங்கிழவரே ஆதியில் விளக்கேற்றி வந்தார் என்ற செய்தியும் ஒருநாள் இராசநாகம் விளக்கிலே குந்திக் கொண்டிருந்ததைக்கண்டு அதிசயித்து அவ்விடத்திலேயே பிரமாண்ட மான கோயில் எழுப்பப்பட்டது என்றும், மாமரமே தல விருட்சமாக வுள்ளது"**[47] என்றுங் கூறப்படுகின்றது.

இந்த ஈழவளநாட்டிலே வேதாகம சம்பந்தமான ஒரேயொரு கந்தன்கோவில் (மாவிட்டபுரம்) இ∴தொன்றே என்று ஒரு விரலை மட்டும் மடிக்கத்தக்கவகையில் முதன்முதல் அமைந்தது மாவிட்ட புரம் கந்தசுவாமி கோவில். 'மா' விலங்கு என்ற பொருளையும் தரும்[48] என்பர். பண்டைய வழிபாட்டின் எச்சமாகச் சடையனாரால் வணங்கப்பட்டுவந்த வெள்ளிவேல் ஒன்று மாவை மூலமூர்த்திக்கு அருகில் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளது என்ற செய்தி அவ்வாலயப் பழைமைக்கு எடுத்துக் காட்டாயமையும் [49] என்பா ருமுளர்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் வரலாறு, கல்வி வரலாறு என்பன பாரம்பரியச் சைவாசார நடைமுறைகளைப் பின்னணி யாகக் கொண்டமைவன. இவ்வாலயத்தினதும் இவ்வூரினதும் பண் பாட்டுச்செழுமைச் சிறப்புக்கள் பிரபந்தங்களிலே சுவைபெற இடம் பெறுகின்றன. மாவை ஆலயத்தின் புறச்சூழலைப்பற்றிய விளக்கங் களைத்தரும் **ஆய்வறிவாளர் த.சண்முகசுந்தரம்** பின்வருமாறு கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **'மாவை முருகன் கோவிலில் பேராசிரியர் க.வித்தியானந் தனின் குடும்பத்தின் நினைவாக அமைபவை இரண்டு திருச் சின்னங்கள். இன்று எழும்புகின்ற கிழக்குவாயில் புதிய கோபு ரமும் அதற்குப் பக்கத்தில் அமைந்துள்ள உடையார் மடமு மாகும். இந்த மடத்திலிருந்து பார்த்தால் வீமன்காமம் மகா வித்தியாலயம் தெரியும். இது கலைக்கோயில். இந்த மூன் றையும் கட்டிய பெருமை பேராசிரியரின் முன்னோரைச்சேரும்."[50]**

இச்சிறப்பு நலன்களையெல்லாம் கூறவந்த *நகுலகிரிப்புராண முடையார்* "கற்றவராற்புகழ் மருவுங் கவின் மாவை நகர்."[51] என்று குறிப்பிடுகின்றார். அத்துடன்,

> "மாருதப்புரவீக வல்லியென்ற பேர்ச்சீருறு மாது
> தன் சிந்தை போலருள் பார்புகனகுலையம் பரனொடே
> யுமை கூரயிலேந்திய குகனை யேத்தினாள்."[52](செய்.40)
> என்றும் பாடியுள்ளார்.

நல்லூர், மாவிட்டபுரம் ஆகிய கோவில்கள்பற்றி எழுந்துள்ள முருகப்பிரபந்தங்களிலே பாடப்பட்டுள்ள செய்திகளுட் பெரும்பாலா னவை இவ்வியலிற் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்க ளைத் தழுவியே அமைந்துள்ளன. தலவிசேடமும் மூர்த்திவிசேட முஞ் சிறப்புற அமைந்த இப்பிரபந்தங்களது மதிப்பினுக்கு இவ்விரு தலவரலாறுகளும் ஐதிகங்களும் பெரிதும் துணைபுரிந்துள்ளமை யினையுங் கண்டுகொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்குறிப்புகள்

1. இந்திரபாலா, கா., "யாழ்ப்பாண இராச்சியம் தோன்றிய காலமும் சூழ்நிலையும்", *இளங்கதிர்*. பேராதனைப்பல் கலைக்கழகத் தமிழ்ச்சங்க வெளியீடு, 1969 - 70, ப. 42,49,51.

2. *அதே சஞ்சிகை*, ப.55.

3. சுவாமி ஞானப்பிரகாசர், *யாழ்ப்பாணவைபவ விமர்சனம்*. அச்சுவேலி ஞானப்பிரகாச இயந்திரசாலை, 1928, ப. 106-107.

4. இந்திரபாலா, கா., *மு.கு. சஞ்சிகை*, ப.52.

5. Pathmanathan, S., *The Kingdom of Jaffna*, part I , First Edition, Ceylon Newspapers Ltd., 1978, p.282.

6. *சுழிபுரம் திருமதி வள்ளியம்மை முத்துவேலு நினைவு வெளியீடு*, "முத்துராச கவிராசரின் கைலாயமாலை", 26.02.1983. ப. Xi – xii. (with commentary & synopisis by Mrs. R.Ganeshalingam and a Translation by A.Mootootambypillay).

7. நடராசா, க.செ., *ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி*, (14ஆம் நூற்றாண்டு முதல் 19 ஆம் நூற்றாண்டிறுதிவரை).கொழும்புத் தமிழ்ச்சங்க வெயியீடு, திருமகள் அச்சகம், சுன்னாகம், 1982,ப.8.

8. சிவராசா, மு.,"நல்லை திருஞானசம்பந்தர்ஆதீனம்", *உலக இந்துமகாநாடு ஆத்மாஜோதிச் சிறப்புமலர்*,1982, `ப. 95-96.

9. விசாலாட்சி, சி., "அழகும் அருளும் மலிந்த நல்லை முருகன் ஆலயம்", *ஈழநாடு, வாரமலர்*, 31.08.1986, ப.3.

10. இவ்வாராய்ச்சிக்கட்டுரை எழுதுவது தொடர்பான கலந்துரையாடலின்போது பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையவர்கள் இக்கருத்தினைத் தெளிவுபடுத்தினார்.

11. இக்கருத்தினைத் தெரிவித்தவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப.கோபாலகிருஷ்ணன் அவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. இக்கருத்தினை நேர்முகமாகவும் கடிதமூலமும் அவ்வப்போது விளக்கியுரைத்தவர். காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக்கழகத் தலைவர், பண்டிதர் சிவஸ்ரீ க.வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள்.

13. சபாநாதன், குல., *இலங்கையின் புராதன சைவால யங்கள் நல்லூர்க் கந்தசுவாமி,* நல்லூர் தேவஸ்தான வெளியீடு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1971, ப.11.

14. திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் குறிப்புரை படங்களுடன், தருமபுர ஆதீனம், 1954, ப.89.

15. இத்தகவலையும் அவற்றிற்கான ஆவணங்களையும் தந்து தவியவர் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையவர்கள். நூலா தாரம், Y.Subbarayalu, *Political Geography of the Chola Cou ntry*, Tamil Nadu State Development of Archaeology, 1973, p.90.

16. வேலுப்பிள்ளை, ஆ.,"திருச்செந்தூர்க் கல்வெட்டு", *இந்து தருமம்* (வெள்ளிவிழாமலர்), இந்துமாணவர்சங்க வெளியீடு, பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை, 1968, ப.19.

17. கைலாசபிள்ளை, த.(பதிப்), *ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு,* இரண்டாம்பாகம், மூன்றாம் பதிப்பு, சென்னபட்டனம் வித்தியா நுபாலன இயந்திரசாலை, 1954, ப. 147.

18. டானியல் ஜோன், *யாழ்ப்பாணச் சரித்திரம்,* முதலாம் பாகம். அமெரிக்கன் சிலோன் மிஷன் அச்சகம், தெல்லிப்பழை, 1930, ப. 17-18.

19. குலரத்தினம், க.சி., "நல்லைநகர் வளர்த்த சமயம்", *உலக இந்துமாநாடு, ஆத்மஜோதிச் சிறப்புமலர்,* 982, ப.132.

20. ஏகாம்பரநாதன், ஏ., *தமிழகச் சிற்ப ஓவியக்கலைகள்.* திரு நெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், அப்பர் அச்சகம், சென்னை, 1984, ப.141.

21. சேதுராமன், என்., *அருளுடைச் சோழமண்டலம்.* ஸ்ரீ வித்தியா அச்சகம், கும்பகோணம், 1976, ப.15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. *அதேநூல்.* , ப.30.

23. இந்தியத் திருநல்லூர்த் தலம்பற்றிய கலந்துரையாடலின் போது பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையவர்கள் ஒப்பீட்டடிப் படையிலே கண்டுகொள்ளத்தக்க பல விடயங்களை எடுத்துக் கூறுகையில், நல்லூர் வீரகாளியம்மன் கோவிலினதும் சட்டநா தேஸ்வரம் (சிவன்) கோவிலினதும் தொடர்புமுறையின் அமி சங்கள் பலவற்றையும் விளக்கிக் கூறியதோடு இவ்விடயந் தொடர்பான தனித்தொரு நுண்ணாய்வு அவசியமென்பதையும் வலியுறுத்தினார்.

24. சேதுராமன், என்., *மு.கு.நூல்.*, ப.58.

25. *அதேநூல்*, ப.136.

26. சிவசாமி, வி., "காலத்தால் முந்திய நல்லூர்ச் சிலைகள்", *கலைக்கண்*, (மறுபிரசுரம்), வட்டுக்கோட்டை, 23.11.1973,ப.3.

27. வளவர்கோன், "வரலாற்றின் பின்னணியில் நல்லூர்" *சங்கமம்.* சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம், 1974, ப.18.

28. இக்கருத்தினை மாவையாதீனகர்த்தர் மஹாராஜஸ்ரீ சு.து.ஷன் முகநாதக்குருக்களவர்கள் எடுத்துரைத்தார்.

29. இக்கருத்தினைப் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையவர்கள் முன்வைத்துள்ளார்.

30. சிவநேசச்செல்வன், ஆ., "மாவிட்டபுரம் ஆதீனச் சுவடிச் சாலையும் ஏட்டுப்பிரதிகளும்", *பூர்வகலா.* யாழ்ப்பாணத்தொல் பொருளியற் கழக வெளியீடு, 1973, ப. 42 - 44.

31. கதிரைவேற்பிள்ளை, நா., *சுப்பிரமணிய பராக்கிரமம்* (அல்லது) முருகன் மாண்பு, சரஸ்வதி புத்தகசாலை, அருணா பிரிண்டர்ஸ், சென்னை, 1960, ப. 277.

32. முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., *யாழ்ப்பாணச்சரித்திரம்,* மூன்றாம் பதிப்பு. நாவலர் அச்சகம், யாழ்ப்பாணம்,1933,ப. 27.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33. *சுழிபுரம் திருமதி வள்ளியம்மை முத்துவேலு நினைவு வெளியீடு.*

34. பத்மநாதன்,சி., "ஈழத்தமிழ் வரலாற்று நூல்கள்", *இளங்கதிர* பேராதனைப் பல்கலைக்கழகக் கலைச்சங்க வெளியீடு. 1969-70, ப. 117.

35. இக்கருத்துக்கள் 1986.12.03 அன்று இவ்வாய்வின் வரலாற்றுச் செய்திகளைத் தெளிவுபடுத்திக்கொள்வதற்காக ஏற்பட்ட கலந் துரையாடலின்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற் றுத்துறையில் அத்துறைப் பேராசிரியர் கலாநிதி சி.பத்மநாதன் அவர்களால் எடுத்துக் கூறப்பட்டவை.

36. கந்தையா,மு., "மாருதப்புரவல்லியும் மாவிட்டபுரமும், *மாவைப்பிள்ளைத்தமிழ்*, மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலைமன்ற வெளியீடு, 1967, ப.XIX.

37. நகுலேச்சரத் திருவிரட்டைமணிமாலைச் செய்யுள், *குஞ்சி தபதம், பண்டிதர் சி.கதிரிப்பிள்ளை நினைவுமலர்*,1986, ப.58.

38. கிருஷ்ணராசா, செ., 'நல்லூர் சட்டநாதேஸ்வரர் ஆலயம் பஞ்சஈஸ்வரங்களில் ஒன்றா? சட்டநாதர் ஈஸ்வரமா?" ஜனநாத ஈஸ்வரமா?" *வீரகேசரி, வார வெளியீடு*, 30.11.1986, 07.12.1986.

39. சோழன் குமாரத்திக்கு நரிமுகம் தீர்த்த கதையினைப் பிறவறிஞர்களது ஆராய்ச்சிக் குறிப்புக்களுடனும் விளக்கங்க ளுடனும் இவ்வாய்வாளருக்குத் தெரியப்படுத்தித் தெளிவு படவிளக்கியவர், பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை யவர்கள்.

40. Sethuraman, N, "Temple cars referred to in the Inscriptions", Kumbokonam, 16th February 1984, pp . 7-9 (ஆங்கில மொழியில் எழுதப்பட்ட இவ்வாராய்ச்சிக் கட்டுரையினை எனது பார்வைக் குத்தந்துதவியவர், பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையவர்கள்.)

41. ஷண்முகநாதக்குருக்கள்,. சு.து., "திருமேவுமெருமாவை வருமான் மநாயகன்", *உலக இந்து மாநாடு ஆத்மஜோதி சிறப்புமலர்*, 1982, ப.89.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A (Jaffna)

# இயல் இரண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. சிவஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள்,"நகுலேஸ்வரத்தின் பெருமை" *உலக இந்துமாநாடு_ஆத்மஜோதிச் சிறப்புமலர்*, 1982, ப.119.

43. ஷண்முகநாதக்குருக்கள்,. சு. து.,"ஸ்கந்தசஷ்டிவிரதம்", மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஸ்கந்தஷஷ்டி விஞ்ஞா பனம், 2.11.1986, ப.2.

44. *அதேநூல்.*

45. டானியல் ஜோன், *மு.கு.நூல்.*, ப.12-14.

46. சொக்கநாதன், பொ.,*அடியார்க்கு நல்லார் வரலாற்று ஆராய்ச்சி*, மதுரை விவேகானந்தா அச்சுக்கூடத்திலும் எக்ஸெல்ஸியர் பவர் அச்சுக்கூடத்திலும் அச்சிடுவிக்கப்பெற்றது, 1944, ப.78.

47. சுந்தரசர்மா, இரா., *கோயிற்கடவை*, 1965, ப.23.

48. கனபதிப்பிள்ளை, சி., *மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் ஷண்முகர் புசம்ரேஷண கும்பாபிஷேகமலர்*,(பிரார்த்த னையுரை)., 27.03.1978.

49. சண்முகசுந்தரம், த., *மாருதப்புரவல்லி கப்பற்பாட்டு*, அருள் வெளியீட்டகம், குகன் அச்சகம், தெல்லிப்பழை, 20.10.1980, ப.22. (இந்நூலிலே ஐதிகமரபுகள் விரிவாகவுள்ளன.)

50. சண்முகசுந்தரம், த.,"பேராசிரியர் சு.வித்தியானந்தன் வாழ்க் கைப்பணி" *கலைமகிழ்நன்*, மணிவிழாக்கழக வெளியீடு, குகன் அச்சகம், தெல்லிப்பழை, 1984,ப.4-5.

51. அப்பாசாமி ஐயர், கா., *நகுலகிரிப்புராணம்*, (செய்.42), கீரிமலை இந்துசமய விருத்திச்சங்கம், 1961,ப.15.

52. *அதேநூல்*, ப.83.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபந்த இலக்கியம் - அறிமுகம்

தமிழிலக்கியவரலாறு என்பது பரந்த பொருளிலே தமிழ் நூல்களின் வரலாற்றையும் உள்ளடக்கும் ஓர் ஆய்வுத்துறையாகும்.தமிழிலே சிற்றிலக்கிய வகைகள் எனச் சுட்டப்படும் இலக்கிய வடிவங்கள் **'பிரபந்தங்கள்'** என அழைக்கப்படலாயின. ***பிரபந்த****மரபியல்*, ***பிரபந்த*** *தீபிகை* என்னும் நூல்களிலே **பிரபந்த** இலக்கிய வகைகளினது இலக்கணங்கள் கூறப்படுகின்றன. இவற்றின் எண்ணிக்கை தொண்ணூற்றாறென்று கூறப்பட்டுள்ளது.[1] அடியார்க்கு நல்லார் **'பிரபந்தம்'** என்னும் சொல்லை ஆண்டுள்ளார்.[2] **'பிரபந்த உரு இசையுரு'** என்பது அவரது உரை. தெய்வங்களிடம் முறையீடு என்ற முறையிலேயே தெய்வங்களைப் பண்புருவங்களாகப் பாடுவதும் காணப்படுகின்றது. மாலை, தூது, பஞ்சகம் போன்ற **சிறு பிரபந்த யாப்பு** முறையிற் பாடுவதும் இசைப்பாவடிவ முறையிற் பாடப்பெறுவதும் இந்தப் பக்திப் பாடல்களின் படைப்பு முறையாகும்.[3]

**பிரபந்தம்** என்பது வடசொல். இதன் பொருள், தொடர்ந்த பொருள்பற்றிய இலக்கியம் என்பது; நன்கு ஆக்கப்பட்டது என்றுமாம்.[4] **பிரபந்தம்** என்பது அடிவரையின்றிப் பல தாளத்தாற் புணர்ப்பது [5] என்பார் அடியார்க்கு நல்லார் என்பது, **மு.அருணாசலம்** அவர்கள் கொள்ளும் கருத்தாகும். செய்யுள் நூல்களைப் **'பிரபந்தம்'** என்னும் பெயராற் *பிரபந்தமரபியல்* என்னும் நூல் முதன்முதற் குறிப்பிடுகின்றது.

சிவந்தெழுந்தபல்லவராயன் என்ற ஒரு சிற்றூர்த் தலைவன் மீது மிதிலைப்பட்டிச் சிற்றம்பலக்கவிராயர் பாடிய உலாவிற் **'பிரபந்தம்' என்ற சொல் எடுத்தாளப்படுகின்றது.**

> **'ஆலப்ரவஞ்சம் போலாகிய தொண்ணூற்றாறு**
> **கோலப்ரபந்தங்கள் கொண்டபிரான்.'** (வரி. 103 - 104)

**'பிரபந்தம்'** என்ற சொற்பெயரையும், அவை தொண்ணூற்றாறு என்ற விளக்கத்தையும் பதினெட்டாம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலெழுந்த *சதுரகராதி* விளக்கியுரைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைணவ ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களின் தொகுதி *நாலாயிரத்திவ்விய பிரபந்தம்* எனப்படும். பெருவழக்காகப் பயன்ப டுத்தப்பட்டுச் சமூகத்தின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ள திவ்யப் **பிரபந்தம்**என்ற பாசுரத்தாற் **பிரபந்தம்**, என்ற சொல் பெற்றுள்ள முதன்மைநிலை ஆராயப்படவேண்டியதவசியமாகின்றது. "வட மொழியில் ஸ்ரீ வேதாந்த தேசிகர் அருளிச் செய்த ***தேசிகப்ரபந்தம்*** என்னும் நூல், ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமிகள் இயற்றிய ***ப்ரபந்த*** *ஞானாம்ருதம்* என்பன ஆழ்வார்கள் திவ்யசரித்திர ஆய்வினுக்கு மூல நூல்களாகக் கொள்ளப்படுகின்றன.

ஆழ்வார்கள் காலத்தைக் கணிப்பிட்ட **கலாநிதி எஸ்.கிருஷ் ணஸ்வாமி ஐயங்கார், பி.டி.ஸ்ரீநிவாஸ ஐயங்கார், டி.ஏ.கோபிநா தராவ், ராவ்சாஹிப் மு.ராகவையங்கார்** முதலிய ஆராய்ச்சி நிபுணர்கள் அது கி.பி ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து பத்தாம் நூற்றாண்டிற்குற்பட்ட ஐந்நூறு வருஷங்கள் என்கின்றனர்."[6]

*நலாயிரத்திவ்யபிரபந்தத்திற்குப்* **'பிரபந்தம்'** என்ற பெயர் கொடுக்கப்பட்டமைக்கு அதன்கண் காணப்பெறும் அந்தாதி., தாண் டகம், திருப்பள்ளியெழுச்சி, நூற்றந்தாதி, மடல், மாலை, விருத்தம் போன்ற **பிரபந்தங்களும்** உந்தியார், கோத்தும்பி, சப்பாணி, தாலாட்டு, திருவெழுகூற்றிருக்கை, திருப்பாவை ஆகிய இலக்கிய வகைகளும் காரணமாகலாம்.[7] தமிழிலுள்ள நூல்களையொ ருவாறு வகைப்படுத்தியெண்ணித் தொண்ணூற்றாறென வரையறை செய்திருக்கிறார்கள் என்று கலைக்களஞ்சியம்[8] கூறும். சிற்றி லக்கியங்களையும் **பிரபந்தங்களையும்** இடைக்காலத்திலே தோன்றி யவையாக ஒரு சாராரும்[9] பிற்காலத்திலே தோன்றியவை யெனப் பிறிதொரு சாராரும்[10] கூறுவர். தமிழிலுள்ள சிற்றிலக்கியங்களைத் தொண்ணூற்றாறு என்னும் வரையறைக்கு உட்படுத்திக் கூறுவது மிகப் பிற்பட்ட காலத்திலே தோன்றிய வழக்காகும்." சிற்றிலக் கியங்கள் அளவிறந்தனவாகப் பல்கியிருந் தபோதிலும் பொருட் சிறப்பாற் புதுமைபெற்ற ஒருசில சிற்றிலக்கியங்களே பெரும் பான்மையாக வழக்கில் இருந்து வருகின்றன. **'ப்ரபந்தம்'** என்ற வடசொல்லுக்கு நன்கு கட்டப்பட்ட நூல் என்பது பொருள் என்றுங் கூறுவர் செயராமன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு* என்னும் நூலிலே ஈழத்து இலக்கிய வரலாற்றுக் கட்டங்கள் எடுத்துக்கூறப்பட்டுள்ளன. "போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலப்பிரிவிலே போதாகிய இலக்கிய வடிவங்கள் ஆங்கிலேயர் காலப்பிரிவிலே மலரந்தனவென லாம். பிள்ளைத்தமிழ், தூது, உலா, கோவை, கலம்பகம், மடல், குறவஞ்சி, அந்தாதி, இரட்டைமணிமாலை, மும்மணிக் கோவை, நான்மணிமாலை, சதகம், அம்மானை, பதிகம், ஊஞ்சல் ஆகிய பிரபந்தவகைகளும் புராணங்களும் ஆங்கிலேயர் காலப்பிரிவிலே பெருமளவிற்றோன்றின."[12] என அந்நூல் கூறுகின்றது. **'பிரபந்தங்களையே பிரதான இலக்கிய வடிவங்களாகவும் தொடர்நிலைச் செய்யுளை அளவுகொண்டு அகலக்கவியாகவும் பார்த்த ஒரு இலக்கியக் கோட்பாட்டின் பின்னணியிலே தோன்றியனவே ஈழத்தின் முதற்கட்டக் கவிதை இலக்கியங்கள்'**[13] என்றுரைக்கின்றார். **பேராசிரியர், கலாநிதி கார்த்திகேசு சிவத்தம்பி.**

பதினான்காம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு இறுதி வரையான ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சியினை ஆய்வு செய்துள்ள **கலாநிதி கே.எஸ்.நடராசா** தமது நூலின் இரண்டாம் இயலையும், மூன்றாம் இயலையும் முறையே 'ஈழத்து அகப் பொருள் இலக்கிய வளர்ச்சி', 'ஈழத்துப் புறப்பொருள் இலக்கிய வளர்ச்சி' எனப் பிரித்து, **பிரபந்த** இலக்கிய வளர்ச்சியை எடுத்து விளக்கியுள்ளார்.

செய்யுள்வடிவிலமைந்த நெடும் பாடல்களை மட்டுமே **'பிரபந்தம்'** என்ற வழக்கிலே இன்று பெரும்பான்மையாக அறிஞர் கொள்வர். ஆனால் **ஆறுமுகநாவலர்** எழுதிய கண்டனங்களும் கட்டுரைகளும் அடங்கிய தொகுப்பு நூல் ஒன்று *நாவலர் பிரபந்தத் திரட்டு* என்ற பெயரிலேயே வெளியிடப்பட்டுள்ளது. நாவலர் சமூக, அரசியற் பிரச்சினைகளில் ஈடுபட்டுக் காலந்தோறும் வெளியிட்ட கட்டுரைகள், கண்டனங்கள் மிகப்பல. அவற்றுட் சில *நாவலர் **பிரபந்தத்** திரட்டு* என்ற பெயரில் வந்திருக்கின்றன.[14]

'நாவலர் இலக்கிய நோக்கும் பணியும்' என்ற கட்டுரை ஒன்றிலே சபாபதி நாவலரைப்பற்றி எழுதிய **பேராசிரியர் கலாநிதி கனகசபாபதி கைலாசபதி, 'சொல்லணி பொருளணி குழுமி விளங்கும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்ல தமிழ்ப் பிரபந்தங்கள் கொழுதமிழ்க் கவிகள்'**[15] என்று சபாபதி நாவலரது வரிகளையே எடுத்துக்காட்டித் தமிழ்ப் பிரபந்தங்களது சிறப்பினை உணர்த்தியுள்ளார். பிறிதொரு கட்டுரையிலே அதே தொடர்பில் 'சபாபதி நாவலர் வெளியிட்டனவாகச் சுமார் இருபது நூல்கள் உள்ளன. அவற்றுள் *மாவையந்தாதி, நல்லைச் சுப்பிரமணியக்கடவுள் பதிகம்* என்பன மாவையையும் நல்லை யையும் பற்றிய **பிரபந்தங்களாகும்**[16] என எழுதியுள்ளார். புலோலி சதாவதானி நா.கதிரைவேற்பிள்ளை, *போலியருட்பாப் பிரபந்தத்தில் இருந்து கிஞ்சுக கண்டன சண்டமாருதம்*[17] என்று அழைக்கப் பட்டார். இராமலிங்க வள்ளலாரது அருட்பாவினை மறுத்துரைத் துக் கண்டனங்களாற் பெறப்பட்ட பட்டமாக இது அமைகின்றது.

## சைவக்கோவிலைப்பாடும் ஈழத்திலக்கியம்

தமிழ்க்கவிதையிற் சைவக்கோவில்களைப் பாடும் மரபு ஈழத்து இலக்கிய வரலாற்றிலே எப்போது ஆரம்பமாகியது என்று நோக் குவது பொருந்துவதாகும். முதன்முதலிற்றோன்றிய சைவக்கோ விலைப்பாடும் ஈழத்துச் செய்யுளாகப் பதவியாவிற் கிடைத்த செய்யுளேயமைகின்றது. இக்கருத்தினைப் **பேராசிரியர் கலாநிதி ஆழ்வாப்பிள்ளை வேலுப்பிள்ளை** 'சைவக்கோவிலைப்பாடும் ஈழத்து இலக்கியங்களுள் இன்று கிடைக்கும் ஈழத்தவராற் பாடப் பட்ட மிகத் தொன்மையான செய்யுளாகப் பதவியாச் செய்யுள் காணப்படுகிறது'[18] எனக் கூறுகின்றார். தலப்பெருமைகளை எடுத்துக்கூறும் செய்யுள் மரபின் தோற்றம் பற்றிய இக்கருத்துக்கள் ஈழத்துக் கவிதை மரபின் தோற்றத்தினையும் வளர்ச்சியையும் பற்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்கு உதவுவனவாம்.

நல்லூர், மாவிட்டபுரம் என்னும் தலங்கள் பற்றி எழுந்த பிரபந்தங்களாவன கீர்த்தனை அந்தாதி, பிள்ளைத்தமிழ், ஊஞ்சல், பதிகம், புராணம், சிந்து, குறவஞ்சி என்பனவாம். இப்பிரபந்த வடிவங்கள் பற்றிய பொதுவான செய்திகளை இனி நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கீர்த்தனை

கீர்த்தனை அல்லது கீர்த்தனம் என்னுஞ் சொல் தமிழிழே இசைப்பாடல், புகழ்ச்சி எனக் பொருள்படும். இதன்மூலச் சொல் லான "கீர்த்தன" என்னும் வடசொல்லிற்குக் கூறுதல். கூறச் செய்தல், வெளிப்படுத்தல், தொடர்புகொள்ளுதல், புகழுதல், சிறப் பித்தல் எனப் பல பொருள் உண்டு. பொதுவாக இறைவனின் பெருமைகளைப் புகழ்ந்து கூறும் இசைப்பாடல் வகையொன் றினைக் குறிப்பதற்கே இதுபயன்படுத்தப்படுகின்றது.

பொதுவாகக் கீர்த்தனைகள் பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளன. சிலவற்றில் அனுபல் லவி இன்றி ஏனைய இரண்டுமே காணப்படும். ஒவ்வொரு பகுதி முடிவிலும் பல்லவி மீண்டும் பாடப்படும். இக்கீர்த்தனைகள் பல் வேறு ராக, தாள அமைப்புக்களைக் கொண்டவை.

கீர்த்தனைகளிலே 'சாஹித்யம்' பிரதானமாகும். தெய்விக இயல்பும் ஈடுபாடும் முக்கியமான இடத்தைப் பெறும்; பக்திரஸம் ததும்பும்; ராகபாவங்கள் இடம்பெறும். இத்தகைய அம்சங்களைக் கொண்ட கீர்தனைகளே பெருந்தொகையாகவுள்ளன. இக்கீர்த்தனை வடிவம் கி.பி பதினான்காம் நூற்றாண்டளவிலே தோன்றியதாகப் **பேராசிரியர் பி.சாம்பமூர்த்தி** கூறியுள்ளார்.

தமிழிலக்கியம், இந்தியசங்கீதம் ஆகியவற்றின் வரலாற்றை ஆய்ந்த அறிஞர்களில் ஒருசாரார் தமிழ்க் கீர்த்தனைகளின் தோற்றக்கரு பல்லவர், பாண்டியர் காலச் சைவ, வைணவ ஆழ்வார்களின் திருப்பாடல்களில் உள்ளது என்பார்.

## தமிழில் கீர்த்தனை மரபு

தமிழ்க் கீர்த்தனையின் தோற்றம் பற்றி **பேராசிரியர் தெ.பொ.மீனாட் சிசுந்தரன்** கூறியுள்ள கருத்துக்கள் மனங்கொள்ளற்பாலன.

> **"தமிழ் நாட்டிலே மராத்திய, நாயக்க மன்னர்கள் இசைக்கு ஆதரவு நல்கியதன் விளைவாகச் சிந்து, கீர்த்தனையாகி உருவாகிற்று! கீர்த்தனை எனில் புகழ் என்று பொருள். இறைவனின் புகழைப் போற்றிப் பாடுவதுடன் இது முதலில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> **ஆரம்பித்தது. கி.பி 8ஆம் நூற்றாண்டிலிருந்தாவது மன்னன் ஒருவன் தனது கைகள், புயங்கள் ஆகியவற்றினாலீட்டிய வெற்றிகளையும் சிறப்புக்களையும் பற்றிய பாடல்கள் தோன் றியிருக்கும். இச்செய்யுட்கள் மேற்குறிப்பிட்ட சிறப்புக்களின் வகைகளைத் தொடர்ந்து வருணிப்பன. இவற்றை வகுப்பு என்பார். தாளத்திற்கு ஏற்றவாறு பாடக்கூடிய இசை அமைப் பினை இவை கொண்டிருந்தன. எனவே வகுப்பு என்பது ஒரு வகை இசைப்பாடலின் பெயராக மாறிற்று. விஜய நகர மன்னர் காலத்தில் அருணகிரிநாதர் இதனைப் பரவலாகப் பயன் படுத்தினார். கவிதையும் இசையும் கலந்த ஒரு புதிய கலை வடிவமாக இது விளங்கிற்று. அவருடைய பாடல்கள் முருக னுடைய புனிதமான புகழைப் பாடுவதாலே 'திருப்புகழ்' என அழைக்கப்பட்டன. இவை பழைய விருத்தயாப்பு அமைவின் அடிப்படையில் அமைந்துள்ளன. பிற்காலத்திலே கீர்த்தனை என்று அழைக்கப்படுவதன் தமிழ்ப்பா வடிவமே திருப்புகழ் என்பது தெளிவாகின்றது. ஆனால் கீர்த்தனைக்குப் போன்று திருப்புகழிற்குப் பல்லவி இல்லை"**

என்ற மேற்கோளை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சமஸ் கிருதத்துறைத் தலைவர் **பேராசிரியர் வி.சிவசாமி** எடுத்துக்காட்டு கின்றார்.

> **'முதன்முதலாகக் குறவஞ்சி பள்ளு முதலிய பிரபந்தங்க ளிலேதான் கீர்த்தனைமுறையிலமைந்த பாடல்கள் காணப்படுகின்றன. இவ்விரண்டினுள்ளும் முற்பட்டது பள்ளு என்ற பிரபந்த வகையாகும்'**

என்பது **பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளையின்** கருத்தாகும்.

எவ்வாறாயினும் சிந்து, பள்ளு, குறவஞ்சி முதலிய பிரபந் தவகைகள் தமிழ்க்கீர்த்தனையின் ஆரம்பக்கட்டத்தினை அறிவ தற்கு நன்கு துணைபுரிவன. மேலும் இப்பிரபந்த வகைகள் பாமர மக்களின் இலக்கிய வடிவங்களாகவுந் திகழ்வன. எனவே இவற் றையொட்டி எழுந்த அல்லது இவற்றுடன் தொடர்புள்ள கீர்த்த னையின் அடித்தளத்திலே மக்கள் இலக்கியப்பண்பும் குறிப்பிடற் பாலது. இது பின்னர் சாஸ்திரியமயமாக்கப்பட்டிருக்கலாம். மேலும் தமிழ்க் கீர்த்தனைகளின் மொழிநடை பொதுவாக எளிமையாக உள்ளது என்பதும் மனங்கொள்ளற்பாலது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மும்மூர்த்திகளும் ஈழத்துச் சாஹித்யகர்த்தாக்களும்

தமிழ்க் கீர்த்தனைகளைப் பொறுத்தமட்டிலே இசைச்சிறப்பு, பக்திரசம், இலக்கியநயம் முதலியன பொருந்திய சிறந்த கீர்த்த னைகளை இயற்றியவர்கள் என்ற வகையில் முத்துத் தாண்டவர், கோபாலகிருஷ்ணபாரதியார், பாபநாசம்சிவன் ஆகியோரைத் தமிழ்க்கீர்த்தனைகளின் மும்மூர்த்திகளெனக் கொள்ளலாம். யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த **யோகசுவாமிகள், வீரமணிஐயர்** என்போரும் கீர்த்தனைகளை இயற்றியுள்ளனர்.

கீர்த்தனாசிரியர்களிற் பலர் நாதோபாசகர்கள், மறை ஞானிகள், இறைபக்திமிக்கவர்கள். தாம் பெற்ற இறையனுபவத்தினைக் கீர்த்த னைகள் மூலம் புலப்படுத்தி ஏனையோரையும் அவ்வனுபவத்திற்கு அழைத்துச் செல்கின்றனர். பெரும்பாலான கீர்த்தனைகள் சமயச் சார்புடையனவாயினும் சமூகம், தேசியவாதம், தமிழ் முதலியன பற்றி அமையும் கீர்த்தனைகளும் உள்ளன. தமிழ்க்கீர்த்தனை ஆசிரியர்களிற் பலர் சைவ சமயத்தவரெனினும் சமரசநோக்குடை யவர். பல கீர்த்தனைகள் வைதிகசமயத் தெய்வங்களான சிவபெரு மான், அம்பாள், விநாயகர், முருகன், திருமால், லஷ்மி, சரஸ்வதி, ஐயப்பன் முதலிய தெய்வங்களைப் புகழ்ந்துகூறுவன.

## கீர்த்தனைகளிற் பக்திநலன்

கீர்த்தனைகளுக்கும் முற்பட்டகாலச் சைவ, வைணவசமய தத்துவ இலக்கியங்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பும் உண்டு. சமய, தத்துவக் கருத்துக்கள் மக்கள் மனதைக் கவரும் வகையில் ஓசைநயத்துடன் எளிமைப்படுத்திக் கூறப்பட்டிருக்கின்றன.

கீர்த்தனைகளிலே ஓசைநயம், இலக்கிய நயம்ஆகிய செறிந்து காணப்படுகின்றன.எனினும் இசைநயமும் பக்திநயமுமே இவற் றின் அடித்தளமாக அமைந்துள்ளன. வடமொழியிலே 'பக்தி மார்க்கம்' என்று கூறப்படுவதே தமிழில் அன்பு நெறி எனலாம். **பக்தி வேறு அன்புவேறன்று, இறைவனிடத்து ஆன்மா கொண்ட பேரன்பே பக்தியெனக் கூறப்படுகின்றது.** இறைவனிடத்து ஒருவன் கொண்டுள்ள தொடர்புகள் பலவாக வெளிப்படும். இறைவனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைகளைக் கேட்டல், அவனுடைய புகழ்பாடுதல், அவனைத் தியானித்தல், திருவடியைத் தொழுதல், அவனை அர்ச்சித்தல், வணங்குதல், அவனுக்கு அண்மையாக இருத்தல். நண்பனாயிருத்தல், அவனுக்கே தன்னை அர்ப்பணித்தல் எனப் பக்தியின் ஒன்பது அமிசங்களைப்பற்றிப் *பாகவதம்* கூறும். பக்தி ஒரு தனியுணர்வாயினும் அது பதினொரு வடிவங்களைக் கொள்ளும் என *நாரத பக்தி சூக்தங்கள்* கூறும்.

இறைவனுடைய குணங்களிலும் வடிவங்களிலும் மிகுந்த ஈடுபாடு, இறைவனைப் பூசித்தல், இடையறாது தியானித்தல், தன்னையே அர்ப்பணித்தல், இறைவனிடத்துத் தாசனாகவும் நண்பனாகவும், பிள்ளையாகவும், காதலியாகவும் ஈடுபடல், கடைசிக் கட்டங்களில் தெய்விகஅன்பு உச்சநிலையுற்றுத் தன்னிலையற்ற இறைமயமாதல், அதன் விளைவாக இறைவனைப் பிரியமுடியாதிருத்தல் என்பனவாகும். மேற்குறிப்பிட்ட அம்சங்கள் அனைத்தும் தெலுங்கு, கன்னட, சமஸ்கிருதக் கீர்த்தனைகளில் மட்டுமன்றித் தமிழ்க் கீர்த்தனைகளிலுங் காணப்படுகின்றன. பக்திரசமே இவற்றிலே நன்கு செறிந்துள்ளது."[19]

## அந்தாதி இலக்கியம்

அந்தாதியென்றால் நூலின் ஒவ்வொரு பாடலிலும் உள்ள இறுதி எழுத்து, அசை, சொல், சீர், அடி இவற்றுள் ஒன்று அதற்கு அடுத்த பாடலின் முதலாக வரும்படி அமைத்துப்பாடி, இறுதிப் பாடலின் இறுதியும் முதற்பாடலின் முதலும் ஒன்றாக இணையும்படி மண்டலித்து மாலைபோலத் தொடுத்து முடிப்பதாகும். இதனைச் சொற்றொடர்நிலை என்றுங் கூறுவர். ஒரு செய்யுளிலேயே ஓரடியின் இறுதி, மற்ற அடிக்கு முதலாக அமையும்படி தொடுப்பதும் உண்டு. அது அந்தாதித் தொடை என்று கூறப்படும்.

அந்தாதி இலக்கியம் பல்வேறு சந்தங்களையும் கொண்டு பல்வேறு பாக்களையும் அடிப்படையாகக் கொண்டு வருகின்றது எனலாம். அறுசீர் ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், கொச்சகக் கலிப்பா, எழுசீர் ஆசிரியவிருத்தம், கலிநிலைத்துறை, எண்சீர் ஆசிரியவிருத்தம் முதலான செய்யுள் அமைப்புக்களைக் கொண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும் இன்னும்பிற செய்யுள்நிலைகளைக் கொண்டும் அந்தாதி இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்கின்றன. பாடல்களை நினைவு கூருவதற்கு அந்தாதிஅமைப்புப் பேருதவியாக இருந்து வருகின்றது. எனவேதான் பிற்காலத்தில் அந்தாதி இலக்கியங்கள் பெருமளவில் எழுந்தன. சைவம், சமணம், இஸ்லாம் ஆகிய எல்லாச் சமயத்தவரும் அந்தாதிப் பாடல்களை இயற்றத் தொடங்கினர்.

> **'ஒரே கருத்தைப் பல பாக்களின் மூலம் கூறிச் செல்கையில், குறிப்பாக அந்தாதி இலக்கியங்களில் அந்தாதி யாப்பு அமையப் பெற்றிருத்தலால் பாக்களை முறையே படிக்கப் படிக்க மேலும் மேலும் விருப்பம் எழுகின்ற நிலையை நம்மை யறியாமலேயே உணருகிறோம். பாக்கள் தொடர்ந்து வருதல், கருத்தைக் கவரும் அழகு ஆகியவை சிறப்பிக்கப் படுகின்றன.'**[20]

அந்தாதி என்னும் இலக்கிய மரபுபற்றி கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிலே தோன்றிய இலக்கண ஆசிரியர்கள் பின்வருமாறு இலக்கணம் கூறுகின்றனர். *தண்டியலங்கார* ஆசிரியர்,

"செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே,"

என்று கூற,

"அந்த முதலாத் தொகுப்பதந்தாதி,"

எனவுரைக்கின்றார், *யாப்பருங்கலக்காரிகை*யாசிரியர்.

அந்தாதி இலக்கியம் பல்சந்தமாலை, ஓலியலந்தாதி, பதிற்றந்தாதி எனப்பல வடிவங்களில் அமைந்திருந்ததாக அறிய முடிகின்றது. இவற்றுடன் கவியந்தாதி, சிலேடையந்தாதி, போன்றவையும் உண்டு. பதிற்றந்தாதி எனப் பிரபந்தம் குறித்து *இலக்கண விளக்கப்பாட்டியலே* முதன்முதலாகக் கூறுகின்றது.

"வெண்பாப் பத்துக் கலித்துறை பத்துப்
பண்புற மொழிதல் பதிற்றந்தாதி."

*பிரபந்த தீபிகையும், இலக்கண விளக்கப்பாட்டியலும் சதுரகராதியும்* பத்துவெண்பா, பத்துக் கலித்துறைப் பொருட்டன்மை போன்ற அந்தாதித்துப் பாடுவது பதிற்றந்தாதி என்ற கருத்துக்கு உடன்படுகின்றன. பதிற்றந்தாதியின் யாப்புக் குறித்து எழும் ஐயப்பாடுகளைக் **கலாநிதி கே.எஸ்.** நடராசா எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்துவெண்பா அல்லது பத்துக்கலித்துறை அந்தாதித்துவருவது பதிற்றந்தாதியா அல்லது முதலிற் பத்து வெண்பாவும் அதனை யடுத்துப் பத்துக் கலித்துறையும் அந்தாதித்துவருவது பதிற்றந் தாதியா என்பது தெளிவாயில்லை.[21] பிரபந்த தீபிகை ‘பத்து வெண்பாக் கலித்துறை பத்துடன்’ என்று கூறுவதிலிருந்து இரண்டு வகைச் செய்யுளும் இணைந்து வருதலே முறையெனக் கொள் ளத் தோன்றுகிறது.

நூற்றந்தாதி என்ற பெயர் இலக்கணவிளக்கப் பாட்டியலா ருக்குமுன் வழக்கிலிருந்ததாகத் தெரியவில்லை. எனினும் அந் தாதி என்ற பெயரில் அவருக்கு முன்னிருந்த பாடடியலார் அத னைக் கையாண்டிருக்கின்றனர். *பன்னிருபாட்டியல்,*

“வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பாயுரைப்ப தந்தாதித் தொகையே.”

என்று செய்யுள்வகை செப்பி, எல்லை கூறாது விட்டது. இது அவ்வகைச் செய்யுள் பத்து, நூறு ஆகிய தொகையினவற்றை மட்டுமன்றிப் பிற தொகையினவற்றையும் உள்ளடக்கத்தக்க தொன்றாகும். *வெண்பாப்பட்டியல்,*

“ஒத்தாய வெண்பா வொருநூறு - ஒத்தசீர்
அந்தாதி யாகுங் கலித்துறையு மவ்வகையே
வந்தா லதன் பேரவை.”

என்ற செய்யுள்வகையும் எல்லையுங் கூறிற்று. *நவநீதப்பாட்டியலும்* அக்கருத்தைத்தழுவி அந்தாதியென்றே கூறும். *சிதம்பரப் பாடடியலும்,*

“வெள்ளை நூறு கலித்துறை நூறாதல்
நன்குறிலந்தாதி.”

என்றே கூறும். *இலக்கணவிளக்கப்பாட்டியல்,*

“நூறுவெண்பா நூறு கலித்துறை
கூறுதல் நூற்றந்தாதிக் கோளே.”

எனச் செய்யுள்வகையோடு எல்லையுங்கூறி நூற்றந்தாதியென்ற பெயரும் வழங்கிற்று. *பிரபந்ததீபிகையும்,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெற்றி வெண்பா நூறினாலுங் கலித்துறையின்
விண்டுவந்த நூறதேனும்
வினவியந் தாதித் துரைத்தல் நூற்றந்தாதி."

என நூற்றந்தாதிப் பெயரிலோதி வெண்பா அல்லது கலித்துறை நூறு அந்தாதித்துவருமென விளக்கிற்று.

ஒலியலந்தாதி எனப் *பிரபந்ததீபிகையும்*, *சதுரகராதியும்* குறிப் பிடும் இப்பிரபந்தவகையை ஏனைய நூல்கள் ஒலியந்தாதியென வழங்கும்.

"தத்தம் இனத்தில் ஒப்புமுறை பிறழாது
நாலடி ஈரென் கலையொரு முப்பது
கோவிய தொலியந்தாதியாகும்."

என நாலடி பதினாறு கலைவண்ணப்பா முப்பது அந்தா தித்துவருவது ஒலியந்தாதி என்று *பன்னிருபாட்டியல் கூறும். வெண்பாப்பாடடியலும், நவநீதப்பாட்டியலும், இலக்கண விளக்கப் பாட்டியலும்* முன்னைய கருத்தினை ஏற்கின்றன.

*சிதம்பரப்பாட்டியல்*, வகுப்பு முப்பான் சூழொலியந்தாதி எனக் கலையைக் குறிக்காது கூறும். *பிரபந்ததீபிகை,*

"முறையினீரெண் கலையையு
முடியவோ ரடியதா யிங்ஙன் நாலடியின்
முடிதலெண் ணெண் கலையதா
யடிகள் பல சந்தமாய் வண்ணமுங் கலைவைப்பு
மந்தாதி தவறாமலே
யலகுமுப்பது செய்யுட் பாடுதுஞ் சிறுபான்மை
யாகுமெட்டுக்கலை யெனுந்
தொடர்புறுமன்றி வெண் பாவகவலுங் கலித்
துறையான விம் முன்றையும்
சோர்வில் பப்பத்தாக வந்தாதி யாகவுஞ்
சொல் லொலிய லந்தாதியே."

என்று கூறுவதன் பொருளைச் *சதுரகராதி,*

"பதினாறு கலையோரடியாக வைத்திங்ஙன்
நாலடிக்கறுபத்துநாலு கலை வகுத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலசந்தமாக வண்ணமுங் கலை வைப்புந்
தவறாமலந்தாதித்து முப்பது செய்யுட்
பாடுவது. சிறுபான்மை யெட்டுக்கலையானும்
வரப்பெறும். அன்றியும் வெண்பா வகவல்
கலித்துறையாகிய விம் மூன்றையும்பப்பத்தாக
வந்தாதித்துப் பாடுவதுமாம்."

என்று மூன்று வகை ஒலியந்தாதி செப்பும்.

## பலசந்தமாலை

பல்சந்தமாலையின் இலக்கணத்தைப் *பன்னிருபாட்டியல்,*

"சொன்ன கலம்பக உறுப்புவகை நீக்கி
மன்னிய பத்து முதல் நூறளவா
வந்த மரபின் வருஉஞ் செய்யுள் முதலா
வந்தது பல்சந்த மாலை யாகும்."

எனக் கலம்பக உறுப்புக்களை விட்டு, முன்னோர் பாடிவந்த முறையான் வருஞ் செய்யுளை முதலாகக் கொண்டு, பத்து முதல் நூறு அமையப் பாடுவது பல்சந்தமாலை யென்றுரைக்கும்.

*வெண்பாப்பாட்டியல்,* 'பத்தாதி நூறந்தம் பல்சந்தமாலையாம் எனப் பத்து முதலாக நூறீறாக நின்ற விகற்பத்தது பல்சந்த மாலைவிகற்பம் என்றுரைக்கும்.

***நவநீதப்பாட்டியல்,***

"பத்தாதி நூறந்தம் பல்சந்தமாலை'' என்றோதி, "பல்சந் தங்களும் பத்துமுதல் நூறளவும் வருவது பல்சந்தமாலையாம். என்று விரிக்கும்.

***சிதம்பரப்பாட்டியல்,***

"அகவல் விருத்தம் வகுப்பாதல் பத்தாதி
யந்த நூறாகும் பல்சந்தமாலை."

என அகவல், விருத்தம், வகுப்பு ஆகியவற்றுள் பத்து முதல் நூறுவரையான செய்யுள் வருவது பல்சந்தமாலை என்றுரைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***இலக்கணவிளக்கப்பாட்டியல்.***

"பத்து முதலாய் பப்பத்தீறா
வைத்த வண்ணவகை பத்தாகப்
பல்சந்த மாலை பகரப்படுமே."

எனப் 'பத்துகவி முதலாக நூறு கவி ஈறாக வைக்கப்பட்ட சந்தம் பத்துப்பத்தாகப் பல்சந்தமாலை கூறப்படும்' என்றுரைக்கும்.

***பிரபந்ததீபிகை.***

"மகிழ்வுறுஞ் செய்யுள் பப்பத்தாக வொவ்வொரு
வகைக்கு மோர் சந்தமாகி
வரலாறு செய்யுளாய்ச் சொல்வதே பலசந்த
மாலையாய்ச் சொல்வார்களே."

எனப் பத்துப்பத்துச் செய்யுளுக்கு ஒரு சந்தமாக நூறு செய்யுட் கூறுவது பல் சந்தமாலையாகுமென்றுரைக்கும். இதனைப் பதிற்றுப் பத்தந்தாதியென்றும் வழங்குவர். இதனைப் பலரும் பல்வேறு விதமாகக் கூறினாலும், பல்சந்தமாலை என்பது கலம்பகத்திற்குப் புறம்பான ஒன்று என்பதும், அது பத்து முதல் நூறு செய்யுளைக் கொண்டதென்பதும், அவை பல சந்தங்களில் வரும் என்பதும் பலருக்குமொத்தக்கருத்தாகத் தெரிகின்றது. இதனைச் சிலர் பலசந்தமாலை என்றும் பலர் பல்சந்தமாலை என்றும் பெயரிட்டுரைப்பார். அவ்விரண்டுமொன்றினையே குறிக்குமென்பது தெளிவு.

அந்தாதியிலக்கியம் பொருட்சிறப்பினைவிட யாப்புச்சிறப்பே மிகுதியாக உடையதாகும். அதனால் இதனை யாப்பமைப்பாற் பெயர்பெற்ற இலக்கியமெனலாம்.[22]

கதைப்போக்கு நூல் முழுவதும் தொடர்ந்துவராது. செய்யுள்கள் ஆங்காங்கே பொருள் முடிவு பெற்றனவாய்ப் பொருளாலன்றிச் சொற்றொடரால் ஒன்றோடொன்று இணைந்து முழு நூலாக வருவது சொற்றொடர்நிலைச் செய்யுளாம். அந்தாதி இலக்கியங்கள் இவ்வகையினைச் சேர்ந்தவையாகும். இவ்வகைச் சொற்றொடர்நிலைச் செய்யுள் இலக்கியமாய் அந்தாதிகளிற் பெரும்பாலும் ஒரேபொருளமைப்பே இடம்பெற்றிருக்கக் காணலாம். இறைவனையோ இறைவியையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அவரைத் துதித்துப் போற்றுதலே இவ்வந்தாதியிலக்கியங்களின் பொதுவான பொருளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தம்

பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களென இக்காலத்திற் பொது வழக்காக வழங்கப்படுவது, *பன்னிருபாட்டியலில்* 'பிள்ளைப்பாட்டு' என்றே சுட்டப்படுகின்றது.

"பிள்ளைப்பாட்டே தெள்ளிதில் கிளப்பின்
மூன்றுமுதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே." எனவரும்.

பிள்ளைப்பாட்டைத் தெளிவுறப்பாடுமிடத்து மூன்றுமாத முதலாக இருபத்தோராம்மாதம் வரையிலும் அமைந்த மாதங்களுட் சிறந் தனவாகிய ஒன்றித்த மாதங்களின் காப்பு முதலிய நிலையையு டைய அந்நூலை உரியோர் கேட்கும்படி கூறுவார்கள் புலவர்கள்.

பிள்ளைப்பாட்டு ஆண்பாற் பிள்ளைப்பாட்டு, பெண்பாற் பிள்ளைப்பாட்டு என இருவகைப்படும்.

ஆண்பாற் பிள்ளைப்பாட்டிற்கான உறுப்புக்களைப் *பன்னிரு பாட்டியலில்*,

"காப்போடு செங்கீரை தால் சப்பாணி
யாப்புறு முத்தம் வருக என்றல் முதல்
அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர்
நம்பிய மற்றவை சுற்றத்தளவென
விளம்பினர் தெய்வ நலம்பெறு புலவர்."

என்று கூறும். *இலக்கணவிளக்கப்பாட்டியல்,* 'பிள்ளைக்கவி' என்று அழைக்கின்றது.

"மூன்று முதல் மூவேழ் திங்களின்
ஒற்றை பெற்ற முற்றுறு மதியின்
கொள்ளுக 'பிள்ளைக்கவி' கையைக் கூர்ந்தே."

என்கிறது.

ஆண்பாற்காயின் பதினாறு ஆண்டளவும் பெண் பாற்காயின் பூப்புநிகழும் வரையிலும் கேட்பிக்கலாம் என்று பிறிதோர் சாரார் கூறுவர். பெண்பாற்பிள்ளைத்தமிழாயின் சிற்றில் இழைத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுசோறாக்கலும் ஊசலாடுதலும் விரும்பிப்பாடப்படுதல் வேண்டும். இதன் யாப்பு ஆசிரியவிருத்தம்.

இன்று காணப்பெறும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்களிற் காலத்தால் முற்பட்டது இரண்டாம் குலோத்துங்கசோழன்மீது கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஒட்டக்கூத்தர் பாடிய பிள்ளைத்தமிழேயாம். பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில் கொடி கொண்டான் பெரியன் ஆதித்ததேவன் என்பவன் 'கந்தன் உதயஞ்செய்தான் காங்கேயன் மீதி காங்கேயன் பிள்ளைக்கவியைப் பாடியுள்ளான்.' என்று சாசனவாயிலாய்[23] அறிகிறோம். இவற்றின்பின்பு கிடைக்கும் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் பெருமபாலும் பதினேழாம்நூற்றாண்டிற்கும் தொடர்ந்துவரும் நூற்றாண்டுகளுக்கும் உரியனவேயாம்.

மதுரைக்காமராசர் பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டத்திற்காக இராம. சௌந்தரவல்லி என்பார் எழுதிச் சமர்ப்பித்துள்ள ஆராய்ச்சிக்கட்டுரையான *"மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையின் பிள்ளைத்தமிழ்நூல்களும் கோவை நூல்களும்"* என்பதிலே, பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் குறித்து அவ்வாய்வாளர் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் சிலவற்றை இவ்விடத்திலே இணைத்து நோக்குவது பொருத்தமுடையதாகும்.

இராம. சௌந்தரவல்லி பின்வருமாறு குறிப்பிடுகின்றார். அவரது அட்டவணை அமைப்பு நோக்கத்தக்கது.

> "*பிங்கலந்தை நிகண்டு* காலத்தால் முந்தியது. இதில் ஆண்பாற் பிள்ளைப்பாட்டு, பெண்பாற்பிள்ளைப்பாட்டு இரண்டும் பேசப்படுகின்றன. ஆண்பாற்பிள்ளைதமிழ்ப் பிரபந்தங்களுக்குரிய திங்களும் பருவங்களும் பின்வருமாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன இப்பாகுபாட்டிற்கு ஆதாரமாயமைவது *பிங்கலந்தை நிகண்*டெனவும் கூறப்பட்டுள்ளது"

| | | | |
|---|---|---|---|
| 2ஆம் | திங்கள் | - | காப்பு |
| 5ஆம் | திங்கள் | - | செங்கீரை |
| 6ஆம் | திங்கள் | - | கூறுதல், கற்றல் |
| 7ஆம் | திங்கள் | - | சப்பாணி |
| 11ஆம் | திங்கள் | - | முத்தம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 12ஆம் திங்கள் | - | வருகை |
| 18ஆம் திங்கள் | - | அம்புலி |
| 2ஆம் ஆண்டு | - | சிறுபறை |
| 3ஆம் ஆண்டு | - | சிற்றில் சிதைத்தல் |
| 4ஆம் ஆண்டு | - | சிறுதேர் |
| 10ஆம் ஆண்டு | - | பூணணிதல் |
| 12ஆம் ஆண்டு | - | கச்சோடு உடைவாளை விரும்பித்தரித்தல். |

பெண்பாற்பிள்ளைத்தமிழாயின்,

| | | |
|---|---|---|
| 3ஆம் ஆண்டு | - | குழுமணம்பேசல் |
| 5-9ஆம் ஆண்டு | - | மன்மதன் நோன்பு<br>பனிநீர் தேய்த்தல்<br>பாவையாடல்<br>அம்மனை/கழங்கு<br>பந்தடித்தல்<br>சிறுசோறட்டல்<br>சிற்றிலிழைத்தல்<br>ஊஞ்சலாடல் |

என்பனஇடம்பெறும்.

*பன்னிரு*பட்டியலில் பிள்ளைப்பாட்டு என்பது குழந்தைக்கு 3- தொடக்கம் 21 மாதங்கள் வரையுள்ள ஒன்றித்த மாதங்களைப் பத்துப் பருவங்களாக்கிப் பாடுதலாகும் என்று வருகிறது. அவை காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பனவாம். பெண்மகவுக்கு சிற்றில் இழைத்தல், சிறுசோறாக்கல், குழமகன், ஊசல், காமன்நோன்பு, என இறுதி மூன்று பருவமும் அமையும். காமன் நோன்பு பன்னிரண்டாம் வயதுக்குரியது. காப்பிற்குரிய கடவுளர் திருமால் முதல் சந்திரர் ஈறாகச் கூறப்படுவர். காத்தற் கடவுளாதலின் திருமாலையே முதலிற் பாடுதல் மரபு. அகவல், விருத்தம், கட்டளை ஒலிபெற்ற கலிவிருத்தம் என்பவை பிள்ளைப்பாட்டுக்குரிய பாக்களாகும். (ப.26). நெடுவெண்பாட்டாகவும் அமையும். (ப .27).

*நவநீதப்பாட்டியல்* பிள்ளைத்தமிழ்ப் பிரபந்த இலக்கணங் கூறுமிடத்து, காவற்கடவுளாகிய திருமாலைக் காப்புக்கு முன்னாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிதல்வேண்டுமெனப் பன்னிருபாட்டியல் கொள்கையை ஒப்புக் கொள்கின்றது. சிவபெருமானைக் காப்புத் தெய்வமாகப் பாடுமிடத்துக் கொலையகற்றிக் கங்கை, உமை, மதி, கொன்றை என்பனவற்றோடு இணைத்து மங்களமாகப் பாடுதல்வேண்டும்.(நவ. 27). முப்பத்துமூவர், பிரமன், பகவதி, குருபரன், கதிரவன், சாத்தன், இந்திரன், முருகன், விநாயகர், பைரவர் ஆகியோர் காப்புத் தெய்வங்களாவார். (நவ.28). விருத்தமும் வண்ணமும் பாக்களாகும். ஐம்பதிற்குக் குறையாமல் பாடல் அமைதல் வேண்டும்.

"*சிதம்பரப்பாட்டியல்* கொலைநீக்கித் தெய்வம் காக்க எனச் சுற்றத்தளவாக வகுப்பு, அகவல், விருத்தம், என்ற பாக்களால் அமைவது பிள்ளைக்கவி என்று எடுத்துரைக்கிறது. பிள்ளைத்தமிழ் நூலுக்கான பாடல் எண்ணிக்கைபற்றிய வரையறை எந்த இலக்கணநூலிலும் கூறப்படவில்லை. நவநீதப்பாட்டியல் மட்டும் ஐம்பது பாடல்களைச் சிற்றெல்லையாகக் குறிக்கின்றது. பருவத்திற்கு 9 அல்லது 11 பாடல்கள் அமையலாம் என்கிறது. பெரும்பாலான பிள்ளைத்தமிழ் நூல்கள் இவ்வரையறையைப் பின்பற்றவில்லை."[24] ஈழத்துப் புலவர்களால் பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் நூல்கள் சைவசமயச்சார்பில் மட்டுமன்றிக் கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்கள் சார்ந்தனவாயுமமைந்துள்ளன. ஈழத்துப்பிள்ளைத்தமிழ் நூல்கள் குறித்தும், நூலாசிரியர்கள் குறித்தும் *நயினை நாகபூஷணி பிள்ளைத்தமிழ்* என்னும் பிரபந்த நூலின் முகவுரையிலே விரிவான விளக்கமுண்டு.

## ஊஞ்சலும் பதிகமும்

ஊஞ்சல் என்னும் பிரபந்தம் ஊசல் எனவும் வழக்கப்படுவதுண்டு. பாட்டியல் நூல்களிலே 'ஊசல்' எனும் சொல்வழக்கே பெரும்பாலும் இடம்பெற்றுள்ளன. இன்றைய வழக்கில் ஊஞ்சல் என்றே பயிலப்படுகின்றது.

ஊசல் ஆசிரிய விருத்தத்தாலாதல், கலித்தாழிசையாலாதல் சுற்றத்தளவாய்த் தொகையாகப்பாடப்படும் என்ற பொருளில்,

"ஆங்கவிருத் தத்தாலறைந்த கலித்தாழிசையால்
ஓங்கிய சுற்றத் தளவா யூசலாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என *வெண்பாப்பாட்டியல்* கூறும். அக்கருத்துக்கியையவே *சிதம்பரப்பாட்டியலும் இலக்கணவிளக்கப்பாட்டியலு*ங் கூறுகின்றன.

## சதுரகராதி.

"ஆசிரியவிருத்தத்தானாதல், கலித்தாழிசையானாதல் சுற்றத்தோடும் பொலிவதாக, ஆடீரூஞ்சல்.

ஆடாவோவூசலென்றிடக் கூறுவது எனவுரைக்கின்றது. ஊசல் பற்றிக் கூறிய பாட்டியலார் அனைவரும் ஒத்த கருத்தினையே தெரிவித்தனரெனினும், 'ஆடீரூசல்' 'ஆடாமோவூஞ்சல்'எனவும் செய்யுள்கள் கூறும் என்பதைச் சதுரகராதி எடுத்துக்காட்டியமை, பிற்காலத்தெழுந்த ஊசற் செய்யுள் அனைத்தும் அவ்வாறே முடிவுற்றமையாற்போலும்.

**'ஈழத்தின் பல பாகங்களிலும் உள்ள கோவில்களில் நிகழும் விழாக்க ளில் இடம்பெறும் நிகழ்ச்சிகளில் 'திருவூஞ்சல்' என்பதுவும் மிகமுக்கிய மான ஒன்றாகும். பெரிய அளவில் மகோற்சவங்கள், அலங்கார உற்ச வங்கள் என்பன நிகழாத சிறுகிராமங்களில் கோவில்களிற்கூட ஆண்டு தோறும் திருவூஞ்சல் என்ற நிகழ்ச்சி நடைபெறுவதை இன்றும் அவதா னிக்கலாம். குறிப்பாகக் கும்பாபிஷேகம் நிகழ்ந்த தினங்களிலும், பிள்ளை யார்கதை, கந்தசஷ்டி, திருவெம்பாவை முதலிய விரத நாட்களின் இறுதியிலும் இறைவனை அலங்கரித்து வீதிவலம் வரச்செய்வதோடு அலங்கரிக்கப்பட்ட ஊஞ்சலிலே இருத்தி ஆட்டி மகிழ்வது வழக்கம். இந்த நிகழ்ச்சிகளிற் பாடப்படுவதற்குப் பொருத்தமான ஊஞ்சற் பாடல் களது தேவை உணரப்பட்ட போது தலஊஞ்சற் பாடல்கள் எழலாயின. சிலதலங்களிலேயுள்ள பக்தர்களிற் புலமைவாய்ந்தோர் தாமே அவற் றைப் பாடிக்கொண்டனர். அத்தகையோர் இல்லாத கிராமங்களில் அயற்கிராமங்களைச் சார்ந்தோர் அத்தகைய பாடல்களைப் பாடிவழங் கினர். பக்தியும் புலமையும்மிக்க சிலர் தாமே பல தலங்கட்கும் ஊஞ்சற் பாடல்களைப் பாடிவழங்கினர். இவ்வகையில் ஈழத்தில் எழுந்தனவாக ஏறத்தாழ முந்நூறு திருவூஞ்சல் பாடல்கள்வரை அறியப்படுகின்றன."[26]**

பதிகம் ஒரு பழைய இலக்கிய வடிவமாக இருந்தபோதும் பாடடியல் நூல்களுட் *பன்னிருபாட்டியல்* மட்டுமே அதன் இலக்க ணத்தைக் கூறும்:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசிரியத்துறை அதனது விருத்தம்
கலியின் விருத்தம் அவற்றின் நான்கடி
எட்டின் காறும் உயர்ந்த வெண்பா
மிசைவைத் தீரைந்து நாலைந் தென்னப்
பாட்டு வரத் தொடுப்பது பதிகம் ஆகும்."

என்பது *பன்னிருபாட்டியல்*. "ஆசிரியத்துறையும் ஆசிரிய விருத்தமும் கலிவிருத்தமும் ஆகிய அவற்றின்மிசை நான்கடி முதல் எட்டடிகாறும் உயர்ந்த வெண்பாவை வைத்துப் பத்தினால் ஆனது, இருபதினால் ஆனது என்று சொல்லும்படி பாட்டுக்கள் அமையப்பாடுவது பதிகம் ஆகும் என்பது அதன் பொருள். வீரமா முனிவர் தம் *சதுரகராதியிற்* பதிகம் என்பதற்கு **'ஒரு பொருளைக் குறித்துப் பத்து செய்யுளாற் கூறுவது'** என்று விளக்கந் தந்துள்ளார். இதனை அவர் *பன்னிருபாட்டியல், வெண்பாப்பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், இலக்கண விளக்கப்பாட்டியல்* ஆகியன அல்லாத வேறொரு பாட்டியல் நூலை ஆதாரமாகவைத்தே பெற்றிருக்கவேண்டும். *பிரபந்ததீபி கைக்கும்* இதற்குமுள்ள தொடர் பினை இப்பிரபந்தம் பற்றிய தீபிகை விளக்கப்பாடல் கிடையாத அளவில் எதுவும் நிச்சயமாகச் சொல்வதிற்கில்லை. பன்னிரு பாட்டியலிற் கூறப்பட்டபதிகம் என்ற இலக்கியவகை பிற்காலப் பாட்டியல் நூல்களிற் கூறப்படாமை அது வேறு இலக்கிய வகைக ளோடு இணைந்து அவற்றின் பகுதியாகத் தன் தனித்தன்மையை இழந்துவிட்டமையாற்போலும்"[27] எனக் கூறுகிறார், கலாநிதி கே.எஸ்.நடராசா.

## புராண காவியங்கள்

தமிழ் இலக்கிய வடிவப்பகுப்பிலே புராணங்களும் காவியங் களும் ஒன்றாகப் கருதப்படுவதற்கான காரணம், தமிழில் எழுந்த *பெரியபுராணம், கந்தபுராணம்* போன்ற நூல்கள் காவிய முறை யில் எழுதப்பட்டிருத்தலாலேயேயெனக் கருதலாம். வடமொழியா ளர் அவற்றை இருவேறு இலக்கிய வடிவங்களாகவே கொள்வர். வடமொழிப் புராணவமைப்பைத் தழுவியே தமிழிலும் புராணங்கள் எழுந்தன. ஆயின் *வெண்பாப்பாட்டியலும் சிதம்பரப்பாட்டியலும்* புராணத்தையும் காப்பியத்தையுமொருவகை இலக்கியமாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணிக்கின்றன. எனினும் பெரும்பான்மையான புராணங்களின மைப்பும் காப்பியங்களினமைப்பும் வேறுவேறாகவிருக்கக் காண்கி றோம். எனவே, புராணங்களையும் காப்பியங்களையும் ஒரேவகை இலக்கியமாகக் கொள்வது பொருந்துமா என்பதையும் ஆராய்ந்து நோக்கலாம்.

காப்பியம், புராணம் என்பன பெருங்காப்பிய இலக்கணம் பூரண மாயமையாது ஓரளவு அமைந்திருக்கும் தொடர்நிலைச் செய்யு ளென்ற பொருளில் *வெண்பாப்பாட்டியல்* முதலாய பாட்டியல் நூல்கள் கூறும். ஆயின், *பன்னிருபாட்டியல்*, தொடர்நிலைச் செய்யு ளைத் தலை, இடை, கடையென மூன்றாக வகுத்து,
"அவற்றுள்

தலை எனப்படுபவை மலைவின்றாகி
அறம்பொருள் இன்பம் வீடெனும் இவற்றின்
திறந்தெரி மரபின் நீங்காதாகி
வென்றிகொள் இருக்கை என்றிவையனைத்தும்
சந்தியாகத் தந்து நிலை பெறுமே."

எனத் தலையான தொடர்நிலைச் செய்யுள்வழக்கோடு மாறு படாது நால்வகைப் பொருட்பிறழாது, வெற்றியும் தொடர்ச்சியும் அமைய வருவதாமென்று கூறுமுகத்தால், அவற்றின் சில குறை வன இடையானவையெனவும் பல குறைவன கடையானவையென வும் கருதப்படும். இவ்விருவகையைச் சேர்ந்த தொடர்நிலைச் செய்யுளே *பன்னிருபாட்டியற்* காலத்தின் பின் காப்பியம் அல்லது சிறுகாப்பியம் என வழங்கின என்று கொள்ளலாம். பெருங்காப்பிய இலக்கணத்தின்பின் காப்பிய இலக்கணங்கூறவந்த *வெண்பாப் பாட்டியல்*,

"கருது சில குன்றினுமக் காப்பியமா மென்பர்
பெரிதறமே யாதி பிழைத்து - வருவது தான்
காப்பிய மாருங் குலவரவு காரிகை
யாப்பிற் புராணமே யாம்."

எனத் தர்மார்த்த காம முத்தி என்பவற்றுட் சில குறைந்து வந்தால் அது காப்பியமாகுமென்றிசைக்கும். குலவரவு முதலியன காட்டுவது புராணம் என்பதும் சொல்லப்பட்டது. எனவே புராண மும் காப்பியத்தோடு ஒட்டிநிற்கிறதெனத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நவநீதப்பாட்டியலும்,*

"நெறியறிந் தவ்வா றியற்றிய வாறு நிலைநிற்றலும்
பெறும் பெய ரென்பது பேசு மறமுதல் நான்கினுந்தாம்
குறைய வரினுமுன் கூறிய காவியம்."

எனப் பெருங்காப்பிய இலக்கணத்தின்பின் கூறி நாற் பொருளி லொன்றெனுங் குறைவுபட்டுவரின் அது காப்பிய மாமெனும்.

*சிதம்பரப்பாட்டியலும்* பெருங்காப்பிய இலக்கணத்தின்பின்,

"அறையுமிதிற் சில குறைபா டெனினும் குன்றா
தறம் பொருளின்பம் வீட்டிற் குறைபாடாகப்
பொறுவது காப்பியமாகும் புராணமாகும்."

எனக் கூறி அதேகருத்தைக் காட்டிப் புராணத்தையுங் காப்பியத் தோடிணைத்து நிற்கும்.

*இலக்கணவிளக்கமும்* பெருங்காப்பிய விதியை அடுத்து,

"அறமுத னான்கிற் குறைபா டுடையது
காப்பிய மென்று கருதப்படுமே."

என முன்னையோர் கருத்தையே மொழிந்து நின்றது.

சதுரகராதியின் கருத்தும் அதுவேயாகும். எனவே, காப்பி யத்திலக்கணம் பலருமொப்ப முடிந்தவொன்றாக விளங்குகிற தென்றும், அது கி.பி பன்னிரண்டாம் நூற்றாண்டின் பின்னரே தமிழில் இடம்பெற்றிருக்கிறதென்பது, *பன்னிருபாட்டியல்* அதனைக் காவியமென்று கூறாது எதிர்மறையாக அதன் இலக்கணத்தைக் கூறுவதாலறியலாம். மேலும், புராணத்துக்கும் காவியத்துக்கும் அதிக வேறுபாடு காட்டப்படவிலை என்பது மேற்போந்த சூத்திரங் களாலறியக்கிடக்கிறது.

## தலபுராணங்களின் சிறப்பு

வடமொழிவழிவந்த புராணங்களைத் தொடர்ந்து தமிழிலே தலமகிமை, அடியார்கள் சரித்திரம், விரதமகிமை, ஆகியன கூறும் நூல்களும் புராணங்களாகவே வழங்கப்பட்டன. வடமொழியில் அணியிலக்கணம் அக்கினிபுராணத்தின் ஒருபகுதியாக அமைந் திருப்பதை மேற்கொண்டுபோலும், தமிழிலும் *மாபுராணம், பூதபுரா ணம்* என்ற இலக்கண நூல்கள் புராணங்கள் என்ற பெயர் பெற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. படிப்படியாகப் பழைமையான சம்பவங்களைக் கூறும் நூல்கள் பல புராணங்களென வழங்கப்படலாயின. சிவபுராணம் என்பதற்கு **'சிவனது அநாதிமுறைமையான பழைமை'** என்ற பொருள் கூறப்படுவதிலிருந்து, புராணம் என்பது பழைமையானதென்ற பொருளிலே தமிழில் வழங்கிவருதல் தெரிகின்றது.

தலபுராணங்கள் வடமொழியிலெழுந்த புராணங்களைப் பின் தொடர்ந்தெழுந்தனவேனும், அவை பதினெண் புராணங்களின் அமைப்புக்கு வேறாகக் காவியங்களின் அமைப்பு ஓரளவு பெற்று, நாட்டுப்படலம், நகரப்படலம் ஆகியனகொண்டு விளங்கத்தலைப் பட்டன. காலத்துக்கும் இடத்துக்கும் ஏற்றவாறு தலபுராணங்களின் அமைப்பும் வேறுபட்டுவந்தன. அவ்வகையிலே விரதங்களின் மகிமை கூறும் நூல்களும் புராணங்கள் என்ற பெயரிலும் கதை என்ற பெயரிலும் எழலாயின. அவை காவியப்பண்பு குன்றி புராணப் பண்புமின்றித் தலபுராணங்களின் புறத்துத் தோன்றிய நூல்களாக விளங்கின.

வடமொழிநூலார் புராணம் 'பஞ்சலக்ஷணம்' என்பர். அவர் கூறும் ஐந்து லட்சணங்களான சர்க்கம், பிரதிசர்க்கம், வம்சம், மனுவந்தரம், வம்சாநுசரிதம் என்பனவாம். சர்க்கம் என்பது உலகத்தின் தோற்றம், வம்சம் மன்னர் பரம்பரையைக் கூறுவது, மந்வந்தரம் காலவரையறையினையும் மநுக்களது ஆட்சிக்காலங்களையும் எடுத்துரைப்பது. வம்சாநுசரிதம் மன்னர் பரம்பரையோடு தொடர்புடைய கிளைக்கதைகளைக் கூறுவதாம். இதனையே *வெண்பாப்பாட்டி*யற் சூத்திரமாய் 'குலவரவு காரிகை யாப்பிற் புராணமேயாம்' என்பதற்குரைகாரார், 'குலவரவு முதலாயினவற்றை என்றதனால் உலகத் தோற்ற ஒடுக்கங்களும் மநுவந்தரமும் முனிவர் வரலாறும் அரசர்மரபும் அவர் சரிதமுங் கொள்க' என்று கூறியுள்ளார். இவ்வம்சங்களிற் சிலவற்றையேனுங் கொண்ட தமிழிற் புராணங்களெழத் தலைப்பட்டன."[28]

பேரிலக்கியங்களின் செல்வாக்கோங்கிய சோழர்காலப் பிரிவிலேயே தமிழிற் புராணங்கள் முக்கியத்துவம் பெறத்தொடங்கின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறவஞ்சி இலக்கியம்

குறம், குறத்திப்பாட்டு, குறவஞ்சி இலக்கியம், குறவஞ்சிநாடகம், குறவஞ்சி நாட்டிய நாடகம் என்பன ஒரேதன்மைத்தான இலக்கியப் பொருளமைப்பைக் கொண்டமைவனவாயினுஞ் சிற்சில வேறுபாடுகளமையப் பாடப்படுவனவாகும். பெண்களுள் ஒருத்தி கடவுளர் தலைவரைக் கண்டு காதல் கொண்டு அவனைத் தான் அடையும் வாய்ப்புக்கிட்டுமோவென ஏங்கிநிற்கும் நிலையில் ஒரு குறத்தி அங்கு தோன்றி மலைவளம், நாட்டுவளம் முதலியன கூறித்தன் தெய்வம் வாழ்த்தித் தலைவியின் குறிகளால், அவள் எண்ணம் விரைவில் நிறைவேறும் என்று குறிசொல்வதாக அமைத்துச் செய் யுளிற் பாடுவதே குறம் எனப்படும்.

குறம் பல உறுப்புக்களைக் கொண்டு ஆசிரியப்பா, வெண்பா, விருத்தம் முதலியன விரவிவர இடையிடையே சிந்து முதலிய பாடல்களமைய நாடகத்தமிழிற் பாடுதலாகும்.

*பன்னிருபாட்டியல்* என்ற இலக்கண நூலிற் குறத்திலக்கணம் கூறப்பட்டுள்ளது. குறத்திப்பாட்டென்றே பெயர் சுட்டியுரைக்கின்றது *பன்னிருபாட்டியல்.*

"இறப்பு நிகழ்வெதிர் வென்னு முக்காலமும்
திறப்பட உரைப்பது குறத்திப்பாட்டே."

குறத்தி கடந்தகாலத்தில் நிகழ்ந்தவற்றையும் நிகழ்காலத்தில் நடப்பவற்றையும் எதிர்காலத்தில் நடக்கப்போவதையும் நன்றாக எடுத்துக்கூறுவதே குறத்திப்பாட்டின் இலக்கணம். குறமென்பதிற் குறத்தியின் கூற்று மட்டுமே இருக்கும். ஆனாற் குறவஞ்சியிற் குறத்தியின் கூற்றோடு, வேறுபலர் கூற்றுக்களுமிருக்கும். முற்காலத்தில் குறவஞ்சி கடவுளரையே பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்டது. பிற்காலத்தில் புலவர்கள் தங்களை ஆதரித்த மன்னர்களையும் செல்வர்களையும் பாட்டுடைத்தலைவர் களாக ஆக்கிக்கொண்டு குறவஞ்சி நூல்களை எழுதத் தொடங் கினர். தேவர்களைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டுள்ள குறவஞ்சியிலே தெய்வக்காதலின் தன்மையினைக் காணலாம். பிற்காலத்தில், மக்கள் வாழ்வில் அன்றாடம் நிகழும் காதல் நிகழ்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகளே காணப்படுகின்றன. இக்காதலையுணர்த்தும் மொழிக ளெல்லாம் நாட்டுப்பாடல்களின் நடையைக் கொண்டுள்ளன.

"உலாப்போந்த தலைவனைக் கண்டு மகளிர் காமுறுதலும் தலைவி வரலும் உலாப்போந்த தலைவனைக் கண்டு தலைவி காதல் கொள்ளுதலும் திங்கள், தென்றல் முதியவற்றின் சிறப்பும் பாங்கி தலைவியை உற்றது வினவலும் தலைவி பாங்கியோடு உற்றது கூறுதலும் பாங்கி தலைவனைப் பாங்கியைத் தூதாக வேண்டலும் தலைவி பாங்கிக்குத் தலைவன் இயல் (அடையாளம்) கூறலும் குறத்தி வருதலும் தலைவி குறத்தியை மலைவளம் முதலியவற்றை வினவலும் குறத்தி தங்கள் மலைவளம் முதலிய வற்றைக் கூறவும் தலைவனுடைய நிலவளம், கிளைவளம் முதலி யவற்றைக் கூறலும் முன்னே சொன்ன குறிகளைக் கூறலும் தலைவி குறி வினவலும் குறத்தி தெய்வம் பராவலும் குறிதேர்ந்து நலமீவரல் கூறலும் தலைவி பரிசில் உதவிவிடுதலும் குறவன் வருதலும் புள்வருதலும் குறவன் கண்ணிவைத்தலும் புட்படுத்தலும் குறவன் காமுற்றுக் குறத்தியைத் தேடலும் குறவன் பாங்கனிடம் குறத்தியின் அடையாளம் (இயல்) கூறலும் குறவன் குறத்தியைக் கண்ணுறலும் குறத்தி அணிந்திருக்கும் அணிகளைக்கண்டு ஐயுற்றுக் குறவன் வினவலும் குறத்தி அவன் கேள்விக்கு விடை கூறலும் ஆகிய இவ்வுறுப்புகளைப் பொருந்த வைத்து ஆசிரி யப்பா, வெண்பா, தரவுகொச்சகம், கலித்துறை, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம் முதலிய இயற்றமிழ்ச் செய்யுட்களை இடை இடை அமைத்துச் சிந்து முதலிய நாடகச் செய்யுட்களாற் பாடுதல் வேண்டும் என்ப"[29] என்று *பன்னிருபாட்டியலிற்* குறத்திப்பாட்டின் இலக்கணம் விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியிலும் பதினெட்டாம் நூற் றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த திரிகூடராசப்ப கவிராயர் திருகுற்றாலநாதரின் பெருமையை நன்கு விரித்துரைத்துத் *திருக் குற்றாலக் குறவஞ்சி* என்னும் நூலை இயற்றியுள்ளார். இப்போ துள்ள குறவஞ்சிகளில் மிகவும் சிறந்தது *திருக்குற்றாலக் குறவஞ்சி* யாகும். அதனைப்பின்பற்றிப் பல குறவஞ்சிகள் தமிழில் இயற்றப் பட்டன என்று உ.வே. சாமிநாதையரவர்கள் *திருக்குற்றாலச் சிலேடைவெண்பாவின்* முகவுரையிற் கூறியுள்ளமை அதன் பெரு மைக்குத் தக்கதோர் சான்றாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறவஞ்சி இலக்கியப்பரப்பு

“குறம் பிற்கால நாடகங்களுக்கு ஒரு கொழுகொம்பாக இருந்தது. குறத்தி குறி கூறுவதை மாதிரியாக வைத்துக் கொண்டு, பிற்காலப் புலவர்கள் குறத்திக்குறி கூறுதலை நாடகமாகவே ஆக்கி விட்டனர். குறம் நாடகமாக ஆடும்போது நாடகத்திற்கு வேண்டிய இசைகளும் பல பாத்திரங்களின் பேச்சும் கட்டியக்காரன் வருகையும் இன்றியமையாதனவாகின்றன. பிற்காலக் குறவஞ்சி நாடகங்கள் இவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்டுள்ளன. தலைவன் பவனி வருகிறான். ஒருபெண் அவனைக் கண்டு காதல் கொண்டு, சந்திரனையும் மன்மதனையும் தென்றல் முதலிய அஃறினைப் பொருட்களையும் தன் முன்பாக அழைத்துப் புலம்பி உள்ளம் நெகிழ்ந்து காமநோயாற்றுன்புறுகிறாள். அவளுடைய தோழிகள் அவளைத்தேற்ற முயல்கின்றனர். அப்போது ஒரு குறத்தி வந்து மலைவளம், நாட்டுவளம், வாசல்வளம் தன் திறமை முதலியவற்றைக்கூறித் தெய்வத்தைத் தொழுது தலைவிக்குக் குறி கூறுகின்றாள். இந்நாடகத்திலே தலைவியும் குறத்தியும் பேசிக் கொள்ளும் நாடகப்பகுதி சுவைமிக்கது. இறுதியாகத் தலைவி குறத்திக்குப் பல வகையான வெகுமதிகளை அளித்து அனுப்புகிறாள்.

மிகப் பிற்காலத்தில் குறத்தி குறி நாடகமும் ஒன்று சேர்ந்து *குறவஞ்சி* என்ற நூலாக ஆகிவிட்டது. பாபநாசமுதலியார் *கும்பேசர் குறவஞ்சி* நாடகம் *திருக்குற்றாலக் குறவஞ்சி*யை யொட்டி எழுதப்பட்டது. சரபேந்திரபூபாலர் குறவஞ்சி நாடகமும் *குற்றாலக் குறவஞ்சி*யினைத் தழுவியெழுந்ததே. *மீனாட்சியம்மை குறம், கொடுமனார்க் குறவஞ்சி, திருவாரூர்க் குறவஞ்சி, விராலிமலைக்குறவஞ்சி, இராசமோகனக்குறவஞ்சி ,வாதசயக்குறவஞ்சி, சிற்றம்பலக்குறவஞ்சி, கண்ணப்பர்குறவஞ்சி, கபாலீசுவரர்குறவஞ்சி, இரகுநாதராயகுறவஞ்சி, செந்தில்குறவஞ்சி, ஆதிமுதலீசர் குறவஞ்சி, தத்துவக்குறவஞ்சி, ஞானரத்தினக்குறவஞ்சி, அழகர் குறவஞ்சி, பெத்தலகாம்குறவஞ்சி, நகுலமலைக்குறவஞ்சி, மண்ணிப்பாடிக்கரை திருநீலகண்டர் குறவஞ்சி, வெள்ளைப் பிள்ளையார் குறவஞ்சி* என்பனவுந் தோற்றியுள்ளன. *ஆசிரியப்பா, வெண்பா, கலித்துறை, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம்* முதலிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றமிழ்ச் செய்யுட்களுடன் சிந்து, புகழ்ப்பா, கண்ணிகள் போன்ற இசைப்பாடல்களும் விரவிவருமாறு குறவஞ்சி நூல்கள் பாடப் பெறும். '*சோழக்குறவஞ்சி*', 'விதுரன்குறம்' போன்ற பழைமையான குறவஞ்சி நூல்கள் இன்று நமக்கு கிடைக்கவில்லை.[30] என்பர் **பேராசிரியர் திருமலை. முத்துசுவாமி.**

## குறவஞ்சியிற் களமும் காட்சியும்

பொதுவாகக் குறவஞ்சி நாடகங்கள், தலைவராகிய குற்றால நாதர் உலாவருதல், தலைவனைக்கண்டு தன்மனதைப் பறிகொடுத்த தலைவி வசந்தவல்லி காதல் நெருப்பாற் கலங்கித்தவித்துத் தன் நிலையினைத் தோழியிடம் எடுத்துக்கூறி அவளை உதவ வேண்டல். தலைவி குறத்தியிடம் குறிகேட்டல், குறத்தியின் தலைவன் சிங்கன் தன் தோழிகளோடு வேட்டைக்கு வருதலும், குறத்தி சிங்கியைக் காணாமல் வருந்தி அதனைத் தோழனுக்குக் கழறலும் சிங்கன் சிங்கியைக் கண்டு இன்புறுதல் என்ற ஐந்து பகுதிகளைக் கொண்டனவாகும்.

இவற்றுட் பகுதி ஒன்றில், கட்டியக்காரன் வரவு, அவன் தலைவர் உலாவருதலை அறிவித்தல், தலைவன் உலாவருதல், உலாக் காணவந்த பெண்டிர் தம்முட் பேசிக்கொள்ளல், தலைவி வசந் தவல்லி வந்து தலைவனைக் காணல் என்னும் பகுதிகளமையும்.

பகுதி இரண்டு, தலைவனது சிறப்பைத் தோழியர் கூற, அதனைக் கேட்டுத் தலைவி மயங்கல், தலைவி காதல் நோயாற் கலங்குதல், தலைவி காமன், நிலவு, தென்றல் முதலியவற்றைப் பழித்துக் கூறல், தலைவி தோழிக்குச் சொல்லுதல், தலைவி கூடலிழைத்தல் என்பனவற்றைக் கொண்டமையும்.

மூன்றாம் பகுதி, குறத்தி வருதல், குறத்தி மலைவளம், நாட்டு வளம் முதலியன கூறல், குறத்தி திரிகூடநாதர் சிறப்புக்கூறி, குறியின் நிறமும் கூறல், குறத்தி குறிசொல்லல், தலைவி குறத் திக்குப் பரிசளித்தல் என்பனவற்றைக் கொண்டமைவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காம் பகுதி, சிங்கன் குறவனோடு வேட்டைக்கு வருதல், சிங்கியை நினைத்துச் சிங்கன் வருந்துதல், அதனைத் தன் நண்பனிடம் கழறல், சிங்கியைத் தேடிக் காணாமல் வருந்துதல், மீண்டும் தன் நண்பனுக்கு கழறல் என்னுமிவற்றைக் கொண்டமையும்.

ஐந்தாவது பகுதி,

1. *சிங்கன் சிங்கியைக் காணுதல்*
2. சிங்கன் சிங்கியை மகிழ்வித்தல்
3. சிங்கனும் சிங்கியும் எதிரத்துரையாடல்

என்னும் கட்டங்களைக் கொண்டமையும்.

"குறவஞ்சியில் இரண்டு காதல் நிகழ்ச்சிகள் வருகின்றன. ஒன்று, பாட்டுடைத்தலைவன் மீது தலைவி கொள்ளுவது; மற்றொன்று, குறத்திமீது குறவன் கொள்வது. முன்னது பேரின்பம்; பின்னது சிற்றின்பம். இரண்டும் ஒருதலைக்காமம் பற்றியவை. ஆகவே கைக்கிளை உண்மைப் பொருளுடைய உயிர் பக்குவப் படும் நிலையைக் காட்டுவதே கைக்கிளையின் மெய்ப்பொருள். குறிஞ்சிநிலக்குறத்தி குறிஞ்சிப் பொருளை நேரடியாக உரையாது கைக்கிளைமூலம் உரைப்பது பிற்காலத்திணை மயக்கத்தின் பாற்படும். *குற்றாலக்குறவஞ்சி* இன்றுள்ள குறவஞ்சிககளிலே தலையானது; காலத்தால் முற்பட்டது. கலைவளத்தால் மேம் பட்டது. நல்லைக் குறவஞ்சி முதலாம் குறவஞ்சிக்கு வழிகாட்டி எனவும் கூறப்படுகின்றது."[31]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிக்குறிப்புகள்

1. சுப்பிரமணியன், ச.வே., பகவதி, கே. (பதி.), *தமிழ்இலக்கியக் கொள்கை*, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை, 1983, ப.107.
2. அருணாசலம், மு., *சேயூர் முருகன் உலா*, முன்னுரை, 1980, ப.7.
3. கனகசபாபதி, சி., *பாரதியும் பாரதிதாசனும் - ஒப்பியல் திறனாய்வு*, (Ph.D.Thesis, Madurai University, 1977) அகரம், சிவகங்கை, 1980, ப.46.
4. சுப்பிரமணியன், ச.வே., பகவதி, கே. (பதி.), *மு.கு.நூல்*.ப.7.
5. அருணாசலம், மு., *தமிழ் இலக்கிய வரலாறு*, (10ஆம் நூற்றாண்டு), ப.210.
6. மாதவதாஸன், மயிலை, *நாலாயிரத்திவ்வியபிரபந்தம்*, கபிர் பிறின்ரிங் வேக்ஸ், 1962, ப.30.
7. சுப்பிரமணியன், ச.வே., *இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல்*, தமிழ்ப்பதிப்பகம், அடையாறு, சென்னை, 1978.ப.77.
8. *கலைக்களஞ்சியம்*, ப.129.
9. பாலசுப்பிரமணியன், சி., *கட்டுரைவளம்*, முதற் பதிப்பு, நறுமலர்ப்பதிப்பக வெளியீடு, காக்ஸ்டன் அச்சகம், சென்னை, 1996, ப.123-137.
10. செந்திநாதன், கனக., "பள்ளுப்பிரபந்தம் 1" (அறிமுகம்), *பிரபந்தப்பூங்கா*, வரதர் வெளியீடு, 1967, ப.9.
11. செயராமன், ந.வீ., *தூது இலக்கியங்கள்*, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், ஐடியல் பிரின்டர்ஸ், சென்னை, ப.1012.
12. நடராசா, எவ்.எக்ஸ்.சி., *ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு*, அரசு வெளியீடு, றெயின்போ அச்சகம், கொழும்பு, 1970, ப.32.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. சிவத்தம்பி, கா., "ஈழத்துத் தமிழ்க்கவிதைப் பாரம்பரியம்," *சிந்தனை* (மறுபிரசுரம்) , தொகுதி 11, இதழ்1, 1984,

14. வரதர், *நாவலர்* (சுருக்கவரலாறு) , ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை வெளியீடு, 1979, ப.35.

15. கைலாசபதி, க., "நாவலர் இலக்கிய நோக்கும் பணியும்", *நாவலர் நூற்றாண்டு மலர்,* 1979, ப.48-59.

16. அம்பலத்தான், "நாவலரும் சபாபதிநாவலரும்", *நாவலர் நூற்றாண்டு மலர்*, 1979, ப.163.

17. பூலோகசிங்கம், பொ., "நாவலரும் கணபதிப்பிள்ளையும்", *நாவலர் நூற்றாண்டுமலர்*, 1979, ப.249.

18. வேலுப்பிள்ளை, ஆ., *தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப்பின்னணியும்* (தொடக்கப்பேருரை), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1986, ப.7.

19. சிவசாமி, வி., "தமிழ்க் கீர்த்ததனைகளில் அன்புநெறி", *சிவத் தமிழ் ஆராய்ச்சிக்கட்டுரைகள்*, துர்க்காபுரம், தெல்லிப்பழை, 06.03.1985, ப.61-62.

20. கலியபெருமாள், பி., *அந்தாதி இலக்கியம்*, மணிவாசகர் நூலகம், சிதம்பரம், 1967, ப. 15-17.

21. நடராசா, க.செ., *மு.கு.நூல்,* ப. 77-82.

22. செயராமன், ந.வீ., *சிற்றிலக்கியச் செல்வங்கள்,* சிதம்பரம், 1967, ப.46.

23. சௌந்தரவல்லி, இரா., "மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் பிள்ளைத்தமிழ் நூல்களும் கோவைநூல்களும்", *மதுரைக் காமராசர்* பல்கலைக்கழகத்தின் கலாநிதிப் பட்டத்திற்கான ஆய்வேடு, 1985. (இவ்வாய் வேட்டினை எனது பார்வைக்குத் தந்துதவியவர் பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளையவர்கள்).

24. *அதே ஆய்வேடு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. சிவராசசிங்கம், வ., *நயினைநாகபூஷணி பிள்ளைத்தமிழ்* (முகவுரை), சைவத்தமிழ்க் கழகவெளியீடு, குமரன் பதிப்பகம், கொழும்பு, 1977, ப.VI-IX.

26. சுப்பிரமணியன், நா., "சித்தாந்தச் செழும்பொருளும் விடுகவி உத்திமுறையும்", ஈழத்துத் தமிழ்க்கவிதை வளமும் வரலாறும் 6, *ஈழநாடு வாரமலர்*, 15.02.1987, ப.7.

27. நடராசா, க.செ., *மு.கு.நூல்*, ப. 85.

28. *அதே நூல்*, ப.93.

29. சன்முகசுந்தரம், வை., *தமிழகக்குமுதம்*, ஸ்ரீமகள் கம்பனி, சென்னை, 1961, ப.120.

30. திருமலை முத்துசுவாமி.அ., *இலக்கியமலர்கள்*, அருணா பப்பிளிகேசன்ஸ், தியாகராய நகரம், சென்னை, 1975, ப.16.

31. கணபதிப்பிள்ளை, க., *குறவஞ்சித்தமிழ் (திருக்குற்றாலக் குறவஞ்சி* பற்றிய வானொலிப் பேச்சு, 9.5.1963). (மறுபிரசுரம்) இலக்கிய இரசனை வெளியீடு 1, இந்துசாதனம், 1966, ப.8.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் மூன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A (Jaffna)

# பிரபந்தங்களிலே பக்திப் பாடல்களுக்குரிய இடம்

பேரிலக்கியங்களிலும் சிற்றிலக்கியங்களிலும் கடவுளர் பற்றிய குறிப்புக்கள் அடிநிலையாகநின்று அவ்வவற்றின் பெருமையை உணர்த்தி நிற்பனபோல, நல்லூர் மாவிட்டபுரக் கோவிலிற் பிரபந்தங்களிலேயும் பக்திப்பாடல்களும் தெய்வம் பற்றிய குறிப்புக்களும் ஆதாரமாக நின்று இலக்கிய வரலாற்றுத் தொடர்ச்சியினை வெளிப்படுத்தி நிற்கின்றன. முன்னோர் மொழிபொருளினைப் பொன்னே போற்போற்றுதலும் சென்றகாலத்தின் பழுதிலாத் திறத்தினை இனி யெதிர்காலத்தின் நலன் கருதி எடுத்தாளுவதும் இலக்கியகாரரிடத்து நிலவும் பண்பாகவுள்ளது. முன்னைய இலக்கியப் பொருள் மரபுசார்ந்து நல்லூர், மாவைப் பிரபந்தங்கள் ஆக்கப்பட்டுள்ளதுடன் முன்னுள்ள இலக்கிய வடிவத்தினைக் கையாண்டிருப்பதுங் கருதத்தக்கது. இதிகாச, புராணக் கருத்துக்களும் திருமுறைச் செய்திகளுந் தனிப்பாடல்களும் நல்லூர், மாவைப் பிரபந்தங்களிற் சிறப்பாகக் கையாளப்பட்டிருப்பதுவும் நோக்கற்பாலது.

இவ்வாய்வுக்கட்டுரை முருகப்பெருமானைப் பாடு பொருளாகக் கொண்டைமையும் **பக்திப்பிரபந்தங்கள்** பற்றிய ஆய்வாக அமைகின்ற காரணத்தாற் பழந்தமிழ் இலக்கியங்களிலே முருகன் பெற்றுள்ள இடத்தினைக் கண்டுகொள்ளவும் முக்கியமாகின்றது. தமிழிலக்கியப் பரப்பிலே பக்தியிலக்கியம் என்ற சொல் சைவ, வைணவ பக்தியிலக்கியங்களையே சிறப்பாகக் குறித்து நிற்பதைக் காணலாம். இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளநல்லூர், மாவைப் **பிரபந்தங்கள்** பக்தியிலக்கியங்களாகையாற் காலத்தால் முற்பட்ட சைவ, வைணவ பக்தியிலக்கியங்களிலே இடம்பெற்றுள்ள பக்தி சார்ந்த கருத்துக்களை நோக்குவது இங்கு அவசியமாகின்றது.

சமயச்சிந்தனைகளில் **அறவுணர்வும் தத்துவ ஆராய்ச்சியும்** முக்கிய இடம்பெற்றிருப்பினும் **வழிபாட்டுமுறைகளே** பக்தியிலக்கியம் உருப்பெற்று வளர்ந்தமைக்குக் காரணமெனல் வேண்டும். வழிபாட்டுநிலையில் வளர்ச்சியடைந்து வந்த வைதிகநெறி சைவம், வைணவம் என்னும் இரு துறைகளாக வளர்ந்து சிறந்தது. பக்தியிலக்கியமும் இவ்வடிப்படையிற் சைவ, வைணவ இலக்கியங்களாகவே தோன்றின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்க இலக்கியங்களிற் சிவன், திருமால் இயல்புகள்

சங்க இலக்கியத்திற் சிவபிரான் **உமையொருகூறன்,**[1] முக்க**ணான்,**[2] **நீலகண்டமுடையவன்,**[3] **திங்கட்கண்ணியான்**[4] எனவும் அவனது இயல்புகளாக மாலைகொன்றை [5] படைகணிச்சி,6 மழுவாள்,[7] கொடி ஏற்றுக்கொடி,[8] ஊர்தி ஏற்றூர்தி [9] நாள் திருவாதிரை[10], கல்லால மரத்தின் கீழ் அறமுரைத்தல்[11] என்பனவும் வீரச்செயல் முப்புரம் எரித்தமை [12] ஆகிய குறிப்புக்கள் சுட்டப்படுகின்றன.

சங்க இலக்கியத்திலே திருமால் இயல்புகள் பின்வருமாறு இடம்பெறுகின்றன. திருமால் கரியன், [13] **நீலநிறத்தான், கையில் சக்கரம்**[14] மார்பில் திருமகள்[15], மறு, திருத்துழாய்மாலை[16] உடம்பில் பீதாம்பர உடை[17] கருடக்கொடியுடையவன்,[18] பாற்கடலில் அரவணையில் அறிதுயில் கொள்கிறான்,[19] நாள் ஒணநாள், [20] திருமால் ஞாலம் அனந்தவன்,[21] ஊழிக்காலத்தில் ஆலிலையிற் கிடந்தவன்,[22] கதிரவனை மீட்டுக்கொண்டுவந்தான்,[34] ஆய்ச்சியர் துகில் கவர்ந்தவன்[24] என வருமிடங்கள் காணத்தக்கன.

சங்க இலக்கியங்களால் விளக்கப்படும் சிவன், திருமால் இயல்புகள், வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் வழியாக அறியப்படுவனவே. இவ்வியல்புகளோடு கூடிய நிலையிலும் இவற்றினும் வளர்ச்சியடைந்த நிலையிலும் சங்க இலக்கியத்தையடுத்துத் தோன்றிய *சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள்* போன்ற இலக்கியங்களிலும் காண்கிறோம். திருக்குறளிலே எண்குணத்தான் சிவனாக விளக்கப்படலாம். தாமரைக்கண்ணான் [25](உலகு) அடியளந்தாள் (தாயது)[26] விஷ்ணுவாக விளக்கப்படலாம். வேறு சிறப்பான பகுதிகள் *சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும்* நன்கு விளக்கப்பட்டுள்ளன.

## தமிழிற் பக்தியிலக்கியமும் வேத இலக்கியமும்

தமிழில் பக்தியிலக்கியங்களிலும் அவற்றிற்குமுற்படத் தோன்றியனவாகக் கருதப்படும் *சிலப்பதிகாரம், மணிமேகலை* போன்ற காப்பியங்களிலும் அவற்றிற்கும் முற்படத் தோன்றிய சங்க இலக்கியங்களிலும் கூறப்படும் சிவன், திருமால் இயல்புகள் பெரிதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒத்திருக்கின்றன. ஆயினும் சங்க இலக்கியங்களை விடவும் காப்பியங்களிற் பல செய்திகள் உள்ளன. அவற்றிலும் மிகப்பல வாகப் பக்திப்பாடல்களில் உள்ளன. அவ்வாறு பலவாக வளர்ந்து வந்தாலும் இலக்கியங்களாலுணர்த்தப்படும் சிவன், திருமால் இயல்புகள் ஒருகால்வழியே வந்தனவென்றே கொள்ளத்தக்கவை. இத்தெய்வங்களின் இயல்புகளை அறியும்போது இவை இந்தியா முழுவதும் பரவியிருந்த சிந்தனைகளேயென்பது விளங்கும். இவற் றின் தொடக்கநியையினைப் புராணங்களிலும் இதிகாசங்களிலும் வேதங்களிலும் கண்டு கூறுமளவுக்குப் பிறநூல்களிற் கண்டுகூற முடியாது.

வேதகாலத்திற்கு முற்பட்டதாகவுள்ள சிந்துவெளிநாகரிகத்தின் சின்னங்களும் சிவன் இயல்புகளைப்பற்றிய சில உண்மைகளை விளக்குவனவே. சுருங்கக்கூறின் இந்தியநாட்டின் சமய வளர்ச் சியின் எதிரொலியாகவே சிவன், திருமால் இயல்புகள் தமிழிலக் கியத்தில் உள்ளன என்பதில் ஐயமில்லை."[27]

சைவ, வைணவ இலக்கியங்கள் வேதங்களைப்புகழ்ந்து பாடுவனவாயுமுள்ளன. திருமுறைகளில் வேதங்களைப்பற்றிய குறிப்புக்கள் பலவாகவுள்ளன. 'வேதநூல் பயில்கின்றது வாயிலே', 'வேதம் ஓதிய நாவுடையான்', 'மறைபயில் அந்தணன்', 'மறை பயின்றவாசகன்', 'வேதவிழுப்பொருளை','வேதமெல்லாம் முறை யால் விரித்தோதநின்ற ஒருவனார்' என வருகின்றன.[28]

ஆழ்வார் பாடல்களிலே 'மறைபயந்த பண்பன்', 'வேத நால் வாயர்', 'வேதப்பிரானார்' என வேதங்களை அருளியவரென்பது திருமாலைக்கூறுவதோடு, வேதத்தால் அறியத்தக்கவன் என்ற கருத்தில் 'வேதவிளக்கு', 'மறையால் விரிந்த விளக்கு, என்றும் வேதத்திற் சொல்லப்படுந் தன்மையை உடையவன் என்ற கருத்தில் 'வேத நீரன்' என்றும் 'வேதநீதியாகி நின்ற நிமலன்' எனவும் குறிக்கப்பட்டுள்ளான்.

சங்க இலக்கியங்கள் பலவும் *சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, கந்தபுராணம், திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், வேல் விருத்தம், சேவல்விருத்தம், மயில்விருத்தம்* ஆகியனவும் முருக வழிபாட்டுச் செய்திகளைக் கொண்டமைவன. *பரிபாடலும், திருமுரு காற்றுப்படையும்* விசேடமாக முருகன் பிரபாவத்தை முதன்மைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தியுரைப்பன. திருமுறைகளிலேயும் முருகன் புகழ் சிறப்பாகப் பாடப்பட்டுள்ளன. இந்நூல்களிலேயிடம்பெறும் முருகன் பெயர்கள், இயல்புகள் குறித்து இனி நோக்கலாம்.

## முருக வழிபாட்டு மரபு

தமிழ் மக்களது நம்பிக்கைக்குரிய தெய்வமாக முருகக்கடவுள் விளங்குகின்றார். முருகவணக்கத்தின் தோற்றம், வளர்ச்சி குறித்து அறிவதற்கு நம்பகமான இலக்கிய ஆதாரங்கள் கிடைத்துள்ளன. சிவபெருமானையும் முருகனையும் இணைத்து நோக்கும் வழக்கமும் உண்டு. இன்னும் சிவனையும் சூரியனையும் இணைத்து நோக்கியாராயும் மரபும் உள்ளது. சிவசூரிய வழிபாடு என்பது சிவபெருமானைச் சூரியனாகக் கொண்டு வழிபடுவனதக் குறிக்கும்[29] ஆயினும் **சூரியன் சிவனை வழிபடுவோனாகக் கொள்ளப் படுகின்றான்.** இவ்வெடுத்துக்காட்டுக்களாற் **சிவபெருமான் சூரியனிலும்** மேம்பட்டவர் என்ற ஆய்விலே சூரிய வணக்கமே காலப் போக்கில் முருகவணக்கமாக உருப்பெற்றதெனலாம்.[30]

> "மாயோன்மேய காடுறை உலகமும்
> சேயோன்மேய மைவரை உலகமும்."[31]

என்று குறிப்பிடும் *தொல்காப்பியம்* சேயோன் எனறு முருகனைக் குறிப்பிடுவதோடு 'முருகவேளின் காத்தலைக்கொண்ட உயர்ந்தமலையாகிய இடமும்' என்றும், நிலம் என்பதற்கான வரைவிலக்கணச் சூத்திரத்திலே குறிப்பிடும்.

## முருகனுக்குரிய பெயர்கள்

சங்கநூல்களில் முருகன் என்னும் பெயர் *அகநானூறு, புறநானூறு* ஆகிய இருஇலக்கியங்களிலேயே வந்துள்ளது.[32] *குறுந்தொகை, அகநானூறு, புறநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, மதுரைக்காஞ்சி, பொருநராற்றுப்படை* ஆகிய இலக்கியங்களில் 'முருக' என்ற சொல்லே முருகனை உணர்த்திப் பல இடங்களில் எடுத்தாளப்படுகின்றது. *திருமுருகாற்றுப்படை, பரிபாடல்* ஆகிய இலக்கியங்களிலும் முருகு என்னும் பெயர் முருகனுக்குரித்தாக வழங்கப்பட்டுள்ளது.[33] சங்கநூல்களான குறுந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொகையிலும் பதிற்றுப்பத்திலும் அவுணர்களை முருகன் அழித்தான் என்று கூறப்படுகின்றது. *அகநானூறு, குறுந்தொகை, ஐங்குறுநூறு, குறிஞ்சிப்பாட்டு, மலைபடுகடாம், பொருநராற்றுப்படை* ஆகிய சங்கநூல்களில்_சேய் என்னும் பெயர் சேஎய் என அளபெடுத்தும் அளபெடாமலும் முருகனைக் குறித்து வழங்கப்பட்டுள்ளது.[34] 'சேயோன்' என்ற பெயரும் இவ்விடத்தில் நோக்கத்தக்கது. இப்பெயரிலிருந்து முருகனுக்குப் பலவகையான பெருமைகள் கொள்ளப்பட்டன. சேய் என்ற தமிழ்ச் சொல்லுக்கு வடமொழியிலே 'குமாரன்' என்னும் பொருள் உண்டு. ஆகவே முருகனையும் குமாரக் கடவுளாகக்கொண்டனர். குமரன் என்னும் பெயரே குமாரன் என்று நீண்டிருக்கலாம். மாறாக இளமையுடையவனாகவும் அழகுமிக்கவனாகவும் விளங்குபவன் என்ற பொருளிலும் வருகின்றமையையும் நோக்கலாம்.

செய்யோன் என்னும் பெயர் சங்கநூல்களில் ஒன்றான *புறநானூற்றில்* மட்டும் ஓரிடத்தில் எடுத்தாளப்பட்டுள்ளது. முருகன் அளவிடற்கரிய நீண்டபுகழையுடையவனாதலின்நெடுவேல் என்றும் மக்களால் பாராட்டப்பட்டுள்ளான் *அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, மதுரைக்காஞ்சி, பெரும்பாணாற்றுப்படை* ஆகிய சங்கநூல்களில் நெடுவேல் என்றே முருகன் அழைக்கப்படுகிறான்.[35] *திருமுருகாற்றுப்படையிற்* 'பரிசிலர்தாங்கும் உருகெழு நெடுவேஎள்' என்று முருகனை நக்கீரர் குறிப்பிட்டுள்ளார். *பரிபாடல், சிலப்பதிகாரம்* ஆகிய இலக்கியங்களும் முருகனை நெடுவேல் என்று போற்றுகின்றன. விறல் வேல் என ஐங்குறுநூறும் *பதிற்றுப் பத்தும், பரிபாடலும்* குறிப்பிடும். *திருமுருகாற்றுப்படை, பரிபாடல் சிலப்பதிகாரம்* அப்பர் திருமுறை ஆகியவற்றிற் 'கடம்பன்' என முருகன் குறிக்கப்பட்டுள்ளான்.[36]

## முருகனுக்குரிய மறுபெயர்கள்

முருகு அல்லது முருகன், சேய், வேள், நெடியோன், கடம்பன், ஆறுமுகன், வேலன், கோழிக்கொடியோன், வெறிகொண்டான், சேந்தன், குமரன், ஆறுவர்பயந்த ஆறமர்செல்வன், ஆல்கெழு கடவுள் புதல்வன், மலைமகள்மகன், மாற்றோர்கூற்று, கொற்றவை சிறுவர், பழையோள்குழவி, தானைத்தலைவன், மாலை மார்பன்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலறிபுலவன், செருவில் ஒருவன், அந்தணர்வெறுக்கை, அறிந் தோர் சொன்மலை, மங்கையர்கணவன், மைந்தர்ஏறு, வேல்கொ ழுதடக்கைச் சால்பெருஞ்செல்வன், குறிஞ்சிக்கிழவன், நடையு நர்க்கு ஆர்த்தும் இசைப்பேராளன், பெரியோர் ஏத்தும் பெரும்பெயர் இயவுள், குரிசில், மால்மருகன், வெய்யோன், வள்ளி கொழுநன், மயில் ஊர்திமைந்தன், இளையவன், மாதடித்தான், கந்தன், சரவ ணத்தான், சுப்பிரமணியன் என்னும் பெயர்களுக்கான காரணங் களை "முருகவணக்கம்" என்ற தமது முதுகலைமாணிப் பட்டத்திற் கான ஆய்விலே **செ.நவரத்தினம்** என்பார் விளக்கியுள்ளார்.

## குறிஞ்சித்தெய்வம் முருகன்

முருகன் குறிஞ்சிநிலக் கடவுள் என்பது சங்கநூல்களாற் புலப்படுகிறது. நில இயற்கைக்கேற்ப அமைந்த முருகன், கொற்ற வைபோன்ற திராவிடத்தெய்வங்களே மிகவும் சிறப்புடன் வணங்கப் பட்டுவந்தனவென்பதைச் சங்நூல்களிலிருந்து அறியலாம்.[37] முருக வழிபாட்டுக்கும் கூத்துக்களுக்குமுள்ள தொடர்பும் இவ்விடத்தில் இணைத்து நோக்கத்தக்கது. தமிழருடைய வழிபாட்டிலே வெறி யாட்டு முதலிய ஆட்டங்கள் முக்கிய இடம்பெற்றன. முருக வழிபாடு கூறப்படும் இடங்களில் இத்தகைய கூத்துக்கள் வருணிக் கப்படுகின்றன. பெண்களின் காதல் நோயைக் குறித்து நிகழ்ந்து வந்த வெறியாடல்களில் முருகக்கடவுள் பூசகர் மூலமாக ஆவேசித் துநிற்பர். இதுவும் சங்கநூல்களிற் காணப்படுவதே.

சங்ககாலத்திற் பெருவழக்காயிருந்த இவ்வெறியாட்டைச் சங்க மருவிய காலத்தில் இலக்கணம் வகுத்த தொல்காப்பியர் பொருள திகாரத்தில் ஒரு சூத்திரத்திற் குறிப்பிடுகின்றார்.

> "வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
> வெறியாட்டயர்ந்த காந்தளும்."
>
> (தொல்.பொருள்.60.1-2)

*மதுரைக்காஞ்சி, ஐங்குறுநூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, அகநானூறு, குறிஞ்சிப்பாட்டு* என்பனவற்றிலேயும் வெறியாட்டுப் பேசப்படுகின்றது.[38] ஈழத்துப் பூதந்தேவார் பாடலொன்றிலும் முருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டோடு தொடர்புடைய வெறியாட்டுச் சுட்டப்படுகிறது என்பதனை இன்றைய தமிழியல், விமர்சனவியற் சாசனவியலாய்வாளர்களும் எடுத்துக்கூறுவர். ஈழத்துப் பூதந்தேவனாரது குறுந்தொகையின் 360 ஆவது பாடல் குறித்த செய்திகளைப் பற்றிய கருத்துக்களைக் குறிப்பிடுவார் **பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை.**[39] அச்செய்யுள் குறிஞ்சிபற்றியமைவது.

## கருவிநிலையும் கருத்துநிலையும்

"புறத்திணையிலே போர்க்கருவிக்குத் தெய்வசக்தி கொடுக்கப்பட்டமையுந் தெரியவருகிறது. பழந்தமிழர் ஒருகருமத்தைத் தொடங்கி ஆற்றும்போது அதற்குரிய கருவி அருமையும் பெருமையும் உடையதாக இருந்தது. அதனாலேயே கருவியையும் தெய்வசக்தியாகப் போற்றும் பொருளாகக் கொண்டார். எடுத்த கருவியால் எண்ணிய கருத்தை முனைந்து அதிலும் ஏற்றம் பெற்றனர். அவ்வேற்றம் பெற்ற கருத்தும் தெய்வசக்தியாகக் கருதப்பட்டது. இதனாலேயே தொல்காப்பியர் கருமத்துக்குரிய 'கருவிபோற்றல்' என்ற பொருளால் துடிநிலையை முன்கூறியும், கருவி ஏற்றம் பெற்ற முறையாற் கருத்தும் ஏற்றம்பெற்றது என்றெண்ணி அக்கருத்தையும் போற்றுமுகமாகக் கொற்றவை நிலையைப் பின் கூறியும் நின்றார்."[40]

"கணையும் வேலும் துணையுற மொய்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கை."
(புறத்திணை. நூற்.16)

புறத்திணையிலே தும்பைத்திணையில் நிகழும் போரினைக் குறிப்பிடும் தொல்காப்பியர் அதன் இலக்கணத்தையும் சிறப்பினையும் கூறுகின்றார்.

"அம்பும் வேலும் தனித்தனி விடுதல் செய்யாது இணையுறத் தைக்கும் நிலையில் விடுவர். அவ்வாறு கணையும், வேலும் இணைந்து தைத்தலால் முறுகியதறுகன் முனைப்பால் உயிரிழந்த உடல்விழாது நிற்றலும், அக்கருவிகளால் துணிக்கப்பட்ட தலை முதலிய உறுப்புக்கள் நிலந்தோயாமல் துடித்தியங்கலுமாகிய இருவகையான அரியநிலையைச் சிறப்பாக உடையது என்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள்காண்பர்."[41] **முதலிற் கருவியும் பின்னர் கருத்தும்** தமிழ் மக்களது புறத்திணைவாழ்வில் முதன்மைபெற்றனவென்பது கூறப் பட்டது. இந்த மரபே பின்னர்நடுகல் வழிபாடாகவும் வளர்ச்சி யடைந்ததெனக் கொள்வதும் ஆராய்ந்து நிறுவப்படவேண்டியது. இன்று கடவுளர்களது மூர்த்தி உருவங்களும் அக்கடவுளர்களது அயுதங்களும் வழிபடப்பட்டுவருகின்றன. வைரவர் திரிசூலம் (பைர வர்), சக்கரம்(விஷ்ணு) என்பன இத்தொடர்பில் இன்றும் நிலவும் கருவி வழிபாடுகளாகும்.

சமயாசாரியர்களும் **கந்தன், குமரன், சேந்தன், முருகன், கடம் பன், வேலன்** என்ற பெயர்களால் தமது பாடல்களிலே குமர னைக் குறிப்பிட்டுள்ளார். *பரிபாடலிலே,* முருகனைப் முன்னிலைப் படுத்தி, அவனுடைய திருவுருவச்சிறப்பினைக்கூறி 'யாம் எமது சுற்றத்தோடு வாழ்த்தி வணங்குகின்றோம் எம் வாழ்த்தினைக் கேட்டு எமக்கு அருள்புரிதல் வேண்டும்' என்று வேண்டிக் கொள்வ தாக அமையுங் குறிப்பு நோக்கத்தக்கது.

"குறப்பிணாக் கொடியைக் கடியோய்! வாழ்த்துச்
சிறப்புறாக் கேட்டி செவி;
உடையும் ஒலியலும் செய்யை மற்றாங்கே
படையும் பவழக்கொடிநிறம் கொள்ளும்
உருவும் உருவத்தீ ஒத்தி; முகனும்
விரிகதிர் முற்றா விரிசுடர் ஒத்தி
எவ்வத் தொவ்வா மாமுதல் தடிந்து
தெய்வுக் குன்றத்துத் திருந்துவேல் அழுத்தி
அவ்வரை உடைத்தோய்; நீ இவ்வரை மருங்கில்
கடம்பமர் அணிநிலை பகர்ந்தேம்
உடங்கமர் ஆயமொடு ஏத்தினம் தொழுதே."[42]

குறப்பெண்ணாகிய பூங்கொடியை ஒத்த வள்ளியை மணந்த பெருமானே! எங்கள் வாழ்த்தும் உனக்குச் செவி உணவாகி அமையும் ஆதலாற் கேட்பாயாக. பெருமானே உனது உடை சிவப்பு; மாலையுஞ் சிவப்பு; உனது வேலும் பகைவரைக் கொள் வதால் இரத்தம் தோய்ந்து சிவப்பாகும்; உன் திருமேனியும் செந்தழல் போன்று சிவப்பு; உனது முகமோ விடியற்காலத்திலே விரியுஞ் செங்கதிர் இளஞாயிறு போலும் சிவப்பு; சூரனை வேரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டன் வெட்டிக் கிரவுஞ்சகிரியிற் பிறந்தவன் நீ . இத்திருப்பரக் குன்றத்திலே கடப்ப மரத்தின் கண் எழுந்தருளியிருப்பவனே, உன்னை வாழ்த்துகிறோம். கைகூப்பிக் கும்பிட்டு நிற்கிறோம் என்பது பாடற்பொருள்.

*குறுந்தொகைக்*கடவுள் வாழத்துச்செய்யுளில் 'அஞ்சுடர் நெடு வேல் சேவலங்கொடியோன் காப்ப' என்று பேசப்படுகின்றது. செய்யுள் வருமாறு;

"தாமரைபுரையுங் காமர் சேவடிப்
பவழத்தன்ன மேனித் திகழ் ஒளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சு பக எறிந்த அஞ்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
எமவைகல் எய்தின்றால் உலகே."

தாமரை மலர்போன்ற அழகிய சிவந்த திருவடியையும் பவளம் போன்ற மேனியையும் ஒளிவீசும் குன்றிமணிபோன்ற சிவந்த ஆடையையும் கிரௌஞ்சமலையின் நடு இடம் பிளக்க வீசிய ஒளியுடைய நெடுவேலையும் சேவற்கொடியையுமுடைய முருகக் கடவுள் காத்தலால் உலகின் உள்ள உயிர்கள் இன்பமா யிருக்கின்றன. இடையூறில்லை என்பது பொருள்.

## நக்கீரரும் படைவீடுகளும்

மதுரைமாநகர் கோயில்மாநகர் எனக் குறிப்பிட்டுப் போற்றும் அளவிற்குப் பல திருக்கோயில்களைக் கொண்டு விளங்குவது. திருப்பரக்குன்றம் கோவில்மாநகரின் குன்றக் கோவிலாகும். திருப்பரக்குன்றத்திலுள்ள குன்றம் ஏறக்குறைய முந்நூறு அடி உயரமுள்ளது. இக்குன்றத்தில் இரண்டு குடைவரைக் கோவில் களில் ஒன்று இன்று சிறந்து விளங்கும் முருகப் பெருமானின் திருக்கோவில்.

*திருமுருகாற்றுப்படை* ஆறு படைவீடுகளைப்பற்றிய செய்தி களையும் முருகவழிபாட்டு மரபுகளையும் முருகபரத்துவத் தினையுங் குறிப்பிடுகின்றது. ஆறுமுகப்பெருமானின் ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படைவீடுகளை ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நமக்கு அறிமுகப்படுத்திய சான்றோர் நக்கீரனார்.

திருப்பரக்குன்றம் பாண்டிய மன்னர்களோடு தொடர்புற்று விளங்குவது. இங்கு பள்ளிகொண்டிருக்கும் குமரக்கடவுள் கடம்பினையும் காத்தளையும் அணிந்து விளங்குகின்றார். கடம்பு போகத்தையும் காத்தள் வீரத்தினையும் குறிப்பன. திருப்பரக் குன்றத்துத் திருக்கோவிற் கருவறையில் முருகன் மணக் கோலத்திலே தெய்வயானை அம்மையுடன் காட்சியளிக்கின்றான்.

திருப்பரக்குன்றக் கோவிலில் இலட்சுமி தீர்த்தமும் பிரம்மகூடம் எனப்படும் சந்நியாசக்கிணறும் நோய்களைப் போக்கவல்ல அருட் தீர்த்தங்களாக விளங்குகின்றன.

திருப்பரக்குன்றம், தண்பரக்குன்று, தென்பரக்குன்று என விபரிக கப்படுகின்றது. *அகநானூறு, பரிபாடல், கலித்தொகை, மதுரைக் காஞ்சி* ஆகிய நூல்களிலே திருப்பரங்குன்றம் இடம்பெறுகின்றது.

திருக்கோவையாரிற் கூறப்படும் இருபத்தொரு தலங்களுள் திருப்பரக்குன்றமும் ஒன்றாகும். பெரியபுராணத்துள் சேக்கிழார் சுவாமிகள் இத்தலத்தினைச் 'சங்கரனார் தங்கு திருப்பரக் குன்றம்' என்றும் 'பரமர் திருப்பரங்குன்றம்' என்றும் பாடியுள்ளார்.[43] கந்தபுராணம் திருப்பரக்குன்றுசேர் படலம், தெய்வயானையம்மை திருமணப்படலம் ஆகிய இருபடலங்களும் அதிகமாகச் செய்திகளைத் தருகின்றன.

## முருகன் பற்றிய நாட்டுப்பாடல்

முருகப்பெருமானின் திருப்பெயர்களிளொன்று **சுப்பு** என்பது, **சுப்பு** என்னுந் திருப்பெயர் **சுப்பிரமணியன்** என்பதன் குறுக்கமாகும். இதனை விளக்குவதாக அமையும் ஒரு நாட்டுப்பாடல் தமிழகத்திலுண்டு.

"ஊசி படர்ந்தமலை - சுப்பையாவுக்கு
உத்திராட்சம் காய்க்கும்மலை
பாசி படர்ந்தமலை - சுப்பையாவுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவளத்தேர் ஓடும்மலை
சாஞ்சா மலையா - சுப்பையாவுக்குத்
தேனும் தெனைமாவோ
தேனும் தெனைமாவோ - சுப்பையாவுக்குத்
தெகட்டாத செங்கரும்போ
கண்ணுள்ள தேங்காயே கண்ணே
கணுவுள்ள செங்கரும்பே
பாக்குப் பதிங்கலமும் கண்ணே
பச்சரிசி முக்கலமும்
எள்ளு இருகலமும் - சுப்பையாவுக்கு
எளனி தேங்காய் முந்நூறும்."[44]

*சிலப்பதிகாரத்தி*ற் 'சூர்மாதடிந்த சுடரிலைய வெள்வேல்' என்று வீரத்தன்மைகொடுத்த அடைபுணர்த்திப் பாடப்பட்டுள்ளமை கண்டு கொள்ளத்தக்கது. 'வேல்' என்பது 'வெல்' என்று வினையடி முதல் நீண்டு 'வேல்' என்பதாயிற்று.

**பேராசிரியர் ரா.பி.சேதுப்பிள்ளை** வேல்பற்றிய செய்திகளை விளக்கியுரைத்துள்ளதுடன், *சிலப்பதிகாரத்துச்* சான்றுகளுடனும் நிறுவியுள்ளார்.

"சீர்கெழுசெந்திலும் செங்கோடும் வெண்குன்றும் ஏரகமும் நீங்கா இறைவன் என்பது *சிலப்பதிகாரக்* குரவைப்பாட்டு. இவ்வழகிய பாட்டிலே திருச்சீரலைவாயாகிய திருச்செந்தூரை முதன்மையாக அமைத்திருப்பது கருதத்தக்கதாகும். நக்கீரதேவர் சீர்அலைவாய் என்று புகழ்ந்தவாறே இளங்கோவடிகளும் 'சீர்கெழு செந்தில்' என்று திருச்செந்தூரைச் சிறப்பித்துள்ளார்."[45] என்று உரைத்துள்ளமையும் நோக்கத்தக்கது. *சிலப்பதிகாரத்துச்* செய்தியினை இணைத்து நோக்குவதும் இவ்விடத்திற் பொருந்தும்.

**'சீர்கெழுசெந்திலும் செங்கோடும் வெண்குன்றும்**
**ஏரகமும் நீங்கா இறைவன் கைவேல் அன்றே**
**பாரிரும் பௌவத்தின் உன்புக்குப் பன்டொருநாள்**
**சூர்மா தடிந்த சுடர் இலைய வெள்வேலே.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்**
**இணையன்றித் தானுடையான் ஏந்திய வேல் அன்றே**
**பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்**
**மணிவிசும்பிற் கோன் ஏத்த மாறட்ட வெள்வேலே.**

**சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்**
**திருமுலைப்பால் உண்டான் திருக்கைவேல் அன்றே**
**வருதிகிரிகோல் அவுணர் மார்பம்பிளந்து**
**குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடுவேலே.'**[46]

என்ற மூன்று பாடல்களும் 'வேலின் புகழ்' என்னுந் தலையங் கத்திற் *சிலப்பதிகாரத்திலே* வருகின்றன.

'வேலின்விளைவு' என்னும் கட்டுரைப்பொருளிற் **சித்தவைத்திய கலாநிதி க.இராமசுவாமி** அவர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் சிந்தனைக்குரியவை. சைவசித்தாந்தக் கருத்துக்களோடு வைத்திய மரபுகளையும் இணைத்து நோக்கி வேலின் தனித்துவத்தை நிறுவுகின்றார்.

**'ஒரே நெட்டியாக மேலெழுந்த இரு அலகுகலாக விரிவுகொண்டு பின்பு படிப்படியாக ஒடுங்கி ஒரேமுனையாக முடிவுபெறுவதே வேலின் அமைப்பாகும். ஒரேமுனையாக ஒடுங்காவிடின் அது வேலாகாது.' என்று கூறுகின்றார்.**

சூரபத்மனை ஆட்கொள்ளும் பொருட்டே முருக அவதாரம் ஏற்படலாயிற்று என்பதை இறைவி முன்னரே அறிந்தவளேயாம். அங்ஙனம் அறிந்துகொண்டு வேலினை வழங்கியமை, வேலானது ஆட்கொள்ளும் பாவனைக்குகந்த ஒரு சின்னமேயொழிய யுத்தத் திற்குரிய ஆயுதமாக அமையாதது என்பதும் தெளிவானதாகும். யுத்தகளத்திற் கொல்லப்பட்ட அசுரர்கள் அனைவரும் முரு கனின் அஸ்திரங்களினாற் கொல்லப்பட்டனரேயொழிய ஒருவராகுதல் வேலினாற் கொல்லப்பட்டவரல்லர். சூரபத்மன் மட்டும் வேலினாலே தீண்டப்பெற்று ஆட்கொள்ளப்பட்டான்.[47]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெஞ்சை இடமாகக் கொண்ட வேல்

முருகனின் ஐந்து கோடிக் கரங்களும் பஞ்சகிருத்தியங்களுக்கு அமைந்த ஐந்து தெய்வங்களுக்குரிய ஆயதங்களைத் தாங்கிக் கொள்ள ஆறாவது சோடிக்கரங்கள் அபயவரதங் கொடுத்துக் கொண்டிருக்கும்போது வேலினைத் தாங்குவதற்கு முருகனிடம் வேறு கரகங்களுமே இல்லை; **முருகன் எந்தக் கரத்தினாலாவது வேலினைத் தாங்கியவருமல்ல,** தமது நெஞ்சுடன் சாயத்துக் கொண் டவரேயாவார். கைகளினாலே தீண்டப் பெறாதபடியால் வேலானது யுத்தத்திற்குரிய ஆயுதமாகாது. எனவே வேலானது ஞானமார்க் கத்தத்துவத்தை விளக்க அமைந்ததொன்றாகும்.

**நெஞ்சு நினைவிற்குரிய ஸ்தானமாகும்.** நினைவினால் ஆக்கப் பெறுவதே அனுக்கிரகமாகும். வேலானது முருகனின் நெஞ்சோடு சாத்தப்பட்டமையால் முருகப்பெருமான் சூரபத்மனை வேலின் மார்க்கவழியில் அனுகிரகித்து ஆட்கொள்ளலானான். வேலானது நெஞ்சோடு மட்டுஞ் சாய்த்துக் கொள்ளப்பட்டமையினால் வேலுக் கும் நெஞ்சிற்கும் இடையேயுள்ள இணைப்புக்களையும் ஆராய் வதும் அவசியமே.[48] **நெஞ்சு சுவாசத்திற்குரிய ஸ்தானமாகும்.** சுவா சத்திற்கு அமைந்த உள்ளுறுப்பு நுரையீரலாகும். எனவே தான் **நுரையீரலைச் சுவாசப்பையென்பார்.** இவை வலம், இடம் என இரண்டு பாகங்களாகும். இவை இரண்டும் ஒருமித்தே சுவாசிப்பன. இவை ஒருமித்துச் சுவாசித்தபோதிலும் இவற்றின் சுவாசம் மூக்கின்வழியாக இயங்கும்போது வலம், இடமாக மாறிமாறியே இயங்குவன. இது இயல்பு.

## வேல்முனையும் சுழுமுனையும்

**ஆட்கொள்ளும் மார்க்கத்தைப் புலப்படுத்த அமைந்தது வேல்.** வேலுக்கு முக்கிய பாகம் அதன் முனை. ஆட்கொள்ளளுக்கு அமைந்த சுவாசம் சுழுமுனை , இடகலை, பிங்கலையின் சந்திப்பே சுழுமுனை; இச்சந்திப்பினைச் சமகலை என்று கொள்ளாமல் சுழுமுனை என்று கொள்ளப்படுவதும் 'முனை' என்ற பதத்தைக் கொண்டு வற்புறுத்தி வேலின் முனையை ஒப்பிடுவதற்கேயாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்கொள்ளலுக்கு அமைந்த வேலானது இருபாகங்களாக விரிவுகொண்டு பின் ஒருமுனையாக ஒடுங்குவதுபோலவே ஆட் **கொள்ளலுக்கு ஆதாரமான சுவாசக்கலையும் இரு விரிவுக ளைக்கொண்டு இயங்கி ஒருமுனையில் ஒடுங்குவதுமாம்."** **சுவாசத் திற்கு அமைந்த மூக்கினது அமைப்பும் நோக்கத்தக்கது.**

## வேள் -வேளாளர் சொல்லுறவு

**வேலின் முனையானது சூரபத்மனைத் தீண்டிய மாத்திரத்திற் சூர பத்மன் மாமரமாக விளைந்ததுமல்லாமல் முருகனண்டையிலும் அனுக லானான். அதே வேலானது மாமரத்தைத் தீண்டியபோது மாமரம் இரு பிரிவுகளாகப்பெற்று ஒரு பிரிவு மயிலும் மறுபிரிவு சேவலுமாக விளையலாயின. எனவே மாமரம் சுழுமுனை நிலையைக் காட்டுவ தாகவும் சேவலும் மயிலும் நாதவிந்துவாக இடகலை, பிங்கலை எனக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது.**

**'வேலானது முருகனின் நெஞ்சோடு சாத்திக்கொள்ளப்பட்டதும் அல்லாமல் அவ்வேலின் பாதம் முருகனின் இடது பாகத்தில் ஊன்றப் பெற்று வலது பக்கத்துச் சாய்வாக அமைந்துள்ளதும் குறிப்பாகக் கவனிக்கவேண்டியதொன்று. மக்கள் தேகத்து இரத்தாசயமும் இடது பக்கத்திலும் அமந்திருந்தாலும், அதன் கீழ்ப்பாகம் இடது பக்கமாகவும் அதன் தலைப்பாகமானது வலது பக்கத்துச் சாய்வாகவுமே அமைந்துள்ளது. இது இயற்கை அமைப்பு'** என்னும் கருத்துக்கள் நமது மனதிலே நிலைநிறுத்திக் கொள்ளத்தக்கன. "The Word vel is closely connected with velalar 'Cultivators' and the modern interpretation is that they were landowners." [50]

"வேல்' என்ற சொல்லிலிருந்து 'வேளாளர்' என்ற இனக்குழுவின் பெயர் தோற்றம்பெற்றிருக்கின்றது என்ற கருத்தினை வேறு சில அறிஞர்களும் எடுத்துக்கூறியுள்ளனர். 'வேள்', 'வேல்' இரண்டுமே முருகனுடன் தொடர்பு கொண்டமையுஞ் சொற்கள். 'வேள்' என் றால் விருப்பம், உபகாரம் என்று அர்த்தம். வேளிலிருந்துதான் வேளாளன் என்ற வார்த்தை வந்தது. **வேளாளன் என்றால் பிற ருக்கு உபகாரஞ் செய்பவன் என்ற அர்த்தம் ஆகிறது**[51] என்று விளக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் மார்பிலிருப்பது வேல். இது ஞானசக்தி ஆகும். ஆஞ்ஞானப்பகையை வெல்ல ஞானவேல் தாங்கியுள்ளான் முருகன். தனிவழி நடக்கும் அன்பர்க்கு வலப்புறத்தும் இடப்புறத்தும் முன்னும் பின்னும் எங்குமாகி இரவுபகலிலே துணையாக விளங்குவது வேல் என்கிறார் அருனகிரிநாதர். **'தனித்தவழி நடக்குமென திடத்தும் ஒருவலத்தும் இரு புறத்தும் அருகடுத்து இரவுபகல் துணையதாகும்.'** என்பது *திருப்புகழ்.*

**'அச்சம் அகற்றும் அயில்வேல்'** என்கிறார் **குமரகுருபரர்.** இன்னுமொரு பாசுரம்,

> "குமாரனறு முகவன் வேலுந் திருக்கையு
> முண்டே நமக்கொரு மெய்த்துணையே."

என்றியம்புகிறது.

## முருகனின் மூர்த்திபேதங்கள்

"கந்தன் என்னும் பெயர் முருகனுக்குரிய சிறப்பான பெயர்களுள் ஒன்று. பகைவர்களின் பராக்கிரமத்தை வற்றச்செய்பவன் கந்தன். **கந்தன் என்றால் ஒன்று சேர்க்கப்பட்டவன் என்று பொருள். கந்து என்றால் பற்றுக்கோடு. ஊயிர்களுக்குப் பற்றுக்கோடாக இருப்பவன் கந்தன்.'**[52] இக்கருத்தையே *சுப்பிரமணிய பராக்கிரம(ம்)* நூலாசிரியரும் குறிப்பிடுகின்றார்.

> **'ஆறு திருவுருவங்களையும் இரு திருக்கரங்களாலும்**
> **வாரியெடுத்துத் தழுவினர். ஆறு திருமுகங்களும்**
> **பன்னிரு திருக்கரங்களுமுடைய ஒருவராயினர்.**
> **முருகக்கடவுள் அதனாலே கந்தன் என்றும்**
> **திருநாமத்தைப் பெற்றனர். (கந்தன்-கலத்தல்)**
> **உமாதேவியாராலே ஒன்றுசேர்க்கப்பட்டவர் என்க'**[53]

என்று குறிப்பிடுகின்றார்.

சுப்பிரமணியனுக்குரிய மூர்த்திபேதங்களைக் குறிப்பிடும் *சுப்பிரமணியபராக்கிரமம்* முருகனுக்குரிய அர்ச்சனை மந்திரங்களுளொன்றாக 'பிரபந்த தாரதம்மிய நிர்ணய மூர்த்தையே நம'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்பிடுகிறது. 'பிரபந்த தாரதம்மிய நிர்ணயமூர்த்தி' என்னும் வடிவமே இம்மந்திரத்தினால் வழிபடப்படுகிறது. இப்பெயருக்கான விளக்கம் பின்வருமாறு,

> **"குமரக்கடவுள் வசியர் செய்த தவப்பேறு காரணமாகவும் செந்தமிழ்ப் பரமாசாரியனாகலால் தீந்தமிழ் நூலால் களவியலின் மெய்யுரை தெரிக்குநிமித்தமாகவும் ஐயாட்டைக் குழவியாய்த் தோன்றிச் சங்கப் பலகையில் எழுந்தருளியிருத்தலாற் 'பிரபந்ததாரதம்மிய நிர்ணய மூர்த்தியாயினர்.' "[54]**

முருகப்பெருமானின் பிரபாவங்களைக் கூறும் இலக்கியங்களையும் சூரபத்மனோடு நிகழ்த்திய போர்பற்றியும், அப்போருக்குப் படையெடுத்துச் செல்லும்வழியில் ஆறுபடைவீடுகளிலும் தங்கியமை குறித்தும் விளக்கமுண்டு. இச்செய்திகள் குறித்துப் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> **"தமிழிலே முருகனது பிறப்பு, திருவிளையாடல், அருளாட்சி முதலியவற்றை உணர்த்தும் பண்டை நூல்கள் *பரிபாடலும் திருமுருகாற்றுப்படையுமாம்.* முருகனது கதையைக் கூறுவது *கந்தபுராணமாகும்.* முருகனது பெருமையை இனிய சந்தச்சித்திரங்களோடு நமக்கு அருளிச்செய்துள்ளது திருப்புகழாகும். மேலும் முருகக்கடவுள் தாருகனை வதஞ் செய்து 'தாரகாரி' என்ற பெயரையும் பெற்றார். சூரபத்மனோடு நிகழத்திய போரில் முருகக்கடவுள் படையெடுத்துச் சென்று வழியில் ஆறுதலங்களில் தங்கினர் என்று கொண்டனர். திருப்பரக்குன்றம், திருச்செந்தூர் (திருச்சீரலைவாய்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம், குன்று தோறாடல், பழமுதிர்சோலை என்பனவே அவை. அண்ணாமலைரெட்டியாரது *காவடிச்சிந்தில்* முருகனுடைய வரலாறு மிகவும் இரஸபாவத்துடன் காணப்படுகிறது."[55]**

ஆயினும் *பரிபாடலிலே* எவ்விடத்தும் சூரபதுமனின் பெயர் குறிப்பிடப்படவில்லை, பொதுவான செய்திகளே இடம்பெற்றுள்ளன.[56]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் நாட்டுக்கும் ஈழநாட்டுக்குமிடையிலான முருக வழிபாட்டுத் தொடர்புகள்

கேரளத்திலே ஐயப்பன் மலைப்பகுதித் தெய்வமாகக் கொள் ளப்படுவதனாற்போலும் மலையாள அகராதியிலே முருகன் காட் டுத்தெய்வம் என்று குறிப்பிடப்படுகின்றான். ஆறுபடை வீடுகளி லொன்றான பழனிமுருகன் மலையாளிகளுக்கு மிக வேண்டிய தெய்வமாகவுள்ளான்[57] என்னும் கருத்துக்கள் முருகனுக்கும் பிற தெய்வங்களுக்குமுரிய ஒற்றுமை வேற்றுமைகளையும் அவ்வ வற்றின் தனித்துவங்களையும் பகுத்தறிய உதவுவனவா யமைகின்றன.

பாண்டியநாட்டோடு தொடர்புடைய பெருவணக்கமாக முருக வணக்கம் இருந்துவந்திருக்கிறது என்பதுவும் அம்மரபு பின்னர் ஈழத்தில் முருகவணக்கம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக் கின்றதென்றுங் கூறுவர். எனவே தமிழ்நாட்டுக்கும் ஈழநாட்டுக்கு மிடையிலான முருகவணக்கத் தொடர்புகளை நோக்குவது இவ்வாய்விலே அவசியமாகின்றது. பாண்டிய நாட்டுத் முருகத்தல விசேடங்கள் குறித்து நிலவும் கருத்தினை முதலிலே எடுத்துக் கொள்வோம்.

"தமிழ்நாடு என்று சிறப்பித்துச் சொல்லப்படும் பாண்டிய நாட்டுக்கும் முருக வணக்கத்துக்கும் மிகநெருங்கிய தொடர்புண்டு. குறிஞ்சிநாட்டுத் தெய்வம் என்ற முறையில் முருகன் தமிழ்நாட்டு மலையும் மலைசார்ந்த இடமுமான பிரதேசங்கள் யாவற்றுக்கும் உரிமையுடையவனாயினும், முருகவணக்கத்தைச் சிறப்பாக எடுத் துக்கூறும் பழைய தமிழிலக்கியங்கள் பாண்டியநாட்டோடு தொடர் புடையனவனாகக் காணப்படுகின்றன. *திருமுருகாற்றுப்படையிற்* காணப்படும் முருகனுடைய ஆறுபடைவீடுகளிலே குன்றுதோறாடல் தவிர ஏனையவை யாவும் பாண்டிய நாட்டோடு தொடர்புடை யனவே. படைவீடுகளில் ஒன்று திருச்சீரலைவாய் என்று பெயர்பெற் றது திருச்சீர் அலைவாய் என்பதுவே பின்னர் திருச்செந்தூர் எனப் பெயர்மாற்றம் பெற்றது."[58]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் குறிஞ்சியும் நெய்தலும் இணைந்த வழிபாட்டு மரபி லேயும் முருகவணக்கம் இருந்திருக்கலாம் என்ற எண்ணத்தைத் தூண்டும்வகையிலேயமையும் கருத்தும் மனங் கொள்ளத்தக்கது.

> **'களவொழுக்கம் குறிஞ்சிக்குச் சிறப்பானது. குறிஞ்சி நிலத்து இறைவன் முருகன். நெய்தற்றிணையில் அமைந்துள்ள சங்க காலச் செய்யுட்களிலே பெரும் பாலான களவொழுக் கத்தையே பாடுகின்றன. இரண்டு திணைகளுக்கும் உரிப் பொருள் ஒன்றுபோலவே அமைந்திருத்தலால் குறிஞ்சி நிலத்து முருகன் நெய்தல் நிலத்திலும் போற்றப்படும் மரபு தோன்றியிருக்கக் கூடும்.'**[59]

குறிஞ்சித்தெய்வமான முருகன் படைவீடுகளிலே திருச்சீரலை வாய் ஒன்றுதவிர ஏனையவை யாவும் மலைநாட்டோடு தொடர் புடையவை. கடற்கரை வெண்மணற் பிரதேசத்திலே கடலலைகள் மதில்மேல் மோதிக்கொண்டிருப்பதாய்த் திருச்செந்தூர் முருகன் கோவில் அமைந்துள்ளது. "திருநெல்வேலி மாவட்டத்தில் அமைந் துள்ள திருச்செந்தூர் பாண்டிய நாட்டின் பழைய தலைநகர் என்று கொள்ளப்படும் கொற்கைக்குச் சமீபத்திலே காணப்படுகிறது. பாண்டிய நாட்டின் பழைய தலைநகர்களாகத் தென்மதுரை, கபாடபுரம் என்பன இருந்து கடலாற் கொள்ளப்பட்டன என முச் சங்கம்பற்றிய பழைய கதை கூறுகிறது. பாண்டிய நாட்டின் பழைய தலைநகர் கடற்கரையில் அமைந்திருக்கலாம் என்பதற்கு இது சான்று. கபாடம் என்றால் முத்து. எனவே கபாடபுரம் முத்துக்குளிக்கும் இடத்திற்கு அயலில் இருக்கவேண்டும். கொற்கை, திருச்செந்தூர் என்பன அவ்வாறே அமைந்துள்ளன."[60]

தென்னிந்தியாவின் தென்கீழ்ப்பகுதியில் அமைந்துள்ள தமிழ் நாட்டின் தென்கீழ்த்திசையும் ஈழநாட்டில் வடமேற்றிசையும் மிகவும் அண்மையில் அமைந்துள்ளன. கோடிக்கரையிலிருந்து திருச் செந்தூர்வரையிலான தமிழ்நாட்டுப்பகுதி கடலாற் பிரிக்கப்பட்ட போதிலும் ஈழநாட்டுக்கு மிகவும் கிட்டவுள்ளது தமிழ்நாட்டுப் பகுதியாகும். வேதாரணியம், இராமேசுவரம் என்னும் தமிழ்நாட்டுச் சிவத்தலங்கள் இடைக்காலத்திலேயே செல்வாக்குப் பெற்று ஈழ நாட்டுச் சைவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டமை வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாற்று நிகழ்ச்சி. திருச்செந்தூர் பண்டைக்காலத்திலேயே செல்வாக்குப்பெற்றுவிட்டது.

தமிழ்நாட்டோடு ஈழங்கொண்டுள்ள தொடர்பிலே, பண்பாட்டுத் தொடர்புகளாகப் புராண இதிகாசங்கள் மூலமாகக் கிடைத்த சமய இலக்கியத் தெடார்புகளே வலுமிக்கனவாயமைந்துள்ளன. சமயச்சார்பான கருத்துக்களுக்குக் கொடுக்கப்பட்ட முதன்மையும் அக்கருத்துக்களை இலக்கியப் பேணலாகவே கைக்கொண்டுவரும் மரபும் சிறப்பான கவனத்திற்குரியனவாகின்றன.

சமய இலக்கிய வரலாற்றுக் கண்ணோட்டத்திற் *கந்த புராண* மரபின் செல்வாக்கினையும் சிவனுக்கும் முருகனுக் குமிடையேயுள்ள பேதாபேதங்களையும் இனிநோக்குவோம்.

புராணங்களிலே சரிதங்களும் சாத்திரங்களும் இணைந்துமிளிருகின்றன. மயக்கமுற்ற உயிர்கள் மலங்களின் வழிச்சென்று அல்லற்பட்டுப் பின்பு திருவருள் உணர்வுபெற்று இறைவனைப் போற்றித் தெளிவடைந்து முடிவான பயனை எய்திநிற்கும் நிலையே *கந்தபுராணத்தில்* விளக்கப்படுகிறது.

"சிவபெருமானுக்கு ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்ற ஐந்து முகங்களே கூறப்படுகின்றன. முருகப்பெருமான் ஆறுமுகங்கள் உடையவரென வருணிக்கப் படுகிறார். ஆறுமுகத்தத்துவங்கள் பலவிதமாகக் கூறப்படுகின்றன.

**'ஏவர்தம்பாலுமின்றி எல்லைதீர் அமலற்குள்ள**
**மூவிரு குணனும் சேய்க்கு முகங்களாய் வந்ததென்ன'**

என்ற *கந்தபுராணப்* பாடலிலிருந்து சிவனின் ஆறுகுணங்களும் (சிவனின் மூவிருகுணங்களாவன பொறுமை, தன்னடக்கம், பற்று நீக்கல், நடுநிலை, நம்பிக்கை, அமைதி என்பனவாம்.) முருகனிடத்திலே ஆறுமுகங்களாயின என்றறிய முடிகிறது."[61]

முருகன் அருஞ்செயல்களிலொன்று சூரபத்மனின்வதை. ஆன்ம ஈடேற்றத்திற்கு முருகன் ஆறு நல்ல குணங்களைக் கொடுக்கிறார். **பொறுமை, தன்னடக்கம், பற்றுநீக்கல், நடுநிலை, நம்பிக்கை, அமைதி** என்பன ஆறு நல்ல குணங்களாகும். இதனால் 'ஷட்வர்க்கதாத்ரே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வடமொழியில் அழைக்கப்படுகின்றார்.[62] முருகப்பெருமானுடைய ஆறு முகங்களின் தொழில்களும் அதற்கேற்பப் பன்னிரு கைகளினது தொழில்களின் தன்மையுங் கூறப்பட்டுள்ளன. '**முருகப் பெருமானுடைய பன்னிரண்டு கண்களும் பன்னிரு கருணைகளான ஆத்மஞானம், உண்மைபேசல், மனதை அடக்கல், வேதாந்த விசாரம், பொறாமையின்மை, அதர்மத்தில் வெறுப்பு, காலநிலை முதலிய இயற்கையால்வரும் துன்பத்தைத் தாங்குதல், புறங்கூறாமை, யாகம், தானம், பஞ்சபுலன்களை வெல்லல், நல்லது செய்வதில் உறுதி** என்பனவற்றைக் கொடுக்கின்றன என வடமொழித் தோத்திரமொன்று கூறும்."[63]

சூரபத்மன் ஓர் அவுணன். இவனைப்பற்றிய வரலாறு வடமொழி நூல்களிலே விசேடமாக உரைக்கப்படவில்லை. அங்கே பிரசித்தமாக வழங்கிவந்தது தாரகவதமே. *ஸ்காந்தபுராணத்தை* விரித்தெழுதியவர்கள் சூரபத்மனையும் தாரகனையும் அண்ணன் தம்பிகளாகப் பிணைத்து எழுதிவிட்டனர் என்றும் பௌராணிகர் **சிவஸ்ரீ வ.குகசர்மா** கூறுகிறார்.

## சிவன் முருகன் ஒருமைப்பாடு

**சிவனும் முருகனும் வேறல்லர்** என்ற கருத்தினைத் *திருமந்திரம், கந்த புராணம், தணிகைப்புராணம்* என்ற நூல்கள் விளக்கியுரைக்கின்றன. *திருமத்திரத்தில்,*

**'ஆறுமுகத்தில் அதிபதிநான் என்றும்**
**கூறு சமயக் குருபரன் நான் என்றும்**
**தேறினர் தெற்குத்திரு அம்பலத்துள்ளே**
**வேறின்றி அண்ணல் விளங்கி நின்றானே.'**[64]

என வருகிறது. மேலும்,

"மரமும் அதன் வயிரமும்போல சிவனும் முருகனும் வேறல்லர். சிவனே குகன் குகனே சிவன் ஆவன். '**தனக் குத்தானே மகனாகிய தத்துவன்**' என்கிறது *தணிகைப் புராணம்*, சிவபெருமான் சரவணப் பொய்கையின் அருகு நின்று உமாதேவியை நோக்கிப் பொய்கையில் விளையாடும் முருகனாகிய குழந்தைகளைச் சுட்டி, ஆதலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது சக்தி ஆறுமுகன் அவனும் யாமும் பேதகம் அன்
றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான் ஏதமில்
குழவிபோல்வான் யாவையும் உணர்ந்தான் சீரும் போத
மில் அழிவில் விடும் போற்றினர்க்கு அருளவல்லான்.”

எனக் *கந்தபுராணம்* கூறுகிறது.[65]

## சிற்பநூல்களிலே திருவுருவங்கள்

*அம்சுமத்பேதம், காமிகாகமம், குமாரதந்திரம்* முதலான ஆகமங்கள் முருகடைய வரலாறு, ஆலய அமைப்பு, மூர்த்திகளின் பேதங்கள், விழாக்கள், பூசைமுறை ஆகியவற்றை விளக்கிச் செல்கின்றன. *சில்பரத்னம் சில்பசாரம், மானஸாரம், காசியசில்பம்* போன்ற சிற்ப நூல்கள் கந்தன் திருவுருவ அமைப்புப்பற்றி விரிவாக எடுத்துக்கூறுகின்றன. **முருகனுடைய திருவுருவுங்கள் பதினாறு** எனக் ***குமாரதந்திரம்*** கூறுகிறது.

திருவாவடுதுறை ஆதினத்தைச் சேர்ந்த கச்சியப்பமுனிவர் இயற்றிய *தணிகைப்புராணத்தில்* முருகனின் திருவுருவங்கள் பலவற்றைப்பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சிற்பநூல்களிலே முருகனின் திருவுருவங்கள் எவ்வாறு செய்யப்பெறுதல் வேண்டும் என்று விளக்கிக் றப்படுகிறதோ அக்கருத்துக்களையே கச்சியப்ப முனிவர் தமிழிலே கதைவடிவில் ஆக்கித்தந்தருளுகின்றார்.

*கந்தபுராணம்* தனிவேல், சுடர்வேல், வடிவேல், உடம்பிடி, படைகள் நாயகம் என்றும் போற்றுகிறது. வீரவேல், தாரைவேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல், செவ்வேல், திருக்கைவேல், வாரிகுளித்தவேல், கொற்றவேல், சூர்மார்பும் குன்றும் துளைத் தவேல் என்றெல்லாம் புகழப்படுகிறது. முருகனுக்கு வேலவன்,வேற்பெருமான், வேலாயுதன், வெற்றிவேலன் என்ற பெயர்களும் உள. ‘வேள்’ என்ற பெயரினையும் *சூடாமணிநிகண்டு* குறிப்பிடுகின்றது.[66]

ஞானசக்திதரன், கந்தசுவாமி, சுப்பிரமணியர், களிறூர்திப்பெருமான் (கஜவாகனர்), சரவணபவன், கார்த்திகேயன், குமாரன், ஆறுமுகவர், தாரகாந்தகர், சேனாபதி, பிரமகாண்டன், வள்ளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்யானசுந்தரர், பாலசுப்பிரமணியர், கிரவுஞ்சபோதனர், சிகிவாகனர், அக்கினிஜாதர், சௌபேயர், காங்கேயர், குகன், பிரமசாரி, தேசிகர், முதலிய திருவுருவங்களும் சிற்பநூல்களிலே முருகனுக்குச் சொல்லப்படுகின்றன.[67] *தணிகைப்புராணம்* அகத்தியர்படலத்திற் கூறப்பட்டுள்ள பதினாறுவகை முருகமூர்த்தங்களின் உருவ இயல்புகள் *பழனிப்புராணம், கந்தபுராணம்* ஆகியவற்றாலும் நுவலப்படுகின்றன[68] எனத் தொடர்புபடுத்திக் கூறுவதுமுண்டு.

***கந்தசஷ்டிகவசம்***, **அழகுவேல், புனிதவேல், நல்வேல், பெருவேல், முனைவேல், செவ்வேல், கதிர்வேல், இனியவேல், வடிவேல், திருவேல், அருள்வேல், பருவேல், செவ்வேல், அயில்வேல், வல்வேல், கருணைவேல், முரன்வேல், எதிர்வேல், கனகவேல், வச்ரவேல், அனையவேல், சதுர்வேல், கூர்வேல், என்று வேலினது வகைகளைக் கூறுகிறது.**

"வேலாயுதம் மூன்று இலை வடிவாயுள்ளது. அஃது இச்சை, ஞானம், கிரியை எனப்படும் மூன்று சக்திகளின் தொகுதியானது. அவற்றுள் இச்சையானது ஆன்மாக்களுக்கு வீடுபேற்றை அருளவேண்டுமென்னும் விருப்பம். ஞானமானது அதற்கு வேண்டுபவைகளை அறியும் அறிவு. கிரியையாவது அறிந்தவைகளைச் செய்யுஞ் செயல்.

'இச்சா ஞானக் கிரியையெனும் இவை
மூன்றிலையாக்கிளைத்தெழுந்திட்
டச்சானாழியறச் சுவற்றுமயில் வேலொருகை.'

என்பது *தணிகைப்புராணம்.*

வேலாயுதம் மூன்று சக்திகளும்கூடிய தொகுதி வடிவமாகும்."[69] அகப்பகையை வென்றுநிற்பதால் வெற்றிக்குரியது என்னும் கருத் தில் வேல் எனப்பட்டது. முருகனைப் போற்றுதற்குரிய பதினாறு நாமங்களில் **'வேலேந்திய பெருமாள்'** என்பதுவுமொன்று[70] என்பதுவும் கவனத்திற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன் வைதாரையும் வாழவைப்பான்

> ‘ஏனை படைக்கலங்கள் யாவும் புறப்பகையை மாத்திரம் வெல்லும். உடம்மை அழிக்கும். ஆனால் இவ்வேலோ உடம்பை அழிக்காது. உயிரையும் போக்காது. உயிருக்கு மயக்க மூட்டும் அறியாமையை அகற்றி உள்ளொளியைப் பெருக்கும். பகைவரை அழிப்பது ஏனைய படைக்கலங்ளாக அமைய, இவ்வேலாயுதமோ பகை வரை வாழவிட்டுப் பகையை அழிப்பதாகும்.’[71]

*கந்தபுராணம், கந்தர்கலிவெண்பா* ஆகிய நூல்களைப்பற்றிக் கூறும்போது சைவசித்தாந்தக் கருத்துக்களினடியாக இவையிரண்டும் முருகனைத் துதிசெய்கின்றன என்ற கருத்துக் குறிப்பிடற்பாலது.

> ‘பதின்மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் எழுந்ததாகக் கருதப்படும் *கந்தபுராணம்* ஒருவகையிற் பல்லவர்கால பக்தி இலக்கியத்தின் விளைவு எனலாம். சைவத்தோத்திரப் பாடல்களிற் காணப்படும் புராணக்கதைகள் பல இந்நூலில் இடம் பெறுகின்றன. இந்நூல் கம்பராமாயணத்திற்குப் போட்டியாக எழுந்தது என ஒரு கதையுண்டு. கதையமைப்பு, கதைப்போக்கு என்பவற்றில் இரண்டு நூல்களுக்கும் ஓரளவு ஒற்றுமையுண்டு. *கந்தபுராணம்* ஒருவகையிற் சைவசித்தாத்தத்தின் விளக்கமாகும். கதையிடையிலே சைவசித்தாந்தக் கருத்துக்கள் நிறையக் காணப்படுகின்றன. குமரகுருபரருடைய *கந்தர்கலிவெண்பாவும்* சைவசித்தாந்தக் கருத்துக்களை எடுத்துக்கூறி முருகக்கடவுளைத் துதி செய்வதாக அமைந்துள்ளது.’[72] என்று கூறுவர்.

## பல்லவர்காலமும் பக்திப்பாக்களும்

> ‘சைவ, வைணவ பக்தியிலக்கியங்கள் சிறப்பாகப் பல்லவர் காலப்பகுதியிலேயே தோன்றுகின்றன. பதிகம் செல்வாக்குப் பெற்று பாவடிவமாக இக்காலத்தில் நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் கையாளப்பட்டுள்ளது. சங்ககாலத்தில் விளங்கிய அகத்திணை மரபுகள் நாயன்மார்களாலும் ஆழ்வார்களாலும் கைக்கொள்ளப்பட்டன.’[73]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறுவர். உலகியற்காதல் தெய்விகக்காதலாகத் தோத்திரப்பாடல்களிலே இடம்பெறுகின்றது. பழைய செய்யுள்மரபு புதுமுறையிற்கையாளப்பட்டது. கோவில்கள் சமுதாய நிறுவனங்களாக மாறிப் பொதுமக்களுக்குரிய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளுடன் அற்புதங்கள் நிகழும் இடங்களாகவும் விளங்கின.

> **'சமண, பௌத்த மதங்கள் வகித்த செல்வாக்கினைச் சைவ, வைணவ மதங்கள் பெற்றன. இறைவனின் திரு வுருவை ஊனக்கண்களாற் காணுவதற்கு விழைந்தது பக்தி நெறி.'**[74]

இந்த மரபின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாகவே பிரபந்தங்களது பொருளடக்கமும் அமைந்துள்ளன. பேராசிரியர் கலாநிதி க.கைலாசபதி, கவிதைக்கு உயிர்நாடியாகவிருக்கும் அம்சங்களைத் தொட்டுக் காட்டியெழுதிய அருமையான கட்டுரையொன்றிலே **உணர்வுத்தாக்கத்தினை அழுத்திக் கூறுமிடம்** பிரபந்தக் கவிஞர்களது பக்தியனுபவ வெளிப்பாட்டுணர்ச்சிக்கும் பெரிதும் பொருந்துவதாயுள்ளது.

> **'சொல்லலங்காரம், சப்தநயம், உவமை, உருவம் முதலிய சிறப்புக்களும் உணர்வினைத்தாக்கி வாழ்க்கைக்குப் புதிய விளக்கத்தைத் தரவல்ல கருத்துமே கவிதைக்கு உயிர் நாடியாக இருப்பதைப் பலரும் ஏற்றுக்கொள்வர் என்பர்.'**[75]

பல்லவர் காலத்தில் நாயன்மார்களால் அருளிச்செய்யப்பட்ட தேவாரப்பதிகங்கள் இன்றுவரை கோவில்களில் ஓதப்பட்டு வருகின்றன. 'திருப்பதியம் ஓதுவார்க்கு' என்ற குறிப்பும் அவர் தொடர்பான வேறுபல விபரங்களும் கல்வெட்டுக்களிலே காணப்படுகின்றன.

திருமுறையோதும் வழக்குக்குறித்தும், அவை கோவில்களிலே ஓதும் முறைமை குறித்தும் **பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை** விவரிக்கிறார்.

> **'முதலாம் இராசராசன் காலத்திலிருந்து தேவாரம் பாடியவரைப்பற்றிய செய்திகள் சாசனங்களிற் பயின்றுவந்துள்ளன. தேவாரப்பதிகங்களிற் சில அவ்வக்கோவில்களிலே அவை பாடிய நாயன்மார் காலங்களிலிருந்து ஓதப்பட்டுவந்திருக்கலாம். ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுச் சாசனங்களிலே திருப்பதிகங்கள் சில கோவில்களில் ஓதப்பட்டுவந்தமைக்குச் சான்றுகளுண்டு.'**[76]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறைகளிற் பக்திநலன்

திருமுறை இலக்கியங்களிலே கூறப்பட்டுள்ள தத்துவார்த் தங்கள், முருகனைப்பற்றிய செய்திகள் பிற்காலப் பிரபந்தங்க ளிலே சிறப்பாக எடுத்தாளப்பட்டுள்ளன. சுருங்கிய பாடல்களில் அமையும் திருமுறை வருணனைகள் பிரபந்தங்களில் நீட்சிபெற்று மிளிருகின்றன. திருமுறை இன்னிசைத்தமிழ்ப் பாடல்களைப் **'பக்திமைப் பாடல்கள்'** என்ற பெயர்கொண்டு அழைப்பர் **பேராசிரியர் க.வெள்ளைவாரணனார்.** இறைவனது மெய்மைசேர் புகழ்த்திறங்க ளைப் பரவிப்போற்றும் செந்தமிழ்க் கீதங்களாகிய தெய்வப் பாடல்கள் மிகவும் இன்றியமையாதனவாகும். இத்திருப்பாடல்கள் திருக்கோவில்களில் இறைவனைப் பேரன்பினால் வழிபட்டு நடை பெறக்கருதி வரும் பல்லாயிரம் மக்களது உள்ளத்தை நெகிழ் வித்து அன்னோருள்ளத்தில் அருளனாகிய இறைவன் கோவில் கொண்டு விளங்கும் வண்ணம் பக்தியை விளைவிக்கும் ஆற்றல் வாய்ந்தன.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், நம்பியாரூரர் முதலிய அருளாசிரியர்கள் காலத்திலே தமிழ்நாட்டுத் திருக்கோவில்களில் இறைவனது பெருங்கருணைத்திறத்தை வியந்துபோற்றும் பக்திப்பாடலாகிய இசைத்தமிழ்ப்பாடல்கள் சிறப்பிடம் பெற்றி ருந்தன. இச்செய்தி,

> **'செந்தமிழோர்கள்பரவியேத்துஞ் சீர்கொள்செங் காட்டங்**
> **குடியதனிற் கந்தம் அகிற்புகையே கமழும் கணபதீச்சரம்.'**

எனவும், **'பண்ணியல் பாடலறாத ஆவூர்ப்பசுபதி யீச்சரம்'**எனவரும் சம்பந்தர் வாய்மொழிகளால் நன்கு புலனாகும்.

பண்டைக்காலத்திலே திருவாவினன்குடி முதலிய முருகன் திருக்கோவில்களிலே **பக்திமைப்பாடல்களாகிய தெய்வப்பாடல்களை இசையுடன் பாடுவோரும் யாழில் இசைப்போரும் ஆகிய இசைவாணர் கள் அழுக்கேறாத தூயவுடையும், நோயின்றித் தூய்மைவாய்ந்த உடல்வனப்பும், மாசற்ற தூய நன்நெஞ்சமும் உடையராய் விளங்கினர்** என்பதனை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'புகைமுகந் தன்ன தூவுடை மாசில்**
**முகைவாய விழ்ந்த தகை சூழாகத்துச்**
**செவிநேர்பு வைத்த செய்வுறு திவலின்**
**நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்**
**மென்மொழி மேவலர் கின்னரம் புரள**
**நோயின் றியன்ற யாக்கையர் அவிர்தொறும்**
**பொன்னுரை கடுக்குந்திதலையர் இன்னகைப்**
**பருமந் தாங்கிய பணிந்தேந்தல்குல்**
**மாசில் மகளிரொடு மறுவின்றி விளங்க.'**

(திருமுருகு .138-147)

என வரும் தொடர்களால் நக்கீரனார் விரித்துக்கூறியுள்ளார். பண்டைக்காலத்து நிலவிய இம்முறை தேவார ஆசிரியர் காலத்தும் தமிழகத் திருக்கோவில்களிலே தொடர்ந்து நிலைபெற்று வந்துள்ளது என்பது மனங்கொள்ளத்தக்கது.

இயற்கைவனப்பும் தெய்வவனப்புமாகிய இருவகை வனப்புகளே இசைப்பாடலுக்குரிய சிறப்புடைப்பொருளென முன்னோர் கருதினர். இசைப்பாடல்கள் யாவும் முதற்பொருளும் கருப்பொருளுமாகிய உலகியற் பொருள்களின் இயற்கையழகினையும் இவற்றின் உடனாய் விளங்குந்தெய்வ அழகினையும் பொருளாகக்கொண்டு பாடப்பெறுவனவாயின. இசையில்வல்ல பாணர் முதலிய கலைச் செல்வர்கள் தம் இசைத்திறத்தை அவையின்கண் புலப்படுத்தும்பொழுதெல்லாம் இசைப்பாடல்களுக்குச் சிறப்புடைப் பொருளாகத் திகழும் முழுமுதற் கடவுளைப் போற்றும் தெய்வப் பாடல்களைப் பாடுதலையே தமது இசைமரபாகக் கொண்டிருந்தனர். பக்தியமைப்பாடலாகிய தெய்வப்பாடல் முற்காலத்தில் 'வாரம்' என்ற பெயராலும் வழங்கப்பெற்றதெனத் தெரிகிறது. *சிலப்பதிகாரம்* அரங்கேற்றுக்காதையில் 'வாரம் இரண்டும் வரிசையிற்பாட' என வருந் தொடருக்கு,

"அடிமுதிர்ந்தோராகிய மகளிர் நன்மையுண்டாகவுந்
தீமை நீங்கவும் வேண்டித் தெய்வப்பாடல் பாட."

என அரும்பதவுரையாசிரியரும் அடியார்க்கு நல்லாரும் பொருள் வரைந்துள்ளார்கள். தெய்வத்தைப் பண்பொருந்தப் போற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிப்பாடிய இசைப்பாடல் தேவபாணியென வழங்கப்பெறுவதாயிற்று. தெய்வத்தை முன்னிலையில் அழைத்துப் பரவிய பாடலே தேவ பாணியென வழங்கும் சிறப்புடையதாகும். இதனை,

> "ஏனையொன்றே
> தேவர்ப்பராஅய முன்னிலைக்கண்ணே."

என்ற *தொல்காப்பியச்* செய்யுளியற் சூத்திரத்தில் ஒத்தாழி சைக்கலியின் வகையாகத் தொல்காப்பியனார் குறித்துள்ளார். **தேவபாணியென்னும் பெயரையொட்டியே 'தேவாரம்' என்னும் பெயரும் தோன்றி வழங்கியிருத்தல் வேண்டும்.**

இன்னிசையால் இறைவனைப் பாடிப்போற்றுதலையே பண்டை யோர் சிறப்புடைக் கடவுள் வழிபாடாகக் கைக்கொண்டொழுகினர். அதனாலே தெய்வ இசைப்பாட்டினைக் குறித்த தேவாரம் என்னும் சொல் இறைவனை உளமுருகிப் போற்றும் வழிபாடு என்ற பொருளிலும் வழங்கப்பெறுவதாயிற்று. பிற்காலத்துச் சோழமன் னர்கள், தாம் வழிபடுதற்கென அமைத்துக்கொண்ட இறைவனது திருவுருவினைத் **'தேவாரதேவர்'** எனவும் திருப்பதிகம் ஓதி வழிபாடு செய்தற்குரிய பூசையிடத்தினைத் **தேவாரச் சுற்றுக்கல்லூரி** யெனவும் தாம் செய்யும் சிவபூசைக்கு உதவியாக மூவர் திருப் பதிகங்களையும் இசையுடன்பாடி உள்ளத்திற்கு அமைதியுண் டாக இசைத்தொண்டு செய்பவரைத் **'தேவாரநாயகம்'** எனவும் கல்வெட்டுக்களிற் குறித்துள்ளனர்.

> "கண்ணப்பநாயனாரின் கதையினைப் பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் கூறும்போது முருகமர் அலங்கல் செவ்வேள் முருகவேள் முன்னிற் சென்று பரவுதல்செய்து நாளும் பராய்க்கடன் நெறியில் நிற்பார். வாரணச் சேவலோடும் வரிமயில் குலங்கள் விட்டார் என்று குறிப்பிட்டுள்ளார்."[77]

கச்சியப்பசிவாசாரியார், அருணகிரிநாதர், சம்பந்த சரணாலயர், சிதம்பரசுவாமிகள், பாம்பன் சுவாமிகள் முதலானனோரும் முருகன் புகழ்பாடியுள்ளனர். இராமலிங்க அடிகளார் திருத்தணிகை முருகன் பேரிலும் சென்னைக் கந்த கோட்டத்துக் குமரன் பேரிலும் பாடிய பாமாலைகள் புகழ்பெற்ற பாடல்களாகும். ஞானியார்சுவாமிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முருகர் அந்தாதியும்* திரு.வி.கவின் *முருகன் அருள் வேட்டல்* என்னும் தோத்திரப்பாடல்களும் முருகன் புகழைக்கூறுவன.

தேசியக்கவி மகாகவி சுப்பிரமணியபாரதியாரும் வேலவன் பாட்டு, வள்ளிப்பாட்டு எனச் சமூகநலன்நோக்கு மேலிட முருகன் மீது பாப்புனைந்துள்ளார். **'தமிழ்ப்பாவலர்க் கின்னருள் செய்குவான், இந்தப் பாரிலற மழைபெய்குவான்'** என்று முருகனிடத்திலே பாரதி யார் வேண்டுதல்செய்கின்றார்.

## முருகன் புகழ்பாடும் பன்னிரு திருமுறைகள்

"சைவத்திருமுறைகள் பன்னிரண்டிருப்பதுபோல் முருகப் பெருமானின் துதிநூல்களும் பன்னிரண்டு திருமுறைகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. சைவத்திருமுறைகளில் நால்வர் (சமய குரவர்) அருளிய தேவார திருவாசகங்கள் முதன்மை பெறுவது போல் அருணகிரிநாதர் அருளிய *திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருவகுப்புக்கள், வேல்விருத்தம், மயில் விருத்தம்* என்பன சிறப்பிடம் பெற்றிருக்கின்றன. சைவத்திருமுறையிற் பதினொராந் திருமுறை பல அடியார்களின் திருப்பாடல்களின் தொகுப்பாய் விளங்குவது போன்று *முருகவேள் பன்னிருதிருமுறையின் பதினொராந் திருமுறையில்* முருகவேள் அடியார்கள் பலரின் திருப்பாடல்கள் தொகுக்கப்பெற்றுள்ளன."[78] நம்பியாண்டநம்பியும் இராசராச சோழனும் சைவத்திரு முறைகளைத் தேடியெடுத்துத் தொகுக்கும் பணியில் ஈடுபட்டமை போன்று அருனகிரிநாதரின் திருப்புகழைத் தேடித் தொகுத்து எழுத்துப்பிழையற அச்சேற்றியவர் **திரு.வ.சுப்பிரமணிய பிள்ளையாவார்,** இவரின் மகன் **திரு.வ.சு.செங்கல்வராயபிள்ளை** திருப்புகழுக்கு உரையெழுதியும் திருப்புகழ் தவிர்ந்த பிற முருகனருள் நூல்களைத் தொகுத்தும் பெருந் தொண்டாற்றியிருக்கிறார்.

முருகவேள் பன்னிரு திருமுறையிற் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கு முன்னிருந்த பெரியோர்களின் பாடல்கள் தொகுக்கப்பட்டுள்ளன என்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரும் வாழ்ந்த பெரியோர்களின் பாடல்கள் உரிய காலத்திற் பதினோராம் திருமுறையின் இரண்டாம் பகுதியாக இணையலாமென்றும் குறிப்பிட்டிருப்பது கவனித்திற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*திருமுருகாற்றுப்படை* முருகபபெருமானைக்குறித்த *பரிபாடல் கள், கல்லாடம், கந்தபுராணம்,* ஆறுபடைவீடுகளுக்குரிய தலபுரா ணங்கள், முருகப்பெருமான்மீது பாடப்பட்ட பிள்ளைத்தமிழ் நூல் கள் முதலியன முருகவேள் பன்னிரு திருமுறைத் தொகுப்பின் பதினொராம் திருமுறையில் இடம்பெற்றிருக்கின்றன.

## முருகனடியார் பெருமை

சைவத்திருமுறையின் பன்னிரண்டாம் திருமுறையாகத் திருத் தொண்டர்கள் வரலாறு *பெரியபுராணமாய்* அமைந்திருப்பது போன்று முருகவேள் பன்னிரு திருமுறையின் பன்னிரண்டாம் திருமுறையாக முருகப்பெருமான் அடியார்களான "சேய்த் தொண்டர்" வரலாறுகள் விளங்குகின்றன. இந்தச் *சேயத்தொண்டர் புராணத்தை* வரகவி **தேனூர் சொக்கலிங்கம்பிள்ளை** என்னும் முருக பக்தர் பாடியிருக்கின்றார்.

> **'இரண்டாயிரத்து எழுநூற்றி எட்டுப் பாடல்களால் விளங்கும் *சேய்த்தொண்டர்புராணத்தில்* நாற்பத்தொரு முருகனடியார் களின் வரலாறு உள்ளது. இவ்வடியார்களும் பத்தொன் பதாம் நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்தவர்கள் என்பது குறிப் பிடத்தக்கது. சேய்த்தொண்டர்புராணத்திற் கூறப்பட்டுள்ள அடியார் வணக்கமாக *சேய்த் தொண்டர்தொகை* என்னும் பதிகம் ஒன்றும் உள்ளது. இதைப் பாடியவரும் சொக்கலி ங்கம் பிள்ளையவர்களே யாவர். எட்டுப்பாடல்களால் அமைந்த சேய்த்தொண்டர் பதிகத்தின் கடைசி அடிகள் எல்லாம் 'எம்மாள் எந்தி ருத்தணிகை அம்மானுக்காளே.' என்றே உள்ளன.'**[79]

சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிய *திருத்தொண்டத்தொகை* 'தில்லைவாழ்ந்தனர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங் குவதுபோன்று *சேய்த்தொண்டத்தொகை* 'செந்தில்வாழ் அந்த ணர்தம் அடியார்க்கும் அடியேன்' என்று தொடங்குகின்றது. **தில்லை கூத்தப்பெருமானுக்கு ஒப்பானவர்கள் தில்லைவாழ் அந்தணர்** எனக் *கோயிற்புராணம்* கூறும். செந்தில்வாழ் அந்தணர்கள் செந்தி லாண்டவனுக்கு ஒப்பானவர்கள் என்பதை 'திரிசுதனுந்தரா பேத மூர்த்தி' என்று *சுப்பிரமணியபராக்கிரமம்* குறிப்பிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழநாட்டில் முருகவழிபாட்டின் தோற்றமும் வளர்ச்சியும்

"இந்தியாவில் ஆதிச்ச நல்லூர் என்னுமிடத்தில் நடந்த தொல்பொருளியல் ஆய்வு, அப்பகுதி சுமார் கி.மு ஆயிரத்து இருநூறு ஆண்டளவில் முருகவழிபாட்டிலே முக்கியதத்துவம் பெற்றிருந்ததை எடுத்துக்காட்டியுள்ளது. *திருமுருகாற்றுப்படை* சுட்டும் முருகன் கோவில்களான படைவீடுகளும் பல பாண்டிய நாட்டைச் சேர்ந்தவையாக உள்ளன. பாண்டிய நாட்டின் தலைநகரான கொற்கை திருச்செந்தூருக்குச் சிறிது மேலே கடற்கரைப்பட்டினமாக ஈழநாட்டிற்கு அண்மையில் அமைந்திருந்தது. எனவே **பாண்டிய நாட்டிலே சிறப்புற்றிருந்த** முருகவழிபாடு **பண்டைக் காலத்திலேயே ஈழநாட்டிலும் சிற்ப்புற்றிருந்திருக்க இடமிருந்திருக்கின்றது.**"[80]

**'இந்தியாவிலே நிலவிய** முருகவணக்க **மரபுகள் ஈழத்திலேயும் காணப்படுகின்றன என்பதற்கு அனுராதபுரம், புத்தளம், பொன்பரிப்பு ஆகிய இடங்களிற் கிடைத்துள்ள தொல்லாதாரங்கள் சான்று கூறுகின்றன. அனுராதபுரத் தமிழ்ச்சாசனங்களும் பொன்பரிப்பிலே தாழிக்காட்டிற் கிடைத்த வேலும் வரலாற்றைத் துலக்கும் சான்றுகளெனலாம்.'**

கி.பி ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளுக்குரிய அனுராதபுரச் சாசனங்கள்பற்றி அண்மையிற் புதிய சில செய்திகள் வெளிவந்துள்ளன. அவற்றுள் **திருச்செந்தூர்க் கல்வெட்டுக்கும் அனுராதபுரச் சாசனதிற்குமிடையே உறவு குறிப்பிடப்படுகின்றமையும் ஒன்று.** திருச்செந்தூர்க் கோவிலுக்கு ஒன்பதாம் நூற்றாண்டுப் பிற்பகுதியிலேயே இரண்டாம் வரணகுணபாண்டியன் (கி.பி862-880) செய்த தானத்தைப்பற்றிய குறிப்பு திருச்செந்தூர்க் கல்வெட்டிலே இடம் பெறுகின்றது. "திருச்செந்தூர்க்கடலுக்கு அண்மையிலே மறுகரையில் அமைந்துள்ள இலங்கையின் தலை நகரிலுள்ள அனுராதபுரத்து முருகன் கோவிலுக்கும் தானங்கள் வழங்கப்பட்டி ருக்கவேண்டுமென்ற செய்தி அனுராதபுரத்துச் சாசனங்களால் உறுதிப்படுகிறது" என்பார் **பேராசிரியர், கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுராதபுரக் கல்வெட்டுக்களில்வரும் 'குமாரகணத்திப் பேரூர்' என்பதிற் 'குமாரகணம்' என்பது முருகன் கோவிலை மேற்பார்வை செய்யுங் குழுவாகும். குமாரன், முருகன், சுப்பிரமணியன், கந்தன் முதலியன ஒரே தெய்வத்தைக் குறிக்கும் பெயர்கள்.

> **'கி.பி ஒன்பதாம், பத்தாம் நூற்றாண்டுகளிலே முருகன் கோவிலுக்கான தானத்தைக் குறிப்பிடும் சாசனம் தென்னிந்தியாவிலேகூட ஒன்றுமட்டுமே கிடைத்துள்ளது. ஒன்பதாம் நூற்றண்டுப் பிற்பகுதியிலே இரண்டாம் வரகுணபாண்டியன் (862-880) திருச்செந்தூர்க் கோவிலுக்குச் செய்த தானமே அது. இந்தச் செய்திகளாலே தமிழகத்து ஈழத்து உறவுகளை அறிய முடிகிறது.'**[81]

தமிழ் ஈழத்திற்கும் தமிழ் இந்தியாவுக்கும் இடையே பாரம் பரியமான உறவுகள் நெடுங்காலமாக நிலவிவந்துள்ளன. ஈழத்தின் பூர்விக வரலாற்றினை உணர்ந்துகொள்வதற்கு வேண்டிய ஆதார பூர்வமான தகவலைத் தந்துதவக்கூடிய வழித்துறைகளில் ஆய்வுகள் போதியளவு இடம்பெறாமையாற் பூர்விகக்குடிகள்பற்றிக் கருத்துரைத்தல் ஊகத்தின்பாற்படுவதாக அமைகின்றன.

> **'தமிழ் ஈழத்திற்கும் தமிழ் இந்தியாவுக்கும் இடையே புவியியல் அண்மை அவற்றிடையே காணப்படும் பாரம்பரியமான உறவுகளுக்கு முக்கிய காரணமாய் அமைந்தது என்பதை மறுத்தலரிது. பல்வேறு காரணிகளாளே தமிழ் இந்தியாவிலிருந்து புலப்பெயர்வு ஏற்பட வேண்டிய சூழல்கள் தோன்றிய போது புவியியல் அண்மை அதற்கு அனுகூலமாக இருந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தல் பொருந்துவதேயாகும். தமிழகத்திலே தம்மாணையை நிறுவிய பேரரசர்களும் புவியியல் அண்மையால் ஈழத்தின்மீது தம்மாணையைச் செலுத்த முற்படக்கூடியதாய் இருந்தது.'**[82]

என்ற கருத்துக்களும் காணத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சோழநாட்டுள்ள வேதாரணியத்துச் சிவாலயம் யாழ்ப்பாணத் துத் தில்லை நாதத்தம்பிரானாலே கட்டப்பட்ட தென்பதும் அவர் தஞ்சாவூர் மகாராசாவுடைய புத்திரனுக்கு விபூதிசாத்தி நோய் நீக்கியருளினமைபற்றி அம்மகாராசாவினாலே கோடிக்கரையில் உப்பளமும் கோடிக்கரைத் தோப்புத்துறைகளிலே ரேகுச் சுங்கமும் பல விளைநிலம் தோட்டங்களும் அவ்வாலயத்தின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்டனவென்பதும் அக்காலமுதல் இக்கால வரையும் அவ்வாலயத்துக்குத் தர்மகர்தாக்காளாயுள்ளோர் யாழ்ப்பாணத் துள்ள சைவாசாரியர்களே என்பதும் இந்தச் சைவாசாரியர்கள் சோழதேசத்துச் சைவாசாரியர்களோடு போசன முதலியவற்றாற் கலப்புடையவர்களென்பதும் சிலாசாசனம், தாமிரசாசன முதலி யவைகளாலே தெளியப்படும்."[83] சிதம்பரத்திலுள்ள கட்டளை மடங்களுள் எட்டு மடங்கள் யாழ்ப்பாணத்து மடங்கள். அவைக ளுக்குத் தாவர சங்கமப்பொருளைத் தானஞ் செய்தவர்கள் யாழ்ப் பாணத்தார்கள். அவர்கள் சோழதேசத்திற் சைவர்களோடும் போசன முதலியவற்றாற் கலப்புடையவர்கள். **திருவாவடுதுறை யாதீனம், தருமபுராவாதீனம், திருவண்ணாமலையாதீனம், சொர்க்க புரவாதீனம் முதலிய சைவாதீனங்களாலே பண்டைக் காலமுதல் இக்காலம்வரையும் தம்பிரானாயுள்ளவர்களுள் ஒருசிலர் யாழ்ப்பாணத் தவர்களாவார்.**[84] என உரைக்கப்படுவதும் நோக்கற்பாலது.

வைதிகமரபு தமிழரிடையே வந்து கலந்தபொழுது முருகன் சுப்பிரமணியனாகி அவன் சிவபெருமானின் திருப்புதல்வனாகவும் கொள்ளப்படலானான். வடமொழிப்புராணக்கதைகள் அவனைப் படிப்படியாக ஆரியத்தெய்மாக்கிவிட்டன. இன்று முருகனைக் கந்த சுவாமி, சுப்பிரமணியன், சரவணபவன், குமாரன் என்ற வட மொழிப் பெயர்களால் வழங்கும் மரபு அவனுக்குரிய கோவில் அமைப்பு, பூசைகள் என்பன குமாரதந்திர ஆகம முறையிலே நிகழ்வதும் வழக்கமாய்விட்டன. ஆகம மரபுவழிபட்ட முருக வழிபாடு தமிழகத்திலேயே பெரும்பாலும் நிகழ்ந்து வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A (Jaffna)

## வடஇலங்கையில் முருகவழிபாடு

**ஈழத்தின் வடபாலும் முருகவணக்கம் செழிப்புற்றிருந்ததென்பது உண்மையாகும்.** இக்கூற்றைக் கந்தரோடையிற் கிடைத்த 'வேல்' செல்வச்சந்நிதியில் இன்றும் நிலைபெறும் வேலன்வழிபாடு, *யாழ்ப் பாண வைபவமாலையில்* வரும் கதிரமலை ஆண்டார்பற்றிய செய்திகள் என்பன உறுதிப்படுத்துகின்றன.

**'மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருச்செந்தூருக்கு இணையான திருத்தலமாகச் சுட்டப்படுகிறது'**[85] என்ற கருத்து அண்மையிலே சிறுபிரசுரமொன்றினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

"மகிமைமிக்க வரலாற்றைக் கொண்டமையுந்தலம் மாவிட்ட புரம்"[86] என்று குறிப்பிடுகின்றார் **பேராசிரியர் கலாநிதி க.கணப திப்பிள்ளை.** இதுவரை கூறப்பட்டுள்ள கருத்துக்களைக் கொண்டு நோக்கும் போது தமிழ்நாட்டு முருகவழிபாட்டு மரபு ஈழத்திலும் வேரூன்றியுள்ளதென்பது தெளிவாகின்றது.

இவ்வியலிலே இதுவரை எடுத்துக்கூறப்பட்ட கருத்துக்களி லிருந்து முருகனுக்குரிய பெயர்கள், புராணதத்துவார்த்தக் கதை கள், பக்தியிலக்கியத்தின் தனித்தன்மை, திருமுறைகளின் சிறப்பு என்பன குறித்து அறிந்து கொள்ளக் கூடியதாயிற்று.

ஈழத்துப்பிரபந்தங்களின் கவித்துவ வளர்ச்சியினை அடுத்த இயலிலே நோக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புக்கள்

1. *புறநானூறு, (புறம்)* கடவுள் வாழ்த்துச் செய்யுள்.
2. *புறம்*.6.
3. *புறம்*.91
4. *கலித்தொகை,* (கலி), 150.
5. *கலி,* 150.
6. *கலி*.2.
7. *மதுரைக்காஞ்சி,* 455.
8. *கலி,* 26.
9. *கலி.* 150.
10. *கலி.* 150.
11. *கலி.* 81.
12. *திருமுருகாற்றுப்படை*.154.
13. *புறம்.* 174, *பெரும்பாணாற்றுப்படை (பெரும்பாண்),* 30.
14. *பரிபாடல்,* (பரி), 13.
15. *கலி.* 104, *பதிற்றுப்பத்து,* (பதிற்), 31.
16. *பதிற்,* 31.
17. *பரி.* கடவுள் வாழ்த்து.
18. *புறம்* 56.
19. *கலி*.105.
20. *மதுரைக்காஞ்சி,* 591.
21. *கலி,* 124.
22. *புறம்,* 198.
23. *புறம்,* 174.
24. *அகநானூறு,* (அகம்), 59.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. *திருக்குறள்*, (குறள்), 1103.

26. *குறள்,* 610.

27. அருணாசலம், ப., *பக்தி இலக்கியம்*, இரண்டாம் பதிப்பு. பாரி புத்தகப்பண்ணை, அன்னை அச்சகம், 1983, ப.29.

28. *அதேநூல்.*, பக். 57-59.

29. வேலுப்பிள்ளை, ஆ., "அப்பர் தேவாரத்துள் சிவசூரிய வழி பாடு", இந்துதருமம், இந்து மாணவர் சங்கம், பேராதனைப் பல்கலைக்கழகம், 1979.

30. நவரத்தினம், செ., *முருகவணக்கம்* (ஆரம்பகாலம் தொடக்கம் ஒன்பதாம் நூற்றாண்டு இறுதிவரை), தமிழ் முதுமாணி (எம். ஏ.)ப் பட்டத்திற்கான ஆய்வுக்கட்டுரை, பேராதனைப் பல்கலைக்கழகம். 1975.

31. *தொல்காப்பியம்* (முழுவதும்), அகத்திணையியல், சூ.5, புலியூர்க்கேசிகன் தெளிவுரையுடன், ஐந்தாம் பதிப்பு, பாரி நிலையம், சென்னை, 1975, ப.254.

32. *அகம்.* 1:3:, 59:11, 98:10, 158:16.
*புறம்.* 34:4, 299:6.

33. *குறுந்தொகை*, 362:1.
*அகம்.* 22:11, 118:5, 138˙10, 181:6 232:14, 272:13
*புறம்.* 56:14.
*நற்றிணை*, 34:11, 82:4.
*ஐங்குறுநூறு*, 245:3, 247:3, 249:2, 308:4.
*பதிற்.* 26:12.
*மதுரைக்காஞ்சி*,181
*பொருநராற்றுப்படை*, 131.

34. *அகம்.* 266:21.
*புறம்.* 14:19, 22:29, 109::19, 225:20.
*குறுந்தொகை*, 1சூ.
*ஐங்குநூறு*, 242:5
*குறிஞ்சிப்பாட்டு*,51.
*மலைப்படுகடாம்*, 293.
*பெரும்பாண்.* 458.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. *அகம்.* 22:6, 98:27, 120:1, 272:15, 382:5.
*புறம்.* 55:9.
*குறுந்தொகை,* 111:2.
*நற்றிணை,* 173:9, 288:10.
*மதுரைக்காஞ்சி,* 165.
*பெரும்பாண்.,* 75.

36. *திருமுருகாற்றுப்படை, பழமுதிர்ச்சோலை,* 225.
*பரி,* 8:126, 19:2, 19:104.
*சிலப்பதிகாரம், குன்றக்குரவை,* 10:14.

37. வித்தியானந்தன், சு., *தமிழர் சால்பு,* மூன்றாம் பதிப்பு, பி.ஆர். வி.பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை, 1985, ப.118.

38. *அதேநூல்.,* ப.119.

39. வேலுப்பிள்ளை, ஆ., *தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்* (தொடக்கப் பேருரை), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1986, ப.13.

40. சிவபாதசுந்தரனார், நா., *புறப்பொருள்வெண்பாமாலை ஆராய்ச்சி,* வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச்சங்க வெளியீடு,1972,ப.68.

41. *அதேநூல்.,* ப.450.

42. *பரிபாடல்,* செவ்வேள் செய்.10, இரண்டாம்பதிப்பு, புலியூர்க்கேசிகன் தயாரிப்பு, அருணாபப்பிளிகேஷன். சென்னை, 1963,ப.228.

43. சந்திரசேகரம், ப., 'திருப்பரக்குன்றின் மாட்சியும் கடவுட் காட்சியும், *வாரமுரசொலி,* 28.12.1986.

44. *அதேகட்டுரை.*

45. சேதுப்பிள்ளை, ரா.பி., *வேலும்வில்லும்,* நான்காம் பதிப்பு, பழனியப்ப பிறதர்ஸ், சேப்பாக்கம், சென்னை, 10.1.1957.ப.1.

46. *சிலப்பதிகாரம்,* குன்றக்குரவைச்செய்யுட்கள் 8,9,10. பத்தாம் பதிப்பு, புலியூர்க்கேசிகன் தெளிவுரையுடன், பாரிநிலையம், பிராட்வே, சென்னை, 1976, ப.325.

47. இராமசுவாமி, க., *முருகன் முனைப்பே முனைப்பு,* திருமகள் அழுத்தகம், சுன்னாகம்,1984,ப.5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. *அதேநூல்,* ப.21.

49. *அதேநூல்,* ப.22.

50. Veluppillai, A., *Tamil influence in Ancient Sri Lanka with special Reference to Early brami Inscription*, p.17 (Re - print from Journal of Tamil Studies, p.17).

51. கிருபானந்தவாரியார், *கந்தரனுபூதி விரிவுரை,* திருப்புகழமிர்தம், சிந்தாதிரிப்பேட்டை, சென்னை, 1954, ப.75.

52. *அதேநூல்,* ப.14.

53. கதிரைவேற்பிள்ளை, நா., *சுப்பிரமணியபராக்கிரமம்,* சரஸ்வதி புத்தகசாலை, 175 செட்டியார் தெரு, கொழும்பு, 1960,ப.39.

54. *அதேநூல்,* ப.241.

55. வையாபுரிப்பிள்ளை, எஸ்., *அகராதி நினைவுகள்,* தமிழ் புத்தகாலயம், மங்கை அச்சகம், இராயப்பேட்டை, சென்னை,1959, ப.62,66,75.

56. நவரத்தினம், செ.,"*முருக வணக்கம்*", முதுகலைமாணி ஆய்வுக்கட்டுரை, பேராதனைப்பல்கலைக்கழகம், பேராதனை,ப.94.

57. இக்கருத்துக்கள் இவ்வாய்வுக்கட்டுரையினை எழுதுவது தொடர்பான சந்திப்பிலே பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளையவர்கள் கூறியவை.

58. வேலுப்பிள்ளை, ஆ., *தமிழர் சமய வரலாறு,* பாரி புத்தகப் பண்ணை, வெற்றி அச்சகம், சென்னை, 1980, ப.166 - 167.

59. முருகவணக்கம் குறிஞ்சிநிலத்திற்கும் நெய்தல் நிலத்திற்குமுரிய வழிபாட்டு மரபாக அமைந்திருத்தல் கூடும் என்றகருத்தினை இவ்வாய்வுக்கட்டுரையினை மேற்பார்வை செய்தபோது சற்று விரிவான விளக்கத்துடன் எடுத்துரைத்தவர், பேராசிரியர் கலாநிதி ஆ.வேலுப்பிள்ளையவர்கள்.

60. வேலுப்பிள்ளை, ஆ., *தமிழர் சமய வரலாறு,* ப.167.

61. குகசர்மா, வ., "கருணைகூர் முகங்கள் ஆறு", *மாவைக் கந்தன் ஆலயத் திருப்பணிச் சிறப்புமலர்,* 20.10.1974.

62. *அதே கட்டுரை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. *அதே கட்டுரை.*

64. *திருமந்திரம்,* திருக்கூத்துத்தரிசனம் (செய். 2758), குமர குருபரன் அச்சகம், ஸ்ரீ வைகுண்டம், 31.8.1960.

65. பட்டுச்சாமி ஓதுவார், தி., "திருமுருகன் பெருமை", *காரைநகர் திக்கரை முருகமூர்த்தி கோவில் குடமுழுக்குவிழாமலர்,* 1974.

66. *சூடாமணி நிகண்டு* (மூலமும் உரையும்), பதினொராம் பதிப்பு, ப.10.
செய்யுள்,
"முருகன்வேள் சாமியாறுமுகன் குகன்குழகன் மாயோன்
மருகன் சேய் கார்த்திகேயன் வரைபகவெறிந்தோன்செட்டி
அரன்மகன் கங்கைமைந்தனாண்ட லைக்கொடியு யர்த்தோன்
சரவணபவன் கடம்பன் றாரகற் சென்றோனாசான்."

67. முருகவேள், ந.ரா., *காரைநகர்திக்கரை முருகமூர்த்தி கோவில் குடமுழுக்கு விழாமலர்,* 1974.

68. இவ்விடயந் தொடர்பான மேலதிக விபரங்கட்குப் பார்க்க, *மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமிகோவில் மகாமண்டப கருங் கற்றிருப்பணிப்பூர்த்தி அஸ்டோத்திரசகஸ்ர மகாசங்கா பிஷேகமலர்,* ப.14-18.

69. சோமசுந்தரப்புலவர், க., *கந்தபுராணக் கதைகளும் அவைக ளுணர்த்தும் உண்மைநூற்கருத்துக்களும்,* மூன்றாம் பதிப்பு, 1982, ப.44 - 45.

70. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, *பத்துச் சொற் பொழிவுகள்,* சலாங்கூர் இலங்கைச் சைவர்சங்கம் வெளியீடு, கோலாலம் பூர்.1974, ப.62.

71. *அதேநூல்,* ப.67.

72. வேலுப்பிள்ளை, ஆ., *தமிழ் இலக்கியத்தில் காலமும்கருத்தும்,* மூன்றாம் பதிப்பு, பாரி புத்தகப்பண்ணை, பி.ஆர்.வி.பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை, 1985, ப.175.

73. செல்வநாயகம், வி., *தமிழ் இலக்கிய வரலாறு,* ஐந்தாம்பதிப்பு, ஸ்ரீலங்கா வெளியீடு, அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திர சாலை, யாழ்ப்பாணம், 1973, ப.110.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. சண்முகதாஸ், ஆ., *தமிழ்ப் பாவடிவங்கள்*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைவெளியீடு3, 1982, ப.13-14.

75. கைலாசபதி, க., "மானுடம் தழுவிய கவிஞர்கள்", *22ஆவது திருக்குறள் மாநாட்டுச் சிறப்புமலர்*, திருமறைக்கழக வெளியீடு, 1982.

76. வேலுப்பிள்ளை, ஆ., "சாசனத் தமிழ் இலக்கியம்", *இளங்கதிர்*, 1969/70, ப.166 - 167.

77. வெள்ளைவாரணன், க., "பக்திமைப்பாடலின் தோற்றமும் வளர்ச்சியும்", *அகில உலக இந்து மாநாடு மலர்,* கொழும்பு, 1982.

78. பொன்னம்பலவாணர், தி., "முருகன் புகழ்பாடும் பன்னிரு திருமுறைகள்", *ஈழநாடு வாரமலர்*, 31.8.1986, ப.5.

79. *அதேகட்டுரை.*

80. வேலுப்பிள்ளை, ஆ., *தமிழர் சமய வரலாறு* , ப.223.

81. வேலுப்பிள்ளை, ஆ., "மிகப்பழைய இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் மூன்று- சில குறிப்புக்கள்" (நூற்றாண்டுகள் முன்பு கண்டுபிடிக்கப்பட்ட சாசனங்களிலிருந்து புதிய செய்திகள்), *தமிழோசை*, தமிழ்மன்ற வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1986, ப.3.

82. பூலோகசிங்கம், பொ., "தமிழ் ஈழமும் தமிழ் இந்தியாவும்", *மானுடம்*, தமிழ்க்கலைமன்றம், வித்தியாலங்கார வளாகம், 1997/78. ப.95 - 106.

83. கைலாசபிள்ளை, த., *ஸ்ரீ ஆறுமுகநாவலர் பிரபந்த திரட்டு,* மூன்றாம்பதிப்பு, சென்னபட்டணம் வித்தியானுபாலன யந்திர சாலை, 1954, ப. 127.

84. *அதேநூல்*, ப.128.

85. ஷண்முகநாதக்குருக்கள், சு.து., *மாவிட்டபுரம் கந்த சுவாமி கோவில் ஷய ஸ்கந்தஷஷ்டி உத்ஸவ விஞ்ஞாபனம்,* 2.11.1986, ப.2.

86. சண்முகசுந்தரம், த., *வாழ்வுபெற்றவல்லி*, ஆசியுரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன். B.A (Hons): M.A (Jaffna)

# இயல் நான்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபந்தங்களிலே கவித்துவ வளம்

**சிவயோகசுவாமிகள்** இயற்றிய பாடல்கள் கீர்த்தனைகளாகவும் தனிப்பாடல்களாகவும் அச்சிலே வெளிவந்துள்ளன. சிவயோக சுவாமிகள் அருளிய *நற்சிந்தனை* என்ற பாடற்றொகுப்பில் நல்லைப்பதிக்கரசே, நல்லூரான் திருவடி, ஈசனே நல்லூர் வாசனே, சொல்லச் சொல்லச் சுவைக்குமே செல்லப்பன் திருநாமம், நல் லைப்பதிக்கரசே நல்லூர்முருகன், முருகாநீவா, நடந்து போவோம், நல்லூரைக்கும்பிடு, நல்லூர் வீதியில் என்ற தலைப்புகளிற் கீர்த்தனைகளும் பாடல்களுமுள்ளன.

யோகர்சுவாமிகள் செல்லப்பாச்சுவாமிகளின் சீடர் இக்காரணத் தால் செல்லப்பாசுவாமிகளது தொடர்பினையே பெரும்பாலான பாடல்களிற் பாடியுள்ளார். நல்லைப்பதியில் உறையும் முருகன் மீதும் தமக்குக் குருவாக அமைந்த **செல்லப்பாசுவாமிகள்** மீதும் புனைந்துள்ள பாடல்கள் நற்சிந்தனையிற் காணப்படுகின்றன. **செல்லப்பாசுவாமி**களான தமது குருவினை நோக்கிப்பாடும்போது,

"நல்லைப்பதிக்கரசே! நல்லைப்பதிக்கரசே!
நல்லவழிகாட்டி நாயேனை ஆண்டிடடா
கல்லைநிகர்த்த மனங்கரையவருள் தந்திடடா
எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி வைத்திடடா
ஆன்மாவை நித்தியமென் றறியவரந்தந்திடடா
வீண்பாவனையெல்லாம் விலக்கவருள்தாடா!

மாயப்பினியகல மருந்தெனக்குத் தந்திடடா
காயங் குலையு முன்னர் காணவருள் தாடா
கொல்லாவரமெனக்குக் குவலயத்தில் வேணுமடா
எல்லாரிடத்து மன்பாய் இருப்பதெனக்கிச்சையடா
என்றும் மறவா வரமெனக்கு வேணுமடா
குன்று போனிற்கக் குருவே வரந்தாடா."

என்று பாடுகின்றார்.

"நல்லூரான் திருவடி" என்ற பாடல் கிளிக்கண்ணி யிலமைந் துள்ளது. இதில் முருகனை நினைந்துபாடப்பட்டுள்ளது. ஆறு கண்ணிகள் உள்ளன. என்றும் சிந்தையில் மறவாமற் கொள்ளத் தக்கதாயமைந்துள்ளவை அவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நல்லூரான் திருவடியை
நான் நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி - கிளியே!
இரவுபகல் காணேனடி.

ஆன்மா அறியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான் மறந்து போவேனோடி - கிளியே!
நல்லூரான் தஞ்சமெடி.

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே
கவலையெல்லாம் போகுமடி.

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கந்தன் திருவடிகள் - கிளியே!
காவல் அறிந்திடடி.

பஞ்சம் படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே!
ஆறுமுகன் தஞ்சமெடி.

சுவாமி யோகநாதன்
சொன்ன திருப்பாட்டைந்தும்
பூமியில் சொன்னானெடி - கிளியே!
பொல்லாங்கு தீருமெடி.

ஈசனே நல்லூர் வாசனே! என்ற பாடலிலே 'தாசனான யோக சுவாமி சாற்றும்பாவைக்கேட்டுக் கிருபைகூர்ந்து வாட்டந்தீர்க்க வாவா' என்று பாடுகின்றார். 'நால்லூரில் தேரடியில் நாம்கண்ட சிவயோகம் சொல்லமுடியாத சுகத்தினைக் காட்டிவிடும்' என்ற வரிகள் குருவின் பெருமையினைப் பேசுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நல்லூர் முருகனே' என்ற மகுடத்திலமைந்துள்ள பாடல் 'நல்குரவு, பிணி நலியாமல் மெலியாமல் அருள்தந்து ஆளுவாய்' என்று வேண்டுதலாயமைவது.

பல்லவி

நல்லையில் வாசா ஞானப்பிரகாசா

அநுபல்லவி

நல்ல தெய்வானை வள்ளியம்மை சமேதா
நரர்சுரர் பணி ஞானபண்டிதா பரா

சரணம்

நான் உன்னை நம்பினேன் நல்குரவுபிணி
நலியாமல் மெலியாமல் அருள்தந்து ஆளுவாய்
தேன்உந்து வேங்கையாய் தினைப்புனம் நின்றனை
ஸ்ரீராமன் மருகனே முருகனே கிருபாகரா

(நல்லை)

'நல்லூரைக் கும்பிடு' என்றுகட்டளையிடும் பாடலொன்று தினமும் பாடியின்புறத்தக்கது.

இராகம் - ஜோகினி தாளம் - ஆதி

பல்லவி

நல்லூரைக்கும்பிட்டு நீபாடு - அதனாலே
நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்.

அநுபல்லவி

செல்லாதே வெறுங்கையாய் செல்லப்பன் வாழ்ந்த நாடு
தேங்காயுடன் பழம் கொண்டு நீசெல்லு

(நல்லூ)

சரணம்

வாடி உன்மனம் ஓடினாலும் வருத்தங்கள்
கோடி கோடியாகக் கூடினாலும் - குறைகள் வந்து
தேடி உன்னை மூடினாலும் - செல்லப்பன் பாதம்
சிந்தித்தால் ஓடிப்போமே
பெண்டு பிள்ளைகளென்று பேதைமை கொண்டுநீ
கண்ட கண்ட இடம் கலங்கிநீ திரியாதே. (நல்லூ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நல்லூர் வீதியில்' என்ற தலைப்புடன் அமைந்த பாடல் யோகர் சுவாமிகளது பாடல்களெல்லாவற்றினுள்ளும் முத்தாய்ப் புவைக்கும் பாடல் என்று கூறத்தக்கது. 'நல்லூரில் நித்தியம் வந்துபார்த்தால் முத்தி நிச்சயமே' என்றுஉறுதியாகக் கூறுகின்றார் சுவாமிகள். பாடல் வருமாறு:

**நல்லூர் வீதியில்**

இராகம் - பிலஹரி                    தாளம் - ரூபகம்

**பல்லவி**

எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால்
இடர்கள் எல்லாம் போமே.

**அநுபல்லவி**

அந்நாளில் ஆசான் அருந்தவம் செய்த இடம்
அதுவாதலாலே அதிசயம்மெத்த உண்டு.

(எந்நாளும்)

**சரணம்**

வேதாந்த சித்தாந்தம் கற்றதனாலென்ன
வேடிக்கைக் கதைகள் பேசினாலென்ன
வீதியில் வந்தொருக்கால் விழுந்து கும்பிட்டால்
வில்லங்கம் எல்லாம் இல்லாமற் போமே.

(எந்நாளும்)

சத்தியம் பொறுமை சாந்தம் அடக்கம்
நித்தியா நித்தியந் தெரியும் நிபுணர்
பத்திசெய் உத்தமர் பரவும் நல்லூரில்
நித்தியம் வந்துபார்த்தால் முத்தி நிச்சயமே.

(எந்நாளும்)

'உய்யவழி காட்டுவாய்' என்ற தலைப்பிடப்பட்டுள்ள பாடல் நற்சிந்தனை நூலின் இறுதிப்பாடலாயுள்ளது.

"தெய்வமே யானெனதெனுஞ் செருக்கால்மனது
தீயவழி செல்லுதையோ
செய்வதொன் றறிகிலேன் தேவாதி தேவனே
திருவருட் பார்வை சாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உய்யவழி காட்டுவாய் உன்னையில் லாதுதுனை
யுலகத்தில் எவரு முண்டோ
வையகம் புகழ்நல்லை வாழும் வடிவேலனே
மயிலேறு தம்பிரானே."

சிவயோக சுவாமிகளது பாடல்கள் இன்றும் மிகுந்த பயபக்தியோடு சைவத்தமிழ் மக்களால் போற்றப்பட்டு வருகின்றன. அடுத்து,

"கந்தனே என் சிந்தனை - நல்லைக்
கந்தனே என் வந்தனை."

என்ற கீர்த்தனைகளின் முதன்மையினை ஆராயலாம்.

பண்டிதர் க. வீரகத்தியின் 14 கீர்த்தனைகளடங்கிய பன்னிரண்டு பக்கங்களைக்கொண்ட சிறிய இந்நூல் 1978 இல் வெளியிடப் பட்டது. எளிமையாகப்பாடப்பட்டுள்ள இக்கீர்த்தனைகளிற் சொல் லாட்சி விற்பன்னம் களிநடம்புரிகின்றது. அல்லோலகல்லோலம் ஆகிடும்போதும் ஆனந்தபரவசம் அலைமோதும்போதும் உன் சிந்தனைதான் எனக்குஎன்று 'கவீ' உரைக்கின்றார். ('கவீ'- க. வீரகத்தி)

மக்கள்யுகம், கிருதயுகம், மகாசனங்களின் காலம் மலர வேண்டுமென்று முருகனிடம் வேண்டிப்பாடுவதற்கு விரும்பித் 'தமிழ் பாட வேண்டும்' என்ற தலைப்பிட்டுக் கீர்த்தனையொன்றையமைத் துள்ளார். மனித முழுமை தழுவிய பொதுமை நோக்கொன்றை முருகனிடம் வேண்டுகின்றார்.

<u>பல்லவி</u>

தவத்தாலே உனைக்காணவேண்டும் முருகா - என்
தவமாகத் தமிழ் பாடவேண்டும்.

<u>அநுபல்லவி</u>

அவமான சிந்தனைகள் அழிக்காதவண்ணம் (தவ)

<u>சரணம்</u>

விலை போகமுடியாத சரக்கெல்லாம் வீசி
வீதிக்கு வாராத நுட்பங்கள் பேசி
அலைமேலே அலையாகத் தமிழ் பாட வேண்டும்
அந்தஆனந்த வெள்ளத்தில் நானாட வேண்டும். (தவ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னாக உன்னெழிலிற்புதுமை பலகண்டு
புலமைக்கு விருந்தாக நானூட்ட வேண்டும்
என்னாவியுளவரைக்கும் நின்னாலே முருகா
எடுப்பாகக் கிருதயுகம் நான் பாடவேண்டும்.

(தவ)

ஆன்மா தலைவியாகவும் முருகன் தலைவனாகவும் நின்று ஆன்மத்தலைவி தோழியிடம் குறையிரந்து காதல்முற்றி முறையிடுவதாக அமைகின்றது ஒரு கீர்த்தனை. பல்லவர் காலத்து நாயன்மார், ஆழ்வார், ஆண்டாள் போன்றோரின் நிலையுணர்த்துவனவாயுள்ள வழிபாட்டு நெறிமரபின் வளர்ச்சியும் தொடர்ச்சியுமாக 'நாயகநாயகி பாவம்' இங்கு இடம் பெறுவது சிந்தித்தற்குரியது.

"எத்தனை நாளெனை ஏய்ப்பான் - என்
காதலை இப்படித் தேய்ப்பான் - தினம்
பத்திமை செய்திடும் என்னைக் கடைக்கண்
பாராதிருப்பதோ பாவம்."

என்ற சரணத்தில்வரும் அடிகளிலும்,

"இவனோ சொல்லடி முருகன் - எனை
ஏய்த்துவரும் தமிழ்விரகன்"

என்ற பல்லவியிலும்,

"வேட்டுவரில்லா நேரத்திலே - வள்ளி
வீட்டுக்கு நீசென்ற காரணமென்"என்றும்,
"சுற்றத்தவரில்லா நேரத்திலே காதல்
சுகித்திட வள்ளியைக் கிள்ளுவதோ."

என்றும் முருகனைச் சல்லாபவிநோதனாகப் பாவனைபண்ணுகின்றார். திருமந்திரச் செய்யுளமைப்பிற் சரணம் அமைந்த கீர்த்தனை பின்வருமாறு அமைகின்றது.

"சரவணபவ எனில் சாவது இல்லை
சரவணபவ எனில் சரித்திரம் உண்டு
சரவணபவ எனில் சஞ்சலம் இல்லை
சரவணபவ எனில் சாதனை உண்டாம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாவைக்கந்தன் பக்திரசக்கீர்த்தனைகளை* இயற்றி இசையமைத்தவர் மயிலிட்டி சி.வேலுப்பிள்ளை. திருவடிக்கபயம் கந்தா இரக்கமில்லையோ, உன்பொற்கால் பணிகின்றேன், ஆசிதா, முத்தி தந்தருள்வாய், எனையாளுமே என்றவகையில் இரந்து முருகனை வேண்டுகின்றார்.

"சேலார்வயற்பொழில் செங்கோடனைச் சென்று கண்டு தொழ
நாலாயிரங்கண் படைத்திலனே யந்த நான்முகனே." (செய்.90)

என்பது கந்தரலங்காரம்.

மாவையிலெழுந்தருளும் அழகன் முருகனைக் கண்டு தொழுவதற்கு எண்ணாயிரங் கண் வேண்டுமென்கின்றார் இவ்வாசிரியர்.

"விண்ணாடு தீக்கிரையாக்கிய சூரனை வேல்கொடத்தம்
பண்ணாறு தமா முருகனைத் திருமாவைப் பதியமருங்
கண்ணாயிரற்கருட் செய்முருகைய னைக்காணவெனக்
கெண்ணாயிரங்கண் படைத்திலனே யவ்விறையவனே."

35 கீர்த்தனைகளைக் கொண்டமைவது இந்நூல். இலகு மொழிநடையில் அமைக்கப்பட்டுள்ளது.

*நல்லூர்க்கந்தன்* என்னுங் கீர்த்தனைத்துதிப்பாடல்கள் நரம்பியற் சத்திரசிகிச்சை நிபுணராக விளங்கும் **வைத்தியகலாநிதி பன்னைமுலை ந. சுப்பிரமணியம்** அவர்களால் எழுதப்பட்டு 1974ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது.

முருகனது பவனியைக் கண்டுக்களிக்காத கண்களாலென்ன பயன் என்று கூறும் பாடலொன்று,

"மின்னொளிகள் பூட்டி மிளிரும் மலைமேலே
பன்னிரண்டு கையான் பவனிவரத் - தன்னிரண்டு
கண்களிலே கண்ணீர் களிப்பிலே சிந்தாதார்
கண்ணிருந்தும் கண்ணிலரே காண்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகச்சீர்திருத்தப்பாடல் எனத்தகும் வகையிலமைந்துள்ளது பிறிதொருபாடல். இப்போது நல்லூர் வீதிகளிலே (திருவிழாக் காலங்களிலே) மக்கள் கூடிநிகழ்த்தும் விடயங்களைப்பின்வருமாறு சித்திரித்துக்காட்டுகின்றார் இருவெண்பாக்களில். அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்கநமஸ்காரம், தொட்டுவணங்குதல், துதிப் பாடல் இசைத்தல் முதலியன செய்யாது, **கடலை சாப்பிட்டுக் கொண்டு கடைவீதிகளிற் சுற்றித்திரிதல் சுடலைக்கும் ஏற்காத செயலாகும். வீண்வார்த்தை பேசுதல், விளையாடுதல், காமுறுதல், மறைவில் நின்றுபெண்களுக்கு கண்வலை வீசுதல், கைகூசாமல் திருடுதல் முதலியன கைலாசவாகனத்தைக் கேலிசெய்வதாகும்** என்ற பொருள்படவரும் கண்டனப்பாடல்களிவை.

"அட்டாங்க பஞ்சாங்கம் ஆகும் நமஸ்காரம்
தொட்டு வணங்கல்துதிப்பாடல் - விட்டுக்
கடலை கொறித்துக் கடைவீதி சுற்றல்
சுடலைக்கும் ஏற்குமோ சொல்லு."

"வருகிறான் தேரில் கந்தன்" என்ற மகுடத்தில் ஐந்து விருத்தச் செய்யுட்கள் உள்ளன. இரண்டாஞ் செய்யுள் தேர் பார்க்கப் பல்லோரும் வருகைதந்த செய்தியைக்கூறுவது. தேரூரும் முருக னைப்பார்க்க வந்தவர்களது வாகனாதிகளைக்கூறும் பாடலில்,

"தாரணி துதிக்குந்தேரைச் சைக்கிளிற் பார்க்கவந்தார்
காரினில் வந்தார் மாட்டுக் கரத்தையில்வந்தார் மற்றும்
வீரர்போல் லொறியில், பஸ்ஸில், விமானத்தில் வந்தார்
சூரியவெப்பந் தாங்கித்துள்ளியும் நடந்தும் வந்தார்."

"வாரிதி நிகர்த்த கூட்டம் வானொலிச் சேவையாளர்
கூரியவேலை நோக்கிக் கும்பிடுபோடும் பெண்கள்
பேரிசை மேளதாளம் பிரதிட்டை செய்வோர் சூழத்
தேரினில் முருகன் வந்தான் தெய்வானை வள்ளியோடே."

தேரிலே எழுந்தருளும் முருகனது அலங்காரம் மேலேயுள்ள செய்யுளாற் புலப்படுத்தப்படுகின்றது. திருவிழாக்காட்சியினைச் சித்திரிக்கும் முறைமை போற்றற்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லைக்கந்தன் பிள்ளைத்தமிழ்

நல்லைக்கந்தன் பிள்ளைத்தமிழ் என்னும் பெயரிற் பலர் பாடியுள்ளனரேனும் நமது பார்வைக்கு கிடைக்கும் ஓரிரு நூற்செய்யுட்களே இங்கு ஆராயப்படுகின்றன. காப்புச்செய்யுட்களுடன் சேர்த்து 32 பாடல்கள் 'சோதிட பரிபாலினி' சஞ்சிகையிலும் 'இந்துநெறி' சஞ்சிகையிலும் வெளிவந்துள்ளன. **கவிஞர் வ.கோவிந்தபிள்ளை** இயற்றிய அப்பிள்ளைத்தமிழ்ப் பாடல்கள் அங்குமிங்குமாகவே பெறப்பட்டு ஆய்வுசெய்யப்படுகின்றன.

பாடல்களின் பொதுப்பண்பினாலும் சிறப்புப்பண்புகளினாலும் மரபார்ந்தரீதியிற் பக்தியிலக்கிய வரிசையிற் சிறப்பிடம் பெறும் இவரது பாடல்களிற் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தச் செய்யுள்மரபு பேணப்பட்டுள்ளமையைக் காணலாம். மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் போன்ற வருணனைச்சிறப்பு நல்லைக்கந்தன் பிள்ளைத்தமிழில் நிறையவுண்டு. தமிழ்ப்புலமை வெளிப்பாடும் சந்தச்சிறப்பும் விரவியொளிர்வதாய் உள்ளது. தலவரலாறு மட்டுமே முதன்மைபெறாது. கவிஞரது தன்னுணர்வனுபவத்தின் வெளிப்பாடும் செய்யுள்களிலே தென்படுகின்றன. அருள்செய்து இடர்தீர்த்த முருகன் பெருமையைக் கூறுவது இப்பிள்ளைத்தமிழ் இலக்கியத்தின் தனிச்சிறப்பு. *நல்லைக்கந்தன் பிள்ளைத்* தமிழின் முக்கியத்துவம் வெறும் வருணனைகைளாளால் மட்டுமல்லாது நெக்குருகும் அடியவரது உள்ளப் பிரலாபத்தினாலும் புலப்படுத்தப்படுகின்றது. நல்லைக்கந்தன் பிள்ளைத்தமிழிலே நல்லையை மட்டும் பாடாது பிற முருகத்தலங்களையும் நினைந்து பாடும் பண்புண்டு.

இல்பொருளுவமைகளாலும் சில கற்பனைக் குறிப்புக்களாலும் முருகனது பிரபாவத்தை உள்ளத்தில் நினைந்து அதனைக் கவித்துவத்துடன் வெளிப்படுத்தும் இயல்பு நோக்கத்தக்கது.

அருனகிரிநாதர், குமரகுருபரர், தாயுமானவர் முதலியோரது சந்தத் தழுவல்கள் இடம்பெறுகின்றன. முன்னைய காலத்தில் பக்தி இலக்கியப் பயிற்சியும் தத்துவ விளக்கங்களும் சொற்சிறப்பு ஆற்றலுடன் வெளிப்படுத்தப்படும் நயம் *நல்லைக்கந்தன் பிள்ளைத்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழி*ன் இன்னுமொரு சிறப்புப்பண்பாகும். சமகாலத்தில் நடைமுறைகளின் விளக்கமும் விவரணமும் இடம்பெறும் சிறப்பால் இப்பிரபந்தம் முன்னைய பிரபந்தங்களிலிருந்து வேறுபடுகின்றது. முன்னைய பிள்ளைத்தமிழ் நூல்களிற் கற்பனைப்பண்பு முதன்மை பெற்றமைய, இப்பிள்ளைத்தமிழ் சமகால வாழ்க்கை அவலங்களை முருகனிடத்து எடுத்துக்கூறுவதாயமைகின்றது. முருகன் செய்தருளும் நன்மையான செயல்களை நினைந்தும் அருள் செய்யும் குறிப்புக்களை எண்ணியும் பாடலமைக்கும் புலமை நலத்தினைச் செய்யுள்களினூடே காணலாம்.

முருகனிடத்தே குறைகளை முறையிட்டுப் பாடும்பாங்கில் இடம் பெறும் பாடல்கள் இந்நூலிலே உண்டு. நூற்பாக்களை ஆக்குவதிலே தமது ஆற்றலை முதன்மையெனக்கருதாது முருகனது பரங்கருணையே தன்னுள் நின்று இயற்றுவித்தது என்னும்கருத்து சிந்தனைக்குரியது.

> "தெய்விகத் திருவருளின் முன் - அருட்சிறப்பின்
> வலிமைக்குமுன் மானிடர்கள் எம்மாத்திரம்"?

என்று குறிப்பிடும் கவிஞர் "முருகனே பாடுதற்குத் தூண்டினான். அவனே என்னுள் நின்று பாடுவித்தான்"[2] என்று கூறும் கருத்துக்கள் பாடல்களின் தெய்விக நலனுக்குச் சான்றுபுரிவனவாகும்.

*நல்லைக்கந்தன் பிள்ளைத்தமிழி*ன் காப்புச்செய்யுள்,

> "சுந்தரஞ்சேர் நல்லைநகர்த்தோகை மயில்வாகனன்மேல்
> சந்தமுடன் பிள்ளைத்தமிழ்பாடக் கந்தனுக்கு
> முன்பிறந்த வேழ முகத்தோன்றிருப்பாதம்
> என்றலைமேல் வைத்தே னினிது"

என்றமைகின்றது.

திருமால், சிவபெருமான் உமையம்மையார் பேரிற்கந்தனைக் காக்கும்படி வேண்டிப்பாடும் மூன்று பாடல்களுள்ளன.

> "சீருறுவேதந் தெரிதொனியுந்
> திகழிசைச் சுருதிகள் பயில்தொனியும்
> தீஞ்சுவை நல்கு புராணங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்திடப் படனஞ் செய்யொலியுங்
காருறு குழலியர் பண்ணொலியுங்
கவிஞர்கள் வாழ்த்திடு பாவொலியுங்
காளையர் எழுப்பிடு சுரவொலியுங்
கன்னியர் நடமிடு சிலம்பொலியும்
எருறு வதுவையினதிர் முழவு
மெழில் திருவிழவினி லொலிமுழவுந்
தேர்வுறிலெது வெதிற் சிறந்தென்று
செப்பிடச் சதுர்முகன் சிந்தைகொளுந்
திருமிகு புகழ்வார் நல்லைநகர்த்
திகழ்பவதாலே தாலேலோ."

இப்பாடலிலே பெரியபுராணச் செய்யுள்களிலே அனுபவிக்கும் பக்தி உணர்வு நலன் உண்டு.

குழந்தைக்குமரனைக் 'குருந்து' என்று அழைக்கின்றார் கவி ஞர், குமரகுருபரர். 'கொழுந்தேவருக, அருள்பழுத்த கொம்பே வருக' என்று மீனாட்சியம்மையைப் பாடுகின்றார். இவ்வொப்புமை நூலின் கவிவளத்தினை நன்குணர்த்தப்போதுமானதொன்று.

தமிழ் மொழிப்பற்றும் பக்திவைராக்கியமும் நிரம்பிய கவிஞர், முருகனைத் தமிழ்மாந்தும் தெய்வமாகக் கண்டு காட்டுகின்றார். தாலப்பருவப்பாடலொன்று வருமாறு.

"நித்தம் அருளைப்பொழிந்தடியார்
நெஞ்சில் நிறைந்து தமிழ்கேட்டுச்
சித்தமுவப்ப வளர் குருந்தே
செஞ்சொல் பேசு மொரு கிளியே
அந்தங் கொளிக்கும் நல்லைநகர்க்
கரசே யருளே யருட்கவியே
அன்பரகத்தே யொளியூட்டும்
அருணோதயமே தாலேலோ."

சோதிட பரிபாலினி (17.11.78) இதழில் நல்லைக்கந்தன் பிள்ளைத்தமிழ்ச் சப்பாணிப்பருவப் பாடல்கள் மூன்று இடம் பெற் றுள்ளன. அழுதுதொழும் அடியவர்களும் பாடித்தொழும் பக்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும் தீஞ்சுவைமிக்க முக்கனிகளும் விழுந்து சப்திக்கின்ற ஓசையும் என வரும் பாடல் குறிப்பிடத்தக்கது.

"தெங்கினோடுயர் தாலக்கனிகள் வீழோசையும்
சிறைகளிற் கடியோசையும்
தீஞ்சுவைகள் நல்கிடும் மாங்கனிபலாக்கனிகள்
சிதறியே வீழோசையும்
சங்குமணி துடிமுரசுபம்பை சல்லினகமுழவு
தந்திரிகள் தருவோசையும்
தாளங்கள் தவறாது சதுராடு மகளிரது
தவளமணிக் காலோசையும்
எங்கணுந் தேவாரயின்னிசையினோசையும்
இயம்புமாகம வோசையும்
இணைவிழிகள் நீர்மல்க அடியவர்களுனை வாழ்த்தி
ஏத்து நற்றமிழோசையும்
கொங்குலவு நல்லையிற் பரைபோதமீதலாற்
போலமுறு கரமசைத்தே
குலவரையுந் திமிதிமியே னோசைபெறுமாறுவகை
கொட்டியருள் சப்பாணியே."

பிள்ளைத்தமிழ்இலக்கியத்தில் முத்தப் பருவப்பாடல்கள் தாய்மையுணர்வு கொப்பளிக்கப் பாடப்படுவதாகும். சிறுகுழந்தைகளை ஆரத்தழுவி உள்ளங்குதிகொள்ளவும் குதூகல உணர்வுடனும் பாடப்படுவன. "சோதிடரிபாலினி"யில் (16.12.78. 15.01.79) *நல்லைக் கந்தன் பிள்ளைத்தமிழ்* முத்தப்பருவப்பாடல்கள் உள்ளன.

"நல்லூர் தனிற்றவழுந்தனியரசே
தவமே சலஞ் சலஞ் சூழ்தரு
சங்கேயுமை முலைமேற்
கலை நீவியே பாலுண்சுவை
கனிவாய் முத்த மருள்வாய்
கனிவாயொன்று தருவாயென்பால்
வருவாய் முத்தமருளே''.

சிற்றிலக்கியங்களின் இறுக்கமான கவித்துவச்சாயல்கள் கொண்ட பிரபந்தங்களிலொன்றாக *நல்லைக்கந்தன் பிள்ளைத்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தமிழை*யும் கொள்ளலாம். செயங்கொண்டானின் கலிங்கத் துப்பரணியடிகளை ஒத்தமையும் இலக்கிய ஒருமைப்பாடுகண்டு நயத்தற்குரியதாகின்றது.

முருகனிடத்திலே மானுடக்கவிஞர் அனுபவிக்கும் முத்தங்கள் பலவகைகளாயமைகின்றன. மணிவாயினமுத்தம், அணிவாயின் முத்தம், அமுதூறுமுத்தம், திருவாயின்முத்தம், கனிவாயின் முத்தம் என வகைப்படுத்துகின்றார்.

முருகனைப்பார்த்து மயில்நடமிடுவதாக உவமித்துச்செங்கீ ரைப்பருவத்துப் பாடலொன்று அமைகின்றது. அணிச்சிறப்புமிக்கு விளங்கும் அப்பாடல் வருமாறு.

"வாழ்த்திவணங்கி வரம்பல பெற்றிட
வாசலில் வந்தனர் காண்
சீலமுடன் தமிழ் கற்றதோர் நாவலர்
சீர்கவி வாணர்களும்
சேவிக்க வந்திட யோகருமவரவர்
சீடரும் வந்தனர் காண்
கோலமயிற் குலத்தோகை விரித்துநின்
றாடுதுன்னாடல் கண்டு
கொஞ்சுமிள நகை யோடசைந்தாடியே
ஆடுக செங்கீரை."

என்று அமைகின்றது.

சந்தச்சிறப்பு மிகுந்துள்ள பாடல்கள் செங்கீரைப்பருவத்துப் பாடல்களிற் காணப்படுகின்றன.

"வாசம் வீசுமலர் காவின் பூமலர்கள்
வாடை வீசவொருபால்
வாழை தீம்பலவு கமுகு தெங்கினொடு
மாவின் சோலை யொருபால்
காசிலாயபல கலைகள் பயிற்றுநெறிக்
கல்விச்சாலை யொருபால்
கழனிதோறு முழவோர்கள் நாட்டு பயிர்ச்
சோலை வேலியொருபால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசு நினதருளினூடு நிதமுலவில்
பெருமை பெருமடியர் தாம்
பெற்ற பேறென விளங்கு நீர்ச்சுனைகள்
பெருமை பேசவொருபால்
தேசுலாவுநல்லைத் தேவ அடியார் துயர்
தீர்த்த துரியங் கடந்தோய்
தினமுமெனது மனமகிழ்கவென வருள்செங்
கீரை யாடியருளே."

பிள்ளைத்தமிழ்ப் பாடல்களில் வருக வருகவென அழைத்துப் பாடும் பாடல்கள் தெய்வங்களின் அதீதத்தன்மைகளை, அமானுஷ் யப்பண்புகளை வெளிப்படுத்துவனவாயமைகின்றன.

"கவிஞர் சித்தந் தனிலுதிக்குங்
கவிதை யாறு வருகவே
கவிதை தோறும் பொருள் சுரக்கும்
அழகு முத்தம் வருகவே
செவிநயக்கும் சுவைபயக்கும்
தமிழின் இனிமை வருகவே
தெருளளிக்கும் இருளொளிக்கும்
தெய்வம் வருக வருகவே
கவிதையாகித் தமிழுமாகித்
கவியுமாகி வருகவே
களிவு கொண்டு பொருளளிக்கும்
கந்தவருக வருகவே
புவிபுரக்க நல்லை வந்த
புனிதன் நித்தம் வருகவே
புனித கங்கை நதிகளிக்கும்
இனியன்வருக வருகவே."

*மாவைப்பிள்ளைத்தமிழ்* என்னும் பிறிதொரு பிரபந்தம் 1967ஆம் ஆண்டு மாவிட்டபுரம் முத்தமிழ் கலைமன்றத்தின் வெளியீடாக அச்சாகியுள்ளது. பண்டிதர் மு.கந்தையா இந்நூலின் ஆசிரியர். இது ஆண்பாற் பிள்ளைத்தமிழாகும். திருச்செந்தூர்ப்பிள்ளைத்தமிழ் என்பதுபோல் இதுவும் தலப் பெயராற் பெயர் பெற்றுள்ளமை குறிப்பிடற்பாலது. *மாவைப்பிள்ளைத்தமிழ்* எனத் தலப் பெயரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்படுவதற்கான காரணத்தை அதன் ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

> **'சூழலை விட்டுச் சுவாமியைக் கண்டுவிட முடியாது. மாவையை விட்டு மாவைப் பிரானைக் கண்டுவிட முடியாது. மாவவைப் பிரானோடு ஒன்றுபடும்வரையும் மாவை எங்களுக்கு முக்கியமானது. மாவையையும் மாவைப் பிரானாகவே பக்திபண்ண வேண்டியவர்கள் நாங்கள், அதுபற்றியே இப்பிள்ளைத்தமிழுக்கு மூர்த்திபெயராற் பெயரிடாது தலப்பெயராற் பெயரிடப் பட்டதென்க.'**

பெயருக்கேற்ப இந்நூலில் அங்கப்பிரதட்சினம் கூட்டுப் பிரார்த்தனை, மாவிளக்கிடுதல் போன்ற வழிபாடுகளும் கார்த்திகை வேட்டை, தேர், தீர்த்தத் திருவிழாக்களும் வண்டிச்சவாரி என்பவையும் சூழலிலுள்ள மரங்கள் , மக்கள், தொழில் நிலையங்கள்,கடல் என்பனவும் வர்ணனை வகையால் இடம்பெற்றிருத்தல் காண்க. இவ்வெல்லாவற்றையும் பற்றிய சிந்தனைகளாலேயும் தலத்தில் பற்று நிகழவேண்டுவதே நோக்கமென்க.

யாழ்ப்பாணத்தில் விளங்கிய புலவர்களான சுன்னை முத்துக் குமாரகவிராயரைப்பற்றியும் புன்னைக் கணேசையரைப்பற்றியும் இந்நூல் குறிப்பிடுவது பொருத்தமாகும். புதிய விஞ்ஞான சாதனைகள் மிகுந்த இக்காலத்தில் இந்நூல் தோன்றியமைக்கேற்ப அணுக்குண்டு, செயற்கைச் சந்திரன், பூமண்டலத்தைக் கடந்து வானவெளியிற் சென்ற'ஸ்புட்னிக்' முதலியவற்றையுஞ் சம்பந்தப்படுத்தி இந்நூலிற் காணப்படும் **கற்பனைக் குறிப்புக்கள் புதுமையைப் பழமையோடு புணர்த்துவனவாயுள்ளன.**

விநாயகரை வணங்கி 'பண்புற்றிலங்கிடச்' செய்யுமாறு வேண்டிப் பாடப்பட்டுள்ளது. காப்புச் செய்யுள், சித்திவிநாயகர், திருமால், சிவபெருமான், உமாதேவியார், பிரமதேவர், ஆறுமுகசுவாமி, வைரவப் பெருமான், இலக்குமிதேவி, சரஸ்வதிதேவி, நவக்கிரகமூர்த்திகள், சண்டீஸ்வரர் ஆகிய கடவுளர்களைத் துதித்துக் காத்தருள்புரிய வேண்டுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாவைவளர்கந்தன், வளர்வேலன், மாவைவளர்சாமி, மாவைவளர் போதன், மாவைவளரண்ணல், மாவைவளர்சேந்தன், மாவைவளர் முருகன், மாவைவளர்குமரன், மாவைவளர் ஐயன், மாவைவளர் தேவன், மாவைவளர்வேலவன் என்று பெயர்சூட்டி மாவை முருகனைக் 'காத்தருளவேண்டும்' என விண்ணப்பிக்கின்றார்.**

சப்பாணிப்பருவ ஏழாவது செய்யுளில் மாவைநகரின் சிறப்புக் கூறவந்த ஆசிரியர்,

"........... வாய்மைத்
திருவுடைய கிருஷிவினை வேளாளரவை
தரூஉந் தீங்கனி கழங்கு மிலையுந்
தீண்டாது பக்தியொடு தெய்வார்ப்பணமாக்கி
செம்மையோ டிலங்கு சைவத் தருமநிகழ்மாவை."

என்று சிறப்பிக்கின்றார்.

மாவை இசை வேளாளர் கலைஞர்கள் குடிகொண்ட சூழலை யும் வாழிடங்களையும் கொண்டது. திருவிழாவிற் கூடும் பிறஊர்க் கலைஞர்கள், காவடியினர் அனந்தம், சப்பாணிப்பருவப் பாட லொன்று (செய்.8) இத்தகுவிடயங்களைக் கூறுகின்றது.

கொட்டுமேளம் முறுந் தட்டுதாளம்பினுங்
குதூகலச் சுதியெழுப்பக்
குதிகுதித் தெழுபாத கதிவேக வபிநயக்
கோலநிகழ் கூத்தியற்றுந்
தட்டி லாவொத்திசை சவிக்காம லெந்தைநீ
சப்பாணி கொட்டியருளே."

முத்தப்பருவத்தில் வரும் ஆறாவது பாடல் ***தொல்காப்பிய ஆய்வறிஞர் மகாவித்துவான் கணேசையர்*** புகழ்நிறுவி மாவைச் சிறப்புப் பேசுவது,

"தொன்மைத் தமிழ்செய் கருவூலத்
தொல்காப்பிய நூல் துருவித்துருவித்
துப்புத் துலக்கித் தூவறிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவைக்கப் படைத்துத் தாஞ்சுவைக்கும்
புன்னைக் கணேசர்."
என்று சிறப்பிக்கப்படுகின்றார், **மகாவித்துவான் கணேசையர்.**

வாரானைப்பருவப் பாடல்கள் மாவைக்கந்தனது வரலாற்றுச் சிறப்பும் அற்புதச் செய்கைகளுஞ் சுட்டி முருகனை வருகவென அழைப்பதாக அமைக்கப்பட்டுள்ளன.

"நகுலமுனி
விருப முகமும் மாருதப்ர
வீகவல்லி மாமுகமும்
விலகாப் பெருநோய் விலக்குமலை
மருந்தே வருக,
மூவாக் கலைமாமுகில் சுன்னை
முத்துக்குமார கவிராயர்
முகிழ் செம்புலமை முருகுயிர்க்க
முன்னின் றலர்த்துங் கவிதை மலர்
நாவார்சங்கி யாதை மகிழ்
நாமாந் தாதை யுள்ளுறுத்த
நவமாம் பிரகேளிகைச் செய்யுள்
ஞாலமுய்ய நயந்தருளுந்
தேவாதேவர்க் கிதம்புரிந்த
செல்வா வருக."

## நல்லைச் சண்முகமாலை

*நல்லைச்சண்முகமாலை* வண்ணார்பண்ணை நெ.வை.செல்லையா எனுங் கவிஞரால் இயற்றப்பட்ட மூன்று பிரபந்தங்களடங்கிய தொகுப்புநூல். காப்புச்செய்யுள், திருமால்துதி, நாமகள்துதி, என்னும் முதல் மூன்று செய்யுட்களையும் தவிர்த்து 102 எண் சீர்விருத்தச் செய்யுள்களாலியன்றது *நல்லைச்சண்முகமாலை.* கான்மிளிரும் பூங்கொடியைக் கலந்த புத்தேள் கந்தனடிக்கொருமாலை பாடுதற்கு ஐந்து கரமும் ஒன்றை மருப்புங் கொண்ட ஆம்பலடிப்போதாக மிளிரும் கணபதியை வேண்டுகின்றார் காப்புச்செய்யுளில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேன்மிளிரும் கரதலத்தான் நல்னலமேனி
விளங்குமறுமுகமுடைய விமலன் செவ்வேள்
கான்மிளிரும் பூங்கொடியைக் கலந்தபுத்தேள்
கந்தனடிக்கொரு மாலை கவின்பெற்றார்
வான்மிளிரும் பிறையணிந்த சிரமுமுக்கண்
வயங்குகரமைந்துமொற்றை மருப்புங்கொண்ட
தேன்மிளிருமாம்பலடிப் போதை நாளுஞ்
சிரமொழிமெய் யகங் குளிரச் சிந்திப்போமே."

ஏழையேன் துயர்நீக்க உனது மனமிரங்காதா ' என்று பாடுங் கவிஞர், 'நீ பெரும் புகழ் கொண்டவன்' என்பதைப் புராணக்கதைச் சம்பவங்கள் மூலம் நிறுவிச்செல்கின்றார். 'நினைத்தவெல்லாம் நிறைந்தளிக்கும் நித்திலமே' ,'கச்சைகொளுங் கதிர்வடிவேற் கந்தா' எனவுஞ் சுட்டுங் கவிஞர், முருகனது 'தாய்மையுணர்வை' அவாவுகின்றார்.. 'என்குறையுன் திருச்செவியிற் புகவில்லையோ' என்னும் வினாக்குறிப்புத்தோன்ற நின்றது இச்செய்யுள்.

"என்னுமுனக்கென் குறையை யெடுத்தெடுத்தே
யியம்பிநின்ற யென்மீதிலே னோவையா
நன்றுபொழி கருணைமுக மாறுங் கண்கள்
நான்மூன்று முடையவனே நாடாநின்றாய்
வன்றுயரால் நலிவடைய விடுதியேல் யான்
வருது ணையுன்றனை யலதிங் கறிகிலேனே
கன்றுதனக் கிரங்கு பசப்போல வென்னைக்
கடைக்கணித்துனருள் புரிவாய் கந்தவேளே."

என்பது கவித்துவத்தினை வெளிப்படுத்தும் முத்திரைக்கவியாக அமைந்துள்ளது.

பல்வேறு திருத்தலங்களிலுங் கோவில் கொண்டுள்ள குமரனை நல்லைப் பதியிலுங் கண்டேனேயென்னுங் கருத்தில் 45ஆவது செய்யுள் அமைகின்றது. முருகனை 'இன்பவாழ்வே' என்று அழைத்துள்ளார்.

"பத்தர்பணி பரங்குன்றா பழனிவேலா
பரவை தொழுஞ்செந்தூரா பாலாவேலா
சித்தியொளி ரெட்டிகுடி சிக்கல் சேயூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருத்தணிகை தண்ணீர்மலை சிகிக்குன்றாரூர்
முத்தி தருமொருவைமலை யோகத்தின்
மூர்த்தியுயர் கதிர்காமமுதிர்குன்றத்தா
யித்த னையுமாடல் கொண்டாயெங்குமானா
யீசாநல்லூ ரமர்ந்த வின்பவாழ்வே."

துன்பவாழ்வில் உழன்ற ஆன்மா சந்தோஷமுறும் நிலையில் முருகனை இன்பவாழ்வெனக் கண்டு கொள்கின்றது. உனதின்ப வாழ்வின் நூறாயிறங்கூறில் ஒன்றை மட்டும் எனக்குத் தந்தருள வேண்டும் என்பது வேண்டுதற் தோத்திரப்பாமாலையாம். நிரம்பி மலிந்துள்ள பிணிகள் (மண்டுபிணி) கலிநலிய அருள்செய்வாய் நல்லைப்பெருமானே என்ற பொருளில் 63 ஆவது செய்யுள் அமைந்துள்ளது.

"மண்டலத்தே மானிடராய்ப் பிறந்த பேர்கள்
மருவு பயனினதடியார் மலர்பதத்தே
தொண்டு செய்து நின்கோயில் சூழ்ந்து போற்றித்
தொழுதுனடி பரவிவினை தொலைத்தலன்றோ
மிண்டு செய்த வசுரர் குழாம் மாளவெற்றி
வேற்படைமேற்றிரு நோக்கம் விடத்தவேளே
மண்டுபினி கவிநலிய வருள்நோக்கென்மேல்
வைத்தருள வேண்டு(ம்) நல்லை வைவேற்கோனே!"

வாயானை மனத்தானை வடிவேலானை
வாககிறந்த பூரணத்தின் வாசியானைச்
சேயானைத் திகழ் நல்லை மேவினானைச்
சீரலைவாய்க் கரை வளருந் தீங்கரும்பைத்
தாயானை வேண்டுவன தரிக்காதென்றுந்
தந்தருளுஞ் சண்முகனைச் சதுர்மறைக்குந்
தூயானைத் தூய்மையிலார் சேய்மையானைத்
தொழுமடியேன் களிவளரச் சுகிக்கின்றேனே."

(செய்.75)

பாராயணஞ் செய்து இறைவனை வழிபடுதற்கேற்ற சிறந்த பாடலாயமைவது மேற்போந்த பாடல். அப்பர்சுவாமிகளருளிய திருத்தாண்டகத்தையொத்திலங்குவது. இறையழகில் அதீத ஈடுபாடு கொண்ட கவிஞரது பக்திமெய்யனுபவமாகத் துலங்குகினறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவனது பெரும்புகழை அடுக்கிக்கூறுவது திருத்தாண்டகத்தின் தனித்துவச்சிறப்பு.**

பக்திப்பிரபந்த இலக்கிய முன்னோடியாக விளங்கும் காரைக்கா லம்மையார்பற்றிய பாடல் ஒன்று *நல்லைச்சண்முகமாலை*யில் இடங்கொண்டு பக்திமரபின் தொடக்கத்தினையும் அதன் தொடர்ச்சி யையும் நிறுவுகின்றது. அப்பாடல் கோவில் வழிபாட்டு மரபினை யும் இறைவனுண்மையையும் நிறுவும்பான்மையிலமைந்துள்ளது.

காரைக்காலம்மையார் தலையினால் நடந்து திருக்கையிலை சேர்ந்தார். 'உனை மறவாதிருக்க வேண்டும்' என வரங் கேட்டார். அதுபோலவே *நல்லைச் சண்முகமாலை*யிலும் உரையினால் உன்னிடம் வேண்டுதல் செய்கின்றேன் எனதுரையினை மதித்துஇரங்கி ஏற்றுக்கொள் நல்லைவாழ் ஆறுமுகப்பொருளே' என்று பாடுகின்றார்.

"விருப்பினொடு திருவாலாங்காட்டில் முன்னாள்
மிகமெலிந்துந் தலையினால் விரும்பிச்சென்ற
வருத்தி வளரம்மையோ நினது சீர்கொ
ளாலயங்கள் தனைக் காலாலடைந்துஞ் செல்லக்
கருத்துமிலாப் படிறனோ பேயார் சொல்லாய்
கந்தாசெந்தூர் வளருங் கரும்பே நல்லை
யிருக்குமறுமுகப்பொருளே யெங்ஙனாய்வே
னெனதுரையு மதித்திரங்கி யேற்றுக் கொள்ளே."

இராமலிங்கசுவாமிகளது வேண்டுதற் பாடலை நிகர்த்த பாடல்இந்நூலின் கடைசிப்பாடலாகவுள்ளது. 'வேண்டும் வேண்டும்' என முடியும் பாடலது. 'இரத்தல்' நிலையில் நின்று தன்னைச் சிற்றுயிருஞ்சிறுதொழிலும் பல்பிணியுங்கொண்ட ஆன்மாவாகச் சித்திரித்துள்ளார். பதினாறு பேற்றினையும் நல்க வேண்டும்என வரும் 102 ஆவது பாடல் தினமும் பாராயணஞ் செய்துவரவேண்டிய பாடலெனலாம்.

"பேறுபதினாறுமெனக் களித்தல் வேண்டும்
 பெம்மானே யிவ்வுடம்பு பிரிந்து போனாற்
கூறுதற் கெவ்வுடம்பென நிச்சயமின்றாகுங்
 கொள்கையினாலிக்கணமே கொடுத்தல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறு சமயங்களுக்கு மறிவுறியே
யாதலினாலறுமுகங் கொண்டாடல் செய்தாய்
வீறுவடி வேற்கரனே முருகா வெந்தன்
விண்ணப்ப மீதுனடி வேண்டினேனே."

இவ்வாசிரியர், சைவசிந்தாந்தங் கூறும் கன்மம், மறுபிறப்புக் கொள்கைகளை நிலைநிறுத்துகின்றார். பெம்மானே; இவ்வுடம்பு பிரிந்துபோனாற் கூறுவதற்கெவ்வுடம்பென நிச்சமின்றாகுங் கொள்கையினால் இக்கணமே கொடுத்தல் வேண்டும் எனக் கூறுவதிலிருந்து இனி எப்பிறவி வாய்க்குமோவென்று இப்போதே திரிகரணசுத்தியோடு உனைத் தொழுதெழவேண்டுமென்ற கருத்து அழுத்தியுரைக்கப்பட்டுள்ளது.

## நல்லைத்திருவருக்கமாலை

நல்லைத்திருவருக்கமாலை என்னும் பிரபந்தம் சரவணையூர் புலவர்மணி ஆ.தில்லைநாதப்புலவரால் (1885-1966) இயற்றப்பட்டது. இவருடைய பிரபந்தங்களிலே சிலேடைகள், யமகங்கள் விரவிக் காணப்படுகின்றன.[3] புலவர்கள் கூடிப் பாடிச்சுவைக்கத்தக்க கற்பனை வளமும் சமய சாஸ்திர மரபுங் கொண்டனவாய் விளங்கும் சிறப்பைப் புலவர் கவிதைகளிற் காணலாம்.[4] எடுத்தவுடனே ஆசுகவியைப்போல பாடக்கூடிய புலமைவாய்ந்தவர்.[5] ஊஞ்சல், சோடசம் (16பாடல்கள்) திருவிரட்டைமணிமாலை, திருவருக்கமாலை, அலங்காரம், சிலேடை வெண்பா, பதிகம், யமகவந்தாதி ஆதியாம் பிரபந்தங்களியற்றுவதிலே தில்லைநாதப்புலவர் சமர்த்தர்.

தில்லைநாதப்புலவர் நல்லைக் கந்தசுவாமி மீது பாடியுள்ள பிரபந்தம் *நல்லைதிருவருக்கமாலை* என்பது. நூற்றைந்து பாக்களைக்கொண்ட *நல்லைத்திருவருக்கமாலை* என்னும் நூலிலிருந்து சில பாக்கள் (12) மட்டுமே *தெய்வத்தமிழ் பிரபந்தங்கள்* என்னுந் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளன. இவரது பாவன்மையைக் கண்ட நல்லூர் த.கைலாசபிள்ளையும் அவரது மருகர் சோமசுந்தரம், ஜே.பியும் இக்கவிஞருக்குப் 'புலவர்' என்னும் பட்டத்தை யளித்துக் கௌரவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எண்ணடியார் தங்களிடரேக நல்லூரில்
நண்ணுமரு ளானந்த நாடகனே கண்ணிறைந்த
பேரின்ப வாழ்வே பெருங்கருணைப் பேராறே
யாரின்பத் தேனேயருள்." (செய். 3)

இடர்களையும் நல்லூரில் அருளானந்த நாடகமாடிக்கொண்டிருப்ப வன் என்று முருகன் சிறப்பிக்கப்படுவதுடன் 'ஏன் என் மீது இரக்கங் காட்டாதிருக்கின்றாய்' என்று 9ஆவது செய்யுளிற் கவல்கின்றார்.

"சேந்தா குகா முருகா வள்ளி தெய்வசேனை திருக்
காந்தா முதற் புலவர் காங்கேயர் - பூந்தாதிற்
றேவினம் பண்படிச் செய்யுங்கீத நல்லூரா
வேனிரங்க வில்லையினும்."

'சங்கமிருந்த காலத்தில் தலைமைப்புலவனாய் இருந்த புலவனே' என்று முருகப்பிரானைச் சுட்டிப்பாடியிருப்பது நோக்கத்தக்கது.

## நல்லூர் நான்மணிமாலை

*நான்மணிமாலை*யென்பது வெண்பா, கட்டளைக்கலித்துறை, ஆசிரிய விருத்தம், ஆசிரியப்பா ஆகிய நான்குவகைப்பாடல்களும் விரவிவரும்மாலை. நால்வகைப்பாடல்களும் நால்வகைமணிக ளாகக் குறிக்கப்படும். தமிழிலுள்ள நான்மணிமாலைகளுள் பட்டினத்துப்பிள்ளையார் அருளிச் செய்த *கோயில்நான்மணி மாலை*, சிவப்பிரகாசசுவாமிகள் படிய *நால்வர்நான்மணிமாலை* ஆகியன பிரசித்தமானவை. ஈழத்துக் கதிர்காமம் மீது வண்ணை நகர் செல்லையாவினால் பாடப்பெற்றது *கதிரை நான்மணிமாலை.* நல்லையம்பதியிற் கோயில் கொண்டிருக்கும் கந்தன் மீது வித்து வான் க.செக்கலிங்கம் (சொக்கன்) பாடிய 40 செய்யுட்களைக் கொண்டிலங்குவது *நல்லூர் நான்மணிமாலை*. '*கலைச்செல்வி'ப்* பத்திரிகை ஆசிரியர் **சிற்பியால்** இது 1966 ஆம் ஆண்டு சுன்னா கம் தமிழருவிப் பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

எல்லையில்லாத்துயரில் மூழ்கியிருந்தவேளையில் தொல்லை வினைதீர்க்கும் நல்லூர்க்கந்தனை நினைத்து நினைத்து நெஞ்சம் நெகிழ்ந்து பாடியதே இந்த *நல்லூர் நான்மணிமாலை* என்பது பதிப்பாசிரியர் கருத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழின் மரபோம்பிச் சொன்ன *நான்மணிமாலை* தொண்டர்க்கு 'அமுதஞ் சுரந்திடும்' பெற்றிவாய்க்கப்பெற்றது என்ற கருத்திற் சிறப்புப்பாயிரத்தில் வாழ்த்துள்ளது.[6] திருவருளை முதன்மைப்ப டுத்தித் தாம் பின்சென்று தொழுகின்ற நிலைபோன்றதே பாடுதற் கரிய தூண்டற்பேறு. *'நல்லூர்நான்மணிமாலை'* என்ற பெயரிலே என்னைத் துணைக்கருவியாகக்கொண்டு ஒரு நூல் வெளிவரும் என நான் கனவு கண்டதில்லை. அதற்கான தகுதியோ, பக்தியோ வாய்க்கப்பெற்றவன் என்று நான் கூறுவேனாயின் என்னைவிட பேதையர் யார்" என்று தம்மைக் கீழ்நிலைப்படுத்திக்கொள்ளுங் கவிஞர், 'அவனருளாளே அவன்றாள் வணங்கி' என்னும் மணி வாசகரது பக்தியனுபவவுணர்வினராய் விளங்குகின்றார். இறைவன் திருவருளை உணரா நிலையில் உணர்ந்தவர்களின் சுவட்டிற் கண்டுகொண்டேன் என வருங்கருத்தும் இந்துசமயப் பக்தியிலக் கிய நெறிக்கேயுரிய தனித்துவ இயல்பெனலாம்.

உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தினுள்ளே இருப்பள் இங்கு வராதிடர்' என்று குமரகுருபரர் *சகலகலாவல்லிமாலை*யிற் சரஸ்வதியை வேண்டித்துதித்துப் பாடலைத் தொடங்குவது போன்று *நல்லூர் நான்மணிமாலை*யின் காப்புச்செய்யுள் அமைகின்றது.

"தாரோன் முருகன் தமிழ்த்தெய்வம் தங்கமணித்
தேரோன் அழகன் திறல்பாடக் - காரோன்
மருகன் கரிமுகத்தன் வந்தென் உளத்தில்
இருப்பின் உளதோ இடர்."

"கரிமுகத்தான் வந்தென் உளத்தில் இருப்பின் உளதோ இடர்" என்ற வரிகள் பக்தியனுவல்கள் மரபின் தொடரச்சியையும் வளர்ச் சியையும் உணர்த்துவன.

**'பால்வாய்ப் பசுந்தமிழாற் பாடிப்பரவிடுவன்**
**வேல்வாய் நிணமளையும் வித்தகனை - நூல்வாயிற்**
**றேடியுங் காணாவென் தெய்வக் கனிமகவை**
**நாடியிந்த நல்லூரில் நான்.'** (செய்.1)

நூற்கருத்துக்களெல்லாவற்றுள்ளுந் தேடியுங் காணாத தெய்வக் கனிமகவான முருகனை நல்லூரிலே நாடிக்காணும் பேறு குறித்த அனுபவத்தைநூலின் முதல் வெண்பாவிற் பாடுகின்றார். 'வேல்வாய் நிணமளையும் வித்தகன்' என்று முருகன் சிறப்பிக்கப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வெற்றிவேல் போர்கொற்றவை சிறுவ" என்னுந் *திருமுருகாற்றுப்படை*யின் பயில்முறையை ஒத்தியையும் அடைமொழி கொண்டு விளங்குவது இச்செய்யுள்.

உலகமயக்கிலும் 'நான்' 'எனது' என்னும் பற்றுக்களுடனும் மையலில் வீழ்ந்திழி நாயெனவே மானமின்றியிவ்வையமீதினில் வாழ்ந்திடற்கு ஏன் வைத்தனை என்று உலகநிலையாமையையும் சைவசித்தாந்தக்கருத்தையும் புலப்படுத்தியுள்ள பாடல் நூலின் இரண்டாவது கலித்துறைச்செய்யுள்.

நல்லைவளர் அன்பே பாரினிலே பாவக்குவியல் ஆக்கியெனைக் கன்னார் உரிக்க வைத்தனையே கந்தா நீதி இதுவேயோ? என்று ஏங்குகின்றார் 3ஆவது செய்யுளில்.

உருளும் சகடம் "கல்லாச்சிறியேன், மதியிலி என்று தன்நெஞ்சைத்தான் திட்டும் வாசகங்களின் மனிதப் பலவீனத்தினை வெளிப்படுத்திநிற்பன. யானேதும் கேட்கிலன் ஏனெனில் வாலறிவுற்றவன் நீ, ஆதலினால் வாவெனக் கேட்பதொன்றேயெனக்குள்ளது வந்திடுவாய்" எனக்கூவியழைக்கின்றார் (செய்.6). பிறவியலையாற்றில் அழுந்தும் துன்பவாழ்க்கையின் கோரத்தை ஏழாவது பாடலில் உணர்த்தி 'பாவியென்னைக்கொள்' என வேண்டுதல் புரிகின்றார்.

"வாவெனை உன்னை வலியிலாக் குரலில்
        வற்றிடா ஆசையால் அழைப்பின்
தாவெனச் சீறித் துயரினைப் பெருக்குஞ்
        சூழலிற் கிடத்துளம் உருகிக்
கூவிடும் மகவாய்க் குரலெடுத்திடுவன்
        குமரனே ஓடிவந் தருள்வாய்
பாவியென் றென்னைத் தள்ளுவையாயின்
        பாரினில் யார்கதி ஐயா."

சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தில் நாட்டுச்சிறப்புக் கூறும்பொழுதெல்லாம் பக்திப் பின்னணியைச் சுட்டி அருட் சிறப்பறாத திருத்தலம் தில்லை என்பதுபோலவே *நல்லூர் நான்மணி மாலையி*ன் 8வது செய்யுளில்,

"வேதியர் மந்திர ஓசையுந் தொழும்பர்
ஓதிடு பாடலின் ஓங்கிடும் ஒலியும்
கலந்தெழில் சுமந்திடுங்கவின் பெறுநல்லூர்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என வருணிக்கின்றார். தன்துன்பந் துடைத்திட உன் மயிலைத்தூ தனுப்புவாயா (செய்.9) என்றும் வேண்டுகின்றார். யாக்கை நிலை யாமையை 11வது செய்யுள் கூறும். 19வது செய்யுளில்,

"வன்னமார் தமிழில் வைதவர் தமையும்
வாழவைத்தவன் கழல் ஒலிக்கும்" எனப்பாடி,

"மொய்தாரணி சூழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால்
வைதாரையுமங்கு வாழவைப்போன்."

என்ற *கந்தரலங்காரப்பாட*லுண்மையைப் போற்றுகின்றார்.

தலைவி, முருகனாகிய தலைவனைப்புல்லுவதால் உள்ளமும் உடலும் பெறும் புதுமையினைச் சொல்லும் 30ஆவது பாடலில் நாயகநாயகி பாவனையினடியாக முகிழ்த்த பக்தியனுபவ வெளிப் பாடு சுட்டப்படுகின்றது.

"நல்லைப்பதியுறை செல்வக்கனியினை நாயகனைப்
புல்லக்குழையுமென் நெஞ்சமும் மெய்யும் புதுமையிதே."

என முருகனை அடியார் தழுவியின்புறுவது கூறப்பட்டுள்ளது.

**'கொங்கையிணையமர்பொருது கோலங்கொண்ட தழும்புளவே'** என்பது அப்பர்சுவாமிகளது அருள்வாக்கு. 'உண்ணாமுலையுமை யாளொடுமுடனாகியயொருவன்' என்பது சம்பந்தர் தேவாரம். இவை உமையம்மையார் சிவனோடு தழுவும் 'சிவன்சிவை' ஐக்கியத்தை உணர்த்திநிற்பன. (பார்க்க: வேலுப்பிள்ளை,ஆ; "நாயகன் நாயகி பாவம்", *தமிழர் சமய வரலாறு*.)

## மாவைமும்மணிமாலை

கரணவாய் என்னும் ஊரைச்சேர்ந்த செவ்வந்திநாததேசிகரால் *மாவைமும்மணிமாலை* என்னும் பிரபந்தம் பாடப்பட்டுள்ளது. வெண்பா, கலித்துறை, ஆசிரியப்பா வகைகளினால் அந்தாதித் தொடையாகப் பாடப்பெறுவது மும்மணிமாலை. 30பாடல்களைக் கொண்டது இந்நூல். செவ்வந்திநாததேசிகர் இருபதாம் நூற்றாண் டின் ஆரம்பகாலத்தில் வாழ்ந்தவர். தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிப்பாண்டித்தியமுடையவர்.

நூல் இடையூறின்றி நிறைவேறும் பொருட்டுப் பிள்ளையாருக்கு மரபுவழாது வணக்கஞ் செலுத்துகின்றார். "வெள்ளை மருப்பினைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டுவதனால் பாரதத்தை மருப்பினால் மாமேரு மலையில் பொறித்த வரலாற்றினை நினைவுகூர்ந்து பாரதத்தை எழுதிய **பனைக்கைமுருகப்பெருமானுக்கு நூல் எழுதுவதிலுள்ள சிரமம் தெரியும். ஆதலினால் எனது நூல் இடரின்றி முடிய இனிய துணையாவன்"** என்னுங் குறிப்புத்தோன்ற விநாயக வணக்கச் செய்யுள் இயற்றியுள்ளார். சிவனுக்குரிய இயல்புகளை விநாயகப் பெருமானுக்குஞ் சார்த்திக்கூறுகின்ற மரபையொட்டி, 'தண்மேவு மதிசூடு சடைக்கே' என்று கூறியதனாற் சிவபிரானுக்கும் வணக்கஞ் சொல்லுகின்றார்.

நூலில் வரும் பாடல்கள் கோவிற் சிறப்புக்கூறுவனவாகவும் முருகன் பெருமை பேசுவனவாகவும் நெஞ்சத்துக்கு அறிவுறுத்துவனவாகவும் அமைந்துள்ளன. கோவிற் சிறப்புக் கூறுமிடங்களிற் பதிச்செழிப்பும் பேசப்படுவதனால் நாட்டின் இயற்கையெழில் சித்திரிக்கப்படுகின்றது. இவ்வாறு இயற்கையெழில் ஓவியமாயமைந்த அகவற்பாக்கள் சங்ககாலச் செய்யுள்போன்ற சொற்கோப்பும் பொருட்செறிவுங் கொண்டு இலங்குவன. கற்பனைப்பண்பு பிற்காலத்திலேயே பிரபந்தங்களிலே சொல்வாக்குப் பெற்றுள்ளது. உயர்வுநவிற்சி, தற்குறிப்பேற்றம் என்னும் அணிச்சிறப்புக்களே காலத்தால் முந்திய பிரபந்தங்களிலே இடம்பெறுகின்றன. முற்றிப் பழுத்த பலாக்கனி உடைந்து வீழ அதன்வழிப்பாயுந் தேன், வாய்க்கால் வழியோடு நெல்வயலிற் பொருந்த அந்த ஈரத்தாற் செழிக்கும் செந்நெல்வளம் பொருந்திய 'மாவைப்பதி' எனவும் தாமரையிற் கண்ணயரும் அன்னங்கள் பயிலும் தடாகம் மலிந்த வளந்திகழ் மாவையெனவும் இயற்கை வனப்பினைப் பாராட்டுவார். இத்தகைய பாடல்களிற் குறித்த வருணனைகள் ஓரளவுக்குக் கவிஞரதியல்பை ஒட்டி அமையும். உயர்வு நவிற்சியேயாயினும் முற்றாகப் புனைந்துரையல்லவெண்பது கமுகு, தென்னை, வாழை ஆதியாம் தருக்களின் நெருக்குறுகாட்சியாலும் பச்சிளம்பயிர்கள் பச்சைப்பசேலெனத் தோன்றும் மாட்சியாலுந் தெளியலாகும். இத்தைகைய வளங்கொழிக்கும் பதியில் வனப்பின் உறைவிடமான முருகன் அலங்காரப்பிரியனாகக் கோவில் கொண்டிருப்பதில் ஆச்சரியமில்லையல்லவா?

இங்கு இந்திரன் வளர்த்த வதுவைசெய்தளித்த தேவகுஞ்சரியும் செந்தினைப்புனத்துத் திருந்தடிபொருந்தி வருத்தி நடக்கவைத்த வள்ளிப்பிராட்டியும் பாங்கரிற் சூழ சுந்தரப்பீலித் தோகை மீதிவர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையும் முருகப்பெருமானின் அருள்நோக்கம் உற்றவர் மருள் நீக்கம்பெற்றவராவர்.

அன்னத்தொகுதி விளையாடும் பொழில் மாவைச் சொன்னத் திருக்கோயிற் சோதியாமன்னவனின் கஞ்ச மலர்த்தாள் நெஞ்சி டையிருத்தியும் அவன்புகழ் என்றும் அன்பினோடு புகன்றும் வழிபட வல்லவர்களுக்கு இம்மையிற் செல்வமுண்டு, கீர்த்தியுண்டு, செஞ் சொற்கவிவாக்குண்டு, சிந்திப்பன எல்லாம் சித்திக்கப்பெறும் சிறப் புண்டு, மறுமையில் வானவர்க்கெட்டாத மலரடி மருவிநீங்காது வாழுவதாகிய நிலைபெயரா இன்பநெறி கிட்டும் என்றும் அவரது நம்பிக்கையை 'மதிதங்கு பேரெழில்' என்னும் பாடல் புலப்படுத் துகின்றது.

மாவைப்பதிவாழும் வள்ளலின் மலரடி தொழுதலால் இத்த கைய செல்வங்கள் வந்து பொருந்துமேனும் அவற்றில் மனம் இலயிக்காது இருக்கவேண்டும் என்ற அச்சமும் தோன்றுகின்றது ஆசிரியருக்கு.

எமக்குக் கிடைத்துள்ள பொருளை, பதவியை அதனால் வரும் மயக்கை, செருக்கை இலகுவிலே துறந்துவிடுதலியலாது. துறப்பதற்கு இலகுவான மார்க்கம் செருக்கினால் இடப்பட்டோர் சரித்திரத்தை அடிக்கடி நினைவுகூர்வதுதான். இந்தவகையிற் பிரமதேவனுடைய வரலாற்றைக்கவிஞர் நினைவுபடுத்துகின்றார். **பதவியையும் பொருளையும் பெரிதாக மதிப்பதாலேயே மதர்ப்பு மேலோங் குகின்றது. ஆகவே இவற்றை மதியாது இவை வந்தெய்தக் காரணமா யிருந்த இறைவனது அருட்கருணையின் உறைவிடமான அவன் மலரடி களை மதிப்பதே மனமயக்கம் தீரமருந்து என்ற நினைப்பில் நெஞ்சறிவு றுத்துகின்றார்.** 'மட்டியலுங் கோதை' என்று அவ்வருமைமிகு பாடல் தொடங்குகின்றது.

பாசவினை நீங்க அவன் பாதமலர் பற்றவேண்டும் என்ற எண்ணம் நாளும்நாளும் வலியுறுத்துவதே தியானம். எண்ணமா வது இடையறாத சிந்தனையாதல்வேண்டும். 'யானுனைத் தொ டர்ந்து சிக்கனெப்பிடித்தேன்' என மணிவாசகப் பெருமான் கூறிய வாறுநெஞ்சந் தொடர்ந்து நினைக்கவேண்டும். தொடர்தலாவது இடைவிடாது பின்பற்றுதல் என்று கொள்ளல் வேண்டும். இவ்வாறு மாவைப்பதிவாழ் வரதனின் மலரடியில் இடையறாது நெஞ்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போக்கி இலயம்படச்செய்தால் மனத்தில் பொருந்திய மயல்யாவும் நெருப்பில் விழுந்த பஞ்சுபோல நீறாகிவிடும் என்கின்றார். 'நலமேவுமாந்தர்' எனத்தொடங்கும் பாடலில்.

பேரின்பப் பெருவாழ்வு நோக்கிய பயனத்தின் வழிக்குத் துணை யாகவிளங்குவன மாவைப்பிரானின் மலரடியும் மதிமுகமாறும் மாமேருநேரும் பன்னிருபுயமும் திருக்கரத்து உருத்திகழும் வேலு மேயாகும் என்று பாடுகின்றார். அவனது கழல்களே நெறியும் குறியுமாகின்றன. 'வானூர்தரு' எனத் தொடங்கும் அரும்பாடல் இச்சுவையினை உணர்த்திநிற்பது.

## மாவை இரட்டைமணிமாலை

*மாவை இரட்டைமணிமாலை* என்னும் பிரபந்தம் மாவிட் டபுரத்துறையும் முத்துக்குமாரப்பெருமான்மீது சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் பாடிச்சூடியது. பவளமும் முத்துமாகிய இருவேறு மணிகள் மிடைந்த மாலைபோல வெண்பாவும் கட்ட ளைக்கலித்துறையும் அந்தாதியாக அமையவும் நூலின் முதலும் இறுதியும் மண்டலிக்கவும் இருபது செய்யுட்களால் பாடப்பெறுவது இரட்டைமணிமாலையாகும்.

மரபுமுறையாக நூல் தொடங்குமுன் விநாயகருக்கு வணக்கம் கூறியதனையடுத்துத் தாம்பாடிச்சமர்ப்பிக்கின்ற மாலையை ஏற்ற ருளவேண்டுமென முதற்கண் முருகப்பெருமானை வேண்டு கின்றார். இவ்வாறு வேண்டுமிடத்து இறைவனைப் 'பரமகுருவே' எனவும் 'சந்தமலர்க் கடப்பந்தாராய்' எனவும் முன்னிலைப்படுத்தி, 'என் வந்தனையுங் கொண்டருள்வாய்' எனத் தன் விண்ணப்பத்தை விடுக்கின்றார். 'பரமகுரு' என விளித்ததன்மையாலே தந்தைக்கு உபதேசம் செய்த ஞானபண்டிதனாக விளங்கும் மூர்த்திக்குத் தமது புல்லிய பாடல் சூடத்தக்கதோ என்ற ஐயமும், ஏக்கமும், தவிப்பும் கவிஞர் உள்ளத்தே தோன்றுவதை உணரலாம்.

மேலும், 'கந்தமலர்க் கடப்பந்தராய்' என்னுந் தொடரை 'சந்தத்தாராய்' எனவும் 'மலர்க் கடப்பந்தாராய்' எனவும் அன் வயப்படுத்திப் பொருள்கொள்ளுதல் சாலும். கடப்பமலர் மாலை யோடு சந்தம் மலிந்த கவிமாலைகளையும் புனைந்த மார்பினன் முருகன். ஆருணகிரிநாதர், குமரகுருபரர், பகழிக்கூத்தர் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர்கள் பாடிச்சூடிய சந்தத் தமிழ்மாலைகள் அணிந்து மகிழ்ந்த முருகனுக்கு எனது பாடல்கள் எம்மாத்திரம் என்ற ஏக்கம் கவிஞர் நெஞ்சில் எழுகின்றது. அதனாலேதான், வந்தனை யுங் கொண்டருள்வாய், என உம்மை சேர்த்துப்பாடுகின்றார்.

மாவைமுத்துக்குமரனை இஷ்ட தெய்வமாகக் கொண்டு வழிப டும்அடியார்கள் பாடித்துதித்தற்கேற்ற பாராயணத்தோத்திரப் பாடல் களாக *மாவைஇரட்டைமணிமாலைச்* செய்யுட்கள் திகழுகின்றன.

*மாவைஇரட்டைமணிமாலைப்*பாடல்களிலே சமத்காரம் இல்லை; சொல்லலங்காரம்மில்லை. ஆனால் இலகுவான சொல்லமைப்பும் இதய ஏக்கத்தை இனிதே புலப்படுத்தும் எளிமையுண்டு, நெடு நாள்நேரடித் தொடர்புடையார் உரையாடுவதுபோன்ற நெகிழ் வுண்டு; தாயோடு பிள்ளைபழகுதல் ஒத்த சரளமுண்டு. 'தாயே பரமன்' என்பது பாடல்.'தாமேதமக்கு ' என்று தொடங்கும் பாடலிற் புலமையின் மாட்சி துலங்கிநிற்கின்றது.

**'தன்னால் வாராத பிழையுளதோ'** என்பது சூரபன்மன் வாயிலாகக் கச்சியப்பசிவாசாரியார் நமக்குப் புகட்டும் பேருண்மைகளுள் ஒன்று. **'தீதும் நன்றும் பிறர்தரவாரா'** என்பதும் சங்கச் சான்றோர் வாக்கு. இதனையடியொற்றி இந்நூலுடையாரும் நிலையற்ற பொருட்களை நிலையுடையனவாகக்கொண்டும் நிலை பேறுடைய நின்னருளுடைமையை நெஞ்சிற் கொள்ளாமலும் தடுமாற்ற முறுந் தன்மையாலே தாமே தமக்குப் பகையாக விளங்கும் அறிவிலி களாகச் சிலமக்கள் விளங்குகின்றனரே என இரங்குகின்றார். மேலும் அவர்களின் அறியாமையை ஞானகரனாகிய நீ களைந்து ஆட்கொள்ளவேண்டுமென்ற வேண்டுகோளை வெளிப் படையாகத் தெரிவிக்காது, பாடல் இறுதியில் **'வள்ளலே'** என விளித்த குறிப் பால் உணர்த்துகின்றார். **'குறிப்புமொழியிற் பேசுவது தானே புலமை யின் மாட்சி.', அதற்குக் குமாரசுவாமிப் புலவரது பாடல்களே சாட்சி.**

ஆன்ம ஈடேற்றத்திற்குக் கருவியாக அமைந்த உடம்பைப் போகப் பொருளாகக்கொள்ளுமிடத்து அது துன்பத்துக்கிடமா கின்றது. நமது உடம்பு சிவசம்பந்தமுடையது. அதனை அவ்வா றே கருதாது உலகியல் இன்பத்துக்கே உடைமைப் பொரு ளாக்கி உழன்று அலைகின்றோம். அதனாற் பெருந்துன்பத்திற் காளாகின்றோம். இத்தடுமாற்றம் ஒழிந்து உறுதிப்பொருள் இன்ன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தென உணர்ந்து மாவை முத்துக்குமரனை வழிபடவல்லவர் நல்குரவு, பிணியாதி இடர்கள் நீங்கிய இம்மைவாழ்வுடையராகி யமபயமின்றி இயற்கை எய்தி அவன் இணைமலர்ப்பாதம் அடை யும் பேறு வாய்க்கப்பெறுவர். ஆதலின் மாவைமேவிய கோவை வைகலும் வழிபட்டு வாழுகநெஞ்சமே என மனத்துக்கு அறிவுறுத் துகிறார் கவிஞர்.

"பிரணவத்துள் ளொளியாய்ப்
பேசரிய வானந்த மொருவடிவு கொண்டெனப்
பெட்புறவ ணைந்த ணைக்குங்
கருதரிய திருமேனி காண்பினிய மாவைவளர்
கந்தவேளே வருகவே.

பிள்ளைமகிழ் நல்வரம் பேருலகமேழினும்
பொருகுநவளித்து மேலைப்
பெரிய பெருமாற்கும் பிராட்டிக்குமேற்றமருள்
பிள்ளைநாயகப் பிரமமே வருக."

சிற்றிற்பருவத்தின் மூன்றாவது செய்யுள் ஆடி அமாவாசைத் தீர்த்தச் சிறப்புச்சுட்டி முருகன் பெருமை பேசுகின்றது.

"ஆடி அமாவாசைக் கொருபே
ராடம்பரமாய்க் கடல்காண
ஐயனொடு யாமுனைச்சீராய்
அழைத்துச் செல்லும்."

என வருகின்றது.

## மாவைச் சித்திரக்கவித்திருவிரட்டைமணிமாலை

*மாவைச் சித்திரக்கவித்திருவிரட்டைமணிமாலை* என்னும் இந்நூ லை இயற்றியவர் தெல்லிப்பழையைச் சேர்ந்த பொன்னம்பலப் பிள்ளையவர்கள். இவர் சிதம்பரத்தில் ஆறுமுகநாவலர் தாபித்த சைவப்பிரகாச வித்தியாசாலையிற் கல்விகற்பித்தவர். மாவைக்குமரன்மீது இவ்*விரட்டைமணிமாலை*யேயன்றி ஒரு *யமக அந்தாதி*யம் பாடியுள்ளார். *இரட்டைமணிமாலை* 1887 இல் இயற் றப்பெற்று யாழ்ப்பாணத்திலே வெளியிடப்பெற்றது. மீண்டும் இந் நூல் 1962 இல் பண்டிதர் வே.சங்கரப்பிள்ளை அவர்கள் எழுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கிய குறிப்புரையுடன் ஆசிரியரின் உறவினராகிய அ.சின்னத் தம்பி அவர்களால் வெளியிடப்பட்டது. *ஆறெழுத்துப்பத்து* என்னும் பிரபந்தத்தையும் **பொன்னம்பலபிள்ளை** பாடியுள்ளார்.

*இரட்டைமணிமாலை* ஒருவகைப்பிரபந்தம். இது வெண்பா, கட்டளைக்கலித்துறை ஆகிய இருவகைப் பாடல்கள் மாறிமாறி வருமாறு இருபது செய்யுட்களால் அந்தாதித்தொடையாகப் பாடப் படுவது. இப்பிரபந்தப்பாடல்கள் சித்திரக்கவிகளுக்குரிய இலக்க ணமும் அமையப்பெற்றிருத்தலால் இது சித்திரக்கவி இரட்டை மணிமாலை என்றாயிற்று.

சித்திரக்கவியாவது சித்திரம் அமைத்தாற்போன்று சொற் களால் வனப்புறு வடிவங்களும் ஓசைவண்ணங்களும் அமைத்துப் பாடுதல். சித்திரக்கவியானது கூடசதுக்கம், மாலைமாற்று, நாக பந்தம், சக்கரபந்தம், பிறிதுபடுபாட்டு, காதைகரப்பு, வினாவுத்தரம் என்றின்ன பலவகைகொண்டது. இது மிறைக்கவி, வண்ணப்பா எனவும் பெயர்பெறும். இன்று இவைபோன்ற கவிகளைப் புனை வதும் படிப்பதும் **அருகிப் பழங்கதையாகிவிட்டது.** ஆயினும் ஐம்பது, நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இத்தகைய கவிகளில் மக்கள் பெரிதும் ஈடுபாடுகொண்டிருந்தனர். முருகப்பெருமான் முத்தமிழ் விரகனும் சல்லாபவிநோதனுமான தன்மையினாலே இப்பெருமா னுக்குச் சித்திரக்கவிமாலை உவப்பாகும் என்று கருதி ஆசிரியர் அழகுறப் புனைந்து சூடினார்போலும்.!

செல்வமலி பண்டங்களால் மிடைவுற்று அடியார்களால் நெருக் குற்றுப்பொலியும் மாவைப்பதி வேண்டியவரமனைத்தும் வழங்க நின்ற தலம் என்ற காரணத்தால் அரிபிரம இந்திராதி தேவர்கள் முருகனைத் தரிசிக்கவேண்டுமென்னும் ஆவலோடு விரைந்து வருகின்றனர். ஆனாற் பல அடியார்களும் ஞானிகளும் சீவன் முத்தர்களும் ஏலவே இறைவன் சந்நிதியில் இருக்கின்றனர். ஆதலின் முருகன் அருள் நாட்டம் பெறுதற்கேற்ற தருணத்தை எதிர்பார்த்து முகுந்தனாதியோர் வெளியிற் காத்திருக்க வேண்டிய வர்களாகின்றனர். **செவ்வநாயகியின் தலைவனான திருமாலே காத்தி ருக்க வேண்டிநேருகிறது. அவன் பொருள்நிதிக்குவைப் பூபதியாகலாம். ஆனால் அருள்நிதிதரவரும் ஆனந்தமலையாக இருப்பவன் மாவைக்குமரன். (பொருள் நிலையற்றது: அருள் நிலைத்தது.)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்களெல்லாம் எந்தக் கிருபாநோக்கத்தை நாடிவருகிறார்களோ அந்தக் கிருபாகடாட்சத்தை வழங்குதற்கென்றே வளமலிமாவையில் வந்து குடிகொண்ட வடிவேற்கரசனே அருள்பாலிக்க எனது முன்னாக வரவேணும் என்று பாடுகின்றார் முதற் பாடலில்.

"மாவார்பொன் சங்கமும் பூண்மால் அம்புயன்ஒலிசீர்
ஓவாநபத்தினர் மற்றும் பலரும் - ஏல்வை தெரி
மாவைதினம் செலும்அன்பர் வாழ்வுறப்பொற்பூவைகும்
மாவைப் பதிப நம்முன் வா."

இப்பாடல் சித்திரக்கவி வர்க்கத்திற் 'கூடசதுக்கம்' எனப்படும். இதுதேர்வடிவில் அமைக்கப்பட்டிருத்தலின் 'தேர்வெண்பா' ஆகும். நான்காம் அடியாகிய 'மாவைப்பதிப நம்முன்வா' என்பது மற்றைய அடிகளிலுள்ள எழுத்துக்களுக்குள்ளே மறைந்து நிற்பதால் இது 'கூடசதுக்கம்' ஆகும். மேலும் இப்பாடலில் பூ.பென்னம்பலம் என ஆசிரியர் பெயரும் தெல்லி என்ற ஊர்ப்பெயரும் மாவைப்பதி என இறைவனது பதிப்பெயரும் தேர்ச்சித்திரத்திலே தனியாகவமைந்துவருதல் அவதானிக்கத்தக்கதாகும்.

இனி, **பரபரப்பும் அவசரமுமே வாழ்க்கை நியமங்களாக** அமைந்த இன்றைய உலகில் நிலைதிரிந்து அவதியுறும் மக்கட் கூட்டத்தினரைக் கண்டு பரிவுறும் ஆசிரியர் 'நோய்' நாடி நோய் முதல் நாடி மற்றதன் வாய்நாடி வாய்ப்பச்செயல்' என்பதற்கேற்பத் **துன்பத்திற்குரிய காரணத்தை அறிந்து அதனைநிவர்த்திசெய்தற் கேற்ற மார்க்கத்தினை நாடாமல் மேலுந் துன்பச்சேர்க்கைக்குரிய வழிகளிற் செல்வதைக்கண்டு கவல்கின்றார்.** மாவைப்பதிவாழ் வள்ளலை வணங்குவதே வல்வினைகள் போக்கும் மார்க்கம்எனக் கூறவந்த ஆசிரியர் அவுணபதியார் சூரபதுமனின் வரலாற்றை முதலில் நினைவுறுத்துகின்றார்.

சூரனைத் தொலைத்த சுடர்நெடுவேல், தொழுவார் துன்பங்களையும் துகள்செய்துமாய்க்குஞ் சிவனை நிந்தனைபுரிந்து தக்கன் செய்த வேள்வியில் அவிப்பாகத்திற் பெருவிருப்புடையவராய்க் கலந்து கொண்டமையிலேயே தேவர்கள் துன்புறுத்தப் பட்டார்கள். அவர்கள் செய்த தீவினையே சூரனது வடிவில்வந்து அவர்களை வருத்தியது. அவ்வாறே பொறிகள் இச்சித்தவாறே மனமுந் தறிகெட்டுச் செல்லுமாயின் விளைவது தீமையேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைவன்பால் அன்புசெலுத்துவதாகிய நன்னெறிச்சொல்லாது உள்ளம் எண்ணியவண்ணம் நடக்கத்தலைப்படுவது நாசத்துக்குக் காலமாகும். பண்ணிய பாவங்களை நாசஞ்செய்து பண்ணிய நெறியிற் படரவேண்டின்** மாவை முத்துக்குமரனை வழிபடுவதே மேற்கொள்ளத்தக்கது எனக் குறிக்கின்றார் ஒரு பாடலில்.

இப்பாடல் பிறிதுபடுபாட்டு என்னுஞ் சித்திரக்கவியாக அமைந்தது. பாடலில் உள்ள சீர், அடி, தொடைகளால் முன்னைய நிலை மாறி வேறோரு செய்யுளாகும்படி பாடப்படுவது பிறிதுபடுபாட்டாகும். இப்பாடல் ஒருநிலையிற் கட்டளைக் கலித்துறையாகவும் பிறிதொரு நிலையில அறுசீர்விருத்தமாகவும் அமைவுடையது, இதனை இப்போது சந்தமமைத்து அறுசீர்விருத்தமாகப் பார்ப்போம்.

"வானங்கொண்டார்க் கிடர் செய்த
வள்சூர் தன்னை மாய்த்தவர்
ஞானங் கொள்பூங் கரச்சத்தி
நம்பிக்கென்று நற்றளியாம்
ஆனந்தச் சின் மயமாவை
அன்பிற் செல்வதன்றியயல்
ஏனஞ் செய்மானுடர் செய்வ
தென்னோ உள்ளத் தலைவணமே."

மாவைப்பதியின் வருடோற்சவ இறுதிநாள் நிகழுந் தீர்த்தத் திருவிழா ஆடி அமாவாசையிலன்று இடம்பெறுவது. இத்தினம் இந்துக்களுக்கு ஒரு விசேட தினமாதலின் பெருந்திரளான மக்கள் கீரிமலைக்குத் தீர்த்தமாடச்செல்வர். **மாவை முருகனின் தீர்த்தோற்சவத்தைப் பார்ப்பதற்கேயன்றி அமாவாசை விரதம நுட்டிப்பவரும் இப்புண்ணிய தினத்திற் புனித கங்கையிலே தீர்த்தமாடல் குறித்து வருபவர் அநேகர். கீரிமலையை மருவிய மாவைப் பதிவாழ் குமரேசனின் பாதத்தினைத் தியானித்து நெஞ்சோடு சென்று கடலோடு சங்கமிக்குங் சுனையில் மூழ்கிக் கர்க்கட கமாகிய ஆடிமாதத்துச் சூரியனுஞ் சந்திரனுஞ் சேர்ந்து உதயமாகும் அமாவாசையன்று முருகப்பெருமானது பூங்கழல் பணிவார் புரியுஞ் செயல்கள் அனைத்தும் தவமேயாக, அக்கருமங்களை ஆற்றியவர் சிவபதமடைவர். சிவன்வேறு முருகன் வேறன்று. ஆனதன்மையால் முருகனை வழிபடக்கிட்டுவது சிவபதமே என்று கூறினார்.** ஆதலின் சைவம், கௌமாரம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதங்க ளைக் காட்டி வாதங்கள் புரியாது, முருகன் கழலடி பணிந்து மேலான பதவிகளை அவன் அருட்கண்ணோட்டத்தின் வழிநின்று பெற்றுய்வோம் என்ற கருத்தமைந்தது பினவரும்பாடல்,

"வையம்புகழ் நகுலாசல மாவைக் குகனிருதாள்
மெய்யன்பொடு சுனை சங்கம் வேலைக்கடன் முழுகி
வெய்யன் விதுகுளிரோ டெழுவேள் நின்கழல் பணிவார்
செய்யும் வினை தவமாம் அவர் சேர்வார் சிவபதமே."

'பித்தா பிறைசூடி பெருமானே யருளாளாய்' என்ற சுந்தரர் தேவாரத்தினது இந்தளப்பண்ணில் மாயாமாளவகௌளை இராகச் சாயலை ஒத்தியல்வது இப்பாட்டு.

இன்னொரு பாடலை 'அக்கரசுதகம்' என்ற சித்திரக்கவியாக அமைத்துள்ளார் கவிஞர். **அக்கரசுதகமாவது எழுத்துக் குறைத் தல்.** ஒரு சொற்றொடர் ஒரு குறித்த பொருள் தருவதாயும் ஒவ் வோர் எழுத்தாகநீக்க வெவ்வேறு சொல்லாகப் பிறிதுபொருள் தருவதாயும் அமையப்பாடுவது.

**மதில் மாவையார் மகிழும் பூஞ்சோலை என்ற தொடரினால் 'நீ பவ னம்' என்ற மொழியைக் குறிக்கின்றார். 'நீ பவனம்' என்பது கடப்பஞ் சோலை என்ற பொருளுடையது. 'நீ பவனம்' என் பதில் உள்ள நீ என்ற எழுத்தை நீக்க எஞ்சிநிற்கும் 'பவனம்' என்பதில் முதலெழுத் தாகிய 'ப' கரத்தை நிக்க எஞ்சிநிற்பது 'வனம்'. இது காடு என்ற பொருள் பயப்பது. வனம் என்ற பதத்தின் முதல் எழுத்துத் தவிர வரும் 'நம்' என்பது வணக்கம் என்ற அர்த்தமுடையது. பின் 'நம்' என்பதில் முதல் ஒலிக்கும் 'ந'கர மெய்யைப்போக்கச் சேடமா கவுள்ள 'அம்' என்பது நீர் என்ற பொருள் பயப்பதாகும். இங்ஙனம் 'நீ பவனம்' எழுத்துக் குறைப்பாற் பவனமாகி, வனமாகி, நம்ஆகி, அம்ஆகி நின்று வெவ்வேறு பொருள் பயக்குமாறு அமைந்த சித்திரக் கவிப்பாடல் மிகுந்த சுவைபயப்பதாகும். இது தமிழ்க் கவியின் மாட்சி**

மாவைப்பதியின் மேற்கு வாயிற் கோபுரம் வானுறவோங்கி வனப்பொடு திகழ்வது. அதுபோன்று அங்கு முருகன் பவனிவருந் தேரும் உயர்ந்தோங்கிய உன்னதம் வாய்ந்தது. விண்ணிலுள்ள நட்சத்திரங்கள் தேர்முட்டியைச் சூழ்ந்திருப்பதுபோன்று காட்சி தருமளவிற்கு உயர்ந்துவிளங்குவது. அங்ஙனம் விண்மீன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூழத்தோன்றுங் காட்சி திக்குப்பாலகர்கள் இறைவனுக்குப் பூமாரி சொரிவது போன்ற வியத்தகு தோற்றத்தைத் தருவது. விண்ணுற வோங்கிய மேதகு தேர்வனப்பினைப் பார்த்து அதிற் பவனிவரும் முருகப்பெருமானை வணங்கிப் பூமியிலே தாழ்ந்து இறைஞ்சுவார் சிவனே தாமாகவுள்ள சிவகுமாரனின் திருவடிநீழல் எய்துவர் என ஒரு பாடலிலே தேர் உற்சவத்தின் மேம்பாட்டைப் புலப்படுத்துகின்றார்.

"நீர்த் தரங்கக் கடல்மாவை நிற்பாரை நிறைமதிசூழ்
தேர்த்திருவுற்சமயாமம் திக்காளர் திகழநின்று
தூர்க்குமலர் என வீண்மீன் சுற்றாழ்ந்த சுடர்இரதம்
பார்த்தடி தாழ்குவர் செல்வர் தாமாவார் பரனுலகே."

'வண்டரங்கப்புனற் கமல மதுமாந்திப் பெடையினொடும்' என்று தொடங்கும் சம்பந்தர் தேவாரப் பண் பழந்தக்கராகம். இராகம் சுத்தசாவேரி அல்லது ஆரபியின் சாயல் இதிலுண்டு.

## திருநல்லையந்தாதி

*திருநல்லையந்தாதி* என்னும் பிரபந்தம் யாழ்ப்பாணம் புலோலி கிழக்கு பிரம்மஸ்ரீ சிவ.பஞ்சாஷரக்குருக்களால் இயற்றப்பட்டு பருத்தித்துறைக் கலாநிதி யந்திரசாலையில் 1940 ஆம் ஆண்டு பதிக்கப்பட்டுள்ளது. *திருநல்லையந்தாதி*ப்பிரபந்தம் பொருண யம்பிறங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வந்தாதி யாராயத் திற்குரியதென்ற கருத்தைத் துன்னாலை வடக்கு தா.முருகேச பண்டிதர் குறித்துள்ளார். அச்செய்யுள் வருமாறு,

"பற்பல நூலுள்ளுறைகளு மாய்ந்து பரிந்திணைத்துக்
கற்பவர் நெஞ்சங் கரையவுரைத்த கனிமொழிசேர்
அற்புத மேவுமிவ் வந்தாதி யோதின நவரதஞ்
சிற்பரவல்லைக் குகன் பாதநிழலைச் சேர்த்திடுமே."

"பற்பல நூல்களிடத்துங் காட்டிய பல அற்புத சரிதைகளை யாய்ந்துணர்ந்து இதிற் சேர்க்கப்பாலனவாகிய மகிமைகளைத் தொகுத்துச்சேர்த்து, இடையிடையே சில அகப்பொருட்டுறை களையடக்கியமைத்துப் பிரபந்த வகையுளொன்றாகிய அந்தாதித் தொடையில் நூறு செய்யுளை இயற்றி அப்பெருமானது பாதாரவிந் தங்களிற் சூட்டினேன். என்று முகவுரையிற் குறிப்பிட்டுள்ள ஆசிரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யர் *திருநல்லையந்தாதி*யிற் கூறப்பட்ட 'அகப்பொருட்டுறைகள்' எனச் செய்யுளாதாரங்களுடன் பட்டியலிட்டுள்ளார்.

**'இகுளை வம்மென்றல், கிழவோன் பிரிந்துழிக் கிழத்தி மாலைப்பொழுது கண்டிரங்கல், கையுறை மறுத்தல், பாங்கி வலம்புரி கேட்டவன் வரவறிவுறுத்தல், பாங்கிபிற் சென்று இறைவனை வரவுவிலக்கல், துணிவு, செவிலி தலைவியினது முலையிறுமாப்பைக்கண்டு ஐயுற்றுப் பாங்கியை வினாவுதல், தலைவன்றன் பதியடைந்தமை தலைவிக்குணர்த்தல், ஆயத்துத்தல், அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றல், இற்செறிப் புணர்தல், தோற்றத்தாலாராய்தல், பிறைதொழுகென்றல், இறைவி யறியாள்போன்று குறியாள் கூறல், பிரிந்துவருகென் றல், பாங்கி தலைமகள், அவயத்தருமை சாற்றல், பருவங் கூறி வரவு விலக்கல், பாங்கி அஞ்சி அச்சுறுத்தல், தலை மகன் மென்மைத்தன்மைக்கிரங்கல், இடையூறு கிளத்தல், தெளிவு மெய்தொட்டுப்பயிறல், இறைவன்றனகுக் குறைநேர் பாங்கி இறைவிக் கவன்குறையுணர்த்தல், சுனைவியந் துரைத்தல், பொய் பாராட்டல், இரவினீட்டம், அலரறிவுறுத் தல், தலை மகளோடிருந்த தலைமகன் கார்ப்பருவங் கண்டு மகிழ்ந்து சொல்லியது என்பனவாகும்.'**

உபாசனா தெய்வவணக்கம், குருவணக்கம், அவையடக்கம் என அமைக்கப்பட்டுக் காப்புச்செய்யுளுடன் அந்தாதி தொடங்கு கின்றது. தில்லையந்தாதிச் செய்யுட்களுட் சில அருணகிரிநாதரது கந்தரலங்காரச் செய்யுட்களின் சாயலைக் கொண்டிலங்குகின்றன.

"சேந்தனைக் கந்தனைச் செவ்வேள் முருகனைச் சேர்குறமின்
காந்தனை யிந்துளத் தாரனைக் தோகைக் கலாபியினர்
வேந்தனைச் செந்தமிழ் நூலனை நல்லைச் செவ்வேளினையே
சாந்துணைப் போழ்துமறவேனவனடி தஞ்சமதே."

(செய். 48)

*திருவிளையாடற்புராணம், திருவாதவூரடிகள்புராணம்* என்ப வற்றின் கதைக்கூறுகளைச் சுட்டும் 64ஆவது செய்யுள் வருமாறு,

"கல்லாலெறிந்த வெறியும் பிரம்பாற் கரத்தெடுத்த
வில்லாலடித்த வடியுங் கொருமரன் மெய்யனுமை
வில்லார் தனத்தமிழ்துண்ட குமரன் வழங்கூறல்பாய்
நெல்வார் வயல்வளை நல்லூரிற் சேயை நினைமனமே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சொல்லினைப் பலபொருள் தரும்வகையில் வைத்துக் கவிதைபாடுஞ் சாமர்த்தியமுள்ள இந்நூலாசிரியர் 87ஆவது பாடலில் 'அயம்' என்ற சொல்லை நால்வகைப் பொருளையுணர்த்துவதாய் ஆண்டிருக்கின்றார்.

"சுனையமிக்க நல்லூருடையானும் பற்சூர்க் குரியான்
றுனையயமேறு மணிமயிலானற் சுடரயிலான்
வனையயமேற் கௌரிமரு மான்கைமழுவரன் மைந்
தனையயம் வாங்கறல் போலெனை முத்தியிற் சார்விப்பனே."

முதலாவது அயம் - நீர், இரண்டாவது அயம் - ஆடு, மூன்றாவது அயம் - குதிரை, நான்காவது ஐ/அயம் - அழகிய இரும்பு.

முருகன் பாடல்நயக்கும் பண்பினைச்சுட்டும் *திருநல்லையந்தாதி*யின் 90ஆவது செய்யுளில் 'மாமயல் தீர்த்து என்னையாளுமதியளித்தே' என்று இரந்து வேண்டும் அருள்வேட்டல் கண்டு நயத்தற்குரியது.

"இருந்தமிழவ்வைக்கு நேரேட்டின் மென்கவியேறியளித்
தருந்தமிழ்ப் பாடலைக் கேட்டுமுதங் கொளுமாறுமுகன்
பெருந்தழையாரமாம் வான் மோக்கு நல்லையன்மீர்மிடிநோய்
வருந்தனி மாமய றீர்த்தென்னை யாளுமதியளித்தே."

நூறு பாடல்களமைந்து முருகப்பிரபாவத்தையும் அடியார் படுந் துயரையும் இவையிரண்டுக்குமுள்ள அத்யந்த உறவுகளையும் இவ்வந்தாதி கூறுகின்றது.

## நல்லைக்கந்தரந்தாதி

*நல்லைக்கந்தரந்தாதி*யைப் பாடியவர் **நாக.பரமசாமியவர்கள்.** முருகப்பெருமானைத் தமிழ்த் தெய்வமாகவே போற்றும் மரபினை அழுத்தியுரைக்கும் இந்நூலாசிரியர் தற்காலத்து மக்களது நெஞ்சக்கிடக்கையினை ஒருவாறு வெளிப்படுத்தி அவற்றுக்கு ஆறுதலைத் தேடுகின்றார். நூறு பாடல்களைக்கொண்டுள்ள இவ்வந்தாதிநூல் காப்புச்செய்யுளொன்றுடனும் நூற்பயன்நுவலும் செய்யுளொன்றுடனும் விளங்குகின்றது.

விநாயகரைச் சுமுகாயன் என்றழைத்து முருகப்பெருமானது புகழ்கூற நாவிலே திகழவேண்டுமென்று இரங்கி வேண்டுகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புச் செய்யுளில்.

"நல்லை முருகனவன் நாச்சியரின் நற்குமரன்
வல்ல தமிழ்ச்சொல்லும் வானவன்கான் - மல்லற்
புகழ்கூற என்னுள் புகுந்து புன்னாவில்
திகழ்வன் சுமுகாயன் தேர்."

*நல்லைகந்தரந்தாதிராதி*ச் செய்யுட்கள் அறுசீர் ஆசிரியவிருத் தச் செய்யுளமைப்பில் அமைந்துள்ளன. **நல்லூர் முருகனைப் பக்தி செய்வதாற் புத்தித்தெளியும், புன்னெறியிற் போயேயலையும் போதமறும் சித்தியுண்டாகும் சிவநெறியும் சேரும்** (செய். 2) என மொழிகின்றார்.

கோவிற் சிறப்பு, காவடிச்சிறப்பு, சித்தரும் யோகியரும் வழிபடுஞ்சிறப்பும், தேவர் சிறைமீட்டசெய்தி, மரணபயம், பிரணவ உபதேசம் ஆகிய செய்திகளை அடுக்கிக்கூறும் ஆசிரியர் முருகப் பிரானைவிட வேறு ஒர் உறுதிப்பொருள் உண்டோவென்ற வினாவினைத் (செய். 15) தன்நெஞ்சுள்ளே எழுப்புகின்றார்.

"பெறுதற்கரிய பேறுகளைப்
பெறுதல் விரும்பிப் பூதலத்தோர்
மறுகிக் களைத்தார் நல்லூரின்
மன்னா! கையில் நெய்கொண்டு
வறிதே வெண்ணெய்க் கலைவார் போல்
வருந்திக் கிடப்பார் உன்னைவிட
உறுதிப் பொருளும் உளதாமோ
உரையாய் வள்ளி நாயகமே!"

*நல்லைக்கந்தரந்தாதி*யின் 16 ஆவது பாடல், 'நாட்டில் நிலவும் நலிவுகளைக் களைந்தெறிவாய் நல்லைப்பொற்கொழுந்தே' என்று வேண்டுதல் செய்வதாயமைகின்றது. தெய்வசித்தத்தினையும் திருவ ருள் நலநாட்டத்தையும் முன்னிலைப்படுத்தி முறையிடும் மனித மனத்தின் இயலாமைத்தன்மையையுந் தெளிவுறப் படம்பிடித்துள்ள செய்யுள் இது.

"நாயகனேயிந் நாட்டிலுள
நலிவுகள் யாவும் ஒழிந்தெமது
தாயகத்துயருந் தீர்ந்திடுதல்
தாமதப்படுதல் நியாயமதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாயகத்தேயுன் நாமத்தை
வானாளொன்றிற் சொன்னாலே
போயகலாத பொல்லாப்பும்
உண்டோநல்லைப் பொற்கொழுந்தே."

விண்ணகரொத்த நல்லையிலே மேவியுறையும் கந்தா' என்றும் (செய்.17) 'ஓதும் நாவர் உறைவதனால் உயரும் நல்லை' (செய் 18), 'தேரூர்நல்லை ' (செய்19) , 'கந்தங்கமழும் நல்லை' (செய்.22) என்றுந் தலவிசேடம் உரைக்கப்படுகின்றது.

கவிஞர் தாம் கூண்டுக்கிளியாய் அடைபட்டுக்கிடந்து கூவுவதாய் அமைந்துள்ளது. 28ஆவது செய்யுள். விட்டுவிடுதலயாகும் அவா மேலிட்டநிலையிலெழுந்துள்ள வரிகள் ஆழ்ந்து நோக்கத்தக்கன.

"கூண்டுக்கிளியாய்ச் சிறையுற்றேன்
கூவுங் குரலைக் கேளாயோ!"

என வருகின்றன.

பல்வேறு ஒலிகளும் முழங்கும் நல்லூரில் உறையும் முருக னிடத்தில் உள்ளம் சீர்திருத்தும்படியாக வேண்டுதல் புரிவதாய மைகின்றது 37ஆவது செய்யுள்.

எக்காலமுமே இன்னிசையாய்
எழிலார் உன்னைச் சூழ்ந்தொலிசெய்
எக்காளத்தொனி நாதசுரம்
ஏற்றமுடைய தவிலொளியும்
தக்கார் இசைக்க நல்லூரைத்
தலையாம் நகராய்க் கொண்டவனே
பொக்கம் மிக்க என்னுள்ளம்
பொசுங்க நின்றன் அருள்செய்யே."

ஏங்கிய உணர்வு மேலிட முருகனிடத்தில் வேண்டுதல்புரிந்த கவிஞர் நம்பிக்கை மேலிட பரங்கருனைத் தடங்கடலாகிய முருகன் மீது அசையாத வைராக்கியங்கொண்டவராக 45 ஆவது பாட லைப் பாடியுள்ளார்.

"கோமான் குமரன் குவலயத்தின்
கொடுமைக் கவியைத் தீர்ப்பதற்காய்
மாமான் வள்ளிக் கொடிதன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருவிப் புணர்ந்து மகிழ்வுடனே
சீமானாக நம்மருகே
சிறப்போடிருக்கும் பேறுடையோம்
நாமேன் கவலைப்படவேண்டும்
நாளும் நல்லைப் பதிசெல்வோம்.''

**பணஞ்சேர்ப்பதற்காய் அல்லும்பகலம் அளவற்ற அல்லற் பட்டேயழும் மனிதர்களை விளித்துப் பொருட்செல்வத்தைவிட அருட்செல்வமே நலந்தந்து நிலைத்துக் காப்பாற்றும் என்ற மெய்ப்பொருளுண்மையைத் தெருட்டி நிற்கின்றார்.**

**'செல்வந்தனைச் சேர்ப்பதற்காய்ச்**
**செய்யாக் கருமஞ் செய்தே நீ**
**அல்லும் பகலும் அளவற்ற**
**அல்லற்பட்டே அழுகின்றாய்**
**வெல்லும் படையைக் கைக்கொண்ட**
**வேந்தன் தாளில் விழுவாயேல்**
**நல்லூர்நாதன் வருவானே**
**நலங்கள் தந்து காப்பானே.!'**

(செய். 46)

தனிமனித வழிபாடாக மட்டுமன்றி உலகமாந்தரனைவரையும் "வாரீர்" என்று அழைத்து வணங்குங் கூட்டுவழிபாட்டினை 53 ஆவது செய்யுளில் உணர்த்துகின்றார்.

**'வள்ளி குஞ்சரியைப்**
**புல்லி மகிழ்ந்து நல்லையிலே**
**வணங்க வென்றே வாழ்கின்றான்**
**வாரீர் உலக மாந்தர்களே.'**

54ஆவது செய்யுள் "மாந்தர்காளிங்கேவம்மின்" எனத் தொடங்கு கின்றது.

"வழியே தெரியா தலைகின்ற
வஞ்சநெஞ்சே உன்னுடைய
விழியும் குருடோ? மயிலேறும்
வேலன் தன்னை யெண்ணாயோ?
**மொழியால் தமிழின் தெய்வமவன்!**
மோதகக் கையான் தம்பியவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழில்சூழ் நல்லைப் பெருங்கோயில்
போனால் அவனைப் பெறலாமே." (செய் 85)

'கழலைப்பற்றி நின்றாலே
கருகும் துயரம்! அதைமறந்து
விழலைப் பற்றி நம்வழ்வை
வீணே கழித்து வியர்க்கின்றோம்
அழலைப்பற்றி யவன் மைந்தன்
அழகோ குறையும் நல்லூராம்
நிழலைப்பற்றி நிற்பாயேல்
நிமிடந்தோறும் நிம்மதியே." (செய்.96)

மேற்குறிப்பிட்டுள்ள செய்யுளில் 'விழலைப்பற்ற நம்வாழ்வை வீணே கழித்து வியர்க்கின்றோம்' எனத் தெய்வ நினைப்பற்ற வாழ்வை வெறுத்துப்பாடுகின்றார். இங்கு விழல் என்ற சொல் 'பயனற்ற வாழ்வு' என்னும் பொருளிலே வந்துள்ளமையைக் காணலாம்.

பிறவிக்கரையைச் சேர்ப்பான் நல்லை முருகன் என்பதனைக் குறித்து அமைவது 98ஆவது பாடல்.

"இன்றே எங்கள் ஆவியையும்
இளைத்து நொந்த உடலதையும்
வென்றே பெற்ற உடைமையையும்
வேலன் தாளில் வைத்திட்டால்
குன்றே அனையான் நல்லூரைக்
கோயில் கொண்ட ஞானத்தின்
கன்றே எம்மைக் கைதூக்கி
நன்றே கரையிற் சேர்த்திடுமே."

உடல் பொருள் ஆவி அனைத்தையும் வேலன் தாளில் வைத்திட்டால் அவன் எம்மைக் கைதூக்கி ஈடேற்றுவான் என்பது இப்பாடற் பொருள்.

*நல்லைக்கந்தரந்தாதி* நூற்பயன் நுவலும் பாடல் இவ்வந்தாதியைக் கூறும் அன்பர்கள் குன்றா இன்பம் எய்துவர் என்று 'பேறு' கூறுகின்றது.

"ஆறுமுகங்கள் கொண்ட பிரான்
அழகாய் நல்லை வளர்முருகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாறுமுகங்கள் நீக்கி யெம்பால்
வளரும் வினைகள் போக்குபவன்
நாறும் மலரோன் புகழ் கூறும்
நல்லைக்கந்தர் அந்தாதி
கூறும் அன்பர் யாவருமே
குன்றா இன்பம் எய்துவாரே."

இவ்வந்தாதி தினமும் பாராயணஞ்செய்தற்குகந்தது.

## மாவையமக அந்தாதி

*மாவையமகவந்தாதி*யை இயற்றியவர் வித்துவசிரோமணி **பொன்னம்பலபிள்ளையவர்கள்.** இந்நூல் முன்னுரை, நூலாசிரியர் வரலாறு, தலவரலாறு, உரைவரலாறு, ஸ்ரீமுகம், உரையாசிரியர் கருத்துரை, அணிந்துரைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ளது.

மாவிட்டபுரம், தலச்சிறப்பு, வரலாறு முதல் அங்கு நிலவிய இலக்கிய, சமூக கல்விப்பணிகள், குறித்த செய்திகளும் இந்நூ லிலே விரவிவருகின்றன. செந்தமிழ்நடையிற் பாடப்பட்டுள்ள இவ்வந்தாதிப்பாடல்கள் என்றும் நின்றுநிலைபெற்றுத் தமிழின் பெருமையையும் அதன்பொருளாம் முருகனது கீர்த்தியையும் என்றென்றும் பறைசாற்றும் என்பது உறுதியிலும் உறுதி.

"இம்மாவை யமகவந்தாதிமூலம் மட்டும் இற்றைக்கு 88 ஆண்டு களின்முன் சென்னபட்டணம், சித்தாந்த வித்தியாநுபாலன யந்திரசாலையிற் சர்வதாரி 1889 ஆம்ஆண்டு அச்சிடுவித்து வெளியிடப்பெற்றது. பின்னர் இம்மூலம் 1940 ஆம் ஆண்டு இரண் டாம் பதிப்பாகக் கொழும்பு மெய்கண்டான் அச்சியந்திரசாலையில் என்னால் அச்சிடுவித்து வெளியிடப்பெற்றது."[7] என்ற குறிப்புள்ளது.

"1887 ஆம்ஆண்டு சரவசித்தவருஷம் *மாவைஇரட்டைமணி மாலை* என்ற நூலை இயற்றி யாழ்ப்பாணத்திலேயே வெளியிட் டார். சித்திரக்கவிபாடுவதிலும் மிகுந்த புலமையாளர் என்பதை இவர் பாடி வெளியிட்ட இரட்டை நாக பந்தம், தேர்வெண்பா, மாலைமாற்று ஆதியாம் செய்யுள்களால் அறியலாம். பல செய் யுட்களையும் கட்டுரைகளையும் அப்போது வெளி வந்த 'உதய பானு'ப் பத்திரிகை வாயிலாக வெளியிட்டுள்ளார். அவைகிடைக்கப் பெறாமை கவலையே"[8] என்னுந் தகவல்களுங் குறிப்பிடத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிபு, யமகம், நிரோட்டம், நிரோட்டயமகம் என அந்தாதி வகைகள் பலதிறப்பட்டவை. அடிதோறும் முதலாம் எழுத்துத்தவிர, இரண்டாமெழுத்துமுதற் பல எழுத்துக்கள் ஒன்றுபட்டுவருவது திரிபு. முதலாம் எழுத்துமுதற் பல எழுத்துக்கள் ஒன்றுபட்டவருவது யமகம். சொல்லும் பொருளுந் தம்முள் வேறுபட்டிருக்கவேண்டும்.

*மாவையமக அந்தாதி* **சின்னத்தம்பிப்புலவர்** இயற்றிய கல்வளை அந்தாதியை ஒத்தது.

'கல்வளை' என்ற சொல்லை யமகமாக அமைத்திருப்பது போல 'மாவை' என்ற சொல்லை யமகமாக அமைத்திருப்பதை இவ்வந்தாதியிற் காணலாம்.

"மாவைய மாவைய முப்புரஞ் சென்றவர் மைந்ததரு
மாவைய மாவைய தாக்கிற் கடிகை வரைநிலைக்கு
மாவைய மாவைய மன்கொள ஆண் ஞமலிந்நரிக்கா
மாவைய மாவைய வீதோ நாளென்று வருந்தினனே."[9]

"புலவர் திலகராகிய **பொன்னம்பலபிள்ளையின்** கலைநலமும் கவித்திறமும் புலமைமாண்பும் கவினுறக் காட்சிதரும் இந்நூலின் பாடல்களை யான் ஓதி மகிழ்ந்து உரை வரைந்தேன். எமகம்பாடும் தனித்திறனோடு சிவநெறிச் செம்பொருளையும் சேர்த்துச் செய்யுள் இயற்றும் மதுகை இவ்வாசிரியர்பால் செறிந்துகிடப்பதை இந்நூல் நயம்நுகர்வார் நன்கறிவர்".[10]

மாவை (மாவிட்டபுரம்) நகரிற் கோவில் கொண்டெழுந்தருளிய முருகக்கடவுள்மீது யமகம் என்னுஞ் சொல்லணி (மடக்கணி) பொருந்தப்பாடப்பட்ட அந்தாதியென்னும் பிரபந்தம்(நூல்)என்ற காரணத்தால் இந்நூலுக்கு வந்தபெயராகும் இது.

இப்பிரபந்தம் செய்யுளந்தாதித்தொடைபொருந்த நூறு கட்டளைக்கலித்துறையினாலாவது, வெண்பாவினாலாவது பாடப் பெறுவதாகும். இந்நூலாகிய பிரபந்தம் கட்டளைகலித்துறையினாற் பாடப்பெற்றது. செய்யுளந்தாதித்தொடையாவது ஒரு செய்யுளின் இறுதி , பின்வருஞ் செய்யுளுக்கு முதலாகிவரத் தொடுக்கப்படும் தொடையாகும். ஈண்டு இறுதியென்றது செய்யுளீற்றிலுள்ள சீர், அசை, எழுத்து, இவற்றுள் யாதேனும் ஒன்றினை, அன்றியும் இப்பிரபந்தத்தின் இறுதி மண்டலித்துவந்து நூலின் முதலாஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுளின் முதலோடு அந்தாதித் தொடையாகத் தொடுக்கப்படும். இத்தொடைக்குப் பெயர் 'மண்டல அந்தாதி' என்பர். மண்டலம்-வட்டம். (வட்டவடிவமாகச்சென்று பொருந்தும் அந்தாதித்தொடை) அது இந்நூலின் நூறாஞ்செய்யுளின் இறதிச்சீராகிய 'மகிழ்ந்திடுமே' என்றதில் இரண்டாம் அசையாகப் பிரியும் 'திரு' என்பது, இந்நூலின் முதலாஞ் செய்யுளின் முதற் சீராகிய 'திருமா' என்றதில் முதலாம் அசையாகவரத் தொடுக்கப்பட்டிருத்தலைக் காணலாம்.

மடக்கணிக்கு தண்டியலங்கார உதாரணத்திலே முதலாஞ் சீரில் மாத்திரம் மடக்கணி அமைந்துள்ளது. இந்நூலோவெனில் முதல் இரு சீரிலும் (முதல் நாலு சீரிலுங்கூட) மடக்கணிகள் அமைந்துள்ளன. முதல் நான்கு சீரில் அமைந்த மடக்கணிக்கு இந்நூலின் 47ஆம் செய்யுளைக் கொள்ளலாம். ஏனைய செய்யுளெல்லாம் முதலிரு சீர்களிலேயே மடக்கணிகள் அமையப் பெற்றவை.57ஆவது செய்யுள் 'புணர்ந்துடன் போகிய தலைமகட்குத் தலைமகன் மாவை வளங்காட்டியது' என்னும் அகப் பொருட்டுறை அமைய இயற்றப்பட்டது. இதுபோல் வேறும் பல அகப் பொருட்டுறைச் செய்யுட்கள் உள.

93ஆம் செய்யுள்திருச்ஷேத்திர யமகப்பாவாகும். நக்கீரர் பாடிய *திருமுருகாற்றுப்படையைப்* போல இதுவும் முருகப்பிரானது படைவீடுகளை விதந்துகூறுகின்றது.

> "கம்கொள் எருக்கு அம்பு அரங்கு அம்பரம்கூத்தாடி
> சேய் இ(ல்)லக் காமங்கள்"

என்கின்றார்.

உலகிற் பல இடங்களிலுள்ள மக்கள் அங்கங்கே தம்மைத் தரிசித்து வழிபட்டு உய்திபெறும் பொருட்டுப் பல ஷேத்திரங்களிற் கோவில் கொண்டருளிய பரமசிவன்போலவே முருகனும் கொண்டுள்ளார். 'கூத்தாடிசேய்' என்ற குறிப்பிற்றோன்ற 'முருகன்' சுட்டப்படுகின்றான்.

பாடலிலமைந்த விஷயத்தால் உவமையணி தொனிக்கப் பாடப் பட்ட காவியநடை இது. இதனை 'வஸ்துநா உபமாத் தொனி' என்பர் வடநூலார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தச் சேத்திரயமகப்பா நக்கீரர் பாடிய *திருமுருகாற்றுப்படை* யோடும், திருநாவுக்கரசர் பாடிய *'ஷேத்திரக்கோவைத் திருத் தாண்டகத்தோடும்* ஒப்பிட்டு நோக்கத்தக்க பெருமை வாய்ந்தது. 100ஆவது செய்யுளிற் பக்தர்களே (உலகீரே) மாவை நகர் கோவிலிலே எம்பரமபிதா எம் தாய்மாராகிய வள்ளி தெய்வ யானையம்மையர்களின் மத்தியிலே வீற்றிப்பதைத் தரிசித்தும் அவருடைய திருவருட்பரமானந்தமாகிய கடலில் மூழ்கித் திளைத் தும் மகிழ்ந்திருப்பீராக' என்று தரிசனத்தையும் அதன் பலனையும் விதந்து கூறி நூலை மங்களகரமாகப் பூர்த்தி செய்கின்ற திறமை போற்றத்தக்கது.

இக்கவிஞர் மாலைமாற்று, *கரந்துறைச்செய்யுள், நீரோட்டம், இரட்டைநாகபந்தம், தேர்வெண்பா* ஆகிய பாடல்களையும் பாடியுள்ளார்.

> "மாவரை மாவரை மாய்த்தெழு நீத்த மடித்தசய
> மாவரை மாவரை மாணுணவாகு மலைகொடெய்வ
> மாவரை மாவரை மாக்ணத்தார் சுதர்மாவையர்க்கே
> மாவரை மாவரை மாண்கவி போற்றி வணங்குவனே.'
>
> (செய். 9)

**சூரபதுமன் மாமரவுருக்கொண்டுநின்றதும் மாவிட்டபுரத்துத் தலவிருட்ஷம் மாமரமாகவிருப்பதுங் கொண்டு இப்பாடலை நயந்தால் வரலாறு மேலும் துலங்கும்.**

## நல்லைப்பதிகம்

நல்லைப்பதிகம் என்ற பிரபந்தத்தினை யாழ்ப்பாணத்து வலிகா மம் வடக்குப் பகுதியில் வாழ்ந்த பிரசித்த நொத்தாரிசு, மயிலிட்டி **க.மயில்வாகனப்பிள்ளையவர்கள்** இயற்றினார். இந்நூல் மூன்று தலங் களின்மீது ஆசிரியர் பாடிய பதிகங்களை உள்ளடக்கிய தொகுப் பாக அமைந்துள்ளது. 1911ஆம்ஆண்டு 'வயாவிளான் ஐயஸ்ரீசா ரதா பீடேந்திரசாலையில் அச்சிடுவிக்கப்பட்டன'. என்ற குறிப்புக்க ளுடன் பக்கங்கள் சிதைவுற்றுக் கிழிந்தநிலையில் நூல் கிடைத் துள்ளது. எட்டுப்பக்கங்களை மட்டுமே கொண்டுள்ள இத் 'திரட்டு' உயரிய கவிதைச்சிறப்பும் கட்டமைப்புங் கொண்டிலங்குவது. கடினபதச்சேர்க்கைகள் மலிந்துள்ளன. இப்பதிகம் இலக் கண அமைதியுடன் பாடப்பட்டுள்ள பாடல்களாலாயது. துணைவை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லை, மாவை என்ற இந்நூலிலடங்கிய முத்தலங்களிலும் உறையும் இறைவன்மீது எழுந்த பாடல்கள் ஆசிரிய விருத்தத் தாலானவை.

துணைவைப்பதிகம் விநாயகப்பெருமானது பிரபாவங்களைக் கூறும் பத்துப்பாடல்களைக் கொண்டமைவது. தொகுப்பின் இரண் டாவதாக இடம்பெறுவது *நல்லைப்பதிகம்.*

*நல்லைப்பதிகத்*தின் காப்புச்செய்யுள் விநாயகர்துதியாயமை கின்றது. பற்றற்றநிலையில் நின்று பாடும் தாயுமானாரின் கவித்து வச்சாயல் இப்பாடல்களிலே உண்டு. 'நான் ஏன் பிறந்தேன்' எனத் தன்னைத்தான் கேட்கும் 'நெஞ்சொடு புலத்தல்' என்ற அகத்துறைச் செய்யுள்மரபு இப்பதிகத்திலே விரவிவருகின்றது.

மனதற்றநிலை வேண்டிப்பாடும் ஞானியான தாயுமானாரது நிலையினையும்[11] மாணிக்கவாசகரது வாழ்கையனுபவ வெளிப்பாட்டு நிலையினையும் போலவே *நல்லைப்பதிக* ஆசிரியர் **மயில்வாகனப்பிள்ளையுங்** காணப்படுகின்றார்.

'சுயவாழ்க்கையிற் சீரழியாதவர்கள் , வாழ்க்கையின் இருண்ட பகுதியை அறியாதவர்கள், வாழ்க்கையின் கசப்பை உணராத வர்கள் இந்த ஞானிகளின் பாடல்களை முற்றுமுணர்தல் அரிதினும் அரிது. மாணிக்கவாசகரின் ஆழ்ந்த அனுபவம் மட்டுமன்று. கல்லையுங்கனியச் செய்யவல்ல அவரது மொழியாட்சி அவர்தம் அனுப வங்களை எடுத்துக் கூறுமாற்றை மெருகூட்டி அவருக்குத் தனிப் பெருமை தருகிறது. தாயுமானார் தம் அனுபவங்களைத் தாமே எடுத்துக்கூறுவதாலேயே பெருமை பெறுகின்றாரெனலாம்.

"எந்நாளுமெனை வருத்திடு வறுமைபோக்கி நீ
யேர்கொனிலை வைப்ப தெந்நாள்
இரவுபகலோயாது கவலையால் வாடுமென்
னிருதயங் குளிர் வதெந்நாள்
துன்னார் தமிடையூறு நீக்கியனகூல நீ
துணையிலேற்கருள் வதெந்நாள்
தொலையாமலெனை நிதம் பீடிக்குநோயறச்
சுகமதைத் தருவதெந்நாள்
அஞ்ஞானத் திமிரமற நல்லறிவு கூட்டியே
யடியேனைக் காப்பதெந்நாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரரொடு முனிவர் முதல்யாவரும் போற்றி
நின்றர்ச்சிக்கு மேகமுதலே
மெய்ஞ்ஞான வுததியே நிதிபொழியு மேகமே
விரவு சுகவெள்ளமே சீர்
மேயவிப்பாரிலே மிளிர் நல்லையூரிலே
விரவும் வேற் சக்திதரனே."

**'தாயுமானவர் உலகப் பொருள்களிற் பற்றில்லாமையைத்தான் நாடு கிறார். மனதற்றநிலையில் பற்றுவைத்திருக்கிறார், பரிபூரணானந்தத்திற் பற்று வைத்திருக்கிறார்.'**[12]

என்ற கூற்றுக் கவனிக்கத்தக்கது. *நல்லைப்பதிக* ஆசிரியர் **மயில்வாகனப்பிள்ளை** அவர்கள் பாடிய 3ஆவது செய்யுள் அனைத் தும் நீயே என்று முருகனை எத்துவதாயமையும்.

"பூவுலகி லெனையீன்ற பொன்னனைய வன்னைநீ
போற்றியரு ளப்பனுந் நீ
பொங்கு கலைஞானமருள் சற்குருவுநீ
யுளம் பூரித்த தெய்வமுந் நீ
பாவுலகமான நிலநீர் நெருப்பொடுவாயு
பரவுமாகாய முந்நீ
பணியுமடியார் நிதமுமேத்தித் துதித்திடும்
பரிதிமதி சீவனுந்நீ
மூவுலகு மாளிந்த்ர போகமருள் வோனுநீ
முராரி யயனாக்கு வோநீ
மொழியுமெய்ப் பத்தியும் புத்தியுஞ் சித்தியும்
முத்தியுடன் பவன் நீ
மேவுலக கோடிதமை யாக்கிவைத்தழித்திடும்
விண்ணவா சரணுனக்கே
மேயவிப்பாரிலே மிளிர் நல்லையூரிலே
விரவும் வேற் சக்திதரனே."

இச்செய்யுளிலே வடசொற்கள் பலவற்றை ஆண்டுள்ள மையையுங் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர்க்கந்தர்பதிகம்

*நல்லூர்கந்தர் பதிகத்தி*னை இயற்றியவர் **நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர்.** 1978 ஆம் ஆண்டு *அறிவுப்பொழில்* என்னும் சஞ்சிகையில் இப்பதிகம் வெளியிடப்பட்டுள்ளது.

பதிகக்காப்புச் செய்யுள்களிரண்டு நூல் தொடங்குமுன் அந்நூல் குறைவுற வெற்றிபெறும் வகையினால் முருகனையும் சரஸ்வதி தேவியையும் துதிசெய்து பாடப்பட்டுள்ளன.

"சீர்மேவு நல்லைநகர் செவ்வேள்மேல்
ஏர்மேவு செந்தமிழ்நூற் பாவியம்பச்
சிந்துரப்புத் தோளிரண்டு கந்தமலர்ச்
செஞ்சரணங் காப்பு."

என்று முதலாவது காப்பு அமைகின்றது.

இரண்டாவது காப்புச் செய்யுளிலே 'நாயேன் மொழியுந் தொடைக்கு நிற்பான்முன்' என்று கல்விக்கரசி கலைவாணியை முன்னிறுத்தி வேண்டுதல்செய்கின்றார்.

தேவருலகும் பூவுலகு உயிர்களும் உய்யத் திருவருள் நோக்கஞ் செய்பவனும் பல்வேறு பாக்களினாலும் போற்றிப் புகழப்பட்டுள்ள கீர்த்திவாய்க்கப்பெற்றவனும் பழமறைகளுக்குக் கூட எட்டாத தத்துவாதீதனாக விளங்குபவனும் ஆறுமுகங்களும் பன்னிரண்டு திண்தோளுமாகத் திருவுருக்கொண்டு எழுந்தருளி யுள்ள தெய்வமே என விளித்து,

"எம்முடைய தீவினைகள் தீர்த்துனது
சேவடி கொடுத்தருள்வாய்
மாமேவு கஞ்சமலர் வாவியுஞ் சோலையும்
வளமுயர் நல்லைநகர் வாழ்
மங்கையுமைபாலனே செங்கைவடிவேலனே
மயில்வாகனக் கடவுளே"

எனப்பாடியுள்ளர் புலவர்.

பிறவி பற்றிய தத்துவங்களை எடுத்துக்கூறும் மூன்றாவது பாடலில் , பஞ்சப் புலன்களை வென்று அடக்கியாண்டு நடந்து கொள்ளச் சிறியேனுக்கு ஆற்றல் ஒரு சிறிதுமில்லை. அத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமொருமைப்பாட்டுடன் உன்னைத் தியானித்துச் சேவிக்கவோ வெனில் அதற்கும் பிரபஞ்சபோகங்களிலழுந்துகின்ற என்மன மானது ஒரு நிலையில்நில்லாது அலைகின்றதே! ஞானதேசிகனே! இதற்கும் ஒரு வழியுரைத்தருள்வாய் என்று முறையிடுங் கருத்துக் களைச் சொல்லுகின்றார்.

"வளமேவு நல்லைநகர் வாழ்
மங்கையுமைபாலனே செங்கைவடிவேலனே
மயில்வாகனக் கடவுளே."

என்று பதிகப்பாடல்களொவ்வொன்றில் ஈற்றுவரிகள் முடிவுறும் இப்பதிகத்தின் 8ஆவது பாடல் 'ஓ' கார ஈறுபெற்று, முருகன் திருச்செவியிற் காரசாரமாகக் கேட்கும்படி கூவியுரைக்கின்றார்.

"ஆருக்கு மழியாத வவுணரைச் செற்றுமுன்
வமரரைக் காக்கவிலையோ
ஆகாத சூரனுக் குன்னடிகள் தாங்குமோ
ரரிய பேறாக்கவிலையோ
போருக்குடைந்த சுரனூர்புக்க விந்திரன்
புதல்வனைத் தேற்றவிலையோ
பூதம் புடைத்துணா தாயிரம் பேரப்
பொறுப்பினிற் போற்றவிலையோ
பாருக்குளே கலியுகத்திலே கண்கண்ட
பரமகுரு வேயுன்னிரு
பாததாமரையன்றி யேதுமொரு கதியிலாப்
பாவிக்கு னருளில்லையோ!
வாருக்கடங்காத பூண்முலைத் தெய்வானை நாத
நல்லை நகர்வாழ் மங்கை யுமைபாலனே
செங்கை வடிவேலனே மயில்வாகனக் கடவுளே."

முருகவழிபாட்டு மரபுகளையும் விரதாநூஷ்டானங்களையுந் தமது பதிகத்தில் நுவலுஞ் சோமசுந்தரப்புலவர் துள்ளளோ சையுடன் பாடிய 9ஆவது செய்யுளில், முருகனை ஆடிவழிபடும் ஆனந்தபரவசநிலையினைக் குறித்துள்ளார்.

"காவடியெடுப்பர் சிலர் பாவடி தொடுப்பர் சிலர்
காய்பசி யடக்கி யொருமுக்
காலமுமிருப்பர் சிலர் வேலமுருகப்பபிணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயென வுரைப்பர் சிலபேர்
சேவடி துதிப்பர் சிலர் சாமரையெடுப்பர்சிலர்
தேமலர் தொடுப்பர் சிலபேர்
தீபநிரை வைப்பர் சிலர் தூபமுறையுய்ப்பர் சிலர்
சீரமுதளிப்பர் சிலபேர்
நாவடி னருட்சபையிலேழையோர் திருப்பணியை
நாட வருளைப்புரிகுவாய்
மாவடிதனிற் பெரிய பூவடி யிருத்துருகு
மான்மருக நல்லை நகர்வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடிவேலனே
மயில்வாகனக் கடவுளே."

பதிகத்தின் 11வது பாடலிலே சினம், பிணி வந்துள்ளபோதுங் காலன் எதிர்வந்தபோதும் 'கந்தவுன் திருநாம மந்திரம் மறவாது காதலோடுருரைக்க வரமீ ' என்று வரம் கேட்பதாக அமைகின்றது. உயிர்க்குறுதிபயப்பன மந்திரங்கள் எனும் உண்மையை உணர்த் தியவகையில் *நல்லூர்கந்தர்பதிகம்* சிறப்புக்கொண்டமைகின்றது.

**'சோமசுந்தரப்புலவர் நல்லையிற் குடிகொண்ட முருகப் பெருமான்மீது இரு பதிகங்களும் ஓரந்தாதியும் திருப்புகழும் பாடினார். மாவிட்டபுரம் முருகப்பெருமான்மீது ஒரு பதிகமும் பாடினார்'**[13] என்று அறியப்படுகின்றது.

## மாவைநகர் முருகவேள்பதிகம்

*மாவைநகர் முருகவேள்பதிகம்* **நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரால்** இயற்றப்பட்டுப் பலகாலமாகக் கையெழுத்துப்பிரதியாக இருந்துவந்தது. புலவர்கள் நவாலியிலிருந்து ஒற்றைத்திருக்கல் (மாட்டு) வண்டிலில் அடிக்கடி தனது மகளையும் குடும்பத்தையும் சந்திக்க வருவதுண்டு. அத்தருணங்களில் மாவைக் கந்தனைத் தரிசிப்பர். இப்படியான காரணகாரியங்களின் தொடர்பால் எழுந்த 'இப்பதிகத்தினை அன்னாரது மருகரின் (வைத்தியகலாநிதி ஆறு முகம் சின்னையா) நினைவுமலரில் வெளியிடுவது தகும்.' என்ற குறிப்புக்களுடன் நூல் இலங்குகின்றது.

*மாவைநகர் முருகவேள்பதிகம்* மூன்று காப்பு வெண் பாக்களோடு தொடங்குவது. நூல் அறிமுகச்செய்யுள் ஆறுமுகங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களினதும் பேரொளிப் பிரகாசஞ்சுட்டி ஆரம்பிக்கின்றது. ஆயிரங் கோடி சூரியவொளிகளாலும் ஆறுமுகம் என்ற கருத்தமைந்த தொடர் வருகின்றது.

"ஓராயிரங்கோடி கிரண சூரியரென்ன
வொளிகாலு மாறு முகமும்."

என்று ஆரம்பித்து,

"வாராத சித்தியருள் பேராயிரங் கொண்ட
வள்ளலே மாவைநகர் வாழ்
மங்கையுமை பாலனே செங்கைவடிவேலனே
மயில்வானக்கடவுளே."

என வருதல் முருகனுக்குரிய திருப்பெயர்கூறி அவனது விசாலித்த அருளைக் கூறுவது.

"பாவணர் தருகின்ற செந்தமிழ்த் தொடையமுது
பருகு மாறிரு காதனே."

என்றும்,

"மூவா முகுந்தற்கு மருகனே யொருகைமா
முகவனுக் கொரு துணைவனே" (செய். 3)

எனவும் ஏத்திப்பாடுங் கவிஞர் தம் கடைசிப்பாடல் சிறந்த ஓசை நயச்சிறப்பும் சொல்லாட்சிலாவகமும் விளக்கிப் பதிகநூல் முழுவதுந் திருவருள்நலஞ்சுரப்பதென உணர்த்தி நிற்கும் பெற்றிமிக்கது.

"கந்தநம வைந்து முகர்தந்த முருகேசநம
கங்கைதரு மைந்தநம
கார்த்திகேயாயநம பூத்திடு கடம்புபுனை
கனகமணி மார்பா நம
எந்தை நம ஈராறு புயந்தநம மன்னுயிர்க்
கீசநம நேசாநமஇமையவர்கள் தலைவநம
கன்னிமாரிருவருக்கனியமண வாளாநம
தந்தைநம சங்கரன் குரவநம வைங்கரன்
தம்பிநம நம்பிநம வோம்
சரவணபவாயநம சரவணபவாயநம
சாமியுன் னபய மபயம்
வந்தனைசெய் மாதவன் பூசித்த நகுலமலை
மங்கையுமை பாலனே செங்கைவடிவேலனே
மயில்வாகனக் கடவுளே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவைப்பதிகம்

*மாவைப்பதிகத்தினைப்* பாடியவர் வறுத்தலைவிளான் **க.சரவண முத்து.** இக்கால உணர்வுடன் முருகனிடத்துக் குறையிரந்து கேட்கும் பண்பு இரண்டாவது பாடலில் ஆரம்பமாகின்றது. தெய்வி கத்தால் மட்டும் இயலக்கூடிய காரியமாயிற்றே' என்று காண்போ ரெல்லாம் அங்கீகாரம் கொடுப்பதுபோலவும் அமைக்கப்பட்டுள்ளது இப்பாடல்.

"பஞ்சமா பாதகம் வஞ்சகங் கொஞ்சமும்
பற்றின்றியோடி விடவும்
பற்றுள்ளதாய் தந்தை குரு தெய்வமிவர்களைப்
பக்தியோடு நேசிக்கவும்
நெஞ்சமிவ் வுலகினிற் பட்டுழலு
நெறிகண்டு நைந்துருகவும்
நின்பெருமை பேசிடுஞ் சங்கங்களங்கங்கு
நிலைபெற்று நீடிக்கவும்
சஞ்சலம் தீரவே பரசமய நண்பருஞ்
சைவசித்தாந்த நெறியைச்
சரியாக வோர்ந்துமே மறுஜனன மெய்யென்று
சாதிப்பதற்கு மருள்வாய்."

என்பது பாடல்.

இப்பதிகந்தவிர, இன்னுமொரு *மாவைப்பதிகம்,* மயிலிட்டி க.மயில்வானப்பிள்ளையினாற் பாடப்பட்டுள்ளது. அதன் இயல்புகளைத் இனி நோக்குவாம். இப்பதிகத்தின் பாடல்களின் இறுதி வரிகள் 'மாவையம்பதியமலதேவருந்துதி குமரவள்ளலே ஞானவடிவே' என நினைவுகூறுகின்றது முதற்பாடல்,

"உலகெலாந் நொடியில் வரு சித்ரக்கலாபமயி
லூர்தி மேலிவரு முருகா
ஓங்கலொடு சூரனுடனிங் குமாறுருவுமவ்
வுரவு வேலேந்து முருகா
அலகிலா லீலையாற் கோன் மகளுமான்மகளு
மார்வமுற வைக்கு முருகா
ஆடுதிறற் கோழிநின்றோங்கிய விறற்கொடி
யதைத்தகவு யர்த்து முருகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவுசீரீராறு திருவிழியுமருள் பொழிய
நின்னாறு வாயிடத்தும்
நிகழவே புன்முறுவல்செவி மடுத்தருள்வையோ
நீண்ட விண்ணப்ப மிதனை
மலைவிலார் மலைமகடமைந்தனே கந்தனே
வாரணமுதற் கிளையவா
மாவையம்பதிய மலதேவருந்துதிகுமர
வள்ளலே ஞான வடிவே."

முருகப் பெருமானைப்பற்றிய புராணச்சிறப்புக்களைப் பாடு பொருளாகக்கொண்டும் தன்னுணர்வுடனான பக்தியை வெளிக்காட்டியும் அமைக்கப்பட்டுள்ள பாடல்களாகச் சிறந்துமிளிருந் தன்மை யாயமைந்த பாடல்களைக்கொண்டமைவது *மாவைப் பதிகம்* என்ற இந்நூல்.

## மாவைச்சுப்பிரமணியக்கடவுள்பதிகம்

*மாவைச்சுப்பிரமணியக்கடவுள் பதிகம்* என்னும் நூலின் ஆசிரியர் செல்லக்குருக்கள் என அன்புடன் அழைக்கப்படும் மாவைக் குருமணி **சுவாமி, குமாரசுவாமிக்குருக்கள்.** இந்நூல் 1965ஆம் ஆண்டு இரண்டாம் பதிப்பாக மாவை வேதாகம நூல் நிலைய வெளியீடாக வெளிவந்துள்ளது. இந்நூலின் இரண்டாம் பதிப்பின் முன்னுரையில் நூல் பற்றிய பூர்விகத் தகவல்கள் இடம்பெற்றுள் ளன. இந்நாலாசிரியர் *மாவைப்புராணம்* முதலாம் பனுவல்கள் பலசெய்த புலமையாளன். இந்நூலின் முதற் பதிப்பு 1914 இல் சென்னப்பட்டணம் சைவவித்தியானுபாலன யந்திரசாலையில் அச்சிற் பதிபிக்கப்பட்டது. முதற்பதிப்பிற்கு சிறப்புப்பாயிரமீந்தவர் ஸ்ரீமத் சுவாமிநாதபண்டிதரவர்களாவார். இரண்டாம் பதிப்பிற்கு அணிந்துரை நல்கியவர் பிரமஸ்ரீ **தி.கி. சீதாராமசாஸ்திரிகள்** ஆவார் என்ற செய்திகளை அறியமுடிந்துள்ளது.

*மாவைச்சுப்பிரமணியக்கடவுள்* பதிகம் என்ற இந்நூலுக்கு அணிந்துரைவழங்கிய வேத வேதாங்க விற்பன்னரும் வைதிகக்கிரியாவல்லுநரும் வியாகரணசிரோமணியுமாகிய பிரமஸ்ரீ தி.கி.சீதாரமசாஸ்திரிகள் தமது உரையிற் சில முக்கிய கருத்துக்களை முருகத்தத்துவார்த்தமாகக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெயர்கள் யாவும் காரணம் கொண்டு
அமையப்பெற்றனவாகும். இவைகளுள்
தலைசிறந்தனவாயும் உபநிடதங்களிற்
போற்றிப்புகழப்படுவதும் இடப்பெயராகவும்
அமைந்தது 'குகன்' என்னும் நாமமாகும்."

கைவல்ய உபநிடதத்தில்,

"பரமாத்மரூபம் குகாசயம் நிஷ்களம் அத்துவிதீயம்
பர்மயோ வேத நிஹிதம் குகாயாம்"

என்ற மந்திரங் காணப்படுகின்றது. இதன் கருத்து பரமான்மா சொரூபியும் கவலையற்றவருந் தனக்கு நிகரற்றவருங் குகையில் உறைபவருமாகிய பரம்பொருளை எவன் அறிகின்றானோ என்பதாகும். சகல ஜீவராசிகளின் ஹிருதயாகாசத்தைக் குகை என்பதும் அதில் உறைபவன் குகன் என்பதும் அவனே பரம்பொருள் என்பதும் உபநிடத மந்திரத்தின் விளக்கமாகும். குகன் என்ற நாமம் இடவாகுபெயராக அமைந்தது. அந்தக் குகனென்னும் நாமம் சிவத்தையே குறிப்பதாகும். முருகனும் சிவனும் அபின்னமானதால் (பிரிக்கமுடியாததால்) முருகனுக்குச் சிறப்புப் பெயராக அமைந்தது.

"குகேதி தகரா காசஹ் வேதாந்தேஷச பட்யதே
தன்னிஷ்டோயம் குக; ப்ரோக்த; ஸர்வஹிருத
கமலாஸந,"

தகராகாசத்திற்குக் குகை என்ற பெயர் வேதாந்த நூல்களிலே வழங்கப்பட்டுள்ளன. அந்தக் குகையில் உறைவதாற் 'குகன்' என்று அழைக்கப்படுகின்றான். அவன் எல்லோருடைய இருதய கமலத்தையும் இருப்பிடமாகக் கொண்டவன். இவ்வாறு 'குகன்' என்ற நாமாவின் பெருமையை உபநிடதங்கள் விளக்கியுள்ளன.

வீரம், பயம், அருவருப்பு முதலிய ரஸங்களை உணர்த்தும் பாக்கள் வல்லின எழுத்துக்கள் நிறைந்த அருஞ்சொற்கள் கொண்டு அமைக்கப்படவேண்டுமென்றும் அன்பு, கருணை, அமைதி, பக்தி முதலிய ரஸங்களை உணர்த்தும் பாக்கள் மெல்லின எழுத்துக்கள் நிறைந்து லலிதமான சொற்கள் கொண்டு அமைக்கப்படவேண்டுமென்றும் தமிழில் செய்யுள் இலக்கண மரபொன்று உண்டு. அதற்கு ஏற்ற முறையில் இந்தத் துதிநூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருக்கின்றது. இப்பெரியாரின் வாக்கு முருகபக்தியிலீடுபட்ட அடியார்கக்கு அமுதரசமாக அமைந்துள்ளது.

முருகனடியார் எவ்வாறு விளங்குவார், எவ்வாறு முருகனை வழிபடுவார், அவர்கள் உள்ளம் எத்தகையது, அவர்கள் பெறும் பாக்கியம் என்ன என்பன போன்ற வினாக்களுக்கேற்ற மறு மொழியாக ஐந்தாவது பாட்டு அமைந்திருக்கின்றது. கவியாகிய தாம் செய்த பிழைகள் யாதானுமுளதேல் அதனை மன்னித் தருளுக என்று ஒவ்வொரு பாடல்களினதும் கடைசி அடிகளிலும் வேண்டுகின்றார்.

'சங்கர பகவத் பாதாள்' என்பார் சகலலோக குருவாக விளங் கியவர். அவரியற்றிய *சுப்பிரமணிய புஜங்கம்* என்னும் நூலை அடியொற்றிய கருத்துக்களும் இதிலுண்டு.

'தாயும் தந்தையும் மைந்தன் செய்யும் பிழையைப் பொறுப்ப தில்லையா? சகல ஜீவராசிகளுக்கும் நீர் தந்தை; யான் உமது சிறுகைப்பிள்ளை, என் பிழையை மன்னிப்பது உமது கடமை யாகும். இக்கருத்து ஒவ்வொரு பாட்டினதுங் கடைசியடியில் இடம்பெறுமாறு தொகுத்திருக்கின்றார். **'ஏழையேன் செய்த பிழை'** எனத் தமது குற்றைத்தைக்கூறி மன்னிப்புக் கேட்கின்றார்.

"ஏழையேன் செய்தபிழை யாதேனு முண்டாயி
வின்னே பொறுத் தருளுவா
யெழில் வள்ளி கணவனே பொழில் மாவை நேயனே
யீச குருநாத குகனே."

9ஆவது பாடல், முருகப்பெருமானைப்பற்றிய அற்புதக் கதைக ளினது தொகுப்பாயமைந்துள்ளது.

"மாருதப்பிரவல்லி தன்குதிரை முகமாற
மாற்றி நன்முகமாக்கினை
மன்னன் முசுகுந்தனுக் குன்றம்பிமார்களை
மன்பொருநராக்கி வைத்தாய்
மறைமுனி மகத்தில்வரு செச்சையையிவர்ந்துதிரு
வாகனமதாக்கி வைத்தாய்
பாரினின் மலைக்குறவர் பால்வந்தவள்ளியைப்
பற்றிமனையாக்கி வைத்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிடமு னாதபடி பாடுநற் கீரனைப்
படிமீது மீட்டு வைத்தாய்
பண்டிதர்களீண்டியுறை சங்கத்திருந்து பொருள்
பகரவும் பண்ணிவைத்தாய்
சூருடல் பிளந்துபின் கோழிமயிலாய் வரச்
சொல்லடிமையாக்கி வைத்தாய்
தொல்பரங் குன்றினிற் தெய்வானையம்மையைத்
துணைமனைவியாக்கி வைத்தாய்
துய்யதோர் வீரனுக்குருவெலாங் காட்டியே
தூயனாச் செய்துவைத்தாய்
ஈருமிரு தலைக் கொள்ளியெறும்பு போலலைந்திடும்
**மிழிஞனுக் கருளலரிதோ**
வேழையேன் **செய்தபிழை யாதேனுமுண்டாயி**
**லின்னே பொறுத்தருளுவா**
யெழில் வள்ளி கணவனே பொழின்மாவை நேயனே
யீசகுருநாத குகனே.”

## மாவைக்கந்தன்பதிகமும் அதன் உரையும்.

*மாவைக்கந்தன்பதிகமும் அதன் உரையும்* என்ற நூலில் ஆசிரியர் தென்மயிலை **இலக்கணவித்தகர் இ.நமசிவாயம்.** இதன் உரையாசிரியர் மேலைத்தெல்லி விழிசிட்டிப் பண்டிதர் வே.சங்கரப் பிள்ளை.

காப்புச்செய்யுள் ‘மன்னுந் திருமாவை’ என்று தொடங்கி விநாயகப்பெருமானை இறைஞ்சுவாதயுள்ளது. ‘மன்னுந் திருமாவை வாழ்வுகந்தகந்தன்’ என்னுந் தொடர் நிலைபெற்ற செல்வத்தினையுடைய மாவிட்டபுரத்தாரும் அங்குச் சென்று தம்மை வழிபடுகின்றவர்களும் ஆகிய யாவருஞ் சிறந்து வாழ்தலை விரும்பியகந்தன் என்னும் பொருளும் கொள்ளக்கிடக்கின்றது என்பதனைப் புலப்படுத்துகின்றது. ‘மன்னுந்திரு மாவை’யைத் திருமன்னும் மாவை என மாற்றி - கொண்டு கூட்டி - இலக்குமி விரும்பி நிலைபெற்றிருக்கின்ற மாவை எனவுங் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது செய்யுளில்,

> "மாகமுகு வாழைபல வானளாவியே நிறையும்
> மாவைநகர் வாழ்முருகனே."

என வருதல் காணலாம்.

மாவை என்பது, புதுமையானதொரு மாமரம் தலவிருட்சமாய் அவ்வாலய உட்பிரகாரத்திலே தொன்மையதாய் நிற்றல்பற்றி அவ்வாலயத்துக்காய பெயராய், அவ்வாலயம் உள்ள ஊருக்கும் ஆயிற்று. அம்மாமரம் தொன்மையானதாயினும் இளமைத் தோற்றத்தோடு ஆலய உட்பிரகாரத்து வடபாலில் வானுறை வோங்கி வளர்ந்துநிற்றலை இன்றுங் காணலாம். **முதியவர்களும் அம்மாமரம் இளமைக்காலத்தும் இன்றுள்ள தோற்றமாகவே காணப் பட்டதென்பர்.** எப்பருவத்தும் பூ, பிஞ்சு, காய், கனிகளோடு சிறந்து விளங்கும் சிறப்பினையுடையது. மேலும் அவ்வாலயப் பூஞ்சோலைகண் **காம்பு தோன்றாது பனங்குலைபோலக் காய்கள் நெருங்கிய குலைகளை ஈனுகின்ற தென்னையொன்று** நிற்றலையும் இத்தலமகிமையாகக் கொள்ளலாம்.

*மாவைக்கந்தன்பதிக* நூற்பாடல்கள் பன்னிருகழிநெடிலடியாசிரிய விருத்தத்தால் இயைந்துள்ளதோடு, எளிமையும் சந்தச் சிறப்பும் கொண்ட நடையில் இயல்வன. தலச்சிறப்புக் கூறுவதும், துதிசெய்யும்பண்புகள் கொண்டமைவதுமான பதிகமுமாகும்.

'மாவைமுருகனே தாரகாசுரனையும் கிரவுஞ்சமலையையும் சேர அழித்துத் தேவகிரி சென்று அங்கு தேவர் செய்த பூசனையை மகிழ்ந்து ஏற்று மண்ணியாற்றங்கரையிலே குமாரபுரியாய நகரைத் தேவதச்சனைக்கொண்டு அமைப்பித்தருளி அங்கு விஷ்ணு முதலி யோர் செய்த பூசனைக்கு உவந்து அவர்களுக்குத் திருவருள் பாவித்தருளிக் கருணையோடும் விரும்பி அங்கு எழுந்தருளுகின்ற குகனே நாங்களும் தேவரீரது திருவடிகளைப்பணிவோம். எமக்கும் திருவருள் புரிவீராக என்று வரும் ஐந்தாவது பாடலிது. இப்பாடலி லே வரும் கதைமரபு வடநாட்டிலே பிரசித்திபெற்ற கதை மரபாகும்.

> "வீரமிகுவாகுவெனும் வானவனை நேர்பொருது
> வேறலரி தாகமலையில்
> மேவியொளி தாரகனை மாவையொடு போயழிய
> வேல் விடுபந்தாகமு மழித்
> தாரமகிழ் தேவரோடு தேவகிரிமேவி வர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானவர் செய் பூசனை மகிழ்ந்
தாயிடையினீங்கி மணியாறு தவழ் சூழலிங்கு
மாரபுரி யாய நகரை
நேரரிய தா நிறவி மாலயன் வலாரியொடு
மாதவரு நேயமிகவே
நேமமொடு தாள்பணிய நோதலறு வாழ்வுதவி
நீடு மருளோடுறைகுக
வாரமுடனாமுனது தாள்பணிவ நாடியெமை
வாடலற நீதுணை செயாய்
மாகமுகு வாழைபல வானளாவியே நிறையு
மாவைநகர் வாழ் முருகனே!"

"நூலாசிரியரும் உரையாசிரியரும் என்ற இவ்விருவரும் வித்து வசிரோமணி பிரமஸ்ரீ சி.கணேசையர் அவர்களின் நல்லாசி பெற்ற மாணவர்கள். இ∴தொன்றே இந்நூலினதும் உரையினதும் சிறப் புக்களை விளக்கப் போதிய சான்றாகும்" என இந்நூலின் வெளி யீட்டுரையில் மாவைப் பிரதம சிவாசாரியர் **மகாராஜஸ்ரீ சு.து.ஷண் முகநாதக்குருக்கள்** நூற்சிறப்பை எடுத்துரைத்துள்ளார்.

## மாவைக்கதிர்காம வடிவேலர்பதிகம்

*மாவைக்கதிர்காம வடிவேலர் பதிகத்தின்* ஆசிரியர் வறுத்த விளான் காலஞ்சென்ற ஆசிரியர் **க.சரவணமுத்து** . 'மயிலைமருதடி வாழ்வே, என்று விநாயக(ர்) வணக்கத்துடன் துதித்துநின்று இப்பதிகத்தினை ஆக்கியுள்ளார். மாவைப்பதியையும் கதிர்காமப் பதியையும் இணைத்துக் குறிப்பிட்டுள்ளமையை இணைத்து நோக் குதல் வேண்டும். செல்வச்சந்நிதித் திருத்தலமும் கதிர்காமத்தோடு இணைத்துச் சிறப்பிக்கப்படுவதுஞ் சிந்திக்கத்தக்கதே. இவ்விடயம் மேலும் வெகுவிரிவாக ஆராயப்படத்தக்கது.

நூலின் இயல்புகளைக் கூறும்போது 'இப்பதிகம் கற்றறியாத பொதுஜனங்களும் எளிதாக விளங்குமாறு பொதுவான பாஷை யில் இயற்றப்பட்டுள்ளது. எளிதில் விளங்கவும் வாசிக்கவும்வேண்டி, வேண்டாத புணர்ச்சிகள் விடப்படலாயின'. என்றுரைக்கப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்டகருத்து இந்நூலிலடங்கிய பதங்கள் அனைத் துக்கும் பொருந்துவதாகவேயுள்ளது. தன்பிழையைப் பொறுத்தரு ளும்படி பாடும் கவிஞர் வினாக்களைத்தொடுத்தும் அதனூடே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகன் பெருமையும் பேசி வேண்டுதல் புரிகின்றார். வினாக் கோவைகளாகப் பாடப்பட்டுள்ள வரிகள் முருகனது பரங்கரு ணையை உணர்த்தப் பெரிதும் உதவுவன.

"தூய திருமேனியது கண்டு பேரானந்த
சுகவாரி தோய்வ தென்றோ." (செய்.1)

என்றும்,

"எந்தை பரதக்கண்ட தீர்த்தங்கள் பலவாடி
யேன் பிணிகணீங்கவில்லை" (செய்.2)

எனவும்,

"அன்னையே தந்தையே யாருயிர்த் துணைவனே
ஆலால முண்டவர்க்கு
மருணகிரிநாதர் நக்கீரர் குறுமுனிவர் முத
லடியார்க ளெல்லவர்க்கும்
முன்னை நாட் குருவாக வந்தநீயல்லையோ
முகில் **பரங்குன்று செந்தூர்**
**முதியவேளாவி குடியேரகங் குன்றுதோ**
**றாடல் பழமுதிர் சோலையு**
**மன்னுசன்னிதி கந்தவனனல்லை யீனுவையொடு**
**மாவையிலைப் பதிகளும்**
மருவியங்கங்களவர்கள் வேண்டுவரமீயு நீ
மற்றெனைக் காத்தலரிதோ
என் குறைகணீக்கி நிதமுன் கிருபை தந்திடுவை
யென்சாமி குமரகுருவே
இதமாவையுறுநாத கதிர்காம வடிவேலா
இனிய மெய்ஞ்ஞான மணியே." (செய்5)

**இப்பதிகம் தமிழகத்திலுள்ள ஆறுபடைவீடுகளையும் ஈழத்தி லுள்ள முருகத்திருத் தலங்களையும் இணைத்துச்சுட்டும் போக்கிற் சிறப்புற விதந் துரைக்கத்தக்கதொன்றாகின்றது.** முருகனை மனவெ ளிகடந்து பரந்துபட்ட, விசாலநோக்கிற் கண்ணோட்டஞ் செலுத் திக்கூறும் பண்புங் கவிஞருக்கு இருந்திருக்கிறது.

மனிதவாழ்வில் உலகியல் இருப்பு தலைமையும் முதன்மையும் பெற்றுவிடுவதனைத் தெளிவுறுத்துவதோடு முருகனது கருணை யால் உலக மாயையிலிருந்து விடுபடும் நிலையையும் இப்பதிகம் எடுத்தோதுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்தாவது பாடல் படைவீடுகளைக் குறிப்பிடும் பான்மை யினையும் ஈழத்து முருகத் தலம் பற்றிப் பேசுந்தன்மையினையும் பின்வருமாறு கூறுகின்றது.

"முகில் பரங்குன்று செந்தூர்
முதியவேளாவிகுடியே பரங்குன்றுதோ
றாடல் பழமுதிர் சோலையு(ம்)
மன்னுசன்னிதிக் கந்தவனநல்லையிணுவையோடு
மாவையிலைப் பதிகளும்."

என வருகின்றன.

இப்பதிகத்தின் 9ஆவது பாடல் 'மணி' எனும் விகுதி கொண்டு இயல்வது ஒப்புமைகண்டு கொள்ளத்தக்கது.

**'சண்முகத்துய்யமணி உன்முகச் சைவமணி**
**ஷண்முகத் தெய்வமணியே.'**

என்று சென்னைக் கந்தோட்டத்திறைவன் போற்றப்பட, நல்லைமுருகன் பின்வருமாறு போற்றப்படுகின்றான்.

**'திங்களொளி வீசுமணி செம்பவள மணியரசர்**
**சிரமீ திலங்கு மணியென்**
**சித்தமிசை யசையுமணிமுத்திதரு ஞானமணி**
**செல்வமணி சிந்தாமணி**
**தங்கு மயிலாடுமணி மங்கையர்கள் பாகமணி**
**சச்சிதானந்த மணிசீர்**
**தழையவே சரவணப் பொய்கையிலுதித்தமணி**
**தவமணி தயாபரமணி**
**பங்கமில்லாத நற்றூய மணி பாலர்மணி**
**பச்சைமணி நீலமணிசேர்**
**பன்னிரு புயாசவிப் பருமணியெனக் குமொரு**
**கண்மணியெனப் பகருவோன்**
**எங்குமுள குகவிதய செங்கமல மீதிலுறை**
**யென்சாமி குமரகுருவே**
**இதமாவையுறுநாத கதிர்காம வடிவேல**
**இனியமெய்ஞ் ஞானமணியே.'**

எனவருவது பாடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவைச்சுப்பிரமணியர் தோத்திரம்

*மாவைச்சுப்பிரமணியர் தோத்திரம்* என்னும் நூலின் ஆசிரியர் மயிலணி முத்துக்குமாரகவிராசர். தமிழ் மக்களது நெஞ்சங் கொண்ட முருகப்பெருமானின் தலங்களுட் பிரசித்திவாய்ந்தது மாவிட்டபுரம். இத்தலத்துறை முத்துக்குமாரப் பெருமானைக் கவிதையால் ஆராதனை செய்த கவிஞர்களுட் காலத்தால் முற்பட் டவர் சுன்னாகத்து மயிலணிப்பதியிலே தோன்றிய முத்துக் குமார கவிராசராவார். பதினெட்டாம் நூற்றான்டின் பிற்பகுதியிலும் பத் தொன்பதாம் நூற்றான்டின் முற்பகுதியிலும் வாழ்ந்த இவரது புலமைச்சிறப்பினைநோக்கி மக்கள் இவரைக் கவிராசர் எனவும் வரகவி எனவும் பாராட்டி மகிழ்ந்தனர். முத்துக்குமார கவிராசர் குமரப்பெருமான்மீது பாடிய மாவைச்சுப்பிரமணியர் தோத்திரப் பாடல்கள் மாவையில் நடைபெறும் திருவிழா நிகழ்ச்சிச் சிறப்புக் கள் இறைவன் பவனிவருங்காட்சி, மக்கள் அதனைத் தரிசித்துப் பெறும் பேருவகை என்றின்ன செய்திகளை விபரித்துக்கூறுவன. பாடல்கள் ஓசைநயம், சொல்வனப்பு, பொருட்செறிவு, அணியலங் காரம் ஆகிய பண்புகளைக்கொண்டு மிளிர்வனவாய்ப் படிப்போ ரைத் தம்வயப்படுத்துவன.

**யாழ்ப்பாணத்திலே திருவிழாச்சிறப்புக்குப் பேர்போன கோவில் மாவிட்டபுரம். இங்கு ஆனிமாத பூர்வபக்க சட்டிதிதியில் இடம்பெறும் கொடியேற்றம் முதல் இருபத்தைந்து நாட்கள் திருவிழா நடைபெறும். கொடியேற்றம் முதல் கொடியிறக்கம் வரை நடைபெறும் பலவகைத் திருவிழாக்கள் உலகத்தின் நிமித்தகா ரணனாகிய இறைவன் நடத்தும் ஐந்தொழிற்றத்துவங்களை விளக்குவனவாகவுள்ளன. மண்ணெடுத் தல், முளையிடுதல், கொடியேற்றம். முதலியவைகள் படைத்தற் றொழிலைக்குறிக்கின்றன. வாகன உற்சவங்கள் காத்தற்றொழிலை உணர்த்துவன. வேட்டை, தேர்த்திருவிழா முதலியன அழித்தலைப் புலப்படுத்துவன. தீர்த்தத்திருவிழா அருளலைப் புலப்படுத்தும், மௌனோற்சவம் மறைத்தற்றொழிலைக் குறிக்கும்.**

கண்ணுக்கு இனிமையும் கருத்துக்குப் பக்தியுணர்வும் ஊட்டு கின்ற மாவைத் திருவிழாக்களைக் காண்பவர்கள் மானிடப்பிற விப்பயனை முழுமையாகப்பெற்றவர்களாவர். உடம்பு அழிந்துபோ தற்குமுன்னர் ஒருமுறையேனும் மாவைப்பதிசென்று வணங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். விழாக்கோலம் பூண்டுவருபவன், விளாமரமாகிநின்ற கபித்தாசுரனை, கன்றின்வடிவாகநின்ற வத்சாகரனால் மோதி இருவரையும் அழித்துக் கபடநாடக சூத்திரதாரியாகிய கடல்வண்ணனின் மருகனாகிய வேற்பெருமானுக்கு மாவைப்பதியில் நடக்கும் திருவிழாவைக் காணவல்லவர் யமபயத்தை வெல்லவல்லவராவர். இவ்வாறு திருவிழாச்சிறப்பைச் சித்திரிக்கிறது பாடலொன்று.

"கருவிழா உலகிடைப் பிறந்து மெய்மை
மறந்துழலும் கன்ம சென்ம
உருவிழா முன்னெவரே யாயினும் கோ
விற்கடவை உறையும் தேவைப்
பெருவிளாங் கனிக்கான் கன்றெறிந்தமால்
மருகன்வேற் பெருமானுக்காந்
**திருவிழா தரிசிக்கச் செல்லுவார்**
**யமதண்டம் வெல்லுவாரே.'**

**மாவைப்பதியில் நடக்கும் உற்சவங்களுள் விசேடமாகக் குறிக்கப்படுவது இருபத்துமூன்றாம்நாள் நடைபெறும் சப்பரத்திருவிழாவாகும். இதனைக்கான நாட்டின் நாலாபக்கங்களிலிருந்தும் மக்கள் திரண்டுவருவர். ஒவ்வொன்றும் நூறுயாரளவினதான நான்கு வடக்கயிறுகள் பூட்டிய இச்சப்பரத்தை இழுப்பதற்குப் பத்தாயிரத்திற்கும் அதிகமானோர் வேண்டுமென்பர். இத்தகு சிறப்புவாய்ந்த சப்பரமஞ்சத்திலே எழுந்தருளும் முருகனைத் தரிசிக்க அடியார்கூட்டம் நெருங்கித்திரள்கின்றது.**

அடியார்க்கூட்டத்தோடு கலந்து நின்று தள்ளுண்டு நெருக்குண்டு அவத்தையுற அஞ்சி நெடுந்தூரத்தேநின்ற கவிஞர், சப்பரமஞ்சத்தில் முத்துகுமரன் ஆரோகணித்துவரும் காட்சியைக் கண்டபோது அவரின் கற்பனைக்கண் மடைதிறந்து கவிவெள்ளம் பிரவகித்துப் பாய்வதாயிற்று. **தேவர்கள்கூட எந்தைநம, கந்தமுகேசநம எனப்பலவாறு தம் நாத்தழும்பேற அவன் நாமங்களைச் சொல்லி வாழ்த்தித் துதித்துத் தொழும்புபூணுகின்ற பதி மாவைப்பதி.**

"எங்கணும் திருவதனங்கள் எங்கணும் விழிகள்
எங்கணும் திருக்கேள்விகள் எங்கணும் கரங்கள்
எங்கணும் திருக்கழல்கள் எங்கணும் வடிவம்
எங்கணும் செறிந்து அருள்செய்யும் ஆறுமுகத்திறைக்கே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக் *கந்தபுராண* ஆசிரியர் கச்சியப்பசிவாசாரியார் கூறிய தனை நினைவுறுத்தும் வகையிற் சப்பரத்தில் எழுநதருளுகின்றார். காண்போர் நெஞ்சம் களிநடங்கொள்ள இறைவன் சப்பர மஞ்சத்தில் ஏறினார்.

“நூறுநாலாறு திருக்குடை யானுங்
கணங்களும் போய் நுவன்று நாமம்
கூறிநாத் தழும்புறவே தொழும்புறுங்கோ
விற் கடவைக் குகனார் கண்ணீர்
ஆறினார் திருமுகங்க ளாறினார்
படைக்கஞ்சா அயிலார் சங்கத்(து)
ஏறினார் சப்ரமஞ்சத் தேறினார்
அடியவரீ டேறினாரே.”

பெரும் நீர்வேட்கையுடையவன் தண்ணீர் குடித்தவிடத்து அதன் குளிர்மை உடலெங்கும் சென்று பரவியதுபோல,

“குகனார் கண்ணீர் ஆறினார்
திருமுகங்களாறினார்
படைக்கஞ்சா வயிலார் சங்கத்து
ஏறினார் சப்பரமஞ்சத் தேறினார்
ஆடியவரீ டேறினாரே.”

என்ற வார்த்தைகள் காதுவழிப்புகுந்து நெஞ்சத்தை நிறைத்து இனிமைசெய்வதை உணரலாம்.

சப்பரத்திருவிழாவையடுத்தது தேர்த்திருவிழா, விநாயகர், கந்த வேள், சந்திரசேகரர், ஷன்முகர், சண்டேசுரர் ஆகிய மூர்த்திகள் வரிசையாக ஐந்து தேரின்மீது இவர்ந்துவரும் எழிற்கோலத்தை நாம் இற்றை நாட்களிற் கண்டுகளிக்கின்றோம். கவிராசர் காலத் தில் கந்தவேள் ஒருவரே காட்சிகொடுத்திருப்பார்போலும். பல்வகை வாத்தியக் கோஷ்டிகளும் முருகநாமக்கீர்த்தனைக் குழுக்களும் பக்தர் குழாங்களும் புடைசூழ **முருகவேள் தேரீற் பவனிவருங் காட்சியைக் கண்டு கண்ணுங் கருத்தும் களிபேருகைகொள்ளல் உடன் நிகழ்ச்சி இன்பம். பின்னர் கிட்டும்பலனோ பேசுந்தரத்தன்று.**

எனினும் ஒருவாறு சொல்வதானால் இறைவன் எழுந்தருளுந் தேர் மெல்ல மெல்ல ஊர்ந்துவரக் காணுகின்ற அடியவர் பெயர்த் துவைக்கின்ற ஒவ்வொரு அடிக்கும் ஒவ்வொரு ‘அசுவமேதயாகஞ்’



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்த பலன் காத்திருக்கிறது. தேரின்பின்னே தேகப்பிரதட்சனம்-அங்கப்பிரதட்சனம் செய்யும் சீரடியார்கள் பிறவிக்கு வித்தாக விளங்கும் வினைகளெல்லாம் கடக்கப்பெற்று முருகப்பெருமானின் கருணைமலர்பாதம் எய்திப்பேரானந்தமுத்தியடைவார்கள்.

"கார்படியும் நகுலகிரித் திருக்கோயிற்
கடவையினார் கடவுஞ் செம்பொற்
தேரடியிற் பின்னடியார் திருக்கூட்டத்
துடன் வலமாய்த் தெரிசிப்பார்கள்
ஓரடிக்கோர் பரிமுகப் பேறவருடம்
பாலுருள்வார் உற்பவத்தில்
வேரடியுங் கடந்து கந்தவேளடியில்
முத்தி சென்று மேவுவாரே."

காட்சிக்கும் கருத்துக்கும் இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் பயப்பதாகிய எழிற்பவனியைக் காணுகின்றாள் ஓர் இளவாலைப் பருவத்தினள். தேரில்வருகின்ற திவ்விய சொருபனின் சிறப்புக்களை ஒவ்வொன்றாக அவள் நெஞ்சம் எடைபோடுகின்றது. அவனது **நீபத்தொடை செறிந்தமார்பு வனப்பே அவள்நெஞ்சை முதலிற் கொள்ளை கொள்கின்றது.** ஆயினும் தனது அடிமனத்தெழுந்த வேட்கையைத் தனது நனவுலகமனமே அறிந்துகொள்ளவியலாது தடுப்பவள் போன்று அந்த அழகுவர்ணனைத் திடீரென முருகனது மாமன்மேலேற்றித் திருமாது அகலா மார்பினனாகிய மாவின்மருமகன் எனக் குறிப்பிட்டுச் சாதுரியமாகத் தனது **நாணுடைமையைப்** பேணிக்கொள்ளுகிறாள். **தனது இச்சையை எடுத்தவெடுப்பிலேயே வெளிக்காட்டலாகாது என்ற குறிப்பினைக்கொண்டது அவள் நாணம்.** அடுத்து வெள்ளிமலையிறைவன்மகன் எனக் குறிக்கின்றாள். உண்மையில் இதனையே முதலில் அவள் குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆனால் அவள் நெஞ்சத் தடுமாற்றத்திற்கான காரணந்தான் புரிந்துவிட்டதோ. இனிப்புலவர்களாலும் விதந்தோத வொண்ணா அருட்கொடையாகிய செயலை உடையவன்; கரும்பு வில்லை உடைய மன்மதனுக்கு மைத்துனன்; **வண்டுகள் மொய்க்கும் கருமுகிலைவென்ற இருண்ட கூந்தல்பொருந்திய குறப்பெண்ணிடத்தே ஆராத காதல் உடையவன். மயில்வாகனனாகிய முத்துக் குமரனை மாவிட்டபுரத்தே வரக்கண்டு கொண்டேன்** என ஒருபெண் கூறுவதாகக் கவிராசர் பாடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'மயிலாக மாதகலான் மருகன் சுன்**
**னாகத்தான் மகன் பாவாணர்**
**சொல்லாச்சீர் ஈவினையான் துன்னாலை**
**யானத்தான் சுரும்பரோதிச்**
**சில்லாலையிருள் வென்ற குறக்கொடிகா**
**மாத்தளைச் சிகண்டி மாவூர்**
**வல்லானை மாவிட்டபுர நகரத்**
**திடைப்பவனி வரக்கண்டேனே.'**

இந்தப் பாடலில் **யாழ்ப்பாண ஊர்ப்பெயர்கள்** பல இடம்பெற்றிருப்பதனை அவதானிக்கலாம். மாவைத் தேர்த்திருவிழாவைப் பார்ப்பதற்காக அயலூர்களாகிய மல்லாகம், மாதகல், சுன்னாகம், ஈவினை போன்ற இடங்களிலிருந்து மட்டுமன்றித் துன்னாலை, கொடிகாமம், முதலிய தூர இடங்களிலிருந்தும் அடியார்கள் வந்திருப்பதைப் புலவர்பிரான் அவதானித்திருக்கவேண்டும். ஆகவே தமது பாடலில் அவர்களுக்கும் இடமளித்துவிட்டார். பன்னிரு புயத்துவள்ளல் பவனிவரும் காட்சியைக் கண்ட பாவைநெஞ்சிற் சுன்னாகத்தான் மகன் புகும்படி துன்னாலையான் செய்த சூழ்ச்சியால் நிகழ்ந்த விழலைக்குறிக்கும் பாடலும் கவிஞரின் கவிவிற்பன்னத்தையுங் காட்டிநிற்பது. பாடல் இது.

"கரைக்காற் புனல்வயல் தென்மாவைக்
கோவிற் கடவைச் செவ்வேன்
வரைக்காலிரத மணிக்குர
வார்ப்பு வருமுன்னமே
அரைக்கான் முக்காற் கணக்குமென்
சந்தமளாவு நறு
விரைக்கால் தரக் கருங்காலாய்
விளைந்தது மெய் யெங்குமே."

முத்துக்குமார கவிராசரது கவிச்சித்திரங்கள் இறையருட்குறிப்பையும் கோயிற் சிறப்பையும் திருவிழாவனப்பையும் ஒருங்கே எடுத்துக்கூறுவனவாகி, **சமயமும் வாழ்வும் கலையும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவை என்பதனையும் இம்மூன்றும் இணைந்த வாழ்வையே மக்கள் நடத்தினார்கள் என்பதனையுஞ் சமுதாயநெறி நின்று புலப்படுத்துகின்றன.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாவைப்புராணம்

மாவைப்புராணத்தை இயற்றியவர் யாரென்றோ, எப்போது வெளியிடப்பட்டதென்றோ, எங்கே அச்சுவாகனமேற்றப்பட்ட தென்றோ கண்டுபிடிக்கமுடியாதநிலையில் 54 செய்யுட்களுடன் (அச்சில்) கிடைத்துள்ளன. 13 செய்யுட்கள் பாயிரமாக அமைக்கப்பட்டுள்ளன. பொதுநோக்கில் இந்துத் தெய்வங்களுக்கு வணக்கச் செய்யுட்களை அமைத்துள்ள இப்புராணாசிரியர், பிரக்ஞையுடன் ஈழத்துத் திருத்தலத்துறையும் இறைவர்மீதும் துதிச்செய்யுட்களை யாத்துள்ளார். பொதுநிலைக்கடவுளர் நீங்கலாக திருத்தம்பலேசுவரர், நகுலவிநாயகர், மாவைக்கணபதிப் பாடல்கள் சிறப்புநிலையில் விசேடணத்துவம் பெறுவனவாயுள்ளன.

கீரிமலையிலுள்ள சிவன் கோவில் **'திருத்தம்பலேஸ்வரம்'**[14] என்றும் அழைக்கப்படுகின்றது. *மாவைப்புராண* ஆசிரியர் சூழல் வருணனையில், பிரதேச விவரணத்தில் அதீத ஈடுபாடு கொண்டுள்ளமையை அவராற் பாடப்பட்டுள்ள முத்தலப்பாடல்களாலும் மெய்ப்பிக்கலாம். விசாலித்த புராண இலக்கியப் பண்புகளுக்குட் பட்டதொரு நிலையில் நின்று, *மாவைப்புராணத்தினை* இயற்ற முனைந்த பரந்தநோக்கம் பாயிரத்தினூடாகப் பளிச்சிட்டுத் தெரிகிறது. 'சிங்கவாகுவின் சுதன் செய் சிவாலய நான்கந் நான்கின்' என்னும் வரி திருத்தம்பலேஸ்வரத்துத் தொடர்பினைக் குறித்து நிற்பதாகும்.

**'தழுவக்குழைந்த ஏகம்பர்'** எனச் சேக்கிழாராலும் **'கொடும்பவளச் செங்கனிவாய்க் காமக்கோட்டி கொங்கை யிணையமர் பொருது கோலங்கொண்ட தழும்புளவே'** என அப்பர் பெருமானாலும் பாடப்பட்ட சிவனாம் இறைவனுக்குள்ள அடையாளக்குறிப்பினை நெஞ்சில் நிறுத்தி *மாவைப்புராண* ஆசிரியரும் 'ஈசுவரி' துதிப்பாடலில்,

**'பச்சை மேனியைப் பவளமேனியிற் பதித்த**
**இச்சையாமொரு சத்தியா மிறைவிதன்னிணையில்**
**எச்சமாமிடை யொடியுமென் றெய்திடுமென்ன**
**அச்சமாமவனடியினை முடிமிசை யணிவாம்.'**

எனப்பாடியுள்ளார்.

இதிற் **'பச்சை மேனியைப் பவளமேனியிற் பதித்த இச்சை யாமொரு சத்தியாம் இறைவி'** என்பது கற்பனைக்கு விருந்து தருவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாவைப்புராணத்*தில் இடம்பெறும் சுப்பிரமணியர்துதி சுப்பிரமணியக்கடவுளின் உற்பத்தியைக் குறிப்பிட்டு ஆரம்பிக்கின்றது. சுவைபடவருவனவெல்லாம் ஒருங்குநிகழ்ந்தனவாகச் சுட்டிக்கூறும் முயற்சியிதுவெனலாம்.

"கண்ணிடைத் தோன்றிக் கங்கையிற்றவாழ்ந்த
கைலையும் பொருப்பினை நீக்கிப்
புண்ணுடற்றோன்றப் பூட்கை மாமுகனைப்
பொருப்பொடட்டலைக் கரைசார்ந்து
மண்ணிடைத்தோன்று மகேந்திரன்றன்னை
மடங்கள் மாமுகனோடு மாட்டி
எண்ணிடைத் தோன்றா திதயத்திற் றோன்று
மெம்பிரானடி யிறைஞ்சுதுமே."

சமயகுரவர் துதியும் *மாவைப்புராணத்தி*லே இடம்பெறுகின்றது.

"காழியுதித் தமணவிருள் கடிந்தோன்றன் பதம்போற்றி
ஆழிதனிற் சிலைத் தோணியடைந்தோன்றன்பதம் போற்றி
வாழியென வெந்தைமுனம் வலித்தாண்டோன் பதம் போற்றி
மாழையாமாத்தியர் குலத்து மந்திரிதன் பதம்போற்றி."

"எல்லொளிக்கொரு நவக்கலோடெக்கலுங் கல்லாம்
பல்லொளிக்கொளு மின்மினி யொளியொளிப்பரப்பாம்
நல்லொளிக்கொளும் புராண நற்றொகையுடனாயேன்
சொல்லொளிக் கொளாப்புராணமுஞ் சூழுகவென்றே."

நாயேன் எனத் தம்மையே சுட்டும் பண்பானது மாணிக்கவாசகரது *திருவாசகத்தி*லே தமக்கிருந்த ஈடுபாட்டால் ஏற்பட்டதொரு மனப்பரிபக்குவத்தினால் விளைந்த வொன்றேயென்றுணர முடிகின்றது. மேலும்,

"அரங்கினாடு நராடலின் மேலவர்
பரிந்து நோக்குவார் பாலகராடலை
விரும்பி நோக்குவர் வீண் கவியாமிதை
நிரம்பு கல்வியர் நீணில மீதரோ."

இதில் 'வீண்கவியாமிதை நிரம்புகல்வியர் விரும்பிநோக்குவர்' எனக் கொண்டு கூட்டிப் பொருளுணர்தல் சாலும். தமது செய்யுளை 'வீண்கவி' எனச் சுட்டும் அவையடக்கம், மிகுந்த புலமையாளர்களுக்குரித்துடைய இயல்பு என்பதனைக் கோடிகாட்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாவைப்புராணத்தில்* 16 ஆவது செய்யுள் 'புராணமே கோவை'போன்றியைகின்றது என்பதனைச்சுட்டிநிற்பது. பல்வகையான பூக்களையுங் கொண்டு மாலைகட்டுவது போன்றே பல்வகைப் பாக்களையுங் கொண்டு மாவைக்கந்தன் தன் மாட்சி தெரிக்குமிக் கோவை செய்திடுங் கொள்கையாளராக இப்புராணமுடையார் மிளிருகின்றார்.

"மாவைக்கந்தன் றன்மாட்சி தெரிக்குமிப்
பாவைக்கொள்ளுவர் பாவலர் பல்வகைப்
பூவைக் கொண்டிடு பூங்கதவிக்குறை
கோவைக் கொண்டிடு கொள்கையினன்றரோ."

**'உடம்பை வளர்த்தேன் உயிர்வளர்த்தேனே'** என்பது திருமந்திரம். உயிர்வளர்வதற்கு உடல் கருவிப்பொருள். உயிர் மெய்யானது. உடல் பொய்யானது. **'காயமே இது பொய்யடா'** என்பது சித்தர் வாக்கு. 'பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை' என்கின்றார் **மாணிக்கவாசகர்.**

"குடம்பை தனித்தொழியப் புட்பறந்தற்றே
உடம்பொடுயிரிடை நட்பு."

என்பது சித்தாந்த விளக்கந்தரும் குறள்.

இக்கருத்துக்களைத் தத்துவ உண்மையைப் பொருள்களான பதி, பசு, பாச விளக்கங்களினூடே தெளிவுபடுத்துகின்றார் 17ஆவது பாடலில். ஆதலால் இப்புராணாசிரியருந் தாயுமானவர் போன்று 'சித்தர்கணமரபிலே' வந்தவரெனக் கொள்ளலாம். ஒப்பிய லாய்வு நோக்கத்தில் இவ்விடயம் மேலும் விரிவாக ஆராய இடமுண்டு.

உடம்பு பேணலுயிரின் பொருட்டருள்
நடஞ்செய் நாதனார் நம்பிதன் காதையின்
இடங்கொள் யாப்பிவை யென்றுயர் பண்பினாற்
குடங் கொள் பாலென மேலவர் கொள்வரே."

**தமிழ் ஆரியத்துக்கு முந்தியது**[15] என்ற கருத்தைத்தருவது ஒரு பாடல். இக்கருத்துக்கள் திருத்தாண்டகத்தில் 'ஆரியன்கண்டாய் தமிழன் கண்டாய்' என்றும், **'வடமொழியும் தென்றமிழும் மறைகள் நான்கும் ஆனவன்காண்'** என்றும் வரும் கருத்துக்களுடன் ஒப்பு நோக்கத்தக்கன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆரியத்து முனாக்குனர் நூல்வழி
சீரினாய்ந்து தெரிந்த தமிழினாற்
கூறும் வேற்படை கொண்ட குமரன்றன்
பேரிருங்கதை பேசின னென்கவே."

**ஆரியத்துமுனாக்குநர் நூல்வழி சீரியைந்து தெரிந்து தமிழினாற் கூறும் வேற்படைகொண்ட குமரன் என்று வருவதுணர்க.**

**'மாவையின் மாக்கதை மாநிலமமெங்கும் ஓங்கும்'**(செய்.19) வகைசெய்தல் வேண்டுமென்பது மாவைப்புராண ஆசிரியரது குறிக்கோள். புராணத்தில் எடுத்தோதப்படும் விடயங்களைத் தொகுத்துத்தரும் 20ஆவது செய்யுள் புராணம் எவ்வாறியலும் என்பதனை உணர்த்தும்.

"துரகசுந்தரி துன்ப மகன்றதும்
அரவத் தார்வதனாரம்ப மேன்மையும்
பெருகு மாமணப் பேறும் பிறவுமே
கரவிலாது கழறுமிக் காதையே."
(துரகசுந்தரி - மாருதப்புரவீகவல்லி)

புராணஅமைதிபேணி நாட்டுப்படலம் பாடி அதன்பின் ஏனைய படலங்களைப் பாடிச்செல்லும் மரபு இப்புராணத்திலுண்டு. நாட்டுப் படலத் தொடக்கத்தின்முன் நூற்பயன் நுவலுகின்றார். புராணபடனமரபு[16] குறித்த செய்திகள் *மாவைப்புராணத்தில்* பேணப்பட்டுள்ளன.

'மாவைமாக்கதை' (செய்.19) என்ற *மாவைபுராணத்தில்* இடம் பெறும் கதை அப்புராணத்தின் முழு அமைப்பையுஞ் சுட்டிய சொல்லாகவே கொள்ளவேண்டியுள்ளது. புராணபடனத்தின் தோற்றம்பற்றிய கருத்தில்,

"சந்நிதி விரோதமின்றி ஒருவர் வாசிக்க மற்றொருவர் பயன்சொல்லுகின்ற இந்தமுறை **யாழ்ப்பாணத்துக்கே உரியதொரு சிறப்புமுறை.** இந்தமுறை யார், எப்பொழுது வகுத்தமைத்தது என்பது ஆராயத்தக்கது."

என்பார், **இலக்கியகலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.**

'கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள் *கந்தபுராணம்* பாடிய காலத்திலே கந்தபுராணபடனம் யாழ்ப்பாணத்திற் தொடங்கிவிட்டது. அப்பொழுதே தனிச்சிறப்புமுறையான புராணபடன முறையும் இங்கே அமைந்துவிட்டது போலும்' என்று மேலும் குறிப்பிடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலக்கிய கலாநிதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.**

> **'இந்தியாவிலே சிவபுராணப் பிரசங்கம் செய்யும் கோவில்கள் மிக அரியன. இத்தேசத்திலே அது செய்யப்படாக் கோவில் இல்லை. இந்தியாவிலோ வித்துவான்கள் சைவசமய குருமார் முதலியோர்களுள்ளும் *கந்தபுராணம்* முதலியன அறிந்தவர் சிலர். இத்தேசத்திலோ பெண்களுள்ளும் அவை அறியாதார் இலர்.'**[17]

'நூற்பயன்' கூறும் மூன்றுபாடல்கள் மிகுந்த சுவைநலங் கொண்டமைவன.

> "வளர்தரு மறையில் மாதவ ருளத்தில் வளமலி மாவையம்பதியில்
> ஒளிர்தரு குமரற் குற்றவிக் காதை யொரு முறை யெனுஞ் செவிமடுத்தார்
> கிளர்தரு முலகிற் கரசராய்ச் சசியின் கேள்வராய யனொடு மாலாய்த்
> தளர்வறப் பொலிந்தங் கிறுதியிலெங்கள் தற்பரன்பொற் பத மடைவார்."
> (செய்.21)

> "நந்தமர் தீர்வைத்தீர்த்த நீராடி நகுலமாவரை தருமருந்தான்
> கந்தனை வணங்கி யவர்க்குறுமிந்தக் காதையைக் கருத்தெலாமுருக
> அந்தணன் முகமாய் வாசரமாறிலமைவுடன் கேட்டவற்கினிய
> சந்தமும் துகிலும் பொற்பணி கலனுந்தந்திடனோன்பினிற்றலையாம்."
> (செய்.22)

> "நகுலமாமலைபோல் நலமெலாம் வகுத்து நயப்பதோர் நளிர்
> நகுலமாமலை நின்றெழுதரு நகுலநதிக் கிணையாவ தோர்நதியு
> நகுலமாமலையின் மாவிட்புர மாஞான மாதலத்தினோர் தலமு
> நகுலமாமுனிவர் போற்றுறு குமரநாதனிற் கடவுளுமின்றால்."
> (செய்.23)

புராணேதிகாச வருணனையின் பிடிப்பும் அழுத்தமுங் கொண்டமைவது *மாவைப்புராணத்தின்* நாட்டுப்படலம். வானத்துத் தேவர்கள் அந்தரத்தெழுந்து பந்தரிட்டாலெனப் பரம்பியெங்குமாய் இலங்கினரென்ற வருணனை உயர்ந்து கற்பனைவளமும் பக்திச் சுவையும் வியப்புநலமுமும் கொண்டமைவது.''

> "இந்திர னூர்தியினேகு மேகங்கள்
> சுந்தர மாகடல் சுலவி வாரியே
> அந்தரத் தெழுந்தன வவமுருக்கொடே
> புந்தரிட் டாலெனப் பரம்பி யெங்குமே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்வேறு தொழிலினர்களது தொழில்முறையான செயற்பாடுகளை விபரித்துக்கூறும் நாட்டுப்படலப் பாடல்களில் , கள்ளினையுண்டவர்களும் நறவார்ந்தவர்களும் வருகின்றனர். நாற்றை வயல்களிலேயூன்றிநிற்கும் காட்சியைச் சித்திரிப்பது நாட்டுப்படலத்தின் 28ஆவது செய்யுள்.

"இந்தவானுள வேழையர் மாகனை
சித்துமாறு தியக்கொடு செய்தபின்
அந்தநாற்றை யகற்றி யகணியில்
உந்திமாறி யுகந்தவ குன்றினார்."

வயல்களிலே இளம்பெண்களும் பள்ளர்களும் விரைவாக வேலைகளைச்செய்த பின்னர் 'சாலி' எனப்படும் நெல்மணிகளை அவற்றின் விளைவினைக் கொய்திடுவோமென ஏகினார்கள் என்று கூறுமிடம் *பெரியபுராணச்*சாயலையொத்தமைவது.

"…….விரகிற் செய்தபின்
நொய்தினிற் சாலியின் விளைவுநாடியே
கொய்திடுவேமெனக் கூறியேகினார்." (செய்.29)

கற்பனை தெய்விக நலங்கனிந்ததாக விளங்கும் பெற்றியினை *மாவைப்புராணத்தி*லே ஒருசில பாடல்களிலேயே கண்டுகொள்ள முடிகின்றது. உவமைநலனும் பக்திச்சுவையும் புலப்படும் பாடல்களென 30ஆவது, 31ஆவது செய்யுட்களைக் காணலாம்.

"சிறியவர் செல்வத்திற் செந்நெலோங்கின
பொறிகொள் சூலரவினிற் பொம்மறாங்கின
குறைவறுமறிஞரிற் குனிந்து காய்ந்தன
வேறிமிகுந்தோர்களின் விரிந்து சாய்தவே." (செய்.30)

"வளினைக் கைகொடு மள்ளர் கூடியே
தாளினையொன்றியே சாலித் தாள்களைச்
சூளினரரிந்தனர் சும்மை சேர்ந்தபோர்
மீளவும் விரித்தனர் மிதித்தன் மேயினார்."

(செய்31)

மாவைப்புராணத்தை இயற்றியவர், **மாவை சுவாமி குமாரசுவாமிக் குருக்களென்று** அறியப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகீசகலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், B.A (Hons); M.A (Jaffna)

## நல்லைச்சுப்பிரமணியர் திருவிருத்தம்

*நல்லைச்சுப்பிரமணியர் திருவிருத்தம்* என்ற நூலின் ஆசிரியர், வண்ணை நெ.வை.செல்லையாவாவர். அபிராமிப்பட்டர் அருளிய **அபிராமியம்மைப் பதிகத்தையொத்ததாகவும் தோத்திரமரபு செறிந்து விளங்குவாதாயும் இந்நூற் பாடல்கள் பாடப்பட்டுள்ளன. துன்ப நிலைநீங்கி இன்பநிலையெய்தும் பக்திவேண்டுதலுக்கு உகந்த தனித்துவமிக்க பாராயண நூலாகவும் இதனைக்கொள்ளலாம்.**

வானவர்கள் சஞ்சீவியே! என்று முருகனை விளித்துப்பாடும் கவிஞர் மாமருந்தாகத் தலைமைபெற்றுவிளங்கும் முருகன் திரு வருளைநாடி வினைப்பயனை நீக்கியருளும்படி பாடுகின்றார். எட்டாவது செய்யுளிலே கொடிய சூலையினால் இடர்பட்ட கூன் பாண்டியனைச் சம்பந்தர் திருநீற்றுப்பதிகம் பாடிச் சூலை நீக்கிய அற்புதம் முதல் நாயன்மார்களது வாழ்விற் காணப்படும் அனுப வங்களையும் தொகுத்துச் சுட்டுகின்றார்.

"வெப்பினொடு வலிகுட்டமீளை கண்னோயிடி
விளங்கிடு மெலும் புருக்கி
வேர்விழு கிரந்தி காமாளை சத்திவாதநோய்
வெட்டைநீர் நெஞ்சடைப்பு
செப்பிய பவுத்திரம் மூலநோய் புண்ணிவைகள்
சேர்ந்திடா தெக்காலமுஞ்
செந்திலம்பதி மேவு கந்தனே! பழனிமலை
திகழ் பரங் குன்றூரனே
யொப்பிலா தொளி பரவு கதிரைமலை நாதனே
யுமைபால கதிர்வேலனே!
யோருமையுடனுனது திருவடிமலரி லெனதுமன
மொன்றாகி நின்ற வடிவே!
வருமுருக! குமரகுருபர நிருப நல்லைவளர்
வரசுப்பிரமணிய பொருளே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லைக்கலிவெண்பா

"சங்கரனார் புத்திரா
அரிக்கு மருகனே
கார்த்திகையாளீன்ற கந்தனே
சரவணத்தின் கந்தன்
கதிர்வடிவேற் காங்கேயர்
சேந்தாவிசாகா திருக்குமரா."

என்று முருகனை அழைத்து நாமசங்கீர்த்தனஞ் செய்யுந் தன்மை கொண்டமைவது நல்லைக்கலிவெண்பா. இப்பிரபந்தத்தில் நல்லூர் என்ற இடப்பெயர் சுட்டப்படும்போது,

**'நாகையாலங்காடா நல்லூரா நள்ளாறா
நாகையாலங்காடா நல்லூரா'**

எனச்சிவன் உறையுந் திருநள்ளாற்றுத் திருத்தலஞ் சுட்டப்பட டுச் **சிவவணக்கமும் முருகவணக்கமும்மிணைத்துப் பேசப்படுகின்றன.** 'நாகையாலங்கடா 'என்ற தொடர் எத்தலத்தைக் குறிப்ப தென்பது புலப்படுமாறில்லை. ஆயினுந் **தமிழ்நாட்டுத் திருநா கேச்சரத்தையோ திருநாகைக்காரோணத்தையோ தொடர்புப டுத்தலாமாவென்பது மேலும் ஆராயத்தக்கது. திருநள்ளாறும் வருவது காண்க.**

"வெற்றிமுடிக் கந்தரத்தில் வேல் விடுத்தாய் வள்ளி தன்னில்
வெற்றிமுடிக் கந்தரத்தில் வேல் விடுத்தாய்."

என வள்ளிநாயகியாரை மணம்முடித்த வரலாறும், வேல் கைக்கொண்டு எறியுஞ் சிறப்புங் கூறப்படுகின்றன.

"சல்லாப சங்கீர்த சாகரா சாரூப
சல்லாப சங்கீர்த சாகரா - சல்லாப
சவுந்தாம தாரவித் தாரவித்தார
சவுந்தாம தாரவித்தார- சவுந்தாம."

'சாந்தியானி சாந்தியானி சாட்சனா' என்னும் வரிகளால் முருகப்பெருமானது சல்லாப விநோதத் தன்மைகள் சுட்டியுரைக் கப்படுகின்றன. சகலகலாவல்லவனாகவும் சத்தியோசாத பதஞ்ச லனாகவும் மந்ரவியாகரணவாசனாகவுந் துதிசெய்து முருகனது புகழ்பரவி ஈற்றில் கயிலாயங் காட்டுவாய் என்று கருனாகரக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுளை வேண்டுகின்றார். **இங்கு கருணாகரக்கடவுள் சிவன் என்ற பொருளிற் சோமாஸ்கந்தவடிவத்தை உணர்த்திநிற்கின்றது.**

"காப்பாய் கயிலாயங்காட்டுவாயன்றியும் நீ
காப்பாய் கயிலாயங்காட்டுவாய் - காப்பாய
கந்தா முருகா கதிர்வடிவேற் காங்கேயா
கந்தாகருணாகரா."

என்று நிறைவுபெறுகின்றது *நல்லைக்கலிவெண்பா.* இந்நூல் 116 கலிவெண்பாக்களினால் ஆயது.

கல்லாடம், சீரபாதவகுப்பு, கலிவெண்பா, யமகம், மடக்கு, கோமூத்திரி, நாகபந்தம், அட்டபந்தம், மாலைமாற்று, புஜங்கத் தோத்திரம் என்பன கடினபதச்சேர்க்கையும் சந்தக்கொழிப்புங் கொண்டமைந்து இலகுவிற் பொருளை விளங்கிக் கொள்ள முடியாதபடியமையுந்தரத்தன.

*நல்லைக்கலிவெண்*பாவுக்கு முன்னோடியான நூல் *கந்தர் கலிவெண்பா* ஆகும். *கந்தர்கலிவெண்பா*வினைக் குமரகுரு பரசுவாமிகள் இயற்றியதாகச் சொல்லப்படுகின்றது. ஐந்துவய தின்முன்னர் ஊமைப்பிள்ளையாய் இருந்து பின்னர் திருச்செந் தூர்ப்பெருமான் அருளால் ஊமைநீங்கி இந்தக்கலிவெண்பாவை அப்பெருமான்மேல் இயற்றினார். முருகப்பெருமானது உற்பத்தி *கந்தர்கலிவெண்பா*வினால் விளக்கப்படும்.

## நல்லூரான் வெண்பா நாற்பது.

"தில்லைக்கணபதி திருவடி தொழுதெழ
நல்லூரான் வெண்பா நாற்பதும் வருமே."

நன்னெறிக்காப்புச் செய்யுளைப்போலவே மேற்கூறப்பட்ட விநாயகவணக்கத்துடன் *நல்லூரான் வெண்பாநாற்பது* தொடங்கு கின்றது. கதிர்காமம், சந்நிதி, நல்லூர்த் திருத்தலங்களை இணைத் துப்பாடியுள்ளார். இந்நூலை இயற்றியவர் புங்குடுதீவைச்சேர்ந்த **வித்துவான் சி.ஆறுமுகம். இந்நூல் அகில இங்கைக் கம்பன் கழகத் தினரால்** வெளியிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வண்ணக் கதிர்மலையின் வாரிவளர் சந்நிதியில்
நண்ணி யமர்ந்திருக்கும் நல்லூர்வேல்! - அண்ணல்
முருகன் குமரனருள் மூர்த்தியுருக்கண்டோர்
உருகாரோ! நெஞ்சம் உரை." (செய்120)

தமிழ்த் தெய்வம் எனச் சிறப்பித்து முருகப்பிரபாவத்தை பாடும் 22ஆவது செய்யுள் பின்வருமாறு அமைந்துள்ளது.

"தந்தைக்குபதேசம்! தாயார் முலையமுதம்
கந்தா! குறத்தி மகட்காதல் - எந்தாய்
குமரகுருபரனின் கொஞ்சுத்தமிழ் மோகம்!
சமரம் அவுணர் தவம்."

**முருகனே திருஞானசம்பந்தராக அவதாரம் செய்ததாக வழங்கி வரும் கதைமரபினை 24ஆவது செய்யுளிற் குறித்துள்ளார்.**

"உமை உருத்திர சன்மனெனச் சங்கத்துஞ்
சாமி தமிழ் வளர்த்த சங்கதியால் - யாமும்
**தமிழ் காக்க வேண்டுகிறோம் சம்பந்தன் ஆகி**
**அமிழ்தத் தமிழ் தந்தவா.'**

நல்லூரிலுரையும் முருகன் இந்தியத் தென்னாட்டினைக் கண்டு ஈற்றில்நல்லூரிலேயே வந்து குடிகொண்டிருக்கின்றானென்று கருத்துப்படும்படி 26ஆவது செய்யுளையமைத்துள்ளார்.

"அருணகிரி சந்தத்தமிழ்க் காசைப் பட்டோய்!
தருணமறிந்தோன் தமிழைப்பாடக் - கருணையினால்
முன்னாலும் பின்னாலும் மோகங்கொண்டே திரிந்தாய்
தென்னாடு கண்டுவந்து சேய்."

சிவதொண்டர்களைக் குறிப்பிட்டு நல்லைமுருகனது கீர்த்தியை 28ஆவது செய்யுளில் உரைக்கின்றார்.

'**செல்லப்பாச் சாமியார்** தேர்நிற்கும் வீதியிலே
எல்லாருங் காண இனிதாட - நல்லூரா!
கண்டே மலர்ந்தாய்! கனிவேடவர் சீடர்
மண்ட மகிழ்ந்தாய்! மனம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஞானநகரமாம் நல்லூர் தலைநகரம்!
மானவேல் வீற்றிருக்கும் மாநகரம் - தானம்
தருமம் தழைநகரம்! நாவலராம் சைவப்
பெருமான் பிறந்த நகரம்."

என்னும் 30ஆவது செய்யுள் நல்லூர்நகரச் சிறப்பினை எடுத்தோதுவது. மனவடக்கத்துடனும் அறிவடக்கத்துடனும் தமது பாடல்களைப் பொறுத்தருளுமாறு முருகனிடத்திலே வேண்டுவதாயமைவது 35ஆவது பாடல்.

"திருஞானசம்பந்தச் செல்வன்பேர் தாங்கும்
பெருஞான ஆதீனம் பெற்ற - குருஞானி
நல்லுரையும் இன்னிசையும் நாளுமே கேட்டுவந்தோய்
புல்லுரையேன் பாடல் பொறு!"

என்று ஞானசம்பந்தர் ஆதீனத்தின் சிறப்பினையும் எடுத்துரைக்கின்றார், இக்கவிஞர்.

## நல்லை வெண்பா

யாழ்ப்பாணத்து இருபாலை **வித்துவசிரோமணி சேனாதிராய முதலியார்** இயற்றிய இந்நூல் புலோலி **வித்துவான் க.முருகேச பிள்ளையின்** குறிப்புரையுடன் புலோலி தெற்கு பருத்தித்துறையில் 1942 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. 1978 இல் முதற்பதிப்பு வெளிவந்ததாகவும் அறியப்படுகிறது.

நல்லூர் என்பதன் மரூஉ *நல்லைவெண்பா* என்பது அத்தைகைய செய்யுட்களால் ஆய நூலுக்குக் கருவியாகுபெயர். இந்நூலிலே மொத்தம் 102 செய்யுட்களுள. இந்நூற் செய்யுட்களே சில மதுரைச்சங்க மாசிகைப்பத்திரமாகிய '*செந்தமிழ்*'ச் சஞ்சிகையிற் சுருக்கமான குறிப்புரையோடு வெளிவந்துள்ளன. இது யமக,திரிபுகளாகிய சொல்லணிகளும், சிலேடை முதலிய பொருளணிக ளும் நிரம்பியிருக்குமோர் அரியநூல். இந்நூலிலே சிலசெய்யுட் களில் முதலாமடியும் சிலவற்றில் இரண்டாமடியும் சிலேடைப் பொருள் பயந்துநிற்க, மூன்றாம், நான்காம் அடிகள் யமகதிரிபுகளாகி அமைந்துள்ளன. சில செய்யுட்களில் இரண்டாம் அடிகளில் இரண்டுக்கு மேற்பட்ட சிலேடைப்பொருளுமாக அமைந்துள்ளன. சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யுட்களில் முதலாம், இரண்டாம் அடிகள் ஒருவகையான யமக மாகவும், மூன்றாம், நான்காம் அடிகள் மற்றொருவகையான யமக மாகவும் அமைந்துள்ளன. சூரியன், சந்திரன், தேவருலகம், ஆகா யம், பூமி, மேரு, இமயம், கடல், செந்தமிழ் முதலியவற்றைச் சிலே டைகளால் நல்லூருக்கு உவமையாகக்கூறும் செய்யுட்கள் பொரு ளுணர்ச்சியோடு படிப்போருக்கு மிக்க உவகையூட்டுவனவாகும்.

> **'நல்லூரக் கந்தசுவாமி கோவிலில் முதலிற் புராணப் பிரசங்கம் செய்து யாவருக்கும் வழிகாட்டியாய் இருந்தவர் சேனாதிராய முதலியாரேயாவர். பின்னர் இம்மரபு வண்ணார்பண்ணைச் சிவன் கோவிலில் நாவலரினாலும் நாவலரின் மருகர் பொன்னம்பலபிள்ளையவர்களினாலுந் தொடரப்பட்டது.'**[18]

*பாவலர் சரித்திரதீபகம்* என்ற நூலிலும் சேனாதிராய முதலி யார்பற்றிய குறிப்புக்களுள.

யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்திற் சங்கவாயிலாக வளர்க்கப் பட்டுப் பிற்றைஞான்று பெரிதும் குன்றிய தமிழ் இலக்கண விலக்கியக் கல்வி, பின்பு பெரும்பாலும் உயர்நிலையடைவதற்கு முக்கிய காரணமாய் விளங்கியவர் சேனாதிராயமுதலியாரே என் பது அறிஞர் யாவர்க்கும் ஒப்பமுடிந்த உண்மையாகும்.

> **'சுன்னாகம் முத்துக்குமாரகவிராயரும் இருபாலைச் சேனாதிராயமுதலியாரும் நட்புரிமை பூண்டொழுகியவர்கள். முத்துக்குமாரசவிராசர், சேனாதிராய முதலியார் இருவரும் யாழ்ப்பாணத்தின் இரு கண்கள்.'**[19]

**தமிழ் வளர்ச்சி, தமிழிலக்கணவிலக்கியவழி ஆகிய இவைகளின் இருபெருந்தந்தையர்கள் இவர்கள். தமிழ் மக்களுக்குச் சிறந்த செய்யு னடை பயிற்றிவைத்தவர்கள் இருவர் கவிராயர்கள்.**

**முத்துகுமாரகவிராயருக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி குலதெய்வம். சேனாதிராயருக்கு நல்லூர்கந்தசுவாமி குலதெய்வம். விசேட உற்ச வங்களுக்கு இவர் அங்கே போவார்; அவர் இங்கே வருவார்.**

மாவிட்டபுரத்திலே திருவிழா, வேட்டைத்திருவிழா, கந்தசுவாமி தாவிப்பாய்கின்ற குதிரையிற் பவனிவருகிறார். கவிராயர்கள் கண்டு மகிழ்கின்றார்கள். இந்தச்சந்தர்ப்பத்திலே **'உமது சுவாமியின் பவ னியை வருணித்துப்பாடும்'** என்கின்றார், **சோனாதிராயக் கவிராயர், முத்துக்குமாரகவிராசமேகம்** பொழிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'முடிவிலாதுறை கன்னாகத் தான்வழி**
**முந்தித் தாவடிக் கொக்குவின்மீதுவந்**
**தடையவோர் பெண்கொடி காமத்தாளசைத்**
**தானைக்கோட்டை வெளிக்கட்டுடை விட்டாள்**
**உடுவிலான்வரப் பன்னாலையான்மிக**
**உருத்தனன் கடம்புற்ற மல்லாகத்தில்**
**தடவிடாதனை யென்று பலாலிகண்**
**சாரவந்தனள் ஓரீளவாலையே'**

வித்துவான்கள் துள்ளிக்குதிக்கின்றார்கள். மற்றவர்கள் யாழ்ப் பாணத்து ஊர்ப்பேர்களைக் கேட்டுமகிழ்கின்றார்கள். பொருள் விளங்கவில்லை சேனாதிராயகவிராயர் விளக்குகின்றார் என்று எழுதுகிறார் **இலக்கியகலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை.**

இருகவிராயர்களும் நல்லூரில் சந்திக்கின்றார்கள். இரசி கர்களாகிய மதுகரங்கள் கவிராயர்களாகிய இரட்டைமலர்களைச் சூழுகின்றன; கொடியேறுகின்றது. **'உமது சுவாமியைப்பாடும்'** என்கின்றார். **முத்துக்குமாரகவிராயர். சேனாதிராயகவிராயர்** மொழிகின்றார்.

**'திருவாரும் நல்லைநகர்ச் செவ்வேற்பெருமானார்**
**இருபாலைக் குயத்தியரோடின்ப முற்றாராமானை**
**இருபாலைக் குயத்தியரோ டின்பமுற்றாராமாயின்**
**தருவாரோ சட்டிகுடஞ் சாறுவைக்க அம்மானை.'**

இந்த இருவர் கவிராயர்களிலும் எவர் உயர்ந்தவர் என்று சொல்லமுடியுமா[20] என்றுதான் சொல்லலாம்.

**சேனாதிராயமுதலியார்** நல்லூர்ச் சுப்பிரமணியக் கடவுளிடத்து மிக்க பக்திவாய்ந்தவராதலால் அப்பெருமான்மீது *நல்லை வெண்பா, நல்லைத்திரிபந்தாதி, நல்லைக்குறவஞ்சி, நல்லைக்கலி வெண்பா, ஊஞ்சற்பதிகம்* என்னும் பிரபந்தங்களை இயற்றியமை யோடு பல தனிச்செய்யுட்களையும் இயற்றியுள்ளார். வண்ணை நீராவி விநாயகர்மீது யமகத்தொடையமைந்த ஒரு கலிவெண்பா வும் மாவைச்சுப்பிரமணியக்கடவுள்மீது ஓர் ஊஞ்சற்பதிகமும் பிற சில ஊஞ்சற்பதிகங்களும் இவரால் இயற்றப்பட்டுள்ளன. இவற்றுள் *நல்லைவெண்பாவும், நீராவிக்கலிவெண்பாவும்* முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சிடப்பட்டுள்ளன. *நல்லைத்திரிபந்தாதி* மிகச்சிறந்த நூல் எனவும் தென்கோவையிற் பலகாலந் தமிழாசிரியராய் வதிந்து தொண்டாற்றிய சுன்னாகம் முருகேசபண்டிதராற் பலர்க்கும் படிப் பிக்கப்பட்டது எனவுங் கூறுவர். ஆயினும் அந்நூலின் ஒரு செய்யு ளாவது இபபோது கிடைப்பது அரிதாயிற்று.

*நல்லைக்குறவஞ்சி* யமக சிலேடைகளும் வினோதார்த் தங்களும் மலிந்த பிரபந்தம் எனப் பலராலும் பாராட்டப்பட்ட தாயினும் அந்த நூலுள்ளும் இரண்டொரு செய்யுளேயொழிய ஏனைய அழிந்தொழிந்தன.

**சேனாதிராயமுதலியார்** 1840 ஆம் ஆண்டு தேகவியோ கமெய்தினார். *நல்லைவெண்பாவுக்கு* நல்லூர் அப்புக்குட்டிக் குருக்கள், இருபாலை அமரசிங்க முதலியார், தெல்லிப்பழை ராவ்பகதூர் **சி.வை.தாமோதரம்பிள்ளை** முதலியோர் சிறப்புப் பாயிரம் வழங்கியுள்ளனர்.

"கந்தவேள் வேன்முருகன் காங்கேயன் காதலித்து
வந்த நல்லூர் வெண்பா வகுப்பதற்குச் - சந்த வனகவள
வாரண முன்னாங் குடிலை மேவுங் கனகவன
வாரணமே காப்பு."

என்பது *நல்லைவெண்பாவின்* காப்புச்செய்யுள். ஒவ்வொரு பாடலி லும் முதலிரு அடிகளிலேயும் நல்லூரின் சிறப்புக் கூறப்படுகின்றது.

சிலேடைவெண்பாக்களைக் கொண்டுள்ள *நல்லைவெண்பா* நூலில் 72ஆவது செய்யுள் மும்மொழிச் சிலேடைவெண்பாவி லமைந்துள்ளது. 73ஆவது செய்யுள் நான்மொழிச் சிலேடையாய் வருவது.

73 பக்கங்களைக்கொண்ட *நல்லைவெண்பா* என்னும் இப்பிரபந்தம் கடை என்ற தலைப்பிட்டு அதன் கடைசிச் செய்யு ளைக்கொண்டுள்ளது.

''சைவம் பொழிக தமிழ் தழைக தாரரசர்
செவ்விய கோலுய்கவளர் சீர்நல்லை - மெய்ம்முனிவர்
நன்கவியுங் கானவரே னற்குருவும் கொள்வானென்
புன்கவியுங் கொள்வான் புரம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லைநகர் கந்தரகவல்

*நல்லைநகர்கந்தரகவல்,* ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு என்ற நூலின் இறுதியிலே இடம்பெற்றுள்ளது. அதில்வரும் குறிப்பிலே 'இ∴து ஆறுமுகநாவலரவர்கள் தமையன்மாருளொருவரும் கதிரையாத்திரை விளக்கத்தினுள்ள பல கீர்த்தனங்கள் செய்த வருமாகிய பரமானந்தப்புலவர் செய்தது' என்றுள்ளது. இப்பிர பந்தம் நேரிசையாசிரியப்பாவினால் அமைந்துள்ளது.

"கீரனைச் சிறைவிடுத்து முன் விட்டிய விமலனே
வீரவேல் விடுத்துமுன் வீட்டியவிமலனே."

என்றும்,

"ஆறுருத்தனையு மோரங் கையாலணைத்துமை ஓர்வடி
வாத்திரட்டியவொரு முருகனே தடநெடுஞ் சரவணந்
தணிலறு மங்கையர் குடமுலை யூறுபால் குடித்திடுங்
குமரனே ஆவினன் குடியினு மரிய வேரகத்தினுஞ்
சீரலை வாயினுந் திருப்பரங் கிரியிலும் பழமுதிர்
சோலையென் றுறைபெறு மலையினும்உளமகிழ்
வோடுறை யொப்பிலா முதல்வனே."

என்றும் தமிழ் நாட்டு முருகத்தலங்களை நினைந்து செய்யு ளியற்றுங் கவிஞர் நல்லூரின் சிறப்புக் கூறுமிடத்து,

"குடவளையினம்பல குமிறு தண் பணையொடு
தடமலர் வாவிகள் தயங்கு நல்லூரனே."

என்று பாடுகின்றார்.

*நல்லைநகர்க் கந்தரகவல்* பாடப்பட்டதன் நோக்கம், இம்மை வாழ்விற் சினம், தீமை, காமம், கொலை, களவு என்பன அணுகா மற் காத்து 'அம்மையின் முத்தியருளுமாறே' வேண்டியதா யமைந்துள்ளது. இவ்வேண்டுதலைக்கவிஞர் தமது உள்ளத்திலே திடமான பக்திவைராக்கியத்துடனேயே விடுகின்றார். முருகனது பரங்கருணையிலே அசையாத நம்பிக்கை கொண்ட பரமானந் தப்புலவர் முருகனைப் பின்வருமாறு வருணிக்கின்றார்.

"தினகரர் போலொளி திகழ்முகமாறும்
ஒருமரவடிவா யுலகினை யுலைத்தசூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபிளவாக வெறித்திமை யோர்கள்
சிறைதவிர்த் தருளிய திருநெடு வேலும்
மற்றுள படையும் வரதமு மாயமும்
உற்றிடு பன்னிரு கைத்தல நிரையும்
அருவரை யனைய வகலமு மிரண்டு
மடவனமுவந்து வாழ்வுறு பாலும்
கலகலென் றிசைக்குநின் கழலுங்காட்டி
மரகதக்கலாப மயின்மிசைத் தோன்றும்
வடிவினை வாழ்த்தி மறவாதுள்கி
இரவினும் பகவினு மிறைஞ்சிலே னாயினும்
உன்னையே தெய்வமென்றுளத்துட் டுணிந்தனன்."

என்றுரைக்கின்றார்.

## மாவைக்கந்தரகவல்

*மாவைக்கந்தரலகவல்* என்ற எட்டுப்பக்கங்கள் கொண்ட பிரபந்த நூல் 1931 ஆம் ஆண்டிற் பிரசுரிக்கப்பட்டுள்ளது. நூலாசிரியர் வலிகாமம் வடக்கைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஸ்ரீமான் க.மயில்வாகனப்பிள்ளை. அச்சிடுவித்தவர் அவர் தம் மருகர் ஆ. செல்லையா.

> '**மயில்வாகனப்பிள்ளையே *மயிலைமும்மணிமாலை, சுப்பிரமணியர் தோத்திரமும் மாலையும் சுப்பிரமணியசுஞ்சல், துணைவைப்பதிகம், நல்லைப்பதிகம், மாவைப்பதிகம், விநோதவிசித்திரக்கவிப்பூங்கொத்து, இசைவைப் பதிற்றுப் பத்தந்தாதி, இலக்குமிதோத்திரம், மாவைக்கந்தர்சிங்காரம், சாவித்திரிசரிதை, திருநீலகண்ட நாயனார் விலாசம்* ஆகிய நூல்களையும் இயற்றினார்.**'[21]

என அறியப்படுகின்றது.

காப்புச் செய்யுளுடன், 226 அகவல்களையும் இரண்டு வெண்பாக்களையுங் கலித்துறைச் செய்யுளொன்றையுங் கொண்டிலங்குவது *மாவைக்கந்தரகவல்.*

கர்ணபரம்பரைக்கதைமரபுகளைச் சுட்டும் இவ்வகவலிற் குதிரை முகம் நீங்கிய வரலாறு அழுத்தம்பெறுகின்றது.

"பூமகளுறையு மாவையம்பதியிற்
றகுமுறை விரத நகுல நன்முனிக்குக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதியவர நீயருளினை யெனவுங்
குதிரை முகத்தினரசிளங் குமரி
மாற்றரு நோய் குறையாற்றி னையெனவும்
கன்ன பரம்பரைக் கதைகளுமுளவே
மாவையில் வந்துன் மலரடிபோற்றி
வேண்டுந வேண்டியாங் கெய்தினர் பலர்."

என வருகின்றது.

**சிவனது அருட்செயல்கள் பல விவரிக்கப்படுகின்றன. இதனாற் சிவனுங் குகனும் ஒருவரேயென்ற கருத்து அழுத்தம் பெறுகின்றது.**

**'பாற்கடல் கடைநாள் எழுந்திடு நஞ்சை உண்டுயிர் யாவையுங் காத்தன னென்றுந் தக்கன் முனிவாற் றனித்துயர் கொண்டசோமனைச் சடையிற் சூடின னென்றும் அஞ்சுறயாரும் வந்ததோர் நதியைத் தரித்த தன் வலிமை கெடுத்தன னென்றும் வந்திதன் பிட்டைக் கந்தையிலேற்றே உண்டனன். மண்ணைச் சுமந்தா னென்றும்புரங்கள் சிரித்துப் பொடியா யெரித்தன னென்றும் யோகமும் விழைந்த போகமுந் தழைக்க யோகியும் போகியுமானா னென்றும் பாசுபதந்தரப் பரிந்தன னென்றும்காலனைக் காலாலுதைத் தனனென்றுங் குருவடிவாகித் திருவுபதேசம் வாதவூரனுக் கோதின னென்றும் ஞானசம்பந்தற் கான வெண்முத்துச் சிவிகையாதி உதவின னென்றும்.'**

எனவுஞ் சிவனருட்செயல்கள் சிறப்புற எடுத்துரைக்கப்படுகின்றன. சிவனருட்செயல்கள் யாவும் மாவைக்கந்தனின் மேலேற்றிச் சிறப்பிக்கப்பட்டுள்ளன.

*மாவைக்கந்தரகவலில்* துயர்க்கடலில் நனி வீழ்ந்துழலும் ஆன்மாவின் நிலையினை உவமைகள் மூலம் விளக்கும் பண்பு தனித்துவமானதொன்று.

"வலையினிற் பட்டவுயிரினைப் போலும்
புலி யெதிர்பட்ட பசுவினைப்போலும்
அராமுற்பட்ட வெயிலினைப் போலும்
கருடனைக் கண்டவரவினைப் போலும்
அரியினைக் கண்ட கரியினைப் போலும்
தனித்துயர்க் கடலினனி வீழ்ந்துழல"

என விபரிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*மாவைக்கந்தரகவலி*ன் நிறைவு திருவடிப்பேறாகவே அமைகின்றது. வீடருகுளுக! ஆட்கொள்ளுக! திருவடியிற் சேர்ப்பிக்க! என வேண்டும் நிலைபோலவே,

“சின்மயானந்த நின்மலமுதலே
ஆதியுமந்தமு மிலாப் பழம்பொருளே
எங்குநிறைந்து தங்கிய வியாபி
சச்சிதானந்த சகள நிஷ்களனே
அருளுக வருளுக வரமெலாமருளுக!
அருளுக பதத்துனை யருளுக வருளே.”

என்றும் வேண்டுதல்கள் புரிகின்றார்.

**‘பிணிவாழ்வைப்போக்கி வழிகாட்டுவாயாக’** என்று வேண்டும் நூலின் கடைசிப் பாடலிது.

“அச்சங்கலந்தமலர் வாவி தோன்று மறுமுகவா
வஞ்சங்கலந்த கலிநீடி நின்று வருத்தியெனை
நெஞ்சங்கலந்த பிணிதந்து வாட்டு நிலைகுலைத்து
தஞ்சங்கலந்த வழியொன்று காட்டு தயைபுரிந்தே.”

## மாவைமுருகன்

*மாவைமுருகன்* என்ற நெடும்பாட்டைப் பாடியவர் மாவிட்டபுரத்தைச் சேர்ந்த **பண்டிதர் க.சச்சிதானந்தன்** ஆவார். சில அடியவர்கள் முருகனைத் தொழக் கட்டுவன் என்னும் கிராமம் வழியாக மாவிட்டபுரத்திற்கு வருகிறார்கள். அவர்களின் வயதில் மூத்தவர் மாவையின் வளத்தை மற்றையோர்க்குக் காட்டுவதாகப் பாடலமைகின்றது. தூரத்திலே தெரியும் சீமெந்துத் தொழிற்சாலையின் கனற்குழலையும் காங்கேசன்துறையிற் புகைவண்டியின் புகைச் சுருளையும் மற்றையோர் அறியாது வினவ, முதியவர் விடைபகருகின்றார். பலவளங்களையும் அவர்காட்டி ஈற்றில் யாவரும் கோவில் வாசலில் நின்று முருகனைத் தொழுகின்றனர் என்ற குறிப்புக்கள் இந்நூலின் முன்னுரையில் இடம் பெற்றுள்ளன.

பாத்திரங்களைத் துணைக்கொண்டு மாவைவளங்கூறும் ஆசிரியர், அடியார்கள் நிலையிலேயே அப்பாத்திரங்களைத் தெரிந்தெடுத்துள்ளார். முதியவரொருவரும் அடியவர் இன்னும் இருவருமாகி மூவரிடையே நிகழுஞ் சம்பாஷனையுடன் தொடங்குவது இந்நெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும்பாட்டு. காவியம், புராணம், பிரபந்தம், இதிகாசம் ஆதியாம் நூல்களைப்படிப்போர் மனதில் எழுஞ் சிந்தனைகளையும் இலக் கியச்சுவையினையும் பயக்கும் கதைப்பாட்டு *மாவைமுருகன்* என்னும் இப்படையல்.

இயற்கைவருணனையும் கவித்துவத்தின் தண்ணென்றொழுக்கும் நாடகப்பாங்கும் இலக்கிய விமர்சன நோக்கிலே குறிப்பிடத்தக்க அம்சங்களாயுள்ளன.

இந்நூலின் கடைசி எட்டு வரிகளிலும் நூற்பயனும் வினைப்பய னும் பேசப்பட்டு ஆசிரியர் தம் நோக்கமும் உரைக்கப்படுகின்றன.

**'வள்ளிமணாளா வருக வருக**
**உள்ளம் கொண்ட கள்வாவருக**
**குறிஞ்சித் தலைவா குமராவருக**
**மாயோன் முருகா மாவிட்டபுரத்து**
**மன்னாவள்ளி மணாளா வருக**
**மனக்குடில்வந்து எனைப்பெரி**
**தாண்டென்உள்ள வறுமை நீக்குவாய்**
**வள்ளலே கடம்பா வடிவேலோனே.'**

இந்நூலில் மாவைக்கந்தனது கோபுரத்தின் **எழில்மிகு தோற்ற வனப்பானது குரக்கன்பிட்டினை அவித்துக்கொட்டிய தேற்றத்திற்கு உவமிக்கப்படுகிறது.** இக்கோபுரம், கருகற்றிருப்பணியாயமைந்த சிறப்புக்கொண்டமைவது.

கிராமிய விவசாயக்குடியிருப்புக்களையும் நெய்தல், மருதநிலப் பின்னணிகளையுந் தம்மனத்திருத்தி எழுந்த உவமிப்பு இது, கவிஞர் தம் கற்பனைக்கும் கவிவன்மைக்கும் இப்பாடல் சான்றாகும்.

**'கட்டிமுடியாத மேற்கோபுர நிமிர்ந்து**
**கார்முகிலையுந் தொடும் காட்சியதுபாரீர்**
**கொட்டிய குரக்கன் புட்டினை நிகர்த்து**
**கோபுர முன் வாசலிடை தோன்றுவதுபாரீர்! '**

**'கொட்டிய குரக்கன் புட்டினை நிகர்த்த கோபுரமுன் வாசலிடை தோன்றுவது'** என்று வருவது 'கருங்கற்றிருப் பணியினாலமைந்த கோபுரத்தின் நேரிய இராஜகம்பீரத் தோற்றத்தினை மனத்திருத்துவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி முருகவேள் தாள்மேற் கவிபுனையத்
துய்பி முருகனே துணை."

என்பது இந்நூலின் காப்புக்குறள். இந்நூல் அச்சிலே பார்வைக்குக் கிடைத்துள்ளது.

## ஆறெழுத்துப்பத்து

*ஆறெழுத்துப்பத்தினை* ஆக்கியவர் மாவை மு.பூ. பொன்னம்பலப்பிள்ளை ஆவர். முருகமந்திரமாகிய சரவணபவ என்னும் ஆறு எழுத்துக்களையும் முறையே செய்யுளின் ஆறு அடிகளதும் முதலெழுத்தாகவர அமைத்துப் பாடப்படும் பத்துப்பாடல்களின் தொகுப்பே ஆறெழுத்துப்பத்து என்பது.

பாம்புக்கு யமன்போன்ற கருடனது வாயிலே, இப்பாம்பின் வாயில் தேரை அத்தேரையின்வாயிலே வண்டு, அவ்வண்டின் வாயிலே சிறு தேன்துளி.

வண்டு தன் வாய்ப்பட்ட தினைத்தனையுள்ளதோர்தேனைத் தான் இருக்கும் அவலநிலையை அறியாமல் அயர்ந்துபோய், அனுபவித்து அகமிகமகிழ்வது போன்றதிவ்வன வாழ்க்கை என்கின் றனர் அறிஞர்.

**கருடன் பாம்பைக்கவ்வ பாம்பு தேரையைப்பற்ற, தேரை வண்டைத் தின்ன, வண்டு தான் இருக்கும் நிலையை (சாகவேண்டிய அவல நிலையையும்) மறந்து நாக்கிற் சொட்டுந்தேனைச் சுகித்துக் கொண்டே இருக்கின்றது. இதுபோன்றதே எமது வாழ்வும் என்கின்றார் புலவர். உயிரானது உற்ற ஆக்கையின் உறு பொருளை உணராது உழல் கின்றது. சிற்றின்பத்துறையிற் செல்லலால் வரும் நட்டத்தை நீக்கிப் பேரின்பத்துறையால் வரும் பெருநயத்தை அருள்வீராக! என்றமையும் பாடல் மிக்க நயம் பயப்பது.**

**'சண்டைக் கருடன்வாய்ச் சர்ப்பம் அதன்வாயன்**
**ரண்டுற்ற தேரை அதன்வாய் அகப்பட்ட**
**வண்டுற்ற தேனை மகிழும் இயல் ஆனதிம்மன்**
**வண்டுற்ற வாழ்க்கை அதுவென் றறியாமே**
**பண்டுற் பாசப் படரும் மயல்நீக்கி**
**வண்டுற்ற பூமாலை வாசநயம் அருளே.'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்லூர் நாற்பது

*நல்லூர் நாற்பது* என்ற நூலை இயற்றியவர் கவிஞர் வி.கந்தவனம். சங்கமருவிய காலத்தில் நீதியையும் ஒழுக்கத் தையும் போதிக்கவென எழுந்த இலக்கியங்களுட் சில எண்ணிக் கைசுட்டிய பெயர்களில் நிலைத்தன. பாவும், பாவினமும் அடிவரை யறை கொண்டமைவதுபோலவே பிற்காலத்திலும் பாடல்களின் தொகையளவாற் பிரபந்தநூல்கள் பெயர்பெறலாயின. *'இன்னாநாற் பது', 'இனியவைநாற்பது', 'கார்நாற்பது', 'களவழிநாற்பது', 'திணை மாலைஜம்பது'* என்ற நூல்களைப்போன்ற செய்யுள் எண்ணிக்கை வரையறையைத் தலையங்கமாகக் கொண்டமையும் பிரபந்தம் *நல்லூர் நாற்பது* என்பதாகும்.

*நல்லூர்நாற்பது* நூலிலுள்ள நாற்பது செய்யுட்களும் மூன்று பத்துகளாகத் தனித்தனி பாகுபடுத்தப்பட்டுள்ளன. போற்றிப்பத்து, சிறப்பீர்பத்து, வேண்டும்பத்து என்பன *திருவாசகத் தி*லமைந்துள்ள அச்சப்பத்து, அற்புதப்பத்து, அன்னைப்பத்து, ஆசைப்பத்து, கண்ட பத்து, குயிற்பத்து, குலாப்பத்து, குழைத்த பத்து, செத்திலாப்பத்து, சென்னிப்பத்து, பிடித்தபத்து, பிரார்த் தனைப்பத்து, புணர்ச்சிப்பத்து, யாத்திரைப்பத்து, வாழாப்பத் துக்களின் ஒழுகிசையுடன் அமைந் துள்ளன. எளிமையும் உணர்ச்சிப்பெருக்கமும் இப்பத்துகளிற் காணப்படுகின்றன.

'மாப்பாணமுதலி குலவண்ணம் தோன்றும்' என்ற தொடர் நல்லூர்க் கோவிலைப் பரிபாலிக்கும் முகாமையாளரைச் சிறப்பிக்கும். சந்தச்சிறப்பான பாடல்கள் *நல்லூர் நாற்பது* என்ற இந்நூலில் உள்ளன. கவிவளத்தினை வெளிப்படுத்துவதாயும் முருகனது பெருமைகளைப் பேசுவனவாயுஞ் சிறப்பாக அமையும் பாடல்களுமுண்டு, 'தீந்தமிழ்ச்சுவை தித்தித்து அதனை விரும்பி நயக்கும் குமரன் முருகன்' எனக் குமரன் சிறப்பிக்கப்படுகின்றான். *நல்லூர் நாற்பது* காப்புச்செய்யுளில் விநாயகரைத் துதித்து முட் டின்றி நூல் முடிய அருள்செய்ய வேண்டும் எனத் துதிக் குமிடத்தில்,

"பொய்தீர் வேல்
நல்லூர் முருகன்றாள் நாற்பதுபா நான்படைக்க
எல்லா நலங்களுமிங் கீந்து."

என வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்தீர்வேல் என்பதில் பொய்மையைத் தீர்த்து அருள் உண்மை நிலைநாட்டும் வேல்கைக்கொண்ட நல்லூர் முருகன் என்று போற்றுகின்றார். **கலைமகளைத்துதிக்கும் கவிஞர் நின்னருள் ஒளி இல்லாதுவிட்டால் இந்நாற்பதை ஏலான்எழில் வேலன் என்று பாடுகின்றார்.**

**வாழ்வு நீர்க்குமிழ் போன்றது, நிலையற்றது. உடல் அழியுந் தன்மையது** 'துன்பப்படும் அடியவர்கள் துயர்துடைக்கும் செல்வன்' என்பது போற்றிப்பத்தில் வரும் முதலாவது செய்யுள்,

"இந்தத் துன்பாகுங் குமிழ்வாழ்வில்
துவள்வார்தொல்லை
துடைத்தாள அருள் செய்யக்கிடைத்த செல்வா."

எனவரும்.

நல்லூரின் சிறப்பினை எடுத்துக்காட்டும் பாடலொன்றில் **கனக சூரியனும் பரராசசேகரனும் நிறுவிய நகரமைப்புச்** சிறப்பிக்கப் படுகின்றது.

**'வரலாற்றுப் புகழ்கொண்ட வளநல்லூரில்**
**வன்கனகசூரியனும் மாடப்பொன்னர்**
**நிரலான வீடு நெடுஞ்சாலை நீள**
**நிலையாகக் கலையாக நிறுவப் பின்னாள்**
**பரராசசேகரனும் பக்கம் எல்லாம்**
**பலகோயில் கண்டானே பாரோர் நாளும்**
**கரமேந்திக் கடலாகக் கண்ணீர் கொட்டக்**
**கலைக்கோயில் நீகொண்டு களித்தாய்போற்றி.'**

*நல்லூர்நாற்பதில்*இடம்பெறும் 'சிறப்பீர்பத்து' என்னும் பகுதியில் இருபது பாடல்கள்(20) உள்ளன. 'பதிக'த்தில் பத்துப்பாடல்களே இடம்பெற்றுவந்த மரபுண்டு. இங்கு அம்மரபு மீறப்பட்டுள்ளமை கண்டுகொள்ளத்தக்கது. சிறப்பீர்பத்து, நல்லைமுருகன் விழாவணி, அலங்காரம், பூசைச்சிறப்பு, அடியார்ச்சிறப்பு, தீபச்சிறப்பு, குதூகல உணர்வு, என்றின்னோரன்ன விடயங்கள் கூறப்பட்டுள்ளன.

நல்லூர்த் திருவிழாவும் மாவிட்டபுரத்திருவிழாவும் யாழ்ப்பா ணத்து மாவட்ட மக்களை மட்டுமல்லாது, எம்மவர் உலகின் எப்பகுதியில் வாழ்ந்தாலும் ஈர்த்து உவகையூட்டுவன. சைவசமய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறைகளையும் வழிபாட்டு மரபினையும் பாடுங் கவிஞர் சைவானூட்டானப் பாரம்பரியத்தினைக் கூறி, ***சமூகந்தழுவிய பக்திப்பேரலையினைப் பாடல்கள் மூலம் ஏற்படுத்துகின்றார்.***

விதிகளிலே தண்ணீர்ப்பந்தல்கள், சாணமிட்டு மெழுகிய சிறிய குடிசைகள், வாழையிலை படைத்துண்ணும் அடியார்களது உறவு, மாவிலை தோரணங்கட்டப்பட்ட சோடனைகளின் எழில், பக்திக் கீதங்களின் ஒலி என்பன தெய்விக சிந்தனையைத் தூண்டுவன வாயமைவதை ஒரு பாடலிற் காணலாம்.

"மாடங்கள் மடங்கள் பேர்மண்டபங்கள்
மன்றங்கள் பந்தல்கள் வாடிவீடு
ஆடுங்காற் பந்தல்கள் அப்போதொன்றும்
அந்தரக்குடிசைகள் அண்டியுள்ள
வீடெல்லாம் விரிந்தோடி விளங்கும் நற்பேர்
வீதிகள் பாதைகள் மிஞ்சியுள்ள
ஊடெல்லாம் கோடியோ டோடைபக்க
ஊரெல்லாம் உறைவரே உருகி மக்கள்."

(செய்.17)

என்பது பாடல்,

'*மாவைக்கந்தசுவாமபேரிற் பாடிய ஊஞ்சற்பாக்கள்* 1842 ஆம் ஆண்டு ஆடிமாதம் யாழ்ப்பாணம் நல்லூர் **ம.சரவணமுத்துப் புலவரவர்களால்** அரங்கேற்றப்பட்டன' என்று அந்நூலிலே குறிப்பி டப்பட்டுள்ளது.

காப்புச்செய்யுளுடன் இயலும் இவ்வூஞ்சற்பாக்களில் மரபு ரீதியான 'ஊஞ்சல்' பாடுதற்குரிய இலக்கணமுறைகள் - விதிகள் என்பன பினபற்றப்பட்டுள்ளன. தேவர்கள், அரம்பையர்கள்பற்றிய குறிப்புகள் இரண்டாவது பாடலில் இடம்பெறுகின்றன.

'மாவைநகர்க் கந்தரேயாடீருஞ்சல் ' என முடிவுறும் இப்பாக் களினூடே வருணனைகள் சிறப்பிடம் பெறுகின்றன.

"திருத்திகழுஞ் செங்கனக முடிகளாடத்
திசை திகழுந் திருமுகஞ் சோதியாடக்
குருத்திகழும் விழிக்கருணை குலவியாடக்
குலந்திகழுங் கோலமணிக் குழைகளாடச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயந் திகழுந் தனிவேலும் மயிலுமாட
மருத்திகழு மார்பாட வாடீரூஞ்சல்
மாவைநகர்க் கந்தரே யாடிரூஞ்சல்."
(மரு - மருக்கொழுந்து மாலை)

ஊஞ்சலின் கடைசிப்பாடல் 'வாழி'ப்பாடலாக அமைவது மரபு. அம்முறைமையையே இவ்வூஞ்சலிலும் ஆசிரியர் கையாண் டுள்ளார்.

## மாவைமுருகன் காவடிப்பாட்டு

புகழ்பெற்ற சின்னிகுளம் **வித்துவான் அண்ணாமலைரெட்டியார்** இயற்றிய *காவடிச்சிந்து* என்னும் இசைப்பிரபந்தம் தமிழ்ச்சுவை கொண்டு மிளிருவது, இது கமுகுமலைநகர் வளம், கோவில்வளம், வாவிவளம், சுரம்போக்கு, நற்றாயிரங்கல், தலைவியிரங்கல், தலைவி ஊடல், பாங்கி தலைவியின் நிலைமையைக் கூறித் தலைவியையழைத்தல், தலைவி பாங்கியைத் தூதுவிடல், பாங்கி தலைவியின் அவயத்தன்மை சாற்றல், தலைவன் வருத்தஞ் சாற்றல், தலைவனைக் கலந்த தலைவி பாங்கிக்குக் கூறல், வாவிவளம், தலைவியின் ஊடல், தலைவி வருந்துதல், தலைவ னிடத்தில் தலைவிவருந்துதல் என்ற துறைகள் வருகின்றன. இவை கவிஞரின் **அகத்துறைப்பாடலாக்கப் புலமைக்கு நல்ல உரைகல்லெனலாம். நல்ல சந்தச்சிறப்பும் கட்டமைப்புமுடைய பாடல் கள் இவையாகும்.**

**'தெள்ளு தமிழ்க்குதவு சீலன் - தமிழ்**
**செப்பு மண்ணாமலைக் கனு கூலன் - வளர்**
**செழியப் புகழ் விளைத்த கழுகுமலை வளத்தைத்**
**தேனே சொல்லுவேனே.'**

என்றும், கழுகுமலையின் இயற்கைவளத்தினைக் கூறவந்த அண்ணாமலைரெட்டியார்.

**'பூசுவண்டு வாசமுண்டு காவின்மண்டு தேனையுண்டு**
**மோகன முகாரிராகம் பாடுமே - மைய**
**லாகவே பெடையுடனே நாடுமே - யலை**
**மோது வாரிதி நிரைவாரி விண்மீதுலாவிய சீதளாகர**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முகில் பெருஞ் சிகரமுற்று மூடுமே - கண்டு**
**மயிலினஞ் சிறகை விரித்தாடுமே.'**

என வருணிக்கின்றார். தலைவன் வருத்தஞ்சாற்றல் என்னும் பகுதியில் வரும் பாடற்பகுதியிது.

**'வண்ணத்தினை மாவைத் தெள்ளியே - யுண்ணும்**
**வாழ்க்கைக் குறக்குல வள்ளியே - யுயிர்**
**வாங்கப் பிறந்திட்ட கள்ளியே - யிரு**
**வடமேருவை நிகராகிய**
**புயம்தனி பலமாமணி**
**மாலைப் படீரெனத் துள்ளியே விழ**
**வான்மதி வீசுந் தீயள்ளியே.'**

காவடியை எடுத்துச்செல்லும்போது பாட்டுப்படிப்பது வழக்கம். இப்பாடல்கள் யாவும் முருகன் புகழையே எடுத்தியம்புவன. காவடிப்பாடலை **நடைசாரிப்பாட்டு, ஆட்டப்பாட்டு** என இருவகை யாகப்பாகுபடுத்தலாம் என்பர் ஆய்வறிஞர், பேராசான், அறிவாளி த.சண்முகசுந்தரம். (தசம்)

காவடியைத் தாங்கிச்செல்லும் அடியார்கள் நடந்து போகும் போது பாடப்படும் பாட்டு நடைசாரிப்பாட்டு. இந்தப்பாடல்களைக் கேட்டதும் அடியார்களின் களைப்பு அகலும், அன்பு பெருகும், 'சாரி' என்பதன் பொருள் உலாவுதல். நடைசாரிப்பாட்டு இப் போதும் படிக்கப்படுகின்றது. நடைசாரிமேளம் என்பது ஊர்வல மாகச்செல்லும்போது வாசிக்கப்படுகின்ற மேளம். இது யாழ்ப்பா ணத்துச் செல்வாக்கு, இதனைச் சென்னைப் பேரகராதி சுட்டிக்காட்டி யுள்ளது. ஆட்டப்பாட்டு என்பது காவடி ஆடும்போது பாடப்படு கின்ற பாட்டு. காவடிக்காரரர் கூட்டம் கூட்டமாகப் போகும் போது முக்கியமான சந்திகள், பெரியோர்களின் இல்லம், வழியில் வரு கின்ற கோவில் போன்ற இடங்களிலே தங்கிநின்று ஆடுவர். இந்தப்பாடல் யாவும் ஆடலுக்கேற்ற மெட்டைக்கொண்டிருக்கும்.

இப்படியான பாடல் பலவும் அளவெட்டிப்பகுதியில் இருந்தன. இவைபெரும்பாலும் செவிவழியாக வருவன. சிலவேலைகளில் இப்பாடல்களைப் பிரதிசெய்துவைப்பதும் வழக்கம். இப்படியான பாடல்களை அந்தந்த நேரத்திற்கு ஏற்ப இசைத்துப்பாடக்கூடிய அண்ணாவிமார் பலர் இருந்தனர். இப்போதும் இருக்கின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுக்கையினை வைத்துக்கொண்டு எவ்விதமான முன்னறிவித்தலுமில்லாமல் இவர்கள் சந்தக்கவிபாடுமாற்றல் பெற்றிருந்தனர். இவ்வாய்விலே இடம்பெறும் பாடலைப் பாடியவர் **யாரெனத் தெரியவில்லை. இவை நூலுருவிலும் இல்லை. இதனைப் பாடிக் காட்டியவர் பண்ணிசைப் பேராசான் கீரிமலை த.செல்லையா.** வீரசைவர் இவர். பாடல்களுக்கு விளக்கம் தந்தவர் அளவெட்டி கரகதிலகம் **மு.ஐயாத்துரை.** இப்படியான பாடல்கள் பலவும் ஈழத்தின் பலபகுதிகளிலுஞ் செவிவழியாக வழங்கப்பட்டு வருகின்றன; அல்லது கையெழுத்துருவில் இருக்கின்றன. இசை வேளாளர் இவற்றிலே நல்ல பரிச்சயங்கொண்டு விளங்குகின்றனர். *காங்கேசன் கல்வி மலர்* என்னும் நூலிலே **துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன்** அண்மையில் 'இசைவேளாளர் மரபு' குறித்த அரியதொரு ஆய்வுக்கட்டுரையினை எழுதியுள்ளார்.

## மாவைமுருகன் காவடிப்பாட்டும் காவடியாட்டமும்

*மாவைமுருகன் காவடிப்பாட்டுப்* பின்வரும் பாடலோடு தொடங்குகின்றது. மாவிட்டபுரம் அறிவொளி ஆய்வறிஞர் த.சண்முகசுந்தரம் இவற்றினைத் தொகுத்துள்ளார்.

**'பொங்குபுகழ் ஆனைமுக வடிவா - உன்றன்
பொற்பாதம் மனது வைத்தோம் பாலா
செங்கழனி சூழ் அளவைநடுவன் கோயில்
அமர் காத்தவராயன் சந்நிதியிலிருந்து
துங்கமிகு காவடியை எடுத்து - தொந்த
பந்தமறுமாவைக் கந்தனடி சார
எங்களைநீர் காத்தருள வேணும் - ஞானக்
கொழுந்தாகிப் பரந்தெழுந்த பொருளே.'**

அளவெட்டிக் காத்தவராயர் கோவிலிலிருந்து மாவிட்டபுரத்தை நோக்கிக் 'காவடியாட்டம்' இடம்பெறப் போகிறதனைக் கட்டியங் கூறுகின்றது இப்பாடல். 15ஆம், 16ஆம் செய்யுட்கள் மிகுந்த சிறப்புடையன.

**'அரஹர குழந்தை வடிவேலா -ஆதி
அந்தமிலாஅரும்பொருளாம்வேலா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அரவுபுனை அரனுதவும் வேலா-நாமும்**
**காவடியை திருமுன்னர் வைத்தோம்**
**பரவுபுகழ் பெருங்கருணை வேலா - திரு**
**மருவு புகழ் தந்தெம்மை ஆள்வாய்**
**சிரங்குவிவார் உமைமகளும் மாவை என்றும்**
**சிறந்தொளி உவந்துறையும் வேலா'**
**'சிந்தொலிக்கும் மாவையமர் முருகா - வினை**
**சிந்தவருள் தந்தருள்வாய் முருகா**
**வந்தனைசெய் திருவடியார்முருகா - வந்து**
**வந்திக்க அருள்புரிவாய் முருகா**
**சந்தமொடு முறை பாடமுருகா - மயில்**
**நடமாட வந்தருள்வாய் முருகா**
**புந்தியளி மாலையிட முருகா - மயில்**
**மீதமர்ந்து ஆடிடுவாய் முருகா.'** (செய்.16)

சாமியாடல், மருள் என இரண்டுவகையாக உருவாடலைக் கூறுவதுண்டு.[22] மருள் வந்தபின் நாக்கில் வேல்குத்தல், தாள்பூட்டுப் போடுதல், உடம்பில் அலகுகள் தைத்தல், பாதரட்சை போடுதல், செய்வார். காவுதடியே 'காவடி' என மருவிவந்துள்ளது. காவடிகள் பலவகைப்படும். **பாற்காவடி, பன்னீர்க்காவடி, விபூதிக்காவடி, அன்னக்காவடி, பறவைக்காவடி அல்லது தூக்குக்காவடி, செடிற்காவடி, முள்ளுமிதியடிக்காவடி என்பன.** இக்காவடிகளிற் பிரார்த்தனைக்காரர்கள் கொண்டுவரும் பொருட்களெல்லாம் சுப்பிர மணியர்க்கு அர்ச்சனைக்கும் ஆராதனைக்கும் உபயோகப்படுவன. பாலாலும் பன்னீராலும் விபூதியாலும் சுவாமியை அர்ச்சித்தபின் அபிஷேகஞ்செய்த அன்னத்தைப் படைத்து அடியார்களுக்கிடுவர்.

## வாய்மொழியாகவுள்ள பாடல்கள்

"குன்றிலாடுங் குமரனே நீ வாவா - தேவ
குஞ்சரிமணாளனே நீ வாவா"

என உடுக்கிசையுடன், துள்ளளோசைத்தாளம் குதிகொள்ளப் பாடும் உடுக்குப் பாட்டுக்கலைஞர் **'சிவநாதக்கலைமணி' வீரசைவர், அம்பனை சீ.சிதம்பரப்பிள்ளை ஐயா வாய்மொழியாகவே** இந்நூலா சிரியருக்கு நேரிலே **பாடிக்காட்டிய மாவை முருகன் காவடிப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாடல்களை இவ்வாய்வேட்டிற் பொறித்துப் பாதுகாத்துவைப்பது பொருத்தமானது.** இப்பாடற்பொருள் காவடியுற் பத்தியுடனும் 'பழநி'த்தலத்துச் சிறப்புடனும் ஒத்தியலும் பண்பு கொண்டமைவது. பாடல்கள் அனைத்தும் **சிந்தனைக்கும் ஆய்வுக்கும் பக்திக்கும், இசைநயத்திற்கும்** பெரு விருந்தாயமைவன.

**காவடிப்பாட்டு, கரகப்பாட்டு, தூக்குக்காவடி, வில்லுப்பாட்டுப்** போன்ற நிகழ்சிகளிலே பாடப்படுவதற்கு ஏற்றதான ஒத்திசையுள்ள பாடல்களாக இவை அமைகின்றன. இன்றும் வயது முதிர்ந்த கவிஞர்களால் இப்பாடல்கள் பாடப்படுவனவாயினும் அந்நிகழ்வின்போது பாடல்வரிகளைத் தெளிவாகக் கேட்கக்கூடியதாகவோ அல்லது பொருள்புரியுமாறு உணரத்தக்கதாகவோ அமைய மாட்டா. ஆதலாற் **'சொற்களை உரியவாறே எழுத்தில், ஏட்டில் பதித்திட வேண்டும்' என்னும் உணர்வுடன் இவை பதியப்படுகின்றன. ஆவணப்படுத்தப்படுகின்றன.** முருகவழிபாட்டு மரபு தமிழிலக்கிய நெறியில் நின்றுநிலவும்வரை இப்பாடல்களும் மக்கள் நெஞ்சங்களிலும் உணர்வுகளிலும் நிலைத்திருக்கும் என்பது உறுதி.

வாய்மொழியாகவே கூறக்கேட்டு எழுதிய இக்காவடிப்பாடல்கள் ஏடெதிலும் அச்சேறவில்லை. இவை பேச்சோசை வழக்கில் நிலவுன. தத்துவார்த்த உண்மைகளைச் சுட்டுவன. நீண்டநேரம் மூச்சுப்பிடித்துப் பாடப்படவேண்டியன. **சிவஞானதத்துவமும் இசைஞானவித்துவமும்** இணைந்தமைந்தியல்வன.

<u>மெட்டு 1</u>

**'அரஹர குழந்தை வடிவேலா - உன்னை**
**அனுதினமும் நான்மறவேன் ஆறுமுகவேலா**
**நெருஞ்சிப்பூப் பன்னாங்கு தூக்கி - அதில்**
**நேரான செவ்வலரி மாலை சரம்தூக்கி**
**பாற்காவடி கொண்டு வாறேன் - என்னைப்**
**பார்த்தருள வேணுமையா பழநிமலையானே**
**வேல் வேல் .....வேல்வேல்.......வேல் வேல்**
**(அரஹரகுழந்தை வடிவேலா)**

**வேங்கைமரமான வடிவேலா**
**வெகுகாலம் கடலில்விளை யாடும் குமரேசா**
**வெகுகாலம் வலைபோட வொட்டான் - அந்த**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீச்சுவலைக் கரையானும் வெகுகாலம் கெட்டான்
ஆதியாம் பழங்கிழவ னானான் - அந்த
அரியரசன் இடத்தில் வந்து அன்புடனே கேட்டான்,
பெருமகரம் பிடித்தவர்க்கு நல்ல என்
ஒரு மகளைக் கலியாணம் செய்வேன் நிச்சயமாய்.'
(அரஹரகுழந்தை வடிவேலா)

தூங்கையில் வாங்குகிற மூச்சு - மேலே
சுழிமாறி வாங்கையிலே போனாலும் போச்சு
பாங்கான திருநாளுண்டாச்சு
பலபேர்கள் கூடியே கதை பேசலாச்சு
நீங்காத மாய்கை மேல் பூச்சு
நிலவீடு சுடுகாடு நிலவரம தாச்சு
தாங்கமுடியாத செகஜோதி யோக
சரவணபவனாந்த சாமி துணையாமே."
(அரஹரகுழந்தை வடிவேலா)

மெட்டு 2

சரவணபவகுஹ சண்முகநாதா
அரனருள்பாலா அருள்புரிவாயே
மாவையம் பதியினில் வாழ் குருநாதா
மாருதப் புரவல்லி மாமுகம் தவிர்த்தாய்
மைந்தனே, கந்தனே, மாயவன் மருகனே
மலைமகள் குமரா, குறமகள் மணாளா, மரகதசொரூபா
வரமருள் இப்போது
(சரவணபவகுஹ சண்முகநாதா)

வந்தனை செய்வோர் மலையிருள் அகற்றும்
சந்திரசேகரன் தான் அருள்பாலா
தானவர் மேவலா வானவர் காவலா
தரு செயலினாணை அரியுடன் புகுந்த அறுமுகனெனையாள்.
(சரவணபவகுஹ சண்முகநாதா)

மெட்டு 3

பாலபிஷேகம் பழநி மலையப்பன்
பாதப்ரசாதம் பரமானந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலோக சாமீப சாரூப சாயுச்யம்
தந்திடும் கந்தன் ஒருவன் சொந்தம்
வேலா சுசீலா நற் கோலாகலா
நாலா கலைஞான மூலிபவா
விகசித நடமிடும் மயிலுறவாசன்
இகபர மிரண்டுக்கும் சுகபரமேசன்
ஈசன் முருகேசன் பேசும் பிரகாசன்
எங்கும் புகழாவி நன்குடியான்.

(பாலபிஷேகம்)

துதிசெயும் முதியவர்க் கதிக சிநேகன்
மருவு குஞ்சரி வள்ளி மருவும் உபோகன்
தோத்திரம் பாஸ்கரம் கீர்த்தனம் பார்க்கமுன்
தொண்டர்க்குத் தண்டாயுதன் தொண்டனாம்.

(பாலபிஷேகம்)

மெட்டு 4

பாற்காவடி கொண்டரஹர வேல்மயிலென் றிடும்
பாலதண்டபாணி
துதிபுரியும் பக்கதரன்புபூணி
பழநிமலைபால தண்டபாணி
பங்கமில்மாவை வள்ளியின் மாவனத்திலே
ஏவலாளனாய்க் கூவினோர்க்களைய
பராப்பரம வேலா
பங்கமில்லாச் சிவஞானம் கொண்ட
பந்தப்பரவச் செந்தமிழ்ச் சந்தச் சரவண சண்முக
பாலதண்டபாணி
துதிபுரியும் பக்தரன்பு பூணி
புழநிமலை பால தண்டபாணி

மெட்டு 5

கந்தா வந்தாள் உன்தாள் நின்தாள்
கந்தா வந்தாள் உன்தாள் நின்தாள்
கலியுக செகதலவரதனே அழகிய சரவணமுருகனே,

(கந்தா)

சந்தோஷம் தா நொந்தே வந்தேன்

(கந்தா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரிடை அடுநெடுமயிலோடு நடமிடும்
(கந்தா)
தகுந்தவித மகிழ்ந்துரைய செழுங்கருணை வரங்களைய
(கந்தா)
தரையிற்றுயரப்படுவர் குறையற்றிட நற்பலத்தை
(கந்தா)

திரசுரமொடு வருமவுணர்கள் படை
கரிபரி குடரதமதை கிறுகிறுவென
பொடிபடவுடல் பறபறவெனத் தரையிருபட
சிரமத நறுநறுமென அறுத்(து) அரனொடு
தனயமனுறுமொடு
சீர்த்தி நேர்த்தியான தெய்வ மாமகளைக்
கீர்த்தி பெறச் சேர்த்தணைத்த பெருமானை
(கந்தா வந்தாள்.......)

திணையதிலருங்கவ!ணெறிவிடுஅணைக்குற விளங்கிய
அழகிய தனைவரு மிருவிழி செருகிட, மனமுருகிட
வனமதில் அவருடனெ திர்பட,
கனமுடன் எழுவரும் எதிர்பட வருத்தமிகுத்து
மரத்தை நிகர்த்தாய் கரித்தோலரித்து
விரித்தோர்க்குரைத்தாய்,
(கந்தா வந்தாள்.......)

தாம் தனனனன தீம்தரிகிட தத்தோம்
தகஜெனு தத்தோம் தோம் தோம்
தாம்தாம் தனனனன தீம் தீம் தீம்
தரிகிட தகதோம் தோம் தோம்
தத்தரி தச்செனு தத்திமி தக்கிட தத்தித்தா தித்தா
ததிக்கிணதொம் தக தத்திங்கின தொம் தக்கிட
ததிங்கினதொம்.
(கந்தா வந்தாள்.......)

தத்தரிகிடதக தித்தரிகிடதக நந்திரி கிடதக நொந் தரிகிடதக,
தத்தரிதக்கிட தித்தரி தரிகிட நந்திரிகிடதக, தொம்த
ரிகிடதக.
(கந்தா வந்தாள்.......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெட்டு 6

பழநி ஆண்டவனே
உனதிருபதம் அனுதினம் துதி சதமெனமகபலம்
பாஸ்கரசாமி தமிழ்த் திரு நோக்கியளித்திரு
(பழநி ஆண்டவனே)

களனியில் மனங் கசிந்துருகிடக்
கண்டவர்க்கு அருள் எங்கும் பருகிடத்
தொழ நினைந்திட இனம்பருகிட
தொண்டர்க் கருமருந் தெனவரு
அண்டர்க் கருவிருந் தெனவரு
தோகை மாமயிற் குகந்தவாகனா புயற்றுயர்ந்த
தோரணமான பதாயுதவாராண ஞானவேலாயுத
சித்தகை கைத்தன மெத்தென
நித்தமும் பக்தி அனத்தினள்
(பழநி ஆண்டவனே)

கோபுரத் தங்கத் தூபியும் வண்ணக்
கொங்கையும் சிரங்களும் நின்னத்
தாவி யொளித்திடும் ஒளிகளும் மின்னத்
தான் பறித்திடச் சிறந்து வான்பதிக்குமேற்பொதித்து,
கோயிற்றிருவள கனியொடு நாவிற் புகலவுமெனதல,
குன்றுந் தங்கும் சாவடி எங்கும் பொங்கும் காவடி
கோதிலாத கீதநாதம் கொண்டேன் கிரிவுண்டேன்
வரமுண்டேன் திருத்தாண்டாயுத.........
(பழநி ஆண்டவனே)

மெட்டு 7

வந்தவினை விக்கினம் பனிபோல மாறவும்
வருமிடர் பயந்தோடவும்
வஞ்சனைகள் பெல்லிப் பிசாசு குட்டிச்சாத்தான்
வருங்கூளி அண்டாமலும்
அந்தியில் பேய் என்னும் உச்சி சூர்மபேயென்றும்
அணுகாமல் விட்டோடவும்
அக்கிரம தெட்ஷணம் இரண்டு செய்யாமலே
அஞ்சலென் றெனையாளுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தணம் குங்குமம் சவ்வாது தட்டுப்புனுகு
சாந்தொழுகு மணி மார்பனே
சர்க்கரை அவல்பயறு மிக்க பாலமுதமும்
தானடைசு குடவாயிறவே
கந்தர்க்கு முன்வந்த விகடதட கஜமுகக்
கடவுளே மேல் வாசலில்
கனகச் சதங்கையொலி கலகலென நடமிடும்
கற்பகப்பிள்ளையாரே.

மெட்டு 8

'வேலாட மயிலாட வீரகிங்கிணி ஆட
வெண்டையங் குலுங்கியாட
விதமான காலினிற் தண்டைகாற் சிலம்பாட
வேதாந்தக் குடைகளாட
நாலுமறையாடக் கோழியங் கொடியாட
நாதாந்தப் பொருள்களாட
நாகரீகமான தொரு வீரகண்டாமணி
நடமிடும் போதிலாட
பாலகர் கூடியே காவடி கொண்டுவந்து பக்கங்கள்
தோறும் ஆட
பாங்கான நவவீரர் பக்கத்திலுறை சித்தர்
பணிந்துபின் பாடியாட
ஆலத்தை உண்டவன் போலொத்த ஐயனே
அன்பர்கள் தொழும் மெய்யனே
ஆறுமுகமான திரு நீறின் ஒளியானபொருள்
ஆறுமுகமான குருவே.'

மெட்டு 9

'திரிலோக சஞ்சார முனிநாரதர் சொன்ன
தேன்மொழி அணங்குமீது
சித்தமது நிலைகொளச் செப்பரிய வேடனாய்ச்
செய்யமானொன்று தேடி
அரிவையங் குறமாது பரன்மீது இருந்து
நல் ஆலோலமே தொடுக்க
அங்ஙனம் சென்றந்த மங்கையோடு வாதாடி
அடர்வேங்கை மரமாதாகித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெரியாது பெரிய சரிய சன்னாசியாய்த்**
**திருட்டு வேடம் புனைந்து**
**தேனும் தினைமாவும் திண்டு உருசி கண்டு**
**தேடி நன்னீரருந்தி**
**கரியானை வருதென்று பயங்காட்டி ஏமாற்றிக்**
**கல்யாணம் செய்து கொண்ட**
**கந்தனே பரமசிவன் மைந்தனே எனையாளும்**
**கதிர்காம வடிவேலனே.'**

## மாவைக்கந்தாமலரடிபோற்றி

மணிவாசகப்பெருமான் அருளிய *திருவாசகத்திலே* 'போற்றித் திருவகவல்' என்னும் பாடற்பகுதியொன்றுண்டு. அது தமிழர்ச் சனை 133 அகவல்களின் ஈற்றுச்சொல் **'போற்றி'** என வருவது இதன் பிரதான பண்பாகும். பக்தி கைவந்த மணிவாசகர் போன்றே மாவைக்கந்தனில் ஆராவீடு பாடுகொண்ட மாவை த. சண்முகசுந் தரம் அவர்களால் ஆக்கப் பட்டது *மாவைக்கந்தாமலரடிபோற்றி* என்னும் நூல்.

"பன்னிருகரத்தாய்போற்றி பசும்பொன்மயிலாய்போற்றி
துன்னியகருணையாறு முகப்பரம்பொருளேபோற்றி
கன்னியரிருவர்நீங்காக் கருணைவாரிதியேபோற்றி
என்னிருகண்ணேகண்ணுளிருக்குமாமணியேபோற்றி"

என்பது *கந்தபுராணம்* கூறும் போற்றிச்செய்யுள்.

காவடி, கரகம் ஆடுவோர், கந்தசஷ்டி விரதமனுட்டிப்போர் அனைவரையும் காப்பாயாக என்று வேண்டுதல் செய்யும் ஆசிரியர் **'சாவைத்தடுக்கும் சண்முகாபோற்றி'** என்று 99ஆவது வரியில் வேண்டுகின்றார்.

"கெஞ்சு மடியாரைக் கொஞ்சுவாய் போற்றி
மிஞ்சுங் கொடியாரை மிதிப்பாய் போற்றி
குரைகடலொளித்தசூர்முதல் தடிந்தோய்
**நரைதிரையில்லா வாழ்வருள் போற்றி.'**

(வரி: 85 - 88)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என மாவை முருகனிடத்தில் வேண்டுதல் செய்கின்றார். **கீரிமலைச் சிவநெறிக்கழகத்தின் செயலர் 'சிவநெறிக்காவலர்' திரு.ச.விநாயகரத்தினம் அவர்கள் 'பிரதிகளை வழங்குபவர்'** என இந்நூலிற் குறிப்பிடப்பட்டுள்ளது. அன்னாரிடமிருந்தே எமக்கும் பிரதிகள் கிடைத்தன. இந்நூலாசிரியருக்கும் ஆசிரியர் "விம்."
(விம்:- திரு. ச. விநாயகரத்தினம் ஆசிரியர்)

## நல்லூர் முருகன் காவடிச் சிந்து

*நல்லூர் முருகன் காவடிச்சிந்தினைக் கவிஞர்* சோ.பத்மநாதன் இயற்றியுள்ளார். இவர் கோண்டாவிலை வதிவிடமாகக் கொண்டவர். இந்நூல் 7.11.86 அன்று 'ரெலிகுளோப்' நிறுவனத்தின் வெளியீடாக வெளிவந்துள்ளது.

**"தெய்வங்களே பிரபந்தங்களிற் பாடுபொருளாக அமைகின்ற போதிலும், அத்தெய்வநலங்களியும் பின்னணிகளையும் பாடுவதுடன் சமூகமரபு, சரித்திரமரபு கூறும் நோக்கினையும் இக்காலப் பிரபந்தங்களிலே காணலாம். இப்பண்பினுக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதும் நல்லூர் முருகன் காவடிச்சிந்து, முருகன் பெருமை, அழகு, அருட்டிறம், அடியார் இயல்பு, தமிழின்பம், நல்லூரின் தனிச்சிறப்பு, வரலாற்றுச்சிறப்பு, உற்சவச்சிறப்பு, நாவலர்தொண்டு இவை எல்லாம் இப்பாவுக்குப் பொருள்கள்" என்று 'சிந்து பிறந்த கதை' என்ற அறிமுகவுரையிற் கவிஞரே குறிப்பிடுகின்ற கருத்துக்கள் மனங்கொள்ளத் தக்கன.**

*நல்லூர் முருகன் காவடிச்சிந்திலே* முதற்பாடலில் வெயிலுகந்த விநாயகரைப்பாடியுள்ளார். பொதுவாகச் காப்புச்செய்யுள்கள் பாடும்மரபிலே நல்லூர் முருகனது பேரிலே சிந்துக்கவிபாடிட, ஆனைமுகவனான அண்ணணான பிள்ளையாரை வணக்கஞ் செய்து வேண்டுகின்றார். கவிஞர். அவலும் வன்னித்தேனும்பாலுஞ் சுவைகொள் மோதகமுங் கதலி வாழைப்பழமும் படைத்து அவ் விநாயகரது பெருமையையும் உணர்ந்து அவனது துணையினை இரக்கின்றார். **'வன்னித்தேன்'** என்பது குறிப்பாக நோக்கத்தக்கது.

**'புவனம் யாவும் வலம் வந்தாலும்**
**சிவனும் தாயும் முழுதும் என்றான்.'**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனத் 'தாயுந் தந்தையுமே' உலகம் என்னுங் கருத்தை உலகுக் குணர்த்தியவனான அவ்விநாயகனை நல்லையூரின் எல்லையிலே தரிசித்துப்பாடுகின்றேன் என்பதுபோல வருகிறது விநாயகர்துதி. **நல்லைத்தலத்து முருகனைப் பாடவந்த கவிஞர் தமது குலதெய்வ மென்ற தோரணையிலே பிள்ளையார் வணக்கம் செய்தாரல்லர். தம்பியான முருகன் குடிகொண்டிருக்கும் நல்லூருக்குக் காவலாகி விளங்கிநிற்கும் வெயிலுகந்த பிள்ளையாரையே போற்றி ஆரம்பிப்பதுவுங் குறிப்பாகக் கண்டுகொள்ளத்தக்கது.**

**தினமும் அன்பர்களது வழிபாடு நிகழுமிடம் நல்லூர்** என்பதைக் குறிப்பிடும் இரண்டாவது சிந்துப்பாடல் இங்கு நிகழும் அடியார் களது மெய்ப்படுகளைக்கூறி, அத்தகு சிறப்புக்களைக்கொண்ட பதியான நல்லையில் மேவும் தெய்வமே தம் **பனுவற்குகந்த வனானான்** என்கின்றார்.

புராணமரபிலே, நகரங்களுட் சிறந்தது காஞ்சிமாநகரம் (நக ரேஷ"காஞ்சி). பதிகளுட் சிறந்தது தில்லை என்று வழங்கு வதுண்டு. இங்கு **முருகன் பதியிற் சிறந்தது 'நல்லை'** என்ற பொரு ளிலே பாப்புனைந்துள்ளார். சந்தம் குதிகொள்ளவரும் பாடல் இது.

**'........பாலினூறிய நாவினான் எனத்**
**தாவியானவன் தேவிமாரொடு பதியிற் சிறந்த**
**நல்லை மேவினான் - என்**
**பனுவற் குகந்த பெரும் பேரினான்.'**

நல்லூர் 'இராஜதானி' என்பது *காவடிச்சிந்தின்* மூன்றாவது பாடலால் உணர்த்தப்படுகின்றது. **நல்லையின் சிறப்புகளுளெல் லாம் விஞ்சிநிற்பது ஆட்சிச்சிறப்பும் மடம் மாளிகை குளம் வீதிக ளுந்தான். நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட மன்னர் களும் சிறந்த புலவர்களாயிருந்தனர்** என்ற செய்தியுங் கூறப்படுகின்றது.

"சங்கிலி ஆண்டதிந் நல்லூர் - செந்
தமிழர சோச்சிய தொல்லூர் - புகழ்
யமுனாரியும் அடியார் திரு
மட(ம்)மாளிகை குளம் வீதிகள்
பலவும் - புகழ் - நிலவும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கமும் கண்டது நல்லூர் - செந்
தமிழை வளர்த்தும் நல்லூர் -புகழ்
செகராசனும் பரராசன் அரசகேசரி முதலானவர்
தாமே - புலவர் - ஆமே!"

**'நேயமென்று நெய்சொரிந்து வாய்மையாளர் செய்யும் பூசை நித்த நித்தம் நிகழ்வது நல்லூரிலே. பெருந்தத்துவங்கள் காணலாம் நல்லூரிலே'** என்று சிறப்பித்துப்பாடும் **கவிஞர் சோ.ப.** இத்தகுசிறப்புக் களைக்கொண்ட நல்லை வடிவேலைத் துணைக்கொண்ட பின்னும்- அந்த முருகையனின் நல்லைக் கோவிலை வலம்வந்த பின்னும்- **'தீயுங் கொடுங்கோலுஞ் சிறைவாழும் பசிநோயுமென்ன செய்யும்?'** என்று வினாவுகின்றார். "நல்லைக்கிணையில்லை" என்ற ஐந்தாவது பாடலில் வீதிச்சிறப்பு, மக்கட்கூட்டச்சிறப்பு, நாவலரும் பாவலரும் நடத்தும் மாநாடுகள், தேவர்களும் முனிவர் களும் யோகிகளும் கூடி உண்மைதெளியுமிடம் நல்லூர் என்று கூறப்படுகின்றது.

**'வீதியெங்கும் வெண்மணற் பரப்பு - நீல**
**விதானம் அதில் நித்திலப்பதிப்பு**
**நாதசுர கானமெழும் வேதவொலி காதில்விழும்**
**நல்லைக்(கு) கிணை இல்லை!**

**காதலொடு பாடுமொரு கூட்டம் - பூசை**
**காணவிரையும் பிறிதோர் கூட்டம் -குல**
**மாதர் வய தானவர்கள் பாலர் இளவாலைகள் எம்**
**மருங்கும் வந்து நெருங்கும்!**

**நாவலனார் தொண்டுபற்றி ஆயும் -மா**
**நாடு நடக்கும், இருந்து கேளும்!**
**பாவலர்கள் பாடுதமிழ் பண்ணிசை விற்பன்னர்தமிழ்**
**பருகு நெஞ்சம் உருகு!**

**காவல் எல்லை நாவினினும் புரிவான் - எங்கள்**
**கணபதியே பெருமைகளுக்குரியான்**
**தேவர்முனி வோர் அரிய யோகியர்கள் கூடி உண்மை**
**தெளிவார் - அருள் - பொழிவார்.'**

மக்களிடத்திலே பக்தியுணர்வினை ஏற்படுத்தும் நோக்கிலே நல்லூருக்குச் சென்று வழிபடுமாறும் அங்கு ஆறுமுகன் பவனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும் அழகினைப் பருகுமாறும் எட்டாவது பாடலிலே கூறுகின்றார். அன்னம், மயில், இடபம், குதிரை வாகனங்களில் முருகன் பவனி வரும் அழகு நெஞ்சத்தினை இளகச்செய்யுங் தன்மைவாய்ந்த தென்றும் எடுத்துரைக்கின்றார்.

**'நல்லை மாநகரை நண்ணு - வீதி**
**நாலும்ப்ரதக்ஷணம் பண்ணு - முழு**
**நாளும் பொழுதும் கந்தவேளின் பெருமைசொல்ல**
**ஞானம் - வரும் - மோனம்!**

**செல்லப்பா வென்னும் ஞானி - தவம்**
**செய்த தேரடிக்குப் போநீ - வினை**
**தீரப்பா பழநி வேலப்பா எனவே**
**சேவி - உய்யும் - ஆவி!'**

**செல்லப்பாச் சுவாமிகளைக்** குறிப்பிட்டுப் பாடுங் கவியாகவும் இப்பாடலமைகின்றது. நல்லையின் சிறப்புக்களிலே **நல்லைத் தேரடியிற் செல்லப்பாசுவாமிகள் இருந்து புரிந்த தவச்சிறப்பு** பிறராலும் சுட்டப்பட்டுள்ளது. **மாவிட்டபுரம் யோகர் சுவாமிகள்** தமது பாடல்களிலேயும் செல்லப்பாசுவாமிகளைக் குறித்துச்செல்கின்றார். **முருகன் மக்களது பெருந்துயரங்களைக் கைவேலினால் ஏவிப்போக்குவான் என்பது,**

**'எங்கள் துயரங்கள் சிந்தும்படி கந்தன்**
**ஏவுவான் - வேலை - ஏவுவான்!**
**தாளைப் பிடித்திடவாரீர் - கந்த**
**வேளைத் துதித்திட வாரீர்!'**

என்று பதினொராவது பாடலில் எல்லோரையும் அழைக்கின்றார். சந்தக்கவி சோ.ப.பன்னிரண்டாஞ் செய்யுள் வள்ளிமணாளனாக முருகனைத் துதித்துப் பாடுகின்றது.

**'செந்தமிழ் இன்பம் நுகர்ந்து - வள்ளி**
**செவ்விதழ் ஈரம் பகிர்ந்து - தந்த**
**திணைமாவிலும் சுனைநீரிலும் தெளிதேனிலும் உளமாரவே**
**திளைக்கும் - உண்டு - களிக்கும்!'**

**பஞ்சமும் நோயும் பறக்கும் - இந்தப்**
**பாரில் அறங்கள் சிறக்கும் - இங்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**படுபாதகர் செயும் வாதைகள் அடியோடறப்**
**புரிவாய் அருள்பாலா - வடி - வேலா!'**

**நல்லைநகரின் சிறப்புக்களை வெண்பாவிற் கூறுங்கவிஞர்,**

**'கோயில் தனியழகு: கோபுரங்கள் பேரழகு**
**வாயில் அழகு: மணியழகு - சேயுனது**
**தேரழகு: செல்லுந் தெருவழகு: நல்லையெனும்**
**ஊரழகென் றோதும் உலகு'**

**என்று வருணிக்கின்றார்.**

*நல்லூர் முருகன் காவடிச்சிந்து* என்னும் படல்களைப் பாடிய கவிஞர் நல்லையிலேயே வாழாது சற்றுத்தொலைவிற் கோண டாவில் என்னுங் கிராமத்திலே வாழ்கின்ற காரணத்தினால் **அவரது கவியுள்ள**மும் நல்லூர் முருகனைப்பாடும்பொழுது தூரநின்று அப்பதியை அண்மிக்கும் காட்சி விவரணங்களைப் பாடும்நிலைக்கு இட்டுச்செல்லப்பட்டுள்ளமையினைப் பாடல்களினூடே அவற்றின் **வைப்புமுறையினாற்** கண்டுகொள்ளலாம். *நல்லூர் முருகன் காவ டிச்சிந்து* என்னுமிப் பிரபந்தப்பாடல்கள் ஒலிப்பதிவு நாடாவாகவும் வெளியிடப்பட்டுள்ளன. **சங்கீதபூஷணம் பொன்.சுந்தரலிங்கம்** அவர்கள் இப்பாடல்களைப் பக்கவாத்தியங்கள் சகிதம் கவர்ச்சிகர மாகப் பாடியுள்ளார். இவ்வாறாகப் பிரபந்த மரபிலே ஏற்பட்டுள்ள பெருவளர்ச்சியை நாம் நுணுகி நோக்க வேண்டியுள்ளது. மக்கள் மத்தியில் சென்றடைந்த சமயவுணர்வுடனும் சமுதாய நலமேம் பாட்டுடனும் செல்வாக்கினைப் பெறும் பிரபந்த இலக்கியமாக *நல்லூர் முருகன் காவடிச்சிந்து* மிளிரும் என்பது உறுதி.

## நல்லைக்குமரன் குறவஞ்சி

*நல்லைக்குமரன் குறவஞ்சியை* இயற்றியவர் இணுவில் ந.வீரமணி ஐயர். இதனை ஆசிரியர் ஒரு **நாட்டிய நாடகமாகவே** படைத்துள்ளார். அச்சேறாத கையெழுத்துப்படியாகவே **நல்லைக்குமரன் குறவஞ்சி** காணப்படுகிறது. கையெழுத்துப்பிரதியிற் காணப்படும் குறவஞ்சி இலக்கியம் குறித்த செய்திகளை முதலிலே நோக்கலாம்.

**'தன்னிகரில்லாத்தலைவன் சகல அலங்காரங்களுடனும் பவனி வருதலைக்கண்டு அவன்மீது எல்லையில்லாக் காதல் கொண்டு வருந்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**துந் தலைவிக்கு, அவள் தலைவனை அடைவது திண்ணம் எனக் குறத்தி குறிகூறும் சிறப்பினாலே தன்பெயரினைக் கொண்டு விளங்குவது குறவஞ்சி என்ற செந்தமிழ்ப்பிரபந்தமாகும். பரமாத்மாவான இறைவனிடம் ஜீவாத்மாவாகிய தலைவி முத்தியெனும் பேரின்ப நிலையையடையும் சைவசித்தாந்த தத்துவசிகரமான 'தாடலைப்படுதல்' என்பதே குறவஞ்சி நாட்டிய நாடகத்தின் இலட்சியமாகும். தேவாம்சம்பொருந்திய இந்நாட்டிய நாடகத்தில் ஈழவளநாட்டிலே நல்லையம்பதியிலே கோவில் கொண்டெழுந் தருளியிருக்கும் முருகனே தலைவன். பக்தியெனும் காதல் கொண்டுருகும் ஜீவாத்மாவான ஜீவவல்லியே தலைவி.'**[23]

விநாயக வணக்கமாக அமையும் துதி, குறவஞ்சிப்பாவைப் பாடுதற்குக் காப்பாகநின்று அருள்செய்யுமாறு வேண்டுங் கருத் தமைந்தது.

"சீர்கொண்ட நல்லைநகர்ச்
செந்தமிழ்க் குமரன் தாளைத்
தார்கொண்ட இசையால் சூட்டித்
தமிழ்க்குறவஞ்சிப் பாவை
பார்கொண்ட தமிழாற் பாடிப்
பரவஜீவான்மா போற்றக்
கார்கொண்ட வண்ணையானைக்
கணபதி காப்பதாமே."

அரங்கிலே கலைப்படைப்பாகத் தயாரித்தளிக்கத்தக்க குறவஞ்சி நாட்டியநாடகத் தொடக்கத்தில் அறிவிப்பாளருக்குரிய பகுதி பின் வருமாறு அமைகின்றது..

**"தன்னிகரில்லாத் தலைவன் ஒருவன் சகல அலங்காரங்களோடும் பவனிவருதலைக்கண்டு அவன்மீது எல்லையில்லாக் காதல் கொண்டு வருந்துந் தலைவிக்கு, அவள் தலைவனையடைவது திண்ணமெனக் குறிகூறுங் குறத்தியின் சிறப்பினால், தன்பெயரினைக் கொண்டுவிளங்குவது 'குறவஞ்சி' என்ற செந்தமிழ்ப் பிரபந்தமாகும்."**

முருகன் பவனி வருதற்குரிய முன்னறிவித்தலைக் கட்டியக் காரன் தோன்றியுரைக்கின்றான். அதற்கு வரும் விருத்தச் செய்யுள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இன்னிசையின் எழில் திகழ்ந்து
இலங்கிடு யாழ் நகரில்
நன்நிறைவுத் திலகமெனும்
நகர் நல்லைப் பதியினிலே
மின்னிடுகை வேலேந்தி
மிளிரவொரு மயிலேறி
கன்னிவள்ளி தேவானை
காதலுடன் மருவி வளர்
பன்னிருகை பாலசுப்ர
மணியனவன் வரும்பவனி
கன்னலெனக் கூறிடவே
கட்டியக்காரன் வந்தான்."

என அமைந்துள்ளது.

மயில்மீதிவர்ந்துவரும் நல்லைக்குமரனைக்கண்டு மங்கையர் மையல் கொள்ளவும், துதித்துநிற்கவும் செய்கின்றனர் என்னுங் கருத்தமைந்த கட்டியக்காரன் தரு, பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் அமைப்புகளுடன் கீர்த்தனை வடிவிலே அமைந்துள்ளது. உலாவந்த முருகனைக்கண்டு நெஞ்சங்குமுறும் நேரிழையார்களைக்காட்டி, அவர்கள் உள்ளத்திற்குள்ளேயே மூண்டெழும் காதலுணர்வையும் நயமாகப் பாடுகின்றார்.

"கலாபமயிலேறிக் கவின் நல்லை வீதியிலே
உலாவிடப்பவனிவந்த உத்தமன் குமரன்காந்தம்
நிலாமதியன்னமேனி நேரிழையார்கள் மாந்தக்
குலாவிட நெஞ்சம் கொண்டு குமுறுவார் அகத்தினூடே."

நல்லைக்குமரன் பவனியைக் கண்ட பெண்கள், புகழ்ந்து ஒருவரோடொருவர் உரையாடுவதாக அமைக்கப்பட்டுள்ள செய்யுட்கள் அவர்களது **விரகதாபமேலீட்டினை**யும் உணர்த்துவனவாயுள்ளன.

<u>பல்லவி</u>

குமரன் அழகைப் பாரடி - தோழி
கோடிக்கோடி சூரியர்
கொண்ட ஒளிமுகத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அனுபல்லவி**

கமழும் மலர்ச் சோலைக்
கவின் நல்லைப் பதியிலே
திகழும் பவனி வரும்
திருமுருகனாம் நல்லைக் (குமரன்)

**சரணம்**

தோகைமயில் மீதில் வரும்
முருகனடி
வாகைக் கடம்புமாலை
வண்ணமார்பு துலங்க
பூவையர் நெஞ்சத்தைப்
பிழிந்து சுவைகொடுக்க
சேவைசெய்யும் அடியர்
செஞ்சரணம் அருளும்
(குமரன்)

அழகுக்கழகன் குகன்
அமுதத் திருவாயில்
பழகுசெந்தமிழ் மணம்
பரவிக் கமழுதடி
குழகன் நல்லைக் குமரன்
கூடி மகிழ்ந்திடானோ?
புளகமடைந்தே மேனி
புல்லரிக்கு தேயடி
(குமரன்)

பண்டார வேடம் பூண்ட
பச்சிளம் பாலன் இப்போ
கண்டாரும் காதலிக்கும்
கட்டிளங் காளையானால்
வண்டார்க்கும் கடம்போடு
வாகை சூடியே ஈழத்
தண்டார் நகர் நல்லை
தரும் குகன் இவனோடி .
(குமரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாணிசரஸ்வதியும் வீணையிசைக்க - தடம்
கோணிக்குழைந்து ஆடிக் கோதையரும் பரவ
ஆணிப் பொன்னம்பலவன் அருங்குமரனைக்கண்டு
நாணிக்கண்புதைக்குதே நமது காதல் நெஞ்சம்
(குமரன்)

பெண்ணியல்புகள் கொண்டமையும் ஜீவல்லி தோன்றுவதைக் கட்டியக்காரன் அடுத்து எடுத்துரைப்பதாகப் பாடல்களமைகின்றன. "ஆணவம், கன்மம், மாயை அகற்றியே மலர்ந்த நங்கை"யாகப் படைக்கப்பட்டவள் ஜீவவல்லி என்ற குறிப்பு ஜீவாத்மாவினது புனித நிலையை எடுத்து விளக்குவதாயமைகின்றது.

ஜீவவல்லியின் பந்தாடற் காட்சிப்பாடல்களிரண்டு மிகுந்த சந்தத்தோடமைந்துள்ளன.

**'நந்தமிழ் நல்லையின் நகர்வீதி பொலிந்திட**
**நங்கையாம் ஜீவவல்லி - எழில்**
**கந்துகம் ஏந்திடும் கைத்தலத்தாமரை**
**கவிந்து கவிந்தாட - இளஞ்**
**சுந்தர நங்கையர் சூழ்ந்து வளைந்திடச்**
**சுழன்று சுழன்றாடி - ஈழப்**
**பைந்தமிழ்ப் பண்பினள் பாவை ஜீவவல்லி**
**பந்து பயின்றனளே.'**

**'செங்கையில் பூணும் தங்கவளை ஆட**
**ஜெகமெலாம் நின்றாட - அணி**
**பொங்கும் நவரத்தின மாலைகள் மார்பினில்**
**புரண்டு புரண்டாட - எழில்**
**தங்கநிற மேனித் தாமரைச் செம்மலர்**
**தனந்தனமென்றாட - மலர்**
**பங்கஜலோசனி பாவை ஜீவவல்லி**
**பந்துபயின்றாளே.'**

ஜீவவல்லி பவனிவந்த நல்லைக்குமரனைக் கண்டு மையல் கொள்ளுவதாயமையும் பாடல்கள் அடுத்து அமைகின்றன. ஜீவ வல்லியின் 'விழியிரண்டும் காந்தமெழ' நல்லைக்குமரனைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டவளாக, குமரனும் **'முண்டகத்திதழ்விரித்து முறுவலால் அவளை ஆட்கொள்கின்றான்'** எனச் செய்யுளமைக்கின்றார்.

"நல்லைநகர் வீதியிலே நாயகியாம் ஜீவவல்லி
முல்லைச் சிரிப்புடனே முண்டகக்கைப்பந்தாட
வில்லை ஒத்தநுதல் விழியிரண்டும் காந்தமெழ
நல்லை இளங்குமர நாயகனைக் கண்டனளே."

"கண்டனள் ஜீவவல்லி
காந்தமாம் கந்தன் கண்கள்
கொண்டவள் மையல் மோகம்
கவ்விடக் கணத்திலாங்கே
தண்டமிழ் நல்லைநாதன்
நாயகன் குமரன் தானும்
முண்டகத் திதழ்விரித்து
முறுவலால் அவளை ஆண்டான்."

ஜீவவல்லி நல்லைக் குமரனிடம் காதல்கொள்ளுதலைப் பதம் என்னும் நடனத்திலே அமைந்துள்ளார்கவிஞர். தன்தோழியிடம் **'வேல் ஏந்திவந்த காளையிவன் யாரடி'** என்று வினவும் ஜீவவல்லி அத்தகு அழகன் தன் சிரிப்பினாலே என் இதயங் கவர்ந்து விட்டானடி என்றும் தோழியிடம் கூறுகின்றாள். மேலும் தன்னுள்ளத்திற் புதிய கிளர்ச்சியொன்று பிறந்துள்ளதாயும் அத்தலைவி உரைப்பதாகப் பாடலமைகின்றது. அப்பாடலில் சரணம் பின்வரு மாறமைகின்றது.

"செக்கச்சிவந்த இதழ்ச் சிரிப்பினால் என்இதயம்
அக்கணம் வந்தவனும் அமர்ந்துவிட்டானடி
**தக்கவோர் துணையவன் தண்டமிழின் பித்தன்**
திக்கெலாம் புகழ்ந்திடும் நல்லை நகரினில்

என்னவோசெய்யுதடி எந்தன்உள்ளத்தில் ஒரு
வண்ணப்புதுக்கிளர்ச்சி வாரியேஊட்டுதடி
கன்னற்றமிழ்க்குமரன் காதலிதுதானோடி?
முன்னம்நான்கண்டறியா மோகம் இதுதானோடி?"

பவனிவந்தவன் நல்லைக்கந்தன் எனத் தோழி ஜீவவல்லிக்குக் கூறுகின்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவவல்லியின் விரகதாபத்தினைக் கட்டியக்காரன் கூறுவதாக அமைந்த பாடலில் **'மோகத்தினால் உடல் பசந்தாள்'** என்று அவளது நிலை சுட்டப்படுகின்றது. அந்நிலையைக்கண்ட தோழியர்கள் தலைவியிடத்திலே தலைவன் கொண்ட காதலாலே தலைவிக்கேற்பட்ட மாறுதலைக்குறித்து இரங்குகின்றனர்.

"தென்றல் அனலாகித் தீப்பிழம்பாகுதே
குன்றமதில்கூவும் குயில்களும் கொல்லுதே
கன்றின்பசும்பாலும் கசந்துகுமட்டுதே
நின்றுபொழிந்திடும் நிலாநெருப்பாகுதே."

அடுத்த கட்டம் ஜீவவல்லி வெண்ணிலாவையும் தென்றலையும் பழிப்பதாக அமைகின்றது. பின்னர் அவள் மன்மதனைப் பழிப்பதாக அமையும் பாடல் இடம்பெறுகின்றது. இவற்றின்பின் நல்லைக்கந்தன் **ஆலயமணி நாதம்** கேட்பதாகத் தோழி ஜீவவல்லியிடம் கூறுகின்றாள்.

**பல்லவி**

நாதம் கேட்குதடி - நல்லூர்
நாதன் கோபுர ஆலயமணி

(நாதம்)

**அனுபல்லவி**

கீதம் ஒலிக்குதடி அன்பர்
பாடிப்பரவிக் குகனைத்துதிக்கும்

(நாதம்)

**சரணம்**

ஒலியின் அலைகள் விரவிச் செவியில்
ஓம்முருகா என ஒலிக்குதடி
கலியுகதெய்வம் கந்தனென்றேமனம்
கனிந்து நெக்காய் உருகுதடி
மலியும் கனிகள் குலுங்கும் நல்லையில்
மால்மருகன் அருள் இருக்குதடி
வலிவும் வனப்பும் வளமும் அருளும்
வடிவேலவன் புகழ்பாடியே
அடியார் தொழக் கவிபாடும். (நாதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவவல்லி தோழியைத் தூதனுப்புகின்றாள்.

> "தூது சொல்லிவாராய் தோகையே உனைமறவேன்
> மாதுநான்மையலினால் மனமுடைந்து நொந்தேன்
> ஏதும் அறிந்திடாத ஏழையின்வன்மம் ஏனோ
> ஊதும் மந்தமாருதம் உள்ளத்தைக்கொள்ளுதடி."

கட்டழகுக் கன்னியான நல்லைக்குறவஞ்சியாளின் வருகையினைக் கட்டியக்காரன் கூறுகின்றான். அதன்பின்னர் அக்குறவஞ்சியானவளின் திறன் கீர்த்தனைவாயிலாக இந்நாட்டிய நாடகத்திற் புலப் படுத்தப்படுகின்றது.

**பல்லவி**

நல்லைக்குறவஞ்சி வந்தாள் - திரு
நல்லைக்குறவஞ்சி வந்தாள்

**அநுபல்லவி**

முல்லைச்சிரிப்பழகி வில்லைப்பழிக்கும்விழி
தொல்லைவினையகலத் தோன்றும் கலையழகி
(நல்லைக்)

**சரணம்**

விழிக்குறி மொழிக்குறி
மெய்க்குறி கைக்குறி
வழிக்குறி மனக்குறி
வகையாகக் குறிசொலும்
எழிற் குறவஞ்சியாய்
ஏகாந்த நடமிட்டே
பொழில் நகர் நல்லையின்
புனிதனைப் பாடியே.
(நல்லைக்)

*நல்லைக்குமரன் குறவஞ்சி* நாட்டிய நாடகத்திலே குறத்தி தோன்றும்பகுதி மலைவளங் கூறும் *குற்றாலக்குறவஞ்சியின்* தெம்மாங்குப் பாடலமைப்பையொத்திலங்குகின்றது. இப்பாடற் பகுதியிலேயே நல்லூரின் சிறப்புத் தொகுத்துரைக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'செந்தமிழ் மலைகள் எல்லாம்
எங்கள் மலை அம்மே
சேந்தன் வாழும் மலைகள் எல்லாம்
எங்கள் மலை அம்மே
சுந்தரமால் உறையும்மலை
எங்கள் மலை அம்மே
சூரியன் உதிக்கும் மலை
எங்கள் மலை அம்மே
கந்தன் அமர் கதிரமலை
எங்கள் மலை அம்மே
கவின் இலங்கைமலைகள் எல்லாம்
எங்கள் மனல அம்மே
நந்தமிழின் நகுலமலை
எங்கள் மலை அம்மே
நாட்டிலுள்ள மலைகள் எல்லாம்
எங்கள் மலை அம்மே.'

'திருஞானசம்பந்தன்
திருநாமம்கொண்டு
திகழுகின்ற ஆதீனம்
எங்கள் நாடு அம்மே
பெருஞானவழிகாட்டிப்
பேரின்பம் பெற்ற
அருஞானி யோகர்வாழ்ந்த
அழகுநாடு அம்மே
திருவாழும் சங்கிலியன்
திகழ்ந்த நாடு அம்மே
திருக்குளமும் தீர்த்தமதும்
திருவிளங்கும் நாடு
முருகேசன் வள்ளிதேவ
யானையோடு மருவி
முத்தமிழைச் சுவைக்கும்நல்லைப்
பக்திநாடு அம்மே.'

குறத்தியை வருகவெனவழைத்து ஜீவவல்லியின் கையினைப் பார்த்துக் குறியுரைப்பாயாக ' என்று வினவ, அவளும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தாமரைக்கைத்தலம் தந்திடுவீர் - அம்மே
கோமள மங்கையே ஜீவவல்லி
மாமலர்க்கையிது மானிலந் தன்னிலே
மாண்புமிகும் வேறுகையுளதோ?"

என்று புகழ்ந்துரைத்து மேலும் கூறுவாளாயினாள்.

'செங்கைசிவந்திடச் செல்வமெல்லாம்தரும்
அங்கைஇதைப்போல ஆர்க்குமுண்டோ?
மங்கைஜீவவல்லி மகராசியே - உந்தன்
சங்கையெல்லாம் நானும் அறிவேனேம்மா."

முன்னம் நடந்ததை முற்றிலும் கூறுவாய் நல்லைக் குறவஞ்சியே என்றுரைக்க,

**'சொல்லுகிறேன் கேளுமம்மே - உந்தன்**
**சோபனக் கதைகளெல்லாம்**
**மோகனத் தமிழில் நானும் (சொல்லுகிறேன்)**

**நல்லைநகர் வீதியிலே**
**நங்கையர்களோடு பந்து**
**வல்ல விளையாட்டினிலே**
**வந்த சேதியொன்று நானும் (சொல்லுகிறேன்)**

**மாமாயிலிலேறிவந்த**
**காளையவனையே கண்டு**
**பூமலர் இதழ் விரித்தாய்**
**புருவவிழி வளைத்தாய்**
**காமநோயைத்தந்து சென்றான்**
**காதலன் ஒருவன் அவன்**
**நாமமோ நல்லைக்குமரன்**
**நாதனாவான் ஜீவவல்லி (சொல்லுகிறேன்)**

குறத்தியானவள் குமரவேள்நாமத்தினைக் கூறக்கேட்ட தலைவி ஜீவவல்லி அக்குமரனது இருதாளிலும் மருவித்தலைப்பட்டாள் என வரும் பாடல் இது.

**'குமரவேல்நாமத்தினைக்**
**குறமகன் கூறக்கேட்ட**
**குமரியாம் ஜீவவல்லி**
**குனிந்தனள் நாணம்பொங்க**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கமழ்மலர்முகமும் செம்மை**
**கமலம் போலாக நல்லைக்**
**குமரனின் இருதாள் தன்னை**
**மருவியே தலைப்பட்டாளே.'**

*நல்லைக்கந்தன் குறவஞ்சி* என்னும் பிரபந்தம் மங்களப் பாடளோடு நிறைவுபெறுகின்றது.

**'நல்லைக்குமரனுக்கு**
**ஜெயமங்களம் - வள்ளி**
**நாயகி குஞ்சரிக்கும்**
**சுபமங்களம்**
**வல்லகுறி சொன்னவர்க்கும்**
**வளர் நல்ல குறத்திக்கும்**
**வல்லியாம் ஜீவனுக்கும்**
**வையத்திற்கும் மங்களம்.'**

***நல்லைக்கந்தன் குறவஞ்சி*** **பாடிய ந.வீரமணிஐயர்,** ***திருக்கேதீச் சரக்குறவஞ்சி, திருமயிலைக்குறவஞ்சி, நகுலமலைக்குறவஞ்சி, ஈழக் குறவஞ்சி, வசந்தக்குறவஞ்சி*** **போன்றவற்றையும் பாடியுள்ளார். மாயூரம் விஸ்வநாதசாஸ்திரி, பாபநாசம்சிவன், சுந்தானந்தபாரதி போன்றோரிடம் தமிழ்ச்சாஹித்திய உருப்படிகளின் அமைப்புமுறையையும் இலக்கணங்க ளையும் அறிந்துகொண்டவர் சாஹித்திய சாகரம் இணுவில் ந.வீரமணிஐயர் M.A என்பது குறிப்பிடத்தக்கது.**

**'இதுவரை யாருமே சங்கீதத்துறையிற் சாதித்திருக்காத சாதனையாக 35 தாள உருப்படிகள், 175 தாள உருப்படிகள், 108 தாள உருப்படிகள் ஆகிய எனது கையெழுத்துப்பிரதிகள் அச்சேறத்தயாராக உள்ளன."[24]**

**என்ற தகவல்களிலிருந்து இக்கலைஞரது கவியாற்றற் புலமையினை நாம் உணர்ந்து கொள்ளலாம். இவருக்கு 'ஆசுகவி', 'இயலிசைவாரிதி', 'சாஹித்தியசிரோமணி', 'முத்தமிழ் வித்தகன்', 'ஸாஹித்யலாகரி', 'ஸாஹித்யஸாகரம்' என்னும் கௌரவப்பட்டங் களுங் கிடைத்துள்ளன. 'கற்பகவல்லி' எனும் கீரத்தனையால் தமிழ்ச் சைவ உலகில் நிலைத்து வாழும் 'கவிமேதை' வீரமணி என்பது மிகைக்கூற்றாகாது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிக்குறிப்புகள்

1. வித்தியானந்தன், சு., *சிவயோகசுவாமிகள் திருச்சரிதம்,* முதற்பதிப்பு, அணிந்துரை, 26.05.1974, ப.

2. இக்கருத்துக்கள் மாவைக்கந்தன் பிள்ளைத்தமிழ் நூலாசிரியர், திரு.வ.கோவிந்தபிள்ளையவர்களுடன் இக்கட்டுரையாளர் நிகழ்திய நேர்முக உரையாடலிற் பெறப்பட்டவை.

3. *தெய்வத் தமிழ்ப்பிரபந்தங்கள்.*

4. அதேநூல்.

5. அதேநூல், ப. ஆசியுரை Xiii.

6. *நல்லூர் நாண்மணிமாலை,* சிறப்புப்பாயிரச்செய்யுள்.

   **'பொன்னும் போகமுமாய்ப்**
   **புணர்ந்து வாழ்வைப்புதுக்கியருள்**
   **மன்னர் நல்லூர்த் திருமுருகன்**
   **வழங்கும் அருளின் வழிநின்றே**
   **தன்னை உணர்ந்த சொக்கலிங்கச்**
   **சான்றோன் தமிழின் மரம்போம்பிச்**
   **சொன்ன *திருநான்மணிமாலை***
   **தொண்டர்க் கமுதஞ் சுரந்திடுமே.'**

7. *மாவையமக அந்தாதி,* முன்னுரை.

8. *அதேநூல்,* நூலாசிரியர் வரலாறு.

9. *அதேநூல்,* அணிந்துரை.

10. *அதேநூல்,* உரையாசிரியர் கருத்துரை.

11. இக்கருத்தின் மேலதிக விபரங்களுக்குப் பார்க்க: வேலுப்பிள்ளை, ஆ., *தமிழர் சமய வரலாறு,* ப.179.

12. *அதேநூல்,* ப.181.

13. நடராசா, தெல்லியூர், *தங்கத்ததாத்தா,* சுதந்திரநாதஅச்சகம்,ப.13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. டானியல் ஜோன், *மு.கு.நூல்*, ப. 4-5.

15. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை எழுதிய *சிந்தனைக் களஞ்சியம்* என்ற நூலிலே ஆரியம் தமிழ் மொழிகளுக்கிடையிலான ஒற்றுமைகள் வேற்றுமைகள் விரி வாக நோக்கப்பட்டுள்ளமையைக் காண்க.

16. புராணபடனமரபுகள் பற்றிய அரிய விளக்கங்களைப் பேராசிரியர் இரா.வை.கனகரத்தினம் எழுதிய "ஈழநாட்டிற் புராண படனச் செல்வாக்கு - ஓர் ஆய்வு" என்ற ஆய்வுக் கட்டுரை யிலும் *சிவத்தமிழ் ஆராய்ச்சிக்கட்டுரைகள்* என்ற நூலிலும் விரிவாகக் காணலாம்.

17. கணபதிப்பிள்ளை, சி., *கந்தபுராண கலாசாரம்*, ஸ்ரீ சண்முக நாத அச்சகம், யாழ்ப்பாணம், 1959.ப.21.

18. கணபதிப்பிள்ளை, சி., "வித்துவசிரோமணி பொன்னம் பலபிள்ளை", *இலக்கியவழி*, திருத்தப்பதிப்பு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1985, ப.66.

19. *அதேநூல்*, முன்னுரை, ப. Viii.

20. *அதேநூல்*, ப.77 - 81

21. *மாவைக்கந்தரகவல்*, முகவுரை.

22. இராமசாமி, கோ, *தமிழ்வேதம்*, 1941.

23. வீரமணிஐயர், ந., *நல்லைக்குறவஞ்சி* (கையெழுத்துப் பிரதி), அறிமுகம்.

24. வீரமணிஐயர் பதில்கள், "அறிவும் அனுபவமும்", *ஈழநாடு, வாரமலர்*, 14.09.1986,ப.5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு

### இவ்வாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பிரபந்தங்கள்

1. நற்சிந்தனைக் கீர்த்தனைகள்
   கொழும்புத்துறை சிவயோகசுவாமிகள்

2. "கந்தனே என்சிந்தனை நல்லைக் கந்தனே என்
   வந்தனை" பண்டிதர் க.வீரகத்தி.

3. மாவைக்கந்தன் பக்திரசக்கீர்த்தனைகள்
   மயிலிட்டி சி.வேலுப்பிள்ளை.

4. நல்லூர்க்கந்தன்
   பன்னமூலை டாக்டர் ந.சுப்பிரமணியம்.

5. நல்லைக்கந்தன் பிள்ளைத்தமிழ்
   கவிஞர் வ.கோவிந்தபிள்ளை.

6. மாவைப்பிள்ளைத்தமிழ்
   பண்டிதர் மு.கந்தையா.

7. நல்லைச்சண்முகமாலை
   வண்ணை நெ.வை.செல்லையா.

8. நல்லைத்திருவருக்கமாலை
   புலவர்மணி ஆ.தில்லைநாதப்புலவர்.

9. நல்லூர் நான்மணிமாலை
   வித்துவான் க.சொக்கலிங்கம்.

10. மாவை மும்மணிமாலை
    கரணவாய் செவ்வதிநாததேசிகர்.

11. மாவை இரட்டைமணிமாலை
    சுன்னாகம் குமாரசுவாமிப்பிள்ளை

12. மாவைச்சித்திரக்கவித் திருவிரட்டைமணிமாலை
    தெல்லிப்பழை பொன்னம்பலபிள்ளை.

13. திருநல்லையந்தாதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலி சிவ.பஞ்சாட்ஷரக்குருக்கள்.

14. நல்லைக்கந்தரந்தாதி
கவிஞர் நாக.பரமசாமி.

15. மாவையமகவந்தாதி
வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை

16. நல்லைப்பதிகம்
மயிலிட்டி க.மயில்வாகனப்பிள்ளை.

17. நல்லூர்க்கந்தர்பதிகம்
நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர்

18. மாவைநகர் முருகவேள்பதிகம்
நவாலியூர் க.சோமசுந்தரப்புலவர்

19. மாவைப்பதிகம்
வறுத்தலைவிளான் க.சரவணமுத்து.

20. மாவைச்சுப்பிரமணியக்கடவுள்பதிகம்
மாவை சுவாமி. குமாரசுவாமிக்குருக்கள்

21. மாவைக்கந்தன் பதிகமும் உரையும்
பண்டிதர் இ.நமசிவாயம்.

22. மாவைக்கதிர்காமவடிவேலர்பதிகம் வறுத்தலைவிளான்
க.சரவணமுத்து.

23. மாவைச்சுப்பிரமணியர் தோத்திரம்
மயிலணி முத்துக்குமாரகவிராசர்.

24. மாவைப்புராணம்
சுவாமி. குமாரசுவாமிக்குருக்கள்.

25. நல்லைச்சுப்பிரமணியர் திருவிருத்தம்
வண்ணை நெ.வை.செல்லையா.

26. நல்லைக்கலிவெண்பா
கூழங்கைத்தம்பிரான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. நல்லூரான் வெண்பா நாற்பது
புங்குடுதீவு வித்துவான் சி.ஆறுமுகம்.

28. நல்லை வெண்பா
இருபாலை வித்துவசிரோமணி சேனாதிராயமுதலியார்.

29. நல்லைநகர்க் கந்தவேள்
பரமானந்தப்புலவர்.

30. மாவைக்கந்தரகவல்
க.மயில்வாகனப்பிள்ளை.

31. மாவை முருகன்
மாவை, பண்டிதர் க.சச்சிதானந்தன்.

32. ஆறெழுத்துப்பத்து
மாவை மு.பூ.பொன்னம்பலபிள்ளை.

33. நல்லூர் நாற்பது
கவிஞர் வி.கந்தவனம்.

34. மாவை ஊஞ்சற்பாக்கள்
நல்லூர் ம.சரவணமுத்துப்புலவர்.

35. மாவைமுருகன் காவடிப்பாட்டு
மாவை த.சண்முகசுந்தரம்.

36. மாவை முருகன் காவடி,கரகப்பாடல்கள்
அம்பனை "சிவநாதக்கலைமணி" சீ.சிதம்பரப்பிள்ளை

37. மாவைக்கந்தா மலரடிபோற்றி
மாவை த.சண்முகசுந்தரம்.

38. நல்லூர் முருகன் காவடிச்சிந்து
கோண்டாவில் (கொக்குவில்) கவிஞர்.சோ.பத்மநாதன்

39. நல்லைக்குமரன் குறவஞ்சி
இணுவில் ந.வீரமணிஐயர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல்விபரப்பட்டியல்


1. அருணாசலம், ப., *பக்தி இலக்கியம்* (இரண்டாம்பதிப்பு). பாரி புத்தகப்பண்ணை, அன்னை அச்சகம் சென்னை, 1983.

2. அருணாசலக்கவிராயர், *நல்லூர்க் கந்தசுவாமி கோயிலார் அழைப்பு*, (மூன்றாம் பதிப்பு). யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ் நூற்பதிப்பு,1973.

3. அநவரதவிநாயகமூர்த்தி, வை., *நக்கீரர் நன்முருகாற்றுப் படை*. கல்வி அமைச்சு இந்துமன்ற வெளியீடு, விவேகானந்த அச்சகம் லிமிட்டெட், யாழ்ப்பாணம், 1978.

4. இராமசுவாமி,க.(தொகுப்.), *முருகன் முனைப்பே முனைப்பு*. திருமகள் அழுத்தகம், சுன்னாகம்,1984.

5. ஏகாம்பரநாதன்,ஏ., *தமிழக சிற்ப ஓவியக் கலைகள்*. திருநெல்வேலி தென்னிந்தியா சைவசித்தாந்த நூற்பதிப் புக்கழகம் லிமிட்டெட், அப்பர் அச்சகம், சென்னை, 1984.

6. கந்தையா,ஆ., *செவ்வேள்*. இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது,1985.

7. கனகரத்தினம்,இரா.வை., பேராசிரியர் "*ஈழநாட்டிற் புராண படனச் செல்வாக்கு - ஓர் ஆய்வு*", ஏழாலை புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான வெளியீடு, மஹாத்மா அச்சகம், ஏழாலை,1985.

8. கணபதிப்பிள்ளை,மு., *ஈழநாட்டின் தமிழ்ச் சுடர்மணிகள்*. மாருதி பிரஸ், சென்னை, 1967.

9. கணபதிப்பிள்ளை,சி., *இலக்கியவழி*. திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1985.

10. ................................., *கந்தபுராண கலாசாரம்*. ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்,1959.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. ...................................., *கந்தபுராண போதனை.* அகில இலங்கைச் சைவ இளைஞர் மத்திய மகாசபையினர் வெளியீடு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1960.

12. கிருபானந்தவாரியார், *திருவகுப்பு, கந்தரந்தாதி.* சென்னை, 1970

13. கைலாசபதி, க., பேராசிரியர், *ஒப்பியல் இலக்கியம்* (மூன்றாம் பதிப்பு). சென்னை புக் ஹவுஸ் லிமிட்டெட், மூர்த்தி பிரஸ், சென்னை, 1982.

14. சண்முகசுந்தரம்,த., *கலையும் மரபும்,* கலைப்பெருமன்ற வெளியீடு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1974.

15. ..............................., *இறங்கணியவளை.* குருநாதர் மான்மியம், அருள்வெளியீட்டகம், சந்திரா அச்சகம், காங்கேசன்துறை, 1980.

16. ......................................, *கலைமகிழ்நன்.*(பேராசிரியர் வித்தியானந்தன் வாழ்க்கைப்பணி) மணிவிழாக்கழக வெளியீடு, குகன் அச்சகம், தெல்லிப்பழை, 1984.

17. ...................................., *வாழ்வுபெற்றவல்லி* (மாருதப்புரவல்லி நாடகம்). மகாவித்துவான் கணேசையர் சங்க வெளியீடு, 1962.

18. சண்முகதாஸ், அ., பேராசிரியர், *தமிழ்ப்பாவடிவங்கள்* (பல்லவர்கால இலக்கியங்களின் யாப்பு வடிவங்கள் பற்றிய ஆய்வு). யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை வெளியீடு-3, 1982.

19. சபாநாதன்,குல., *இலங்கையின் புராதன சைவாலயங்கள் நல்லூர்க் கந்தசுவாமி.* நல்லூர்த் தேவஸ்தான வெளியீடு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1971.

20. சிவத்தம்பி,கா., பேராசிரியர், *ஈழத்தில் தமிழ் இலக்கியம்,* தமிழ்ப் புத்தகாலயம், அன்னை அச்சகம், சென்னை,1978.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. சிவசாமி,வி., பேராசிரியர், *காலத்தால் முந்திய நல்லூர்ச் சிலைகள்.* திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1973.

22. சிவராசசிங்கம்,வ.,*நயினை நாகபூஷணியம்மை* பிள்ளைத் *தமிழ்.* சைவத்தமிழ்க்கழக வெளியீடு. குமரன் பதிப்பகம், கொழும்பு. 1997.

23. செந்திநாதன்,கனக,. இரசிகமணி *பிரபந்தப்பூங்கா.* ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம், 1967.

24. செல்வநாயகம், வி., பேராசிரியர், *தமிழ் இலக்கிய வரலாறு* (ஐந்தாம்பதிப்பு).அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, 1973.

25. செகந்நாதன்,பொ.,*அடியார்க்குநல்லார் வரலாற்று ஆராய்ச்சி.* மதுரை விவேகானந்தா அச்சுகூடத்திலும் எக்ஸெல்ஸியர் பவர் அச்சுகூடத்திலும் அச்சிடுவிக்கப்பெற்றது. 1944.

26. சேதுராமன், என்., *டாக்டர். அருளுடைச் சோழமண்டலம்.* வித்தியா பிரஸ் - கும்பகோணம்.1976.

27. தனபாலசிங்கன்,செ., *வேல் உண்டு வினை இல்லை.* ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம், 1973.

28. ..............................., *கந்தபுராணச் சிந்தனைகள்.* திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1976.

29. தங்கம்மா அப்பாக்குட்டி, *பத்துச் சொற்பொழிவுகள்.* சிலாங் கூர் இலங்கைச் சைவர் சங்கம், கோலாலம்பூர், 1974.

30. திருமலை முத்துசுவாமி,அ.,*இலக்கிய மலர்கள்.* அருணா பப்பிளிக்கேஷன், பிரபு பிரிண்டிங் ஹவுஸ், சென்னை.1975.

31. நடராசா,க.செ., *டாக்டர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி.* (14ஆம் நூற்றாண்டு முதல் 18ஆம் நூற்றாண்டிறுதிவரை) கொழும்புத் தமிழ்ச்சங்க வெளியீடு, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்,1982.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. நடராசா, எவ்.எக்ஸ்.சி., மகாவித்துவான் *ஈழத்துத் தமிழ்நூல் வரலாறு.* அரசு வெளியீடு, ரெயின்போ பிரிண்டர்ஸ், கொழும்பு, 1970.

33. பாலசுப்பிரமணியன்,சி., *கட்டுரைவளம்.* நறுமலர்ப்பதிப்பு வெளியீடு, காக்ஸ்டன் அச்சகம், சென்னை,1966.

34. பேகன், கவியோகி,*வேல்உலா* (இரண்டாம் பதிப்பு). குருவம்மாள் அறக்கட்டளை சோமசுந்தரம்நினைவு வெளியீடு, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிட்டெட். பொன்மலர் அச்சகம், சென்னை, 1983.

35. மீனாட்சிசுந்தரனார். தெ.பொ.,*பேராசிரியர், சமணத்தமிழ் இலக்கிய வரலாறு,* கலைக்கதிர் வெளியீடு, கலைக்கதிர் அச்சகம், கோவை, 1961.

36. முத்துத்தம்பிப்பிள்ளை, ஆ., *இலங்கைச் சரித்திரம்,* நாவலர் அச்சகம், யாழ்ப்பாணம்.1930.

37. வரதர், *நாவலர் (சுருக்கவரலாறு).* வரதர் வெளியீடு, ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம், 1979.

38. வித்தியானந்தன்,சு.,*பேராசிரியர், தமிழர் சால்பு* (மூன்றாம் பதிப்பு). பி.ஆர்.வி.பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை, 1985.

39. வேலுப்பிள்ளை, ஆ.,பேராசிரியர் தமிழ் *இலக்கியத்தில் காலமும் கருத்தும்* (மூன்றாம்பதிப்பு). பாரி புத்தகப்பண்ணை, பி.ஆர்.வி.பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை,1985.

40 ..............................., *தமிழர் சமய வரலாறு.* பாரிபுத்தகப் பண்ணை, வெற்றி அச்சகம், சென்னை, 1980.

41. வையாபுரிப்பிள்ளை,எஸ்.,*பேராசிரியர் அகராதி நினைவுகள்,* தமிழ்ப் புத்தகாலயம், மங்கை அச்சகம், சென்னை,1979.

42. KANDIADR ,A.,*HULT AND WORSHIP OF MURUKAN,* PRINTED AT THE GOVERRMENT PRESS , SRI LANKA, 1984.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்கள்

1. *உலக இந்து மாநாடு, - ஆத்மஜோதி சிறப்புமலர்.* ஸ்ரீஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி,1982.

2. *சிவத்தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள்.* செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி மணிவிழாச் சபை மலர். மஹாத்மா அச்சகம், ஏழாலை, 6.3.1985.

3. *இளங்கதிர்,* பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க வெளியீடு, 1969/70.

4. *நாவலர் நூற்றாண்டு மலர்.* ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபை, கொழும்பு, யாழ்ப்பாணம், 1979.

5. *தமிழோசை,* தமிழ்மன்ற வெளியீடு. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1986.

6. *சிந்தனை,* தொகுதி111, இதழ்1. கலைப்பீட வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், மஹாத்மா அச்சகம், ஏழாலைமேற்கு, ஏழாலை,1983.

7. *இந்துதருமம்.* கும்பாபிஷேக மலர், இந்து மாணவர் சங்க வெயீடு, பேராதனைப் பல்கலைக்கழகம், 1980.

8. *WORLD HINDU CONFERENCE SOUVENIR,*, MINISTRY OF REGIONAL DEVELOPMENT, HINDU RELIGION, HINDU CULTURE AND THAMIL AFFAIRS, ASIAN PRINTERS, MADRAS,1982.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூலாசிரியரின்
# ஆய்வுக் கட்டுரைகளும் பிற வெளியீடுகளும்

**சொற்பேராழி, வாகீசகலாநிதி**

**கனகசபாபதி நாகேஸ்வரன்B.A (Hons); M.A (Jaffna)**

**KANAGASABAPATHY NAGESWARAN,B.A (HONS); M.A. (JAFFNA)**

1) "இளங்கோ வடித்த இலக்கியம்" - (நயினாதீவு மணிபல்லவ கலாமன்றக் கட்டுரைப்போட்டியில் மேற்பிரிவில் முதலாம் இடத்தைப்பெற்ற கட்டுரை, *கோமுகிமலர்*) மணிபல்லவ கலாமன்ற வெளியீடு, நயினாதீவு,- (1972.)

2) "அரசியல் கோட்பாட்டில் புரட்சி, கலகம் யுத்தம் பற்றிய சில கருத்துக்கள்", கலை இலக்கிய அறிவியல் இதழ், *சங்கமம்,* செப், ஒக், 1974.

3) "கவிதை நெறியும் கவிதை முறிவும்", *கலாசுரபி* (1976), இலங்கைப் பல்கலைக்கழகம் யாழ்ப்பாண வளாகம், மனிதப் பண்பியற்பீட மாணவர் சங்கம், முதலாவது வெளியீடு, , (மலராசிரியர்- கனகசபாபதி நாகேஸ்வரன்)

4) "ஈழத்துச் சிறுகதை வரலாற்றில் இலங்கையர்கோனின் பாத்திரம்", *மல்லிகை,* பெப். 1978.

5) "பாரதியின் கண்ணன் பாட்டில் தத்துவச் சார்பும் போதனைப் பண்புகளும்", *செவ்வந்தி.* , மார்ச் 1978.

6) "ஈழத்தில் நவீன தமிழ்க்காவியங்கள் பற்றிய ஒரு நோக்கு" *மல்லிகை,* ஜனவரி, பெப்ரவரி, 1980.

7) "தடுதாட்கொண்ட புராணத்தில் சேக்கிழார் கவிநலன்", '*இந்துநெறி*', (1978.) இலங்கைப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண வளாகம், இந்துமாமன்ற வெளியீடு.

8) "நாவலரும் முத்துத்தம்பிப்பிள்ளையும்" - ஆறுமுக நாவலர் *நூற்றாண்டுவிழாமலர்,* - ஆறுமுக நாவலர் சபை வெளியீடு, கொழும்பு, -1978.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9) தத்துவப் பொருளும் சஷ்டி மகிமையும், *ஈழநாடு*, 22.10.1979.

10) "மேடைநாடக முன்னோடி சங்கரதாஸ் சுவாமிகள்", *ஈழநாடு*, 13.11.1979.

11) 1980 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டஉரை தொகுப்பு, -ஈழநாடு, 19.11.1979,

12) "தமிழிலக்கிய ஆய்வில் சுவடிகளின் பங்கு" *ஈழநாடு*, 19.11.1979.

13) இந்துகலாசார அமைச்சும் இந்து மாநாடும், *ஈழநாடு*, 22.10.1979.

14) ஐக்கிய நாடுகள் அமைப்பும் பணியும், *ஈழநாடு*.

15) "மனித நாகரிகத்தின் முதிர்வினை விளக்கி நிற்பது பொங்கல்", *ஈழநாடு*, 14.01.80.

16) இந்திய தேசிய காங்கிரஸ் வளர்ச்சியில் சில போக்குகள், *ஈழநாடு*.

17) பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி அவர்களின் *"சமூக வியலும் இலக்கியமும்"* நூல்விமர்சனம், *ஈழநாடு*, 10.02.1980.

18) விஞ்ஞானம்- 6 (மாணவர் பயிற்சி) நூல், - *ஈழநாடு*, 29.10.1979.

19) "இந்துப்பண்பாடும் சமூகமும்", நூல் விமர்சனம், *ஈழநாடு*, 17.02.1980.

20) "அரசாங்கப் பிரசுர நூல்களின் வரிசையில்சிவராத்திரிச் சிறப்பு மலர்" பிரதேச அபிவிருத்தி இந்துகலாசார அமைச்சு வெளியீடு, கைநூல் பற்றிய விமர்சனம், *ஈழநாடு*, 02.03.1980.

21) "இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாற்றில் உமறுப்புலவர் ஆற்றிய பங்கு," *ஈழநாடு*, 24.02.0980.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22) "மொழித்திறனை வளர்க்கும் சாதனங்கள்" - *தமிழிலக்கியக்கழக மலர்,* தமிழிலக்கியக் கழக வெளியீடு, யாழ்ப்பாணம், செப்.1980.

23) "மொழியும் வானொலியும்", *இனமுழக்கம்*, சஞ்சிகை, 1981.

24) "குழந்தைக்குரல்" நூல் விமர்சனம், *கலைக்கோலம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தமிழ்ச்சேவை, ஒலிபரப்பு,*1980.

25) "தமிழ்க்கல்வியில் மொழிப்பிரயோகம்", *ஈழநாடு,* 23.12.1981.

26) "மலரொன்றைக் கையிலேந்தி", *வவுனியா ஸ்ரீ கந்தசாமி கோயில் மகாகும்பாபிஷேக மலர்*, 07.02.1982.

27) "செந்தமிழின் ஒலிமரபு", *தமிழ்ஒலி*, வானொலி நேயர் மன்றம் வெளியீடு, ஏப். ஜூன், 1982.

28) இளைஞர் வாழ்வில் சமயம், *பராசக்தி*, றேயல் கல்லூரி இந்து இளைஞர் சங்க வெளியீடு, கொழும்பு, 1983.

29) முன்னுரை-'*முரண்பாடுகளின் அறுவடை*', (சிறுகதைத் தொகுதி), திருமதி. கோகிலா மகேந்திரன், 1984.

30) 'பெண்களுக்கு உயர்கல்வி அவசியமில்லை' மேடைப்பேச்சு, *புதுமுறைக்கட்டுரைக் கோவை*, காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக்கழக, வெளியீடு, ஜூன், 1984.

31) 'வானொலி, தொலைக்காட்சி கள ஆய்வும் நிகழ்ச்சி மதிப்பீடும்.' (கோலாலம்பூர் - ஆசிய பசுபிக் ஒலிபரப்பு அபிவிருத்தித் தலைமையகத்தில் நிகழ்த்திய வானொலி, தொலைக்காட்சி கள ஆய்வனுபவங்கள், தகவல்களை உள்ளடக்கிய ஆய்வுக்கட்டுரை) *ஈழநாடு வாரமலர்*, யாழ்ப்பாணம், 05.08.1984.

32) 'தொண்டன்' பாரதி கலம்பகம், நூற்கணிப்பீடு, *கலைக் கோலம்*, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், தமிழ்ச் சேவை ஒலிபரப்பு, 03.10.1984. (தொகுத்தளித்தவர்: கனகசபாபதி நாகேஸ்வரன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

33) ‘காவியகாலமும் நாவலிலக்கியயுகமும்’ கட்டுரை காவியம் நாவல் ஒப்பீடு, *ஈழநாடு (வாரமலர்),* 6.1.85 : 20.1.85.

34) “பொன்றாப்புகழ் படைத்த சேர் .பொன் . இராமநாதன்”, *ஈழநாடு வாரமலர், 25.11.1984.*

35) “இந்திராகாந்தியின் பணியும், பயனும்” (பெண்மையரசு) *ஈழநாடு வாரமலர்*, 11.11.1984.

36) தொகுப்பு “ஒழுங்குபடுத்தப்பெற்ற நிர்வாகச் சிறப்புப் பெற்றது சோழமன்னன் ஆட்சி,” *ஈழநாடு,* 16.07.1985. (இராஜராஜசோழன் விழா)

37) “பிதிர்த்தேவதைகளுக்கான தினம் - ஆடி அமாவாசை”, *ஈழநாடு,* 15.07.1985.

38) கிராமப்புறமொன்றின் சமயவாழ்க்கையைத் திரட்டித்தரும் வரலாற்றுநூல், *“இத்திமரத்தாள்”,* பேராசிரியர், கலாநிதி சு. வித்தியானந்தனின் உரை, *ஈழநாடு* 17.07.85. (நூலாசிரியர்கள் : பேராசிரியர், கலாநிதி அ. சண்முகதாஸ், கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்)

39) ‘முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளார்’, *ஈழநாடு,* 19.07.85

40) “சுந்தரர் பாடல்களில் விஞ்சிநிற்பது அடிமையுணர்வா? தோழமையுணர்வா?” *தினகரன்*, 30.7.85.

41) “கனவோ இது நனவோ”, (உளவியல்), *ஈழநாடு,* 24.07.85.

42) “பக்கம் சாராத திறனாய்வாளர்கள்”, *தினகரன்,* 13.8.85.

43) “வாழ்வின் துன்பநிலைச் சித்திரிப்புகள்” (*இந்துநெறி*, யாழ் பல்கலைக்கழக இந்துமன்ற, வெளியீடு 1985).

44) “சனிவிரதமும் அதன் தத்துவமும்”, *ஈழநாடு* 21.09.1985.

45) “தீபாவளிப் பண்டிகையும் அதன் புராண வரலாறும்”, *ஈழநாடு,* 11.11.1985.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

46) "மூலபாடத்திறனாய்வா? பாடபேதத்திறனாய்வா?" (இலக்கிய ஆராய்ச்சி), *ஊற்று*, 50 வது சிறப்பிதழ், 1986.

47) "திறனாய்வுக்கட்டுரை" *தேன்பொழுது*, ஒரு குறிப்பு, *சிரித்திரன்*, சித்திரை, 1986., ப 12-13.

48) "சீறிடும் நாகபூஷணித்தாய், *தினகரன் வாரமலர்*, 18.05.1986.

49) "பாரதிவழிவந்த கவிஞன் பாவேந்தர் பாரதிதாசன்", *தின கரன், வாரமஞ்சரி*, 03.05.1987.

50) "இந்தியத் தெருக்கூத்து *நாடகங்கள்*", மல்லிகை, ஏப்ரல், மே, 1988, ப, 29.

51) "முருக மூர்த்தச்சிறப்பு முனைப்புடைநிகழ்வு அது", *உதயன்*, 23-08-1987.

52) "சர்வமத சந்நிதியாகத் திகழும் நயினைப்பதி" நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேர்த்திருவிழாச் சிறப்பிதழ், *உதயன்*, 28.06.1988.

53) "சைவத்தின் பேருண்மை", *ஆலயமணி*, ஆனி, 1988,ப. 26.

54) "நந்தியும் சிறுகதைகளும்", *ஜீவசக்தி*, (சமூக அறிவியல் ஏடு), 05.08.1988.

55) "நயினை ஸ்ரீ நாகபூஷணியின் வரலாறும் வழிபாடும்", *தினகரன், வாரமஞ்சரி*, 26.06.1988, ப.03.

56) "பல்லவர்காலமும் பக்தி இலக்கிய நெறியும்", "*ஆதவன் எழுகிறான்*", செப்ரம்பர், ஒக்டோபர், நவம்பர் 1988, ப. 14-20

57) "இலக்கியக்கலையில் அறிவியற் சிந்தனைகள்", *தமிழோசை*, 1987, தமிழ்மன்றம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், திருநெல்வேலி. இலங்கை

58) "யாங்கு ஆகுவள்கொல் பூங்குழை",பண்டிதர் திரு.அ.ஆறு முகம் அவர்களின் வைரவிழாமலர், 05-02-1989, ப.39 -42.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59) "மூலபாடத் திறனாய்வு பிரதிபேதங்கள்". *மல்லிகை,* 24 வது ஆண்டுமலர், ஜனவரி, 1989, ப. 50.

60) "இணைந்து நாதமழை பொழியும் இளவரசர்கள்", ***உதயன் சஞ்சீவி,*** V.K.கானமூர்த்தி, V.K.பஞ்சமூர்த்தி இணைவின் வெள்ளிவிழா மலர்,26.03.1989.

61) "குறள் காட்டும் உள்ளம்", *உள்ளம்,* (கலை இலக்கிய சமூக மாதஇதழ்), வளர்மதி வெளியீடு, வைகாசி, 89, ப. 3-5, மதி, பிறை, 4)

62) "சமய ஞானம் எளிதோ", *இந்து இளைஞன்,* இலங்கை இந்து இளைஞர் பேரவையின் 10ஆவது ஆண்டு மாநாட்டுச் சிறப்புமலர், 21.05.1989, ப. 17-18.

63) முன்னோடிக் கட்டுரை, "கீரிமலை ஆய்வுவளர வேண்டும்", *தினகரன்,* வாரமலர், 21.05.1989.

64) *சிவத்தத்துவமலர்,* (பதிப்பாசிரியர்) வவுனியா ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில் மகாகும்பாபிஷேகச் சிறப்பு வெளியீடு லக்ஷ்மி அச்சகம் கொழும்பு. 23.06.1996

65) "சக்திதத்துவம்", சக்திதத்துவமலர் நாவலப்பிட்டி ஸ்ரீ முத்து மாரி அம்பாள் மகாகும்பாபிஷேகச் *சிறப்புமலர்,* 24.07.1996, Published - Type Setting Designing & Printing By Graphic (Art) Kandy, Sri Lanka.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Appendix

## MR. K. NAGESWARAN, M.A., SENIOR LECTURER, GR.I
## DEPARTMENT OF LANGUAGES
## DETAILS OF PUBLICATIONS AND RESEARCH ARTICLES

### 1.1 REFEREED JOURNALS

1. "Navalarum Muththuthambipillaium", *Arumuganavalr centenary volume,* Editor – in – charge, Professor, K. Kailasapathy, Published by the srilasri Arumuganavalar sabai, printed Thirumakal press, chunnakam, Sri Lanka, 1979, p.196.

Publishing Committee :Professor, K. Kailasapathy (President)
Member : Professor. K. Sivathamby
Dr. A. Sanmugadas
Mr. A. Ambikaipahan, B. A.
Mr. N. Subramaniam
Organizer : Mr. A. Sivanesaselvan, M. A.

2. "Kavithai neriyum Kavithai Mmurvum", *Kalasurabhi,* Humanities student's union magazine, University of Jaffna, 1976.
3. "Thaduththadkonda puranaththil cekilar Kavi nalan", *Inthu neri,* Hindu Student's union magazine, University of Jaffna, 1978.
4. "Valvin Thunpanilai ciththrippuhal", *Inthu neri,* Hindu student's union magazine, University of Jaffna, 1978.
5. "A Study of the literary froms about Nallur Kandasamy Temple and Maviddapuram Kandasamy Temple" Dissertation submitted for the degree of Master of Arts (M.A.) Tamil in the University of Jaffna, Thirunelvely, 1987. (Supervisior, Professor, A Velupillai)
6. "Scientific thinking appears in the Tamil literature, *Thamilosai,* Tamil mantram sudent's union magazine, University of Jaffna, 1885.
7. "Nanthium cirukathaihalum", *Jeeva shakthi,* medical student's union magazine, Faculty of Medicine, University of Jaffna, 05-08-1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. "Nainative sri Nagapooshai Amman", *London saiva munneetra sangam silver jubilee special volume,* 31-08-2002, No. 02, Salisbury road, manorpark, London, U.K. E126AB, P.124. (This is an international magazine, published by the trust this article requested by widwan Mrs. Vasantha Vythianathan, on of the eminent Tamil womem orator in the world.

9. "Kathirkamaththu Murugapperuman meethu elutha pirapanthankal", *Second world Hindu conference souvenir,* Ministry of Hindu affirs, 248 21, Galle Road, Colombo -4, 02-06-2003, P. 90 (This souvenir is sponsored by the National Saving's Bank and the Sri Ponnampalavaneswarar Temple, Kochchikadai, Colombo and printed in 488, Bloemendhal Veethy Colombo -13.)

Editorial Board :

1. Mr. K. Raguparan (chief Editor), Senior Lecturer, Department of Languages, South Eastern University, Oluvil.
2. Professor. A. Sanmugadas (Head, Dept. of Tamil, University of Jaffna)
3. Professor. S. Pathmanathan, (Professor/ Conference secretary, Dept. of History, University of Peradeniya.)
4. Mr. S. Theivanayagam (Assistant Director, Dept. of Hindu and Cultural Affairs)
5. Dr. M. Vethanathan, (Senior Lecturer, Dept. of Hindu Civilization, University of Jaffna.

## 1.2 BOOK EDITING

1. *Thaduththaadkonda puranam,* Text book, Jaffna, 30.09.1989.
2. *Siva Thththuva malar,* Luxmi press, Colombo, 23.06.1996.
3. *Shakthi Thaththuva malar,* Graphic land, Kandy, 24-07-1996.
4. *Bhakthi malar,* Luxmi press, Colombo, 2004.
5. *Navanaatham,* Luxmi press, Colombo 05-01-1998.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1.3 MALLIKAI (TAMIL LITERARY MAGAZINE) ARTICLES

1. "Ilankaiyarkonin cirkathikal", *Mallikai,* 1978.
2. "Sri Lankan Modern Epics", *Millikai,* 1980.
3. "Indian Therukkooththu dramas", *Mallikai,* 1988.
4. "Textual Criticism – Variations", *Mallikai,* 1989.
5. "Commentary writers and textual criticism", *Mallikai,* 1989.

## 1.4 MAGAZINES ARTICLE

1. "Ilanko vadiththa Illakkiyam", *Komuhi,* Manipallava kala mantram, 1972. (An article won first prize for the essay competition conducted by manipallava Kalamantram)
2. "War, Revolution in the Political theories – some ideas", *Sankaman,* monthly literary magazine, published by the A/L students of Mahajana College, Tellippalai, 1974.
3. "Bharathiyarin Kannan Paaddill Thaththuvach carpum pothanai panpum" *Chevvanthi,* 1978.
4. "Texhniques for the development of tamil languages skills", *Tamil Illakkiyak Kazhaha malar.* Sept. 1980.
5. "Language and the Radio", *Inamulakkam,* 1981.
6. "Phonetical Traditions in *Tamil oli,* April, 1982.
7. "Youth and religion", *Parashakthi,* Hindu young sangam, Royal College, Colombo, 1983.
8. "Moola paadath thiranaaiva? Paadapeethath Thiranaaiva? *Uoorttu,* 1986.
9. "Theen poluthu" *Cirthiran,* 1986.
10. Saivaththin Perumaihal", *Alayamani,* 1988.
11. Pallava Kaalamum Bhakthi ilakkiya neriyum", *Aathavan Eluhiran,* 1988.
12. "Yanku Aahuvaikol Poonkulai", *Pandit A. Arumugam Silver jubilee volume,* Chulipuram, 05-02-1989.
13. "Kural Kaaddum Ullam", *Ullam,* 1989.
14. "Thiruvacakamum Manavacakamum", *Thirucacaka swamikal malar,* 1989.
15. "Vallipura maayavan pillaith Thamil, (Book Review), *Aalayamani,* Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. "Chen cot kondal sinkaavelanar", *Kaaraingar Kaarthikeyap pulvar special volume,* Karainagar, 1990.
17. "Sockan paniattum nituvanangal", *manivizah malar,* Naayanmaarkaddu, Nallure, 02-06-1990.
18. "Shakthi Thaththuvam", Shakthi *Thathuvam malar,* Grafic land, Kandy, 24-07-1996.
19. "Education" (Kalvi), *Pavala vizha special volume,* Kathiresan Kanitha vidyalyam, Nawalapitiya, 04-12-1999.
20. "Thisrukkural Aranoolaa? Neethinoola? Waalkai vilumiyankala uraikkum mools? *Kathiresen Pavalavizha special volume.* Kathiresan Central College, Nawalapitiya, Colombo, 05-02-1999.
21. "Saivamum Thamilum", *Golden Jublee volume,* Hndu College, Bambalapitiya, Colombo, 2001.
22. "Saivath Thirumuraihal ", *Gnanach Chudar,* Januar, February, March, 2002.

## 1.5 PAPER (DAILY AND WEEKLY) ARTICLES

1. "Thaththuvap porulum sasti mahimaiyam", *Eelanaadu,* 13-11-1979.
2. Pioneer of the stage dram swami sankarthas, *Eelanaadu,* 13-11-1979.
3. "Parliament Budget speeches of 1980", *Eelanaadu,* 19-11-1979.
4. "The Importance of manuscripts on Tamil literary research", *Eelanaadu* 19-11-1979.
5. "Hindu cultural Ministry and Hindu conference", *Eelanaadu,* 22-10-1979.
6. U.N.O. and it's functionable aspects, *Eelanaadu,*
7. "Thaipongal and it's significance", *Eelanaadu,* 14-01-1980.
8. "Some important development of Indian Congress, *Eelanaadu.*
9. "Socialogy and Literature", (Book review) Author, Professor, K. Kailasapathy, *Eelanaadu,* 10-02-1980.
10. (Book review) Hindu culture and society, *Eelanaadu,* 17-02-1980.
11. "Significance of Sivarathri", Ministry of Regional development and Hindu affairs, *Eelanaadu,* 02-03-1980.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. "The contribution of umaruppullavar on Islamic Tamil Literature", *Eelanaadu*, 24-02-1980.
13. "Education and usage of Tamil Language. *Eelanaadu*, 23-12-1981.
14. "Higher Education is not essential for females" (Dabate speech), Tamil valarchchi kazhakam karaingar, 1984.
15. "Kaaviya kaalamum naval illakkiya uhamum", *Eelanaadu* Weekly, 06-01-1985; 20-01-1984.
16. "Sri Ponnampalam Ramanathan and his valuable contributions, *Eelanaadu*". 25-11-1984.
17. "Mrs. Indira Ghandhi", *Eelanaadu*, 11-11-1984.
18. "Cola emperor and their well organized administration", *Eelanaadu*, 19-07-1985.
19. "Aadi Amaavasai", *Eelanaadu*, 15-07-1985.
20. "Muththamil Viththakar swami vipulananda adikal", *Eelanaadu*, 19-07-1985.
21. "Suntharar Paadalkali vinchinirppathu adimai unarva? Tholamai unarwa?, *Thinakaran*, 30-07-1985.
22. "Kanvo ithu nanavo?", *Eelanaadu*, 24-07-1985.
23. "Packam caaratha Thiranaaivaalarkal", *Thinakaran*, 21-09-1985.
24. "Sani virathamum athan Thaththuvamum, *Eelanaadu*, 21-09-1985.
25. "Deepavali and it's significance", *Eelanaadu*, 11-11-1985.
26. "Seeridum Nagapooshanthi", *Thinakaran*, 30-05-1986.
27. "Paaventhr Bharathithasan", *Thinakaran*, 30-05-1987.
28. "Murugan Moorththch cirappu munaippudai nihalvathu", *Uthayan*, 28-06-1988.
29. "Sirvamatha sannithiyakath Thihalum Nainaiampathy", *Uthayan*, 28-06-1988.
30. "Nainai Nagapooshani – History and worship", *Thinakaran*, 26.
31. "Nainthu naatha malai polium Naathaswaran Ilavarasarkal", *Uthayan*, *Sanjjevi*, silver jubilee special volume, 26-03-1989.
32. "Samaya Ganam elitho", *Young Hindu*, 1989.
33. "Keermalai research may be built up", *Thinakran*, 21-05-1989.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

34. "Theivamakavi cekkilar gurupoojah", *Hindu Organ,* 23-06-1989.
35. "Bhakthi period will be spread again". *Hindu Organ.* 07-07-1989; 04-08-1989.
36. "Nachchuvayahi Nainai Nayahi", *Eelanaadu,* 18-06-1989.
37. :Karma yogi sri V. Kathiravelu", *Vaaramurasoli,* 25-06-1989; Thinakaran vaaramajari, 13-08-1989.
38. "Intru emakku uramooddum Pandithamani", *Eelanaadu,* Vaaramalar, 20-08-1989.
39. "Theever cirai meeda selvan kalal kaaval irukka Kavalaihal aaen", *Uthayan,* 29-09-1989.
40. "Thanich cirappuhal", *Elanatham,* 1990. (Thamilmozhiyum)
41. "Vallipura Maayavan Pillaith Thamil", *Thinakaran,* Vaaramalar, 15-04-1990.
42. "T. V. and Radio programmes evaluation" AIBD, (Kualalmpur, Malayasia) *Eelanaadu,* 05-08-1984.

## 1.6 MAHAKUMBAPISHEKA SPECIAL VOLUMES

1. "Deepavali", (Theory and Practical), *Mahakumbapisheka special volume,* kalavavodai vasantha Nagapooshani ammam kovil, Erlalai, 31-01-1990.
2. "Thanakuvamai Illaatha Thannaliyaalan", *Kee, Vaa. Jeganathan, Special volume,* Neerveli, 1990.
3. "Thirumurukaatruppadaiyum aarupadai veedkalum", *Karainagar Thikkarai sri muththumari amman mahakumbaphisheka malar,* Karainagar. 16-03-1990.
4. "Ambikaiyach caranpuhunthaal athika varam peralam", *Thavalakkiri sri muththumari amman mahakumbaphi sheka malar,* Alaveddy nothe, Alaveddy.
5. "Saiva samayamum senthamil molium", *Vavuniya sri Kanthasamy Kovil mahakumbaphisheka malar,* 12-09-1999.
6. "Muruga Thathuvam", *Vavuniya sri Kanthasamy Kovil mahakumbaphiseka special volume,* Vavuniya, 12-09-1999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகம் போற்றும் உத்தமனே

நாகேஸ் வரனெனும் நயினைக் குமரா
சேயே உன்றன் திருமுகம் கண்டேன்
பெற்ற தாயின் மனமிக மகிழ்ந்தேன்
ஆய்வுநூல் இரண்டு அரங்கினில் ஏற்ற
மாயிரும் ஞாலத்தில் மனம்மிகக் கொண்டீர்
*அறுபத்து நான்கு கலைகளும் அவற்றின்*
*ஆக்கத் திறன்களும்* அரும்பெரும் பொருளே
*நயினை அம்பாளின் வரலாறும் பெருமையும்*
படைத்தத னாலே பாரினில் உயர்ந்தீர்
*கலைகசாபதி* கனிவுடன் தந்த
உலகம் போற்றும் உத்தம னேயோ
நேரினில் வந்து நிரம்ப உரைக்க
வாய்ப்பிலை எனினும் வாழ்த்துக்கள் பற்பல
*பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவ*
*'வாகீச கலாநிதி', 'சித்தாந்த பண்டிதர்'*
என்னும் தகைமைகள் இனிதே பெற்றீர்
வாயைத் திறந்தால் வண்டமிழ் சொரியும்
பாயும் அன்பும் பளிச்சிடும் முறுவலும்
தூயவ னேயுன் உளமதைக் காட்டும்
இன்னும் பற்பல ஆய்வுகள் படைத்து
மன்னும் உலகினில் தமிழினை வளர்த்து
வாழ்கபல் லாண்டு வளர்கநும் தொண்டு
வளம்பல பெற்று வையகம் தன்னில்
அன்பு மனைவி அருமைக் குழந்தைகள்
இன்புடன் பழகும் இனிய சுற்றம்
இவரெல்லாம் மகிழ என்றும்
வாழ்த்தி நின்றோமே வழுத்திநின் றோமே.

பண்டிதை, பொன். பாக்கியம்

சுழிபுரம்.
24-11-2004

ISBN 955- 98962-2-9

Printed by LUXMI PRINTER, 195, Wolfendhal Street, Colombo 13. T.P. 2448545.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org